D
V21,3;808
808 45·1
228403.

3-4-2008

## உள்ளடக்கம்

பக்கங்கள்


| | | |
|---|---|---|
| | ஆளுநரும் அமைச்சரவையும் | iii-viii |
| | Governor and Council of Ministers | ix-xiii |
| | பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv-xviii |
| | பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix-xxix |
| 1. | **வினாக்கள்—விடைகள்—** | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-37 |
| 2. | **தகவல் கோரல்—** | |
| | உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் | 37 |
| 3. | **கவன ஈர்ப்பு—** | |
| | வால்பாறை தொகுதி, மக்களுக்குக் குடிநீர் வசதி | 37-42 |
| 4. | **அறிவிப்புகள்—** | |
| | (அ) மானியக் கோரிக்கைகள், 2008-2009, அவையில் முன்மொழிதல் குறித்து (ஆ.செ.) | 43 |
| | (ஆ) பேரவை விவாதத்தில் பேச கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் | 173 |

| | பக்கங்கள் |
|---|---|
| 5. **மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 14—எரிசக்தித் துறை | 43-173 |
| (ஆ) கோரிக்கை எண் 35—பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | |
| மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி | 43-44,72, 90-91, 140-169, 170,171 |
| திரு. இரா. விசுவநாதன் | 91-100 |
| திரு. மு. அப்பாவு | 100-108 |
| டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத் | 108-115,116, 117-118 |
| திரு. இல. வேலுசாமி | 119-125 |
| *திரு. ஞா. ஜாண் ஜோசப் | 125-129 |
| *திருமதி பி. பத்மாவதி | 129-135 |
| திரு. நா. இராமகிருஷ்ணன் | 136-139 |
| 6. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 174 |



## ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

   பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு, கடவுச் சீட்டுகள் மற்றும் சிறப்பு முயற்சிகள்

2. **நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

   நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை மற்றும் தேர்தல்கள்

3. **மின்சாரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

   மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம்

4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

5. கூட்டுறவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**

கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

6. வேளாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

7. பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**

பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்

8. உயர் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் தொழில்நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228403
சென்னை-600 008
நூலகம்



9. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.என். நேரு:**

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

10. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

11. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:**

குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

12. வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், சிறைச்சாலைகள், எடைகள்–அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல், வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு

13. சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:**

சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

D
V2l1, 31 P08.
P08.45.1

14. செய்தித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு, அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

15. உணவுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எ.வ. வேலு:

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

16. குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:

குடிசை மாற்று வாரியம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு

17. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள்

18. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



19. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

20. கைத்தறித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:

கைத்தறி மற்றும் துணித் தொழில்

21. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்

22. வணிக வரித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:

வணிக வரிகள்

23. சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இஸ்லாமிய அறக்கட்டளைகள் (வக்ஃபு)

24. வனத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:

வனங்கள் மற்றும் சின்கோனா

25. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

26. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள்

27. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

28. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

29. மீன்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

30. பால் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

31. கதர்த் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture, Passports and Special Initiatives

2. **Minister for Finance** .. **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislative Assembly and Elections

3. **Minister for Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veeraswami:**

Electricity, Non-Conventional Energy Development and Personnel and Administrative Reforms

4. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

5. **Minister for Co-operation** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**

Co-operation, Statistics and welfare of Ex-Servicemen

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Wasteland Development

7. **Minister for Public Works and Law** .. **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Law and Courts

8. **Minister for Higher Education** .. **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology, Mines and Minerals

9. **Minister for Transport** .. **The Hon. Thiru K.N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. **Minister for Health** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**

Health, Medical Education and Family Welfare

11. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**

Rural Industries including Cottage Industries and Small Industries



12. **Minister for Revenue and Housing** .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits, Registration of Companies, Housing, Rural Housing and Housing Development

13. **Minister for Tourism and Registration** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism, Tourism Development Corporation, Registration and Stamp Act

14. **Minister for Information** .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing, Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

15. **Minister for Food** .. **The Hon. Thiru E.V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection and Price Control

16. **Minister for Slum Clearance and Accommodation Control** .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Slum Clearance Board and Accommodation Control

17. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees

18. **Minister for Labour** .. **The Hon. Thiru T.M. Anbarasan:**

Labour, Population, Employment and Training, Steel Control, Newsprint Control, Census and Urban and Rural Employment

19. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru K.R. Periakaruppan:**

Hindu Religious and Charitable Endowments

20. **Minister for Handlooms** .. **The Hon. Thiru NKK. P. Raaja:**

Handlooms and Textiles

21. **Minister for School Education** .. **The Hon. Thiru Thangam Thenarasu:**

School Education and Archaeology

22. **Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru S.N.M. Upayathulla:**

Commercial Taxes

23. **Minister for Environment** .. **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:**

Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs

24. **Minister for Forests** .. **The Hon. Thiru N. Selvaraj:**

Forests and Cinchona



25. **Minister for Highways** .. **The Hon. Thiru M.P. Saminathan:**

Highways and Ports

26. **Minister for Social Welfare** .. **The Hon. Dr. (Tmt.) Poongothai:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes

27. **Minister for Animal Husbandry** .. **The Hon. Tmt. P. Geetha Jeevan:**

Animal Husbandry

28. **Minister for Adi Dravidar Welfare** .. **The Hon. Tmt. A. Tamilarasi:**

Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour

29. **Minister for Fisheries** .. **The Hon. Thiru K.P.P. Samy:**

Fisheries and Fisheries Development Corporation

30. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru U. Mathivanan:**

Milk and Dairy Development

31. **Minister for Khadi** .. **The Hon. Thiru K. Ramachandhiran:**

Khadi and Village Industries Board, Bhoodhan and Gramadhan

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி

## மாற்றுத் தலைவர்கள்#

திரு. கு. பிச்சாண்டி

திரு. குத்தாலம் க. அன்பழகன்

திருமதி டி. யசோதா

திரு. கி. ஆறுமுகம்

திரு. என். நன்மாறன்

திருமதி பி. பத்மாவதி

## செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

# 26-3-2008 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எட்., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. அ.மு.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம்., பி.ஜி.எஸ். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ப. சரசுவதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.எல்., பி.ஜி.டி.சி.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | .. குழு அலுவலர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | .. பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |



| | |
|---|---|
| திரு. ம. பன்னீர் செல்வம் | .. தலைமை நிருபர் |
| திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கி. மாதவன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. தலைமை நிருபர் |
| திருமதி ஓ.வி. கல்யாணி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கே. இராமகிருஷ்ணா, பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கே. பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி., எம்.எட்., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ம.ச. சந்திரமௌலி, எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| செல்வி எஸ். பிலோமினா, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. பா. அன்பழகன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி வி.வி. ரமா, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. இரா. பழனிசாமி, பி.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. சு. சந்திரன், பி.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. பா.சி.க. சிங்காரவேலு, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி மு. சுப்புலட்சுமி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |

## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | .. சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | .. வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | .. அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | .. திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | .. சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | .. சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | .. ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | .. பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி—I |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | .. செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | .. ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | .. உப்பிலியாபுரம் (ஆவா.) |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | .. கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | .. திருவாடானை |

21. இராமசாமி, திரு. தி. - ஸ்ரீவில்லிபுத்தூர்
22. இராமசுவாமி, திரு. கே.பி. - ராசிபுரம்
23. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
24. இராமச்சந்திரன், திரு. டி. - தளி
25. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். - பள்ளிப்பட்டு
26. இராம்பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
27. இராஜா, திரு. எஸ்.ஆர். - தாம்பரம்
28. இராஜேந்திரன், திரு. ஆ. - வீரபாண்டி
29. இராஜேந்திரன், திரு. இரா. - பனமரத்துப்பட்டி
30. இராஜேந்திரன், திரு. க. - ஜெயங்கொண்டம்
31. இராஜேந்திரன், திரு. சபா. - நெல்லிக்குப்பம்
32. இராஜ்குமார், திரு. ம. - பெரம்பலூர் (செ.வ.)
33. இளமதி சுப்பிரமணியன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
34. இளவரசன், திரு. வீர. - திருமங்கலம்
35. இளவழகன், திரு. கே.எல். - ஆற்காடு
36. உதயசூரியன், திரு. தா. - சின்னசேலம்
37. உதயம் சண்முகம், திரு. - அறந்தாங்கி
38. உபயதுல்லா, திரு. சி.நா.மீ. - தஞ்சாவூர்
39. உலகநாதன், திரு. கே. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
40. எதிரொலி மணியன், திரு. கோ. - பெரணமல்லூர்
41. ஐயப்பன், திரு. கோ. - கடலூர்
42. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)



43. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
44. கண்ணப்பன், திரு. மு. - தொண்டாமுத்தூர்
45. கண்ணன், திரு. பெ. - தாரமங்கலம்
46. கண்ணன், திரு. வே. - செஞ்சி
47. கமலாம்பாள், திருமதி பெ. - காஞ்சிபுரம்
48. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. - தென்காசி
51. கலியவரதன், திரு. வீ.ஏ.டி. - முகையூர்
52. கலீலூர் ரஹ்மான், திரு. ம.அ. - அரவக்குறிச்சி
53. கலைராஜன், திரு. வி.பி. - தியாகராய நகர்
54. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை
55. காமராஜ், திரு. பெ. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
56. காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. - மதுராந்தகம்
57. காவேரி, திரு. வை. - எடப்பாடி
58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். - கலசப்பாக்கம்
59. கீதா ஜீவன், திருமதி பி. - தூத்துக்குடி
60. குணசேகரன், திரு. சு. - சிவகங்கை
61. குணசேகரன், திரு. ம. - மானாமதுரை (செ.வ.)
62. குத்தாலம் க. அன்பழகன், திரு. - குத்தாலம்
63. குமரகுரு, திரு. இரா. - திருநாவலூர்

64. குருசாமி, திரு. செ. - அந்தியூர் (செ.வ.)
65. கோபாலன், திரு. போ. - உதகமண்டலம்
66. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
67. கோவிந்தசாமி, திரு. சி. - திருப்பூர்
68. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
69. சக்கரபாணி, திரு. அர. - ஒட்டன்சத்திரம்
70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி - அச்சரப்பாக்கம் (செ.வ.)
71. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
72. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
73. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. - வாசுதேவநல்லூர் (செ.வ)
74. சந்திரகாசி, திரு. மா. - வரகூர் (செ.வ.)
75. சந்திரா, திருமதி மு. - ராஜபாளையம் (செ.வ.)
76. சாமி, திரு. ஆர். - மேலூர்
77. சாமி, திரு. கே.பி.பி. - திருவொற்றியூர்
78. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
79. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். - ஆண்டிமடம்
80. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
81. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
82. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி
83. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருவள்ளூர்
84. சின்னசாமி, திரு. அ. - பேரணாம்பட்டு (செ.வ.)
85. சின்னசாமி, திரு. ஆர். - சிங்காநல்லூர்



86. சின்னச்சாமி, திரு. செ. - மருங்காபுரி
87. சின்னதுரை, திரு. கு. - தலைவாசல் (செ.வ.)
88. சின்னப்பன், திரு. போ. - விளாத்திகுளம்
89. சின்னராஜ், திரு. ஓ.கே. - மேட்டுப்பாளையம்
90. சீனிவாசன், திரு. கு. - பூங்கா நகர்
91. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. எம்.ஆர். - ஆத்தூர்
93. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி
94. சுந்தர், திரு. க. - உத்திரமேரூர்
95. சுப்பிரமணியம், திரு. ஓ. - பவானிசாகர்
96. சுப்புராம், திரு. ராம. - திருமயம்
97. சுப்ரமணியன், திரு. ந. - குளத்தூர் (செ.வ.)
98. சுரேஷ் ராஜன், திரு. என். - கன்னியாகுமரி
99. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். - நாட்ராம்பள்ளி
100. செங்குட்டுவன், திரு. டி. - கிருஷ்ணகிரி
101. செங்கோட்டையன், திரு. கே.ஏ. - கோபிசெட்டிப்பாளையம்
102. செந்தமிழன், திரு. ஞா. - சைதாப்பேட்டை
103. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. - மேல்மலையனூர்
104. செந்தில் பாலாஜி, திரு. வே. - கரூர்
105. செல்வம், திரு. கு. - மங்களூர் (செ.வ.)
106. செல்வராஜ், திரு. என். - முசிறி
107. செல்வராஜ், திரு. து. - ஸ்ரீவைகுண்டம்
108. செல்வி ராமஜெயம், திருமதி - புவனகிரி

109. சேகரன், திரு. கூ.ந. - திருவெறும்பூர்
110. சேகர், திரு. எஸ்.வி. - மயிலாப்பூர்
111. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
112. சையது கௌஸ் பாஷா, திரு. சை. - மதுரை மத்தி
113. சௌந்தரபாண்டியன், திரு. அ. - லால்குடி
114. சௌந்திரபாண்டியன், திரு. அ. - குன்னூர் (செ.வ.)
115. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
116. ஞானதாஸ், திரு. ஆர். - சிவகாசி
117. டில்லி பாபு, திரு. ப. - அரூர் (செ.வ.)
118. தங்கமணி, திரு. பி. - திருச்செங்கோடு
119. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை
120. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி
121. தண்டபாணி, திரு. மா. - வேடசந்தூர்
122. தமிழரசி, திருமதி ஆ. - சமயநல்லூர் (செ.வ.)
123. தமிழரசு, திரு. அ. - ஓமலூர்
124. தமிழ்செல்வன், திரு. சி. - ஏற்காடு (ஆ.வா.)
125. தம்பிதுரை, முனைவர் மு. - பர்கூர்
126. தர்மலிங்கம், திரு. எல்.பி. - சத்தியமங்கலம்
127. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. - பத்மநாபபுரம்
129. திருநாவுக்கரசு, திரு. கே. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
130. துரைக்கண்ணு, திரு. இரா. - பாபநாசம்



131. துரை சந்திரசேகரன், திரு. - திருவையாறு
132. துரைசாமி, திரு. வீ.பெ. - சங்கரி (செ.வ.)
133. துரைமுருகன், திரு. - காட்பாடி
134. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
135. தேன்மொழி, திருமதி எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)
136. [illegible]மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
137. நெடுஞ்செழியன், டாக்டர் க. - கபிலர்மலை
138. நெடுஞ்செழியன், திரு. ரெ. - புதுக்கோட்டை
139. நேரு, திரு. கே.என். - திருச்சிராப்பள்ளி–2
140. பதர் சயீத், திருமதி - திருவல்லிக்கேணி
141. பத்மாவதி, திருமதி பி. - நன்னிலம் (செ.வ.)
142. பரஞ்ஜோதி, திரு. மு. - ஸ்ரீரங்கம்
143. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
144. பலராமன், திரு. பி. - பொன்னேரி (செ.வ.)
145. பழனிசாமி, திரு. ஆர்.எம். - மொடக்குறிச்சி
146. பன்னீர்செல்வம், திரு. எம். - சீர்காழி (செ.வ.)
147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
148. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
149. பாண்டுரங்கன், திரு. கு. - அணைக்கட்டு
150. பாபு, திரு. வி.எஸ். - புரசைவாக்கம்
151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. - திருவிடைமருதூர்
152. பாலபாரதி, செல்வி கே. - திண்டுக்கல்
153. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை

154. பிரபாவதி, திருமதி பெ. - தாராபுரம் (செ.வ.)
155. பிரேமா, திருமதி ஆர். - அவினாசி (செ.வ.)
156. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். - கடையநல்லூர்
157. புஷ்பராஜ், திரு. செ. - கண்டமங்கலம் (செ.வ.)
158. பூங்கோதை, டாக்டர் (திருமதி) - ஆலங்குளம்
159. பெரியகருப்பன், திரு. கே.ஆர். - திருப்பத்தூர்
160. பெரியசாமி, திரு. இ. - ஆத்தூர்
161. பெரியசாமி, திரு. மு.க. - பூம்புகார்
162. பெரியண்ணன், திரு. பி.என். - பெண்ணாகரம்
163. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. - கோயம்புத்தூர் கிழக்கு
164. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. - பொள்ளாச்சி
165. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
166. பொன்னுசாமி, திரு. கே. - சேந்தமங்கலம் (ஆ.வா.)
167. பொன்னுதுரை, திரு. செ. - பெருந்துறை
168. போளூர் ம. வரதன், திரு. - செங்கம் (செ.வ.)
169. போஸ், திரு. ஏ.கே. - திருப்பரங்குன்றம்
170. மகேந்திரன், திரு. இ. - உசிலம்பட்டி
171. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)
172. மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. - திருவோணம்
173. மணி, திரு. எஸ். - பொங்கலூர்
174. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
175. மணி, திரு. ஜி.கே. - மேட்டூர்
176. மதிவாணன், திரு. உ. - திருவாரூர் (செ.வ.)



177. மலரவன், திரு. தா. .. கோயம்புத்தூர் மேற்கு
178. மாணிக்கம், திரு. இரா. .. குளித்தலை
179. மாரிமுத்து, திரு. வே. .. நாகப்பட்டினம்
180. மாலைராஜா, திரு. என். .. திருநெல்வேலி
181. முருகவேல், திரு. கே. .. முதுகுளத்தூர்
182. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
183. மூர்த்தி, திரு. டி. .. திருப்போரூர் (செ.வ.)
184. மூர்த்தி, திரு. பி. .. சோழவந்தான்
185. மேகநாதன், திரு. த.அ. .. காவேரிப்பட்டினம்
186. மோகன், திரு. பெ. .. ஓட்டப்பிடாரம் (செ.வ.)
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
188. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
189. ரங்கநாதன், திரு. ப. .. வில்லிவாக்கம்
190. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
191. ரவிக்குமார், திரு. து. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
192. ரவிச்சந்திரன், திரு. எல். .. சேலம்—I
193. ராணி வெங்கடேசன், திருமதி .. சாத்தான்குளம்
194. ராதாகிருஷ்ணன், திரு. ல. .. கோவில்பட்டி
195. ராமச்சந்திரன், திரு. கா. .. கூடலூர்
196. ராமநாதன், திரு. கே.வீ. .. பவானி
197. ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். .. இளையான்குடி
198. ராஜகுமார், திரு. எஸ். .. மயிலாடுதுறை
199. ராஜசேகரன், திரு. மா. .. தொட்டியம்

200. ராஜன், திரு. அ. - நாகர்கோவில்
201. ராஜா, திரு. என்கேகே.பி. - ஈரோடு
202. ராஜா, திரு. தி.க. - திருப்பத்தூர்
203. ராஜேந்திரன், திரு. க.சி.க. - மதுரை மேற்கு
204. லட்சுமணன், திரு. ச. - போடிநாயக்கனூர்
205. லதா, திருமதி ஜி. - குடியாத்தம்
206. லீமா றோஸ், திருமதி ரா. - திருவட்டாறு
207. வசந்தகுமார், திரு. எச். - நாங்குநேரி
208. வரதராஜன், திரு. ரா. - விருதுநகர்
209. விசுவநாதன், திரு. இரா. - நத்தம்
210. விடியல் எஸ். சேகர், திரு. - காங்கேயம்
211. விஜயகாந்த், திரு. - விருத்தாசலம்
212. விஜயகுமார், திரு. கே.எஸ். - கும்மிடிப்பூண்டி
213. விஜயகுமார், திரு. பெ.சு. - போளூர்
214. விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. - செய்யாறு
215. வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். - பேராவூரணி
216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. - சேலம்–2
217. வேதரத்தினம், திரு. எஸ்.கே. - வேதாரண்யம்
218. வேலு, திரு. எ.வ. - தண்டராம்பட்டு
219. வேலுசாமி, திரு. இல. - தருமபுரி
220. வேலுசாமி, திரு. செ.ம. - பல்லடம்
221. வேலுமணி, திரு. சு.ப. - பேரூர்
222. வேல்துரை, திரு. பா. - சேரன்மகாதேவி



223. வேல்முருகன், திரு. தி. - பண்ருட்டி
224. வைத்திலிங்கம், திரு. ஆர். - ஒரத்தநாடு
225. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். - கிள்ளியூர்
226. ஜாண் ஜோசப், திரு. ஞா. - விளவங்கோடு
227. ஜெகன்மூர்த்தி, திரு. மு. - அரக்கோணம் (செ.வ.)
228. ஜெயக்குமார், திரு. டி. - இராயபுரம்
229. ஜெயக்குமார், முனைவர் கு. - நாமக்கல் (செ.வ.)
230. ஜெயபால், திரு. எஸ். - குளச்சல்
231. ஜெயராமன், திரு. எஸ்.பி. - வந்தவாசி (செ.வ.)
232. ஜெயலலிதா, செல்வி ஜெ - ஆண்டிப்பட்டி
233. ஸ்டாலின், திரு. மு.க. - ஆயிரம் விளக்கு
234. ஹசன் அலி, திரு. கு. - இராமநாதபுரம்
235. ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் - நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. ஜி. மாசிலாமணி .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2039, பங்குனி 21

## 2008 ஏப்ரல் 3, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்*
*வகையறியார் வல்லதூஉம் இல்"*

அவையின் தன்மை அறியாமல் சொற்களைப் பயன்படுத்துகிறவர்களுக்கு அந்தச் சொற்களின் வகையும் தெரியாது; பேசும் திறமையும் கிடையாது.

## 1. வினாக்கள்—விடைகள்

## உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 41, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**41—**

### கூட்டுறவு வங்கி

***17756—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, கோவிந்தப்பாடியில் புதியதாகத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஏப்ரல் 3

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, கோவிந்தப்பாடியில் புதியதாகத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, கோவிந்தப்பாடி என்பது என்னுடைய சொந்த ஊர். அந்த ஊரைச் சுற்றி நிறைய கிராமங்கள் இருக்கின்றன. 20-க்கும் மேற்பட்ட கிராமங்களிலே வாழக்கூடியவர்கள் எல்லாம் சிறு, குறு விவசாயிகள்தான். வேறு எந்தத் தொழிலும் இல்லாமல் மேட்டு நில விவசாயத்தை நம்பி வாழக்கூடியவர்கள். இவர்கள் எல்லாம் வேளாண்மைக்காக வங்கியை நாடிச் செல்லக்கூடிய நிலை இருக்கிற காரணத்தாலே, உழவர்களுடைய நலன் கருதி கோவிந்தப்பாடி கிராமத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியினுடைய புதிய கிளை ஒன்று துவங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் பதிலுரையிலே இல்லை என்று சொன்னார்கள். அதற்கு அவசியத் தேவை இருக்கிறது. அவசியத் தேவையின் அடிப்படையிலே கட்டாயம் நீங்கள் உதவ முன்வருவீர்கள் என்ற நம்பிக்கையோடு, அதற்கு ஆவன செய்வீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்று சொன்னதற்குக் காரணம், அதற்கு வேண்டிய தகுதிகள் எல்லாம் அங்கில்லை. அதாவது, ஒரு வங்கி அமைக்க வேண்டுமென்றால், குறைந்தபட்சம் விவகார எல்லையில் விவசாயம் செய்யப்படும் நிலப்பரப்பு 2,000 எக்டேர் இருக்க வேண்டும். மற்றொன்று, ஓர் ஆண்டுக்கு குறைந்தபட்சம் இரண்டு கோடி ரூபாய் அளவுக்கு அனைத்து வகை கடன்களையும் வழங்கி, குறைந்தபட்சம் ஒரு லட்சம் ரூபாய் ஈட்டி வருவாய் ஈட்டுவதற்கான தகுதி வேண்டும். இந்த இரண்டும் அங்கு இல்லை.

சென்னை-600 009



2008 ஏப்ரல் 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் 2,000 எக்டேர் நிலப்பரப்புக்கு மேல் இருக்கிறது. ஏனென்றால் 6 கிலோ மீட்டர் தூரத்திலே கருங்கலூர் என்ற இடத்திலே தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி ஒன்று இயங்கிக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், சொல்லப்பட்டிருக்கிற அந்த 2,000 எக்டேருக்கு மேல் நிலப்பரப்பும் இருக்கிறது. மொத்த இலக்கு என்பது, அமைச்சர் சொல்லக்கூடிய அந்தத் தொகையும் வரும் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆகவே, அதையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு நீங்கள் அதனைத் துவங்குவீர்களா என்பதை மீண்டும் வலியுறுத்திக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான தகுதி தற்போது இல்லை. ஆனால் அதற்குமேல் அவர்கள் ஏதாவது விவரம் சொல்லி, அந்தத் தகுதியைக் காட்டுவாரேயானால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கலந்துகொண்டு இதற்கான நடவடிக்கையை நான் மேற்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் ஏறக்குறைய தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், இன்று கிராமங்களிலே செய்யக்கூடிய வங்கிகளுடைய பணிகள் முழுமையும் செய்கின்றன. ஒரு கிராமக் கூட்டுறவு வங்கியினுடைய வரவு-செலவு நிருவாகத்தைப் பார்த்தால், நகைக் கடன் மட்டுமல்ல, பயிர்க் கடன் மட்டுமல்ல, வைப்பு நிதிகளைப் பொறுத்தவரையில் ஒரு கிராமக் கூட்டுறவு வங்கியிலே ஏறக்குறைய 50 கோடி, 60 கோடி ரூபாய் அளவுக்குக்கூட வைப்பு நிதிகள் இருக்கின்றன, வரவு-செலவுகள் இருக்கின்றன. ஆனால், ஒரே ஒரு செயலாளர் மட்டும்தான் அதை நிர்வாகம் செய்கின்றார். அந்தச் செயலாளரும், அந்தக் கூட்டுறவு வங்கியிலே 25 ஆண்டுகள், 30 ஆண்டுகள் இருக்கின்ற காரணத்தினால், அவரைச் சுற்றி ஒரு வளையத்தை ஏற்படுத்திக்கொண்டு, அந்த கிராமத்திற்கான கடன் வழங்கும் முறையையே அவருக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்கிறார். எனவே, கூட்டுறவுச் செயலாளர் என்பவர்,

[2008 ஏப்ரல் 3

அநேக சமயங்களிலே ஒரு மிகப் பெரிய அரசியல் அந்தஸ்தைக்கூட அந்தக் கிராமத்திலே பெற்றுக்கொள்கிறார். இவ்வளவு பெரிய வரவு-செலவுகளை வைத்திருக்கக்கூடிய அந்தக் கூட்டுறவு வங்கியினுடைய செயலாளர் பதவியையே மறுபரிசீலனை செய்து, முழுமையாக வங்கிப் பயிற்சி பெற்று நல்லமுறையில் வங்கியை நிர்வாகம் செய்யக்கூடிய ஒரு மேலாளருக்கு என்ன தகுதி வேண்டுமோ, அந்தக் தகுதிகளின் அடிப்படையிலே கிராமக் கூட்டுறவு வங்கிகளுக்கு நிர்வாகிகளை அமர்த்த அரசு முன்வருமா என்று தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

*முற்பகல். 9-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான விவரங்களையும் தகுதிகளையும் ஆராய்ந்து, வருகிற 8 ஆம் தேதி அன்று நடைபெறும் என்னுடைய கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையின்போது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொல்கிற கருத்துகளையும் இணைத்து, அதற்கான நடவடிக்கையை மேற்கொள்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**42—**

### தூர் வாரும் பணி

***30318—திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாமிரபரணி ஆற்றின் திருவைகுண்டம் தென்கால் வாய்க்காலை தூர் வாரி சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 ஏப்ரல் 3]

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். தென்கால் வாய்க்காலை முற்றிலுமாக தூர் வாரி சீரமைக்க வரும் நிதியாண்டுகளில் பெறப்படும் பராமரிப்பு நிதியிலிருந்து முன்னுரிமை அடிப்படையில் பணி மேற்கொள்ள மதுரை மண்டல நீர்வள ஆதார அமைப்புப். பொதுப் பணித் துறை தலைமைப் பொறியாளரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாமிரபரணி ஆற்றின் திருவைகுண்டத்தினுடைய தென்கால் வாய்க்கால் பகுதியில் மழைக் காலத்தில் கடுமையாக தண்ணீர் ஓடும்போது அந்த வாய்க்கால் மணலால் சூழப்பட்டு, கடுமையாகப் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. அந்தவகையிலே திருவைகுண்டத்தினுடைய தென்கால் வாய்க்கால் பகுதியில் இருக்கின்ற 13 குளங்களில் முதல் குளமாக இருக்கின்ற கடம்பா குளம் ஏறக்குறைய 200 ஏக்கர் பரப்பளவு கொண்ட குளமாக இருக்கின்றது. அந்தக் குளம் இப்போது சுருங்கி அதிலிருக்கும் தண்ணீரைக் கொண்டு ஒருபோகம் விளைவித்தாலே போதாது என்ற நிலையில் இருந்து கொண்டிருக்கின்றது. அந்தக் குளத்தைச் சீரமைத்தால் ஏறக்குறைய 3 போகங்கள் விளைவிக்கக்கூடிய அளவுக்கு தண்ணீரைத் தேக்கி வைக்க முடியும். குறிப்பாக, விவசாயப் பெருமக்கள் 'கடம்பா' என்பதை கடலில் பாதி என்று சொல்வார்கள். அதேபோல அதன்கீழ் உள்ள அம்மன்குளம், நல்லூர் மேலக்குளம், நல்லூர் கீழக்குளம், கானங்குளம், ஆறுமுகனேரி குளம், நத்தகுளம், நாலாயிரம்விளைகுளம், சின்மாவடிகுளம், துலுக்கன்குளம், வண்ணான்குளம், ஆவுடையார் மற்றும் எல்லப்பநாயக்கன்குளம் போன்ற 12 குளங்களும் மணல் திட்டுக்களாக மாறி அவற்றில் இன்றைக்குத் தண்ணீர் தேக்கி வைக்க முடியாத ஒரு சூழ்நிலையில் இருக்கின்றன. இந்த 13 குளங்களையும் விவசாயப் பெருமக்களைப் பாதுகாக்கின்ற வகையிலே தூர் வாரி அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்ற கேள்வியைக் கேட்டு, கடந்த மழைக் காலத்தில் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்ற விவசாயிகளைச் சந்திக்கின்ற போது, அந்தப் பகுதியில் இருக்கின்ற வடிகால்கள் எல்லாம் தூர் வாரப்படவில்லை. அதனால் வயல்களிலே தண்ணீர் ஏறி,

[2008 ஏப்ரல் 3

நெற்பயிர்கள் எல்லாம் சாய்ந்து மீண்டும் முளைக்கின்ற அளவுக்கு மோசமான சூழ்நிலை ஏற்பட்டது. ஏனென்று சொன்னால், இரண்டு வருட காலமாக அரசாங்கம் தூர்வார நடவடிக்கை எடுக்கவில்லை. அதுபோல, இதற்கு சட்டமன்ற உறுப்பினர் நிதி மற்றும் பாராளுமன்ற உறுப்பினருடைய நிதியையும் பயன்படுத்த முடியாது என்ற விதிகள் எல்லாம் இருக்கின்றபோது அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றார்கள். அந்த நிலைமைகளை எல்லாம் மாற்றுகின்ற வகையிலே, எப்படி திருவைகுண்டம் தென்கால் வாய்க்காலை தூர் வாரி அதில் லைனிங் செய்யவேண்டும் என்ற கோரிக்கை இருக்கின்றதோ அதுபோல, இந்த வடிகால்களை எல்லாம் வருடந் தோறும் தூர் வாரி விவசாயப் பெருமக்களைக் காப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை அமைச்சர் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் 3, 4 கேள்விகளை ஒரே கேள்வியாகக் கேட்டிருக்கிறார். மூலக் கேள்வி என்ன? தென்கால் வாய்க்கால் தூர்வாரப்படுமா என்பது. தென்கால் வாய்க்கால் என்பது என்ன? திருவைகுண்டம் அணைக்கட்டிலிருந்து வலப்புறமாகப் பிரிந்து போகிற ஒரு கால்வாய். அது 8, 8½ கிலோ மீட்டர் ஓடி, கடைசியில் கடம்பா குளத்திலே கலக்கிறது. இது தூர் வாரப்படுமா என்று கேட்டிருக்கிறீர்கள். இந்தத் தென்கால் வாய்க்காலின் 8.60 கிலோ மீட்டர் தூரத்தில் maintenance மூலமாக, 6 இலட்சம் செலவில் 2.60 கிலோ மீட்டர் தூர் வாரப்பட்டிருக்கிறது. M.L.A. fund-லிருந்து ரூபாய் 5 இலட்சம் செலவு செய்து இடையில் ஷட்டர்கள் போடப்பட்டிருக்கின்றன. M.P.-யினுடைய நிதியிலிருந்து 12 இலட்சம் ரூபாய் செலவு செய்து அடித்தளம் அமைக்கப்பட்டிருக்கிறது. மீதி இருப்பதை இந்த ஆண்டு maintenance-லே செய்வோம். மூலக் கேள்விக்கு இதுதான் பதில்.

முற்பகல் 9-40

அடுத்து, அவர் கேட்ட கேள்வி கடம்பா குளம் தூர்வாரப்படுமா என்பதாகும். அவர் சொன்னதைப்போல், கடம்பா என்பதை கடல் பாதி, கடம்பா பாதி என்பார்கள். 340 மில்லியன் கன அடி



2008 ஏப்ரல் 3]

கொள்ளளவு கொண்டது. அதனுடைய கரையின் நீளம் சுமார் 6 கிலோ மீட்டர். 10 மடைகள் உண்டு. அவர் சொன்னது என்னவென்றால், திருவைகுண்டம் அணைக்கட்டிலேயிருந்து இந்த தென்கால்வாய்க்காலிலே ஆறரை கிலோ மீட்டர் தூரம் தண்ணீர் எடுத்துக்கொண்டு போய், கடம்பாவிலே விட்டு நிரப்பி, பிறகு அதற்குக் கீழே இருக்கின்ற அம்மன்குளம், கானாங்குளம், செய்கோந்தான்குளம், சீனிமாடிகுளம், நாலாறுமணிகுளம், வண்ணான்குளம், துலுக்கன்குளம், எல்லப்பன்நாயக்கன்குளம் என்று கடைசியிலே இருக்கின்ற குளம் எல்லப்பன்நாயக்கன்குளம் திருச்செந்தூரிலே வந்து முடியும். கடம்பா நிரம்பி, இந்தக் குளங்களுக்குத் தண்ணீர் போகவில்லை என்பதற்காகத்தான், தென்கால்வாய்க்காலிலே கொண்டு வருகிற தண்ணீரை கடம்பாவிலே தேக்கி வைத்து, கடம்பாவிற்குள்ளேயே ஒரு பைபாஸ் வெட்டி, அதை அம்மன்குளத்திற்கும், செய்கோந்தான்குளத்திற்கும் கொண்டுபோக வேண்டும். ஆனால், இந்தக் கால்வாயில் கடம்பா பை-பாஸ் சேனலை வெட்டுகிறபொழுது பல பிரச்சினைகள் இருக்கிறது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியாது. அப்போது எங்கள் ஆட்சி அல்ல; எங்கள் ஆட்சி வருவதற்கு முன்னாலே அந்தக் கால பழையக் கதையைச் சொல்கிறேன். பல பொறியாளர்கள், அதிலே செய்த ஊழலின் காரணமாக சஸ்பென்ட் ஆனவர்கள், இன்று வரையிலே சஸ்பென்ஷனிலே இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம் அவர்கள் அறிவார்கள். புலிப்பாண்டியன் என்கின்ற ஒரு இன்ஜினியரை கான்டிராக்டர்கள் மதுரைக்கு கொண்டு வந்து அடித்துக் கொன்றுவிட்ட கதை அவர்கள் ஊருக்கே தெரியும். ஆனால், நாங்கள் வந்த பிறகு, அந்த 13 குளத்திற்கும் கடைமடை அமைத்து, தண்ணீரைக் கொண்டுபோய் எல்லப்பன்நாயக்கன்குளத்தை நிரப்பினோம். நானே இவ்வளவுதூரம் நடந்துபோய் இருக்கிறேன். ஆனால், இப்போது நிலைமை என்ன? அந்தக் குளங்களில் இருந்து போகிற அந்த பைப்புகளை எல்லாம் இறவைப் பாசனக்காரர்கள் உடைத்து விட்டதால், அற்புதமாக ஓடிக்கொண்டிருந்த கடம்பா பை-பாஸ் சேனல் இன்றைக்கு ஷீனம் அடைந்திருக்கிறது. அதையும் இந்த முறை சரி செய்ய வேண்டும் என்பதற்காக இதுவரையிலே சுமார் 9 கோடி ரூபாயை அந்தக் கடம்பா பை-பாஸ்-க்குச் செலவு செய்திருக்கிறோம். இந்த ஆண்டு மறுபடியும் சீரமைக்க வேண்டும். இந்த அவையிலே சொல்கிறேன். எப்படி சீரமைத்தாலும் விவசாயிகள் ஒத்துழைக்காவிட்டால் அதைக் கட்டிக் காக்க முடியாது கட்சி வித்தியாசம் இல்லாமல் எல்லோரும் அதற்கு உறுதுணை புரிய வேண்டும். இன்னும் சொல்கிறேன்;

[2008 ஏப்ரல் 3

நம்முடைய கைகளிலா கடம்பா அணையின் 10 மடையின் சாவிகள் இருக்கின்றன? இன்றைக்கும் விவசாயிகள்தான் பிடுங்கி வைத்துக்கொண்டு தகராறு செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, எல்லோரும் சேர்ந்து ஒத்துழைத்தாலன்றி, கடம்பா பை-பாஸைக் காப்பாற்ற முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கமான பதிலினை இங்கே அவையிலே எடுத்துச்சொல்லியிருக்கின்றார்கள். நாங்கள் சொல்வது, 12 குளங்களுக்கும் தண்ணீர் வேண்டும். ஆனால், அந்தக் கடம்பாகுளம் பாசனத்தில் இருக்கின்ற 2,500 ஏக்கர் நிலபரப்பில் மூன்று போகம் விளைவிப்பதற்கான தண்ணீரையும் தேக்கி வைக்க முடியும் என்பதைத்தான் அமைச்சருக்குச் சுட்டிக்காட்டினோம். குறிப்பாகச் சொல்லும்போது, கானங்குளம் பகுதியிலேயிருந்து கடைசியில் உள்ள எல்லப்பநாயக்கன்குளத்திற்குச் செல்கின்ற அந்தப் பகுதிவரை காயாமொழிகுளத்திற்கான ஒரு சேனலை மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே கிராமத் தன்னிறைவுத் திட்டத்தின்மூலம் அமைக்கப்பட்டது. அங்கே வழித் தடம் தொடங்கப்பட்டாலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, அந்தக் கால்வாய்களைச் சீரமைக்க வேண்டும் என்பதற்காக நபார்டு வங்கியின்மூலம் ஏறக்குறைய 92 இலட்சம் ரூபாய்க்கு நிதியை ஒதுக்கி அரசிதழில் வெளியிட்டு அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற வகையிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணை வழங்கினார்கள். காயாமொழிகுளத்திற்குத் தண்ணீர் செல்கிறபோது, ஏறக்குறைய 3 பஞ்சாயத்துகளில், 30 ஊர்களில் உள்ள கிணறுகளில் நீர் ஊறுகின்ற வகையிலே அந்தத் திட்டத்திற்காக 92 இலட்சம் ரூபாயை நபார்டு வங்கியின்மூலம் நிதி ஒதுக்கி ஆணைகளை வெளியிட்டார்கள். ஆனால், இரண்டு வருடங்கள் ஆகியிருக்கின்றன. இந்தத் திட்டம் அப்படியே கிடப்பிலே இருக்கின்றதே அதற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் சொல்வதற்குத் தயாரா என்ற கேள்வியைக் கேட்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.



2008 ஏப்ரல் 3]

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னேன். முன்னால் ஆட்சியில் நபார்டு வங்கிக்கு அனுப்பி இருக்கிறோம் என்று சொன்னார்கள். நபார்டு வங்கியினுடைய பணம் சேங்ஷன் ஆகி எப்போது வந்தது? அவர்கள் ஆட்சியிலே வந்ததா? எங்கள் ஆட்சியில் வந்ததா? எங்கள் ஆட்சியிலே வந்திருந்தால் அதுகுறித்து தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். அவர்கள் ஆட்சியில் வந்திருந்தாலும் விட்டுப்போய் இருந்தால் இந்த ஆட்சி அதை நடைமுறைப்படுத்தும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா.

**திரு. என். மாலைராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி தொகுதியில் ஓடுகின்ற திருநெல்வேலி கால்வாய், கோடகன் கால்வாய் ஆகிய கால்வாய்களை சீரமைத்துப் பராமரிக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் மற்றும் சட்டத் துறை அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்தக் கால்வாய்கள், அணைக்கட்டுகள் சீரமைக்கப்பட்டுள்ளன. மேலும், கோடைமேல்அழகர் அணையையும், நரியூர்—கெனடியன் கால்வாயையும் நாங்கள் இப்பொழுதுதான் சீரமைத்திருக்கிறோம். ஆகவே வரும் நிதியாண்டிலும் இந்த 8 அணைக்கட்டுகளையும் சீரமைக்க வேண்டுமென்று அரசு ஒரு பெரும் திட்டத்தைத் தீட்டிக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட பம்பை வாய்க்கால் திருக்கோயிலூரிலே ஆரம்பித்து, பாண்டிச்சேரி வரை செல்கின்றது. அந்த வாய்க்கால் பல ஆண்டுகளாகத் தூர் வாரப்படாததால் எங்கள் கிராமத்திற்கு அருகில் உள்ள பதினைந்துகண் என்று சொல்லக்கூடிய அந்த வாய்க்காலில் நீர் அதிகமாகி வெள்ளம் நிலங்கள் வழியாக, சென்று பெண்ணையாற்றிலே கலக்கின்றது. அச்சமயம் சாலைகள்

[2008 ஏப்ரல் 3

அரித்துச் செல்லப்படுகின்றன. அந்தக் கால்வாய் மணல் நிரம்பி தூர் வார வேண்டிய நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. அது தூர் வாரப்படுமா என்பதையும் அதேபோன்று விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை விவசாய மக்கள் விளைநிலங்களுக்குப் பயன்படுத்தக்கூடிய சாத்தனூர் அணை, கிட்டத்தட்ட 40, 50 அடி சேறு சகதியும் நிரம்பி அதனுடைய கொள்ளளவு பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, அதிலுள்ள சேறு சகதிகளை அகற்றி, அந்த விவசாயிகளினுடைய துயர் துடைக்கின்ற வகையிலே தூர் வாருவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து நமது அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பம்பைக் கால்வாய் பற்றி தனிக்கேள்வி போடலாம். சாத்தனூர் அணை தூர் வாரப்படுமா என்று கேட்டார். அணையில் தூர் வாருவதில்லை; வாரவும் முடியாது, வாருவதும் கிடையாது. அதிலே படியக்கூடிய வண்டல் மண் வெளியேறுவதற்கு மணல்போக்கியாக சில கண்களை அமைத்திருக்கிறார்கள். அதன் வழியாக வண்டல் மண் வெளியே வந்துவிழும். அதுதான் கால்வாயிலே silt ஆக மாறுகிறது. அதை நாம் remove செய்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 43, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரங்கராஜன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**43—**

## பேருந்து வசதி

***33391—திரு. என்.ஆர். ரங்கராஜன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டையிலிருந்து பாண்டிச்சேரிக்கு புதிய பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



2008 ஏப்ரல் 3]

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை-பாண்டிச்சேரி (வழி) மதுக்கூர், மன்னார்குடி, கும்பகோணம், சேத்தியாதோப்பு, வடலூர், குறிஞ்சிப்பாடி, கடலூர் தடத்தின் நீளம் 205 கி.மீ. ஆகும். கோரிக்கை தடம் புதிய வழித்தடமாகும். இத்தடத்தில் இரு மாநில அனுமதிச்சீட்டு பெற்று அதன் பிறகு பேருந்து இயக்கிட இயலும். எனவே, கோரிக்கை தடத்தில் புதிய வழித்தடப் பேருந்துகள் இயக்கிட இருமாநில ஒப்புதல் மற்றும் அனுமதிச்சீட்டு பெற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவன செய்யப்படும் என்ற நல்ல பதிலை அளித்ததற்காக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, பல்வேறு வழித்தடங்களிலே நாங்கள் கேட்ட இடங்களிலே அவர்கள் பேருந்துகளை அளித்திருக்கிறார்கள். அதற்காகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பெல்லாம் சென்னை மாநகரிலேயிருந்து பயணிப்பதற்கு இரண்டு ரூபாய் டோக்கன் கட்டிவிட்டு, பேருந்துகளுக்கு முன்பதிவு செய்ய பயணிகளுக்கு வசதி அளித்திருந்தார்கள். ஆனால் இப்பொழுது கோயம்பேடு பேருந்து நிலையத்திலே அத்தகைய நிலைமை இல்லை. நிலையத்திற்கு வருகின்ற Express Bus-களிலே, விரைவுப் பேருந்துகளிலே பயணம் செய்ய முண்டியடித்துக்கொண்டு ஓடி பல்வேறு இடர்பாடுகளுக்கு பயணிகள் உள்ளாகின்றார்கள். ஆகவே முன்பதிவுக் கட்டணம் 2 ரூபாய் அல்லது 5 ரூபாய் என்று வைத்துக்கொண்டு, அவர்களுக்கு சீரான வகையிலே இடம் அளிப்பதற்கு அரசு முன்வருமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது கணினிமூலம் On-line reservation-ஜே இருக்கிறது. முன்பதிவுக் கட்டணம் மட்டும் அல்ல. On-line reservation ஏற்படுத்தித் தந்திருக்கிறோம். ஒவ்வொரு நாளும் 11,000 டிக்கெட்டுகள் அதிலே பதிவாகின்றன. அந்த வசதிக்காக 7 ரூபாய் 50 காசுகள் கட்டணம் வசூல் செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோயம்பேடு பேருந்து நிலையத்தில் அப்படி ஒரு வசதி ஏற்படுத்த வேண்டுமென்று விரும்புகிறார். அதிகாரிகளோடு ஆய்வு செய்து உடனே அதை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஓமலூர் விழாவிற்கு வருகை தந்தபோது, ஓமலூரிலே இருந்து பேருந்துகள் பல்வேறு பகுதிகளுக்கும் இயக்கப்படும் என்று அறிவித்தார்கள். ஒரு தொகுதிக்கு இரண்டு பேருந்துகள், என்ற அடிப்படையிலேகூட இன்னும் என்னுடைய தொகுதியிலே அறிவிக்கப்படவில்லை. அதுமட்டுல்ல சேலத்திலேயிருந்து பெங்களூருக்கு செல்கின்ற பேருந்துகள் ஓமலூர் பேருந்து நிலையம் வராமல் பை-பாஸ் சாலையிலேயே செல்கின்றன. இது பெரும் பிரச்சினையாக இருக்கிறது. எனவே, ஓமலூரிலேயிருந்து பெங்களூருக்கும், ஓமலூரிலேயிருந்து கோவைக்கும், ஓமலூரிலேயிருந்து திருச்சிக்கும், பயணிகள் செல்கின்ற வகையிலே பேருந்துகளை இயக்குவார்களா என்பதைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அவருக்குத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. புறவழிச் சாலை அமைக்கப்பட்ட பிறகு, பேருந்தில் இருக்கின்றவர்கள் நேரடியாக ஊருக்குள் செல்லும் சாலை வழியாகச் செல்லாமல் புறவழிச் சாலை வழியாகவே சென்று விரைவாக இடத்தைச் சென்றடைய வேண்டுமென்று விரும்புகிறார்கள்.





அனைத்துப் பயணிகளுமே அதைத்தான் விரும்புகிறார்கள். ஒவ்வொரு ஊருக்குள்ளும் பேருந்துகள் சென்று வருகின்றபோது பயண நேரம் அதிகமாகிற காரணத்தால் பயணிகள் ஊரின் நடுவே செல்ல விரும்புவதில்லை. ஓமலூரிலிருந்து சேலம் நகருக்கு, கேட்கின்ற அளவுக்கு தனிப் பேருந்தை விடுகிறோம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஏற்கெனவே உறுதியளித்திருக்கிறோம். இந்த ஆண்டு புதிய பேருந்துகள் வருகின்றபொழுது, நிறைய பேருந்துகளை அவர்களுக்கு அளித்து ஓமலூரிலிருந்து சேலம் வந்து, சேலத்திலிருந்து அவர்கள் ஓமலூர் செல்வதைப்போன்ற வசதி ஏற்படுத்தித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 44, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**44—**

## தொழிற்பேட்டை

***9612—திருமதி பெ. கமலாம்பாள்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் தொகுதியில் புதிய தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் சென்றால் காலாட்டிச் சாப்பிடலாம் என்று சொல்வார்கள். அதாவது, யார் வந்தாலும் நெசவுத் தொழில் செய்து

பிழைக்கலாம் என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட நெசவுத்
தொழில் நசிந்து, நெசவாளர்கள் பாதிக்கப்பட்டு கஷ்டப்படுகிறார்கள்.
காஞ்சிபுரம் பட்டு, உலக அளவில் பெயர்போனது. காஞ்சிபுரம்
கிராமங்கள் விவசாயத்திற்குப் பெயர்போனவை. காஞ்சிபுரம்
காஞ்சிபுரம் தொகுதியிலுள்ள கிராமங்கள் ஏரிகள் நிறைந்தவை. அதுபோல,
தற்போது ஏரி, கிணறுகளில் நீராதாரம் குறைந்து விவசாயம்
பாதிக்கப்பட்டுள்ளது. அதேபோல, தங்கம், ஜரிகை, கோரா பட்டு
விலை அதிகரித்த நிலையில் நெசவுத் தொழிலும் பாதிக்கப்பட்டுள்ளது.
மக்கள் பல கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாகியுள்ளார்கள்.
விவசாய நிலங்களையும் ரியல் எஸ்டேட்காரர்கள் வாங்கிப்
போட்டுவிட்டார்கள். அதனால் கிராமத்திலுள்ள விவசாய மக்களும்,
நெசவாள மக்களும் வேலை கிடைக்காமல், ஸ்ரீபெரும்புதூரில் உள்ள
தொழிற்சாலைகளுக்கு வேலைக்குச் சென்று வருகிறார்கள். நெசவுத்
தொழிலாளர்கள் பலர் கட்டட வேலை, சமையல் வேலை, கூலி
வேலைக்குச் செல்கிறார்கள். காஞ்சிபுரம் தொகுதியில் சிறு, சிறு
தொழிற்பேட்டை, பெரிய தொழிற்பேட்டை அமைத்து தொகுதி
மக்களுக்கு வேலைவாய்ப்புத் தரக் கோரி பல தடவை கேட்டுள்ளேன்.
மேலும் தமிழ் நாட்டிலேயே சுய உதவிக் குழுக்கள் அதிகமுள்ள
தொகுதி காஞ்சிபுரம் தொகுதியாகும். அதனால் சுய உதவிக்
குழுக்களில் உள்ள பெண்கள் தங்கள் சொந்தக் காலில் நிற்பதற்கு
(மணியடிக்கப்பெற்றது) தொழிற் கூடங்கள் அமைத்து அதன்மூலம்
தொழிற் பயிற்சி அளித்து, அவர்களுக்கு வேலைவாய்ப்பு தரக்
கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி, தொழிற்பேட்டை வேண்டும்.
அவ்வளவுதானே?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டத்தில், காஞ்சிபுரம்,
திருமுடிவாக்கம், மறைமலைநகர் மற்றும் ஆலத்தூர் ஆகிய நான்கு
இடங்களில் சிட்கோ மூலம் தொழிற்பேட்டைகள் ஏற்கெனவே
ஆரம்பிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. காஞ்சிபுரத்தில்
அமைந்துள்ள தொழிற்பேட்டையில் 14 தொழிற்கூடங்கள் மற்றும் 64
தொழில் மனைகள் சுமார் 37.43 ஏக்கர் பரப்பளவில்
உருவாக்கப்பட்டுள்ளன. இதில் அனைத்துத் தொழிற்கூடங்களும்
ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. ஆனால், தொழில் மனைகளைப்
பொறுத்தளவிலே 51 மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மீதம் இன்னும்
13 மனைகள் ஒதுக்கீட்டுக்குத் தயாராக உள்ளன. இருந்தாலும்கூட,



தொழில் தொடங்க ஆர்வமாக உள்ள 20 தொழில் முனைவர்கள்
தகுந்த தொழில்நுட்பப் திட்டங்கள் மற்றும் போதுமான நிதி
ஆதாரங்கள் ஆகியவற்றுடன் திருப்பித் தரப்படாத ஒப்பளிப்புத்
தொகையினைக் கட்ட முன்வந்தால், புதிதாகத் தொழிற்பேட்டை
அமைப்பதற்கான நிலம், தொழில் முனைவோர் தேவை ஆகியவற்றைக்
கணக்கில்கொண்டு, மாவட்ட ஆட்சியர், மாவட்ட தொழில்
மையத்தினுடைய பொது மேலாளர், தொழில் முதலீட்டுக் கழக
இயக்குநர் ஆகியோருடன் கலந்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
கருத்திற்கேற்ப, தொழிற்பேட்டை ஆரம்பிப்பது பற்றி அரசு முடிவு
செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி
பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத்
தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்
திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கரூர் சட்டமன்றத் தொகுதி, கரூர் ஊராட்சி
ஒன்றியத்திற்குட்பட்ட மண்மங்கலம் ஊராட்சி, ஆத்தூர்
பூலாம்பாளையம் ஊராட்சி ஆகிய இரண்டு ஊராட்சிப் பகுதிகளில்
புதிய தொழில் பேட்டை அமைப்பதற்காக அரசின் சார்பில் சுமார்
450 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்துவதாகக் கூறி, நிலத்தை
அதிகாரிகள் ஆய்வு செய்தபோது, அங்கே இருக்கின்ற விவசாயப்
பெருமக்களால் மாவட்ட ஆட்சித் தலைவர் உட்பட பல
அதிகாரிகளிடம் மனு கொடுக்கப்பட்டு அந்த நிலங்கள் விவசாய
நிலங்களாக உள்ளன; அதனால் மாற்று இடத்தில் தொழிற் பேட்டை
அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று
கோரியுள்ளார்கள். எனவே, தமிழக அரசு மாற்று இடத்தில்
தொழிற்பேட்டை அமைக்க நடவடிக்கை எடுக்குமா எனத்
தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை
அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9-55 [2008 ஏப்ரல் 3

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வாரம் நமது 'SIDCO' நிறுவன அதிகாரிகள், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன இடங்களுக்குச் சென்றபோது, விவசாயிகள் அந்த இடத்திலே தொழிற்பேட்டை அமைக்கவேண்டாமென்று சொன்னது உண்மை. வேறு இடத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவு செய்து காட்டினால், தொழிற்பேட்டை அமைக்க அரசு விரைவிலே நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 45, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**45—**

## மருத்துவமனைக் கட்டடம்

***9260—திருமதி ஜி. லதா:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் E.S.I. மருத்துவமனைக்குச் சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) குடியாத்தம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா, இருக்கையில் இல்லை. அவருக்கு மாற்றாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவமனையைக் கட்டுவதற்குத் தேவையான



2008 ஏப்ரல் 3]

இட வசதி அங்கே இருக்கிறது. இதுபோன்று மாநிலம் பூராவும் இருக்கக்கூடிய E.S.I. மருத்துவமனைகளுக்குக் கட்டட வசதியை ஏற்படுத்தி, அதன் செயல்பாட்டைச் சிறப்பாகக் கொண்டுவரவேண்டிய தேவையிருக்கிறது. குறிப்பாக, இந்த மருத்துவமனையில் போதிய மருத்துவர்கள், ஊழியர்கள் இல்லாத நிலையுள்ளது. அதுபோன்று, எடை பார்க்கும் கருவி, E.C.G. கருவி உள்ளிட்ட கருவிகள் அங்கு இல்லை. மேலும் மருத்துவர்கள் குறித்த நேரத்தில் மருத்துவமனைக்கு வராத நிலையும் தொடர்கிறது. இந்தக் குறைபாடுகள் எல்லாம் சரி செய்யப்படுமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் மொத்தம் 644 மருத்துவர்கள் இருக்கவேண்டிய இடத்திலே, 91 காலிப் பணியிடங்கள் இருந்தன. அதைப்போலவே, 351 செவிலியர்கள் இருக்கவேண்டிய இடத்திலே, 46 செவிலியர் பணியிடங்கள் காலியாக இருந்தன. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப்பிறகு, காலியாகயிருந்த 91 மருத்துவர் பணியிடங்களில் 86 மருத்துவர்கள் இப்போது நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதைப்போலவே, காலியாகயிருந்த 46 செவிலியர் பணியிடங்களில், 42 செவிலியர்கள் நியமிக்கப்பட்டு, அனைத்து E.S.I. மருத்துவமனைகளும் மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகுதான், அனைத்து E.S.I. மருத்துவமனைகளையும் ஆய்வு செய்து, மருத்துவமனைகளுக்குத் தேவையான அனைத்துக் கருவிகளும் வாங்கிக் கொடுக்கப்பட்டு, மிகச் சிறப்பான முறையிலே அத்தனை மருத்துவமனைகளும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. எங்கே குறையிருந்தாலும், அதைச் சுட்டிக்காட்டினால், அந்தக் குறைகளைப் போக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் குழித்துறை, இடைக்கோடு, நித்திரவிளை, கருங்கல், ஆரல்வாய்மொழி, நாகர்கோவில் ஆகிய

6 E.S.I. மருத்துவமனைகள் உள்ளன. இவற்றிலும் நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டிய குறைபாடுகள் உள்ளன. திருவட்டாறில் புதிய E.S.I. மருத்துவமனை தொடங்கப்படுமா என்றும், அதுபோல, கன்னியாகுமரி மாவட்டத்தில் படுக்கை வசதியுடன்கூடிய ஒரு பெரிய E.S.I. மருத்துவமனையை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3,000 காப்பீட்டாளர்கள் இருந்தால் ஒரு மருந்தகத்தை அமைக்க முடியும். அதைப்போலவே, 50,000 காப்பீட்டாளர்கள் இருந்தால் ஒரு மிகப் பெரிய மருத்துவமனையை அமைக்க முடியும். ஆக, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, 38,000 தொழிலாளர்கள்தான் இருக்கிறார்கள். எனவே, அங்கே மருத்துவமனை அமைக்க முடியாது.

அதைப்போலவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற ஆறு மருந்தகங்களில், கருங்கலில்தான் ஒரேயொரு மருத்துவர் பணியிடம் காலியாக இருந்தது. அதையும் சென்ற வாரம் நிரப்பியிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு தொழிலாளர் நலத் துறை மானியக் கோரிக்கையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், திருநெல்வேலியில் 50 படுக்கைகள்கொண்ட E.S.I. மருத்துவமனை ஆரம்பிக்கப்படும் என்று வாக்குறுதி அளித்தார்கள். அது இப்போது எந்த நிலையில் இருக்கின்றது? நிலம் கையகப்படுத்தப்பட்டுவிட்டதா? பணி எந்த நிலையில் இருக்கிறது என்பதை தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியில் 50 படுக்கை வசதிகொண்ட





தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைக்குப் புதியதாகக் கட்டடம் கட்டுவதற்காக நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, வாங்கப்பட்டுள்ளது. அங்கு அரசு ஈட்டுறுதிக் கழகத்தின்மூலம் கட்டடம் கட்டப்பட்டவுடன் மருத்துவமனை விரைவிலே தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 46, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**46—**

**தரம் உயர்த்துதல்**

***33019—திரு. தி. வேல்முருகன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, கோ. சத்திரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், கோ.சத்திரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி 2007-2008 ஆம் கல்வி ஆண்டில் உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கல்வி ஆண்டில் எனது தொகுதியில் இந்த கோ.சத்திரம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தரவேண்டுமென்று மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை

அமைச்சரிடத்தில் நான் வைத்த வேண்டுகோளை ஏற்று, தரம் உயர்த்தித் தந்தமைக்காக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் படித்து, வளர்ந்து, இன்றையதினம் சட்டமன்ற உறுப்பினராக ஆவதற்குக் காரணமாக இருந்த குள்ளஞ்சாவடி அரசு உயர்நிலைப் பள்ளியை வரும் கல்வி ஆண்டில் மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்துவதற்கு, நானே எனது சொந்தச் செலவில் அதற்கான தொகையையும் கட்டி இதுவரையில் காத்திருக்கிறேன். அதையும் இந்த ஆண்டு தரம் உயர்த்தித் தரவேண்டும். அதேபோல், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அழைத்துப் பாராட்டப்பட்ட திரு. தங்கர்பச்சான் அவர்கள் படித்த பத்திரக்கோட்டைப் பள்ளியைப் பற்றிதான் 'பள்ளிக்கூடம்' என்ற ஒரு திரைப்படத்தையும் அவர் எடுத்து நாட்டுமக்களுக்குத் தந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட அந்தப் பள்ளியையும் நீங்கள் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கும், 50 கிராமங்களிலிருந்து வரும் மாணவர்கள் கல்வி பெறும் கட்டியங்குப்பம் என்கிற ஒரு பள்ளி, முழுக்க முழுக்க பெண்கள் அதிகமாகப் படிக்கின்ற 70 சதவிகிதத்திற்கும் மேல் பெண்கள் படிக்கின்ற அந்தப் பள்ளியை அவசர அவசியம் கருதி, பெண் கல்வியை வலுப்படுத்துகின்ற வகையில் அதையும் இந்த ஆண்டே மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி, அங்கு வாழ்கின்ற ஒடுக்கப்பட்ட, மிக மிக பின்தங்கிய மக்களுடைய கல்வி அறிவை மேம்படுத்தித் தருவதற்கு மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் முன்வருவாரா என்பதோடு, அங்கு மேல்நிலைக் கல்வியை தொடங்கினால்தான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அறிவித்திருக்கின்ற பண்ருட்டி தொகுதியினுடைய பொறியியல் கல்லூரியில் வரும் ஆண்டு மாணவர்கள் சேர்ந்து பொறியியல் படிப்பு படிப்பதற்கும் ஏதுவாக இருக்குமென்ற அடிப்படையிலே, முன்னுரிமை தந்து இந்த ஆண்டே 3 பள்ளிகளையும் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்த அரசின் விதிமுறைப்படி பணத்தையும் கட்டியிருக்கிறோம். (மணியடிக்கப்பெற்றது) அனைத்தையும் நிறைவேற்றித் தந்திருக்கிறோம்—அவசியம் முதலமைச்சரிடமிருந்து சிறப்பு அனுமதி பெற்றாவது இவற்றை நீங்கள் தரம் உயர்த்தித் தரவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாகக் கேட்டு அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தமிழ்நாட்டிலே படிக்கக்கூடிய மாணவர்கள் உயர் பட்டப்படிப்புகளை, கல்லூரிகளிலே பொறியியல் கல்லூரிகளிலே இடம்பெற்று சிறப்பான முறையிலே கல்வி பயில்வதற்கு ஒரு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய வகையில்தான் நம்முடைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு கடந்த இரண்டு ஆண்டுகளும், இந்த வருடமும் சேர்த்து ஏறத்தாழ 330 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும், அதைப்போல 320 மேல்நிலைப் பள்ளிகளை தரம் உயர்த்திக்கொடுத்திருக்கக்கூடிய ஓர் ஒப்பற்ற ஆட்சி நம்முடைய தலைவர் கலைஞருடைய ஆட்சி என்பதை நான் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அந்த அடிப்படையில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள் குறிப்பிட்டிருக்கக்கூடிய, பத்திரக்கோட்டையாக இருந்தாலும், கட்டியங்குப்பமாக இருந்தாலும், குள்ளஞ்சாவடியாக இருந்தாலும், இந்த 3 ஊர்களில் உள்ள பள்ளிகள் குறித்த விவரங்களை நான் நேற்று நம்முடைய முதன்மைக் கல்வி அலுவலரிடத்திலே கேட்டுக்கொண்டதன்பேரில் அங்கிருந்து முன்மொழிவுகள் முறையாக அரசுக்கு வரப்பெற்றிருக்கின்றன. எனவே, நிச்சயமாக வரக்கூடிய காலகட்டத்திலே அதுகுறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல், மேட்டுக்குப்பம், மேலிருப்பு, கருக்கை, திருவாமூர் ஆகிய ஊர்களில் உள்ள நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நம்முடைய தமிழக அரசினுடைய கல்வித் துறையினுடைய விதிகளுக்கு உட்பட்டுத் தேவையான எல்லா ஏற்பாடுகளையும் நாங்கள் செய்திருக்கிறோம். அந்த நடுநிலைப் பள்ளிகளையும் இந்த ஆண்டே உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தி அப்பகுதி மக்களுடைய கோரிக்கையையும் நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் முன்வருவார்களா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

[2008 ஏப்ரல் 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மேல்நிலைப் பள்ளிகளைப்பற்றி முதன்மைக் கல்வி அலுவலரிடத்திலே சரிபார்க்கின்றபோதே இந்த உயர்நிலைப் பள்ளிகளைப் பற்றி அவர் கேட்பார் என்று தெரியும். ஆனால், என்ன விஷயம் என்றால், மேல்நிலைப் பள்ளிகளுக்கு வந்ததுபோல் இந்த உயர்நிலைப் பள்ளிகளுக்கு அங்கிருந்து இன்னும் முன்மொழிவுகள் வரவில்லை. வந்தால் நிச்சயமாக அரசு அவற்றைப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

**திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணராயபுரம் தொகுதி, சித்தளவாய் ஊராட்சியிலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் துவக்கத்திலே குறிப்பிட்டதைப்போல, தொடர்ச்சியாக ஒவ்வொரு ஆண்டும் பல பள்ளிகளை நாம் தரம் உயர்த்தக்கூடிய முயற்சியிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம். இதிலே பிரச்சினை என்னவென்றால், 234 தொகுதிகளிலும் இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு தொகுதிக்கு, 4, 5 பள்ளிக்கூடங்கள் என்று அனைவருமே கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே, இதிலே இன்னொரு முக்கியமான கருத்தையும் நாம் பார்க்கவேண்டும். அங்கு படிக்கக்கூடிய மாணவர்களுடைய எண்ணிக்கை; பள்ளிகளுக்குள் இருக்கக்கூடிய distance, ஒரு பள்ளிக்கும் அடுத்த பள்ளிக்கும் இருக்கக்கூடிய இடைப்பட்ட தூரம், பெண்கள், ஆதி திராவிடர்கள் பயிலக்கூடிய பள்ளியா என்பதுபோன்ற கருத்துகளையெல்லாம் எடுத்துக்கொண்டு, குறிப்பாக, ஒரு இலட்சம் ரூபாய் உயர்நிலைப் பள்ளிக்கும், இரண்டு இலட்சம் ரூபாய் மேல்நிலைப் பள்ளிக்கும் கட்ட வேண்டிய தொகையை சில பள்ளிகளிலே 4, 5 வருடங்களுக்கு



2008 ஏப்ரல் 3]

முன்னால் கட்டிவிட்டு, காத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்த seniority-ஐயும் இந்தமுறை கணக்கிலே எடுத்துக்கொள்ளலாம் என்று இந்த அரசு கருதுகிறது. அப்படி கணக்கு எடுக்கின்றபொழுது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. காமராஜ் அவர்கள் சொல்லியிருக்கிற அந்தப் பள்ளியையும் அரசு நிச்சயமாக பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம்.

முற்பகல் 10-05

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் 2,700 நடுநிலைப் பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சாமி, அவர்களும் உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்தானே?

**திருமதி செல்வி ராமஜெயம்:** மேலும், பறங்கிப்பேட்டை ஒன்றியம், பெரியப்பட்டு ஊராட்சி, சாமியார் பேட்டையில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்காகவும், புவனகிரி ஒன்றியம், சாத்தப்பாடி ஊராட்சியில் அமைந்துள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்காகவும், பெரியநற்குணம் ஊராட்சித் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்காகவும், அரசு விதிகளுக்குட்பட்டு மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு ரூபாய் 2 இலட்சமும், உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த ஒரு இலட்ச ரூபாயும் பணம் செலுத்தப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. ஆதலால், மேற்கண்ட பள்ளிகளைத் தரம் உயர்த்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல விதிகளுக்குட்பட்டு அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 47, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**47—**

## விளையாட்டு அரங்கம்

***29415—திரு. சி. கோவிந்தசாமி:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்தப்பட்ட விடையினைத் தங்கள் அனுமதியோடு அவைக்கு அளிக்கிறேன். திருப்பூரில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு முன்வருமா என்பது கேள்வி. திருப்பூரில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. கோவிந்தசாமி இருக்கையில் இல்லை. அவருக்கு மாற்றாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதிலுக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருப்பூர் நகரம் மாநகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. திருப்பூர் மாவட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதுபோன்று இந்தப் பின்னணியில்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜாண் ஜோசப், பரிசீலனையில் உள்ளது என்றுதான் பதில் சொல்லியிருக்கிறார். இல்லையென்று சொல்லவில்லை.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** இந்தப் பின்னணியில் நவீன வசதிகளுடன்கூடிய ஒரு சிறந்த விளையாட்டு அரங்கம், அந்தப் பகுதியில் அமைக்கப்படுமா? இதற்கு அந்தப் பகுதி மக்கள் பங்களித்திட தயாராக இருக்கிறார்கள். அந்தப் பகுதி மக்களின்





பங்களிப்போடு, மத்திய அரசாங்கத்தின் பங்களிப்போடு, மாநில அரசாங்கத்தின் பங்களிப்போடு நவீன முறையிலான ஒரு சிறந்த விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல அந்த முன்னேற்றங்களையெல்லாம் மனதில் வைத்துத்தான், திருப்பூருக்கு ஓர் உள் விளையாட்டு அரங்கம் அமைக்க வேண்டுமென்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அவர்களுடைய நீண்டநாள் கோரிக்கையையும் அந்த அவசியத்தையும் உணர்ந்துதான் இந்த அரசு அதை அமைக்கும் பணியை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான ஆலோசனையைப்பெற்று மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை இந்த அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப், என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் SAI Sub-Centre அமைப்பதற்கு திருவட்டாறு, ஆணையடி தோட்டத்தில் 50 ஏக்கர் பூமியை மாவட்ட நிருவாகம் தேர்வு செய்துள்ளது. இந்த பூமி அறநிலையத் துறைக்குச் சொந்தமான பூமி. ஆகவே, அறநிலையத் துறையிடம் இந்த பூமியைக் கேட்டுப் பெறுவதற்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே கேட்கப்பட்டிருக்கின்ற கேள்விக்கும், நீங்கள் கேட்கின்ற இந்தக் கேள்விக்கும் எந்த சம்பந்தமும் இல்லை, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய விளையாட்டுத் துறை அமைச்சர் எங்கள்மீது மிகுந்த அன்பு கொண்டவர். எங்கள் உடல் நலத்திலும் அக்கறை கொண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி வளாகத்திலே ஒரு நவீன உடற்பயிற்சி நிலையம் அமைத்துத் தருவாரா என்று தங்கள்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகக் கட்டப்பட இருக்கிற சட்டமன்ற அலுவலகத்திலே, சட்டமன்ற உறுப்பினர் வளாகத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 48, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல்.பி. தர்மலிங்கம், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**48—**

## புறவழிச் சாலை

***11105—திரு. எல்.பி. தர்மலிங்கம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சத்தியமங்கலம் நகரத்தின் மத்தியில் செல்லும் தேசிய நெடுஞ்சாலை *209*-ஐ புறவழிச்சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. மு. பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற தேசிய நெடுஞ்சாலை மத்திய அரசின் கப்பல் மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்தினுடைய நிதியைப் பெற்று மாநில அரசு பராமரித்து வருகிற தேசிய நெடுஞ்சாலை எண் *209* ஆகும். இந்த தேசிய நெடுஞ்சாலை திண்டுக்கல்லில் தொடங்கி பெங்களூருவிலே முடிகிறது.

அதாவது, திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், பழனி, மடத்துக்குளம், உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி, கிணத்துக்கடவு, கோவை, அன்னூர், சத்தியமங்கலம், பன்னாரி, ஆசனூர், திம்மம் வழியாக பெங்களூர் சென்றடைகிறது. நம்முடைய மாநிலத்தின் எல்லையில் அமைந்துள்ள இந்தச் சாலையினுடைய நீளம் சுமார் *265* கிலோ



மீட்டர். அதாவது, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற புறவழிச் சாலை என்பது, சத்தியமங்கலம் நகரத்திற்குள் வாகனங்கள் சென்று, அங்கே நெரிசல் ஏற்படுகின்ற காரணத்தினால், புறவழிச் சாலை தேவையென்று குறிப்பிட்டிருக்கின்றார். அதாவது, கிலோ மீட்டர் *224*-ல் கோணமலை என்கின்ற இடத்திலிருந்து பிரிந்து, இக்கரை நெகமம், கெஞ்சனூர், அக்கரை நெகமம், சிக்கரசம்பாளையம் வரை அந்த புறவழிச் சாலையை அமைப்பதற்கு அரசின் பரிசீலனையில் உள்ளது. இதற்குரிய சாத்தியக்கூறுகளைக் கடந்த சனவரி *25* ஆம் தேதி மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். அதற்கு அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, புறவழிச் சாலையை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல்.பி. தர்மலிங்கம்.

**திரு. எல்.பி. தர்மலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொல்லவேண்டுமென்று நினைத்தேனோ அதை அமைச்சர் அவர்களே சொல்லிவிட்டார்கள். அதற்குப் பின்பு இன்னொன்று என்னவென்றால், எனது தொகுதிக்கு உட்பட்ட தாளவாடி மலைப்பகுதியானது, அண்டை மாநிலமான கர்நாடகாவை ஒட்டி அமைந்துள்ளது. தாளவாடிக்குச் செல்லவேண்டுமென்று சொன்னால், இரண்டு தடவை கர்நாடக மாநில எல்லைக்குள் சென்றுதான் போக வேண்டியிருக்கிறது. எப்பொழுதெல்லாம் கர்நாடகாவிலே தமிழர் பிரச்சினை வருகிறதோ, அப்பொழுதெல்லாம் தாளவாடியிலே வாழக்கூடிய நம் தமிழ் மக்கள் மிகவும் சிரமத்திற்கு ஆளாகிறார்கள். இப்பொழுதுகூட, தாளவாடியிலிருந்து நமது தமிழ்நாட்டிலுள்ள சத்தியமங்கலத்திற்குப் பேருந்தில் வந்தால், இடையிலே வந்து அவர்கள் குறுக்கிட்டு, பேருந்துகளை விடமாட்டேன் என்கிறார்கள். அதற்காக, நானே நேரடியாக நமது வனத் துறை அமைச்சர் அவர்களிடம் பலமுறை சொல்லிவிட்டேன்.

தாளவாடிக்குப் போகவேண்டுமென்று சொன்னால், கர்நாடக மாநில எல்லைக்குள் இரண்டு தடவை போகவேண்டியதில்லை. தனியாக வனத் துறைக்குச் சொந்தமான ஒரு வழி இருக்கிறது. அந்த வழியைத் தார்ச் சாலையாகப் போட்டுத் தர வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் நீண்டகாலமாகக் கேட்டு வருகிறார்கள்.

தாளவாடி என்பது ஒரு யூனியன். தனியாக ஒரு ஊர் அல்ல. அந்தப் பகுதியில் சாலை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று நம்முடைய வனத் துறை அமைச்சரிடம் பலமுறை கேட்டிருக்கிறேன். நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். எனக்கு இந்தப் புறவழிச் சாலை என்பது முக்கியமில்லை. அதை நீங்கள் போட்டுக் கொடுத்தால் போட்டுக் கொடுங்கள். போட்டுக் கொடுக்காவிட்டாலும்கூடப் பரவாயில்லை. (சிரிப்பு) உண்மையைச் சொல்கிறேன். ஏனென்றால், இது எனக்கு ஒரு சந்தர்ப்பம். கேட்பதையும், கேட்காததையும் கொடுக்கின்ற நமது முதலமைச்சர் அவர்கள் இருக்கின்ற காலத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) எனது தாளவாடி மக்களின் நீண்டநாள் கோரிக்கை இது. ஒவ்வொரு தடவையும் கர்நாடகாவிலே தமிழர் பிரச்சினை வரும்போதெல்லாம் தாளவாடியில் வாழ்கின்ற தமிழர்கள் பாதிக்கப்படுகிறார்கள். வெளியே வர முடியாது. வனத் துறைக்குச் சொந்தமான அந்தச் சாலையைக் கையகப்படுத்தி, சாலை அமைத்துக் கொடுத்தால், அந்தப் பகுதி மக்கள் நமக்கு மிகவும் விசுவாசமாக இருப்பார்கள். ஏனென்றால், எங்கள் சத்தியமங்கலம் தொகுதி என்பது இதோடு முடிவடைகிறது. சத்தியமங்கலத்தின் கடைசி எம்.எல்.ஏ.வாக நானாகத்தான் இருக்கப்போகிறேன். அதனால், அந்தத் தொகுதி மக்களின், இந்தக் கோரிக்கையை ஏற்று, நிறைவேற்றிக் கொடுக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொல்லவேண்டுமென்று நினைத்தேனோ, அதை அவரே சொல்லிவிட்டார். எனவே அவர், மாண்புமிகு வனத் துறை அமைச்சரிடமே அணுகிக் கொள்ளவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல்.பி. தர்மலிங்கம்.

**திரு. எல்.பி. தர்மலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாளவாடிக்குச் செல்வதற்கு நெடுஞ்சாலைத் துறையின் சாலை இப்பொழுது நேராகச் சென்று கொண்டிருக்கிறது. ஆசனூருக்குப் பக்கத்தில் இக்ளூர் வழியாக உள்ள வனத் துறைக்குச் சொந்தமான ஒரு சாலை சென்று கொண்டிருக்கிறது. அது 18 கிலோ



மீட்டர் நீளமுடையது. அந்த 18 கிலோ மீட்டருக்கு நம்முடைய நெடுஞ்சாலைத் துறையின்மூலமாக பணம் ஒதுக்கினால், ரொம்ப சவுகரியமாக இருக்கும். வனத் துறை அமைச்சரிடம் கேட்டால், எங்களிடம் நிதியில்லை, நான் என்ன செய்வது, நான் வேண்டுமென்றால் அறிவித்துவிடுகிறேன், நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து நிதியைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். இரண்டு அமைச்சர்களும் பக்கம் பக்கமாக உட்கார்ந்து இருக்கிறார்கள், எது எதையோ செய்கிறார்கள். நான் வேறொன்றையும் கேட்கவில்லை. நான் எனக்கென்று ஏதாவது கேட்டிருக்கிறேனா? எனக்குக் கேட்கவில்லை. இந்தச் சாலையைப் போட்டுக்கொடுத்தால் நமது முதல்வர் அவர்களுக்குப் பெருமையாக இருக்கும். எனக்கு ஓட்டுப்போட்ட மக்களும் என்னை நினைத்துப் பார்ப்பார்கள். தயவுசெய்து மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்த இரண்டு அமைச்சர்களையும் அழைத்துப் பேசி, இந்தச் சாலையைப் போட்டுத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைக்கிணங்க, நான் நேரில் சென்று அந்த இடத்தைப் பார்வையிட்டேன். அப்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, இரண்டுமுறை கர்நாடக மாநில எல்லைக்குள் சென்றுதான், ஆசனூரிலிருந்து தாளவாடிக்குச் செல்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. இருந்தாலும், அந்தப் பகுதி ஒரு சரணாலயப் பகுதி. அதிகமாக யானைகள் நடமாட்டம் உள்ள தலைமலைப் பகுதியாகும். எனவே, அந்தப் பகுதியில் நாம் சாலை அமைக்க வேண்டுமேயானால், இயற்கையாக வளர்ந்திருக்கின்ற மரங்களை வெட்ட வேண்டுமேயானால், உச்ச நீதிமன்றத்தினுடைய ஆணையைப் பெறவேண்டும். எனவே, அதையெல்லாம் கருத்திலே கொண்டுள்ளோம். அதிலும் சில பகுதிகள் செங்குத்தாக இருக்கின்றன. அந்த இடத்தில் சாலை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து பார்க்கச் சொல்லியிருக்கிறேன். அதன் பிறகு, மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் அனுமதி பெற்று இந்த ஆண்டு மானியக் கோரிக்கையிலே அதுபற்றிய அறிவிப்பு வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

**திரு. எல்.பி. தர்மலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். உங்களுக்குத்தான் சாதகமான பதில் வந்துவிட்டதல்லவா? உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆண்டு காலத்திற்கு முன்னால் திப்புசுல்தான் சாலை என்று ஒரு சாலை இருந்திருக்கிறது. ஆசனூர் செல்ல வேண்டுமென்று சொன்னால், 28 வளைவுகளிலே உயரமான நிலைகளை மாற்றி தாழ்வான நிலைகளிலே, ஆறு சுற்றுகளிலேயே தாளவாடியைச் சென்றடைகின்ற அளவிற்கு ஒரு சர்வே செய்யப்பட்டிருக்கிறது. மத்திய அரசினுடைய அனுமதி பெற வேண்டும் என்ற ஓர் அடிப்படையிலே, வனத் துறையின் அனுமதி பெறுகிற காரணத்தின் அடிப்படையிலே, காலதாமதம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. மத்தியிலும் இவர்கள் ஆட்சியில் இருக்கின்ற காரணத்தினாலே, அந்த அனுமதியைப் பெற்று, மக்களுடைய நலன் கருதி அந்த சாலையை அமைப்பார்களா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு, மத்திய அரசு என்பதெல்லாம் இல்லை. அதற்கென்று ஒரு வரைமுறை இருக்கிறது. அந்த வரைமுறையை ஏற்கெனவே வகுத்திருக்கிறார்கள். அந்த வரைமுறைக்குட்பட்டு எப்படி செயலாற்ற வேண்டுமோ அப்படிச் செயலாற்றி நிச்சயமாக அது செய்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. ஜெயராமன்.

**திரு. எஸ்.பி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி நகரில் சாலை நெரிசலாக உள்ளது. கடைவீதி வழியாகத்தான் பேருந்துகள் செல்ல வேண்டும். செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு இந்த வழியாகத்தான் கரும்பு எடுத்துச்



செல்லவேண்டும். சென்னை, காஞ்சிபுரம், மேல்மருவத்தூர், ஆற்காடு செல்லும் பேருந்துகள் இந்த வழியாகத்தான் செல்ல வேண்டும். எனவே, நெரிசலை சமாளிக்க அரசு புறவழிச் சாலை அமைக்க முன்வருமா என தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 49, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**49—**

## அங்கன்வாடிக் கட்டடம்

***13250—திரு. கே.வீ. ராமநாதன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி, அட்டவணைப்புதூர் கிராமம், கோணமூக்கனூரில் புதிய அங்கன்வாடி மையக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பவானி தொகுதியிலுள்ள அட்டவணைப்புதூர் கிராமம், கோணமூக்கனூரில் புதிய குழந்தைகள் மையம் தற்போது கட்டப்பட்டு வருகிறது. முதல் கட்டமாக நான்கு பக்கமும் சுவர் கட்டும் பணி முடிக்கப்பட்டு, தற்போது கட்டட வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஓரிரு மாதங்களில் வேலை முழுமையாக முடிந்துவிடும் எனத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதன்.

[2008 ஏப்ரல் 3

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்த வேலை இப்பொழுது நடந்துகொண்டிருக்கின்றது. எனது பவானி தொகுதியிலே 134 அங்கன்வாடி மையங்கள் உள்ளன. இவற்றில், இன்னும் 40 அங்கன்வாடி மையங்களுக்குக் கட்டடங்கள் இல்லை. அவற்றுக்குக் கட்டடங்கள் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், அங்கன்வாடி மையங்களைப் பொறுத்தவரையில், ஒரு மையத்திலே 25 குழந்தைகள் முதல் 50 குழந்தைகள் வரை இருக்கின்றன. இந்தக் குழந்தைகளுக்கு சிறு விளையாட்டு சாமான்களாக ஐந்து வகை சாமான்கள் வழங்கப்படுகின்றன. அடுக்குதல், வடிவம் கண்டுபிடிப்பது போன்ற சிறு வகை விளையாட்டுச் சாமான்கள் வழங்கப்படுகின்றன. தொடக்கப் பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கப்படுவதைப்போன்று, இந்த குழந்தைகளுக்கும் சைக்கிள், உட்கார்ந்து ஓட்டுகின்ற சைக்கிள், குதிரை வண்டி போன்ற சாமான்கள் வழங்குவதோடு, ஊஞ்சல், சறுக்கல் போன்ற விளையாட்டுச் சாதனங்களை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

சில மையங்களுக்குக் குண்டுகுண்டான அரிசி வழங்கப்படுகின்றது. தரமான அரிசி வழங்கினால் அந்தக் குழந்தைகள் சாப்பிடுவதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, இந்த மையங்களிலே படிக்கின்ற குழந்தைகளுக்குத் தரமான அரிசியை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், இந்த மையங்களிலே ஒரு குழந்தைக்குச் செலவிடப்படுகின்ற 43 பைசா என்பதை 60 பைசாவாக உயர்த்தி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, இந்த மையங்களிலே விறகுகள் பயன்படுத்தி சமையல் செய்யப்படுகின்றது. இந்த மையங்களுக்கு எரிவாயு இணைப்பு, அடுப்புகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், இந்த 40 மையங்களுக்கும் உடனடியாகக் கட்டடங்கள் ஏற்படுத்தித் தரப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக கேட்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.



2008 ஏப்ரல் 3]

முற்பகல் 10-20

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் கிட்டத்தட்ட 50,043 மையங்கள் உள்ளன. அதில் 80 சதவிகித மையங்கள் சொந்தக் கட்டடங்களில் இருக்கின்றன. தற்போது மத்திய அரசு கட்டடங்களுக்குத் தனியாக நிதி ஒதுக்கீடு செய்வதில்லை. முக்கியமாக சட்டமன்ற உறுப்பினர் நிதி வாயிலாகவும், பாராளுமன்ற உறுப்பினர் நிதி வாயிலாகவும் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரின் சிறப்பு நிதியின் வாயிலாகவும் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும், உள்ளாட்சித் துறையின் வாயிலாகவும் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதுகுறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் பேசப்பட்டுள்ளது. இதற்கு விரைவில் ஒரு தீர்வு காணப்படும் என்று நாங்கள் கருதுகிறோம்.

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தரமான அரிசி வழங்க வேண்டும் என்பதுபற்றிக் கூறினார்கள். கடந்த ஆட்சிக் காலத்தில் மைசூர் பருப்பு என்று தரம் குறைந்த பருப்பைத் தந்தார்கள். நாங்கள் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்த பிறகு அந்தப் பருப்பினை அகற்றிவிட்டதோடு, தற்போது எல்லா மையங்களிலும் தரமான அரிசியும், தரமான துவரம் பருப்பையும், தரமான உணவுப் பொருட்களையும் தருகிறோம் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் விரிவான பதிலைத் தந்தார்கள். ஆகவே, அவர்களுக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன். மேலும் ஒரு சில மையங்களில் வழங்கப்படுகின்ற அரிசி தரமானதாக இல்லை. குண்டு குண்டாக வழங்கப்படுகின்ற அந்த அரிசியை சிறிய குழந்தைகளாக இருக்கக்கூடிய அவர்களால் சாப்பிட முடியவில்லை. ஆகவே, தரமான அரிசியாக வழங்க வேண்டுமென கேட்டு, அதற்கு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து, அதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்வதுடன், குழந்தைகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள அந்த 43 பைசாவை உயர்த்தி, ஒரு குழந்தைக்கு 60 பைசா என்ற வீதத்திலே கொடுத்தால் தரமான காய்கறிகளை, தரமான உணவுப் பொருட்களை

[2008 ஏப்ரல் 3

வாங்குவதற்கும் ஏதுவாக இருக்கும். எனவே, அதையும் உயர்த்தி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தரத்தைப் பற்றிக் கூறினார்கள். இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில்தான் குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மிகவும் சிறப்பாகச் செயல்படுகிறது. அதுகுறித்து நமது பாரதப் பிரதமர் அவர்கள் நமது முதலமைச்சர் அவர்களுக்குக் கடந்த வருடம் கடிதம் எழுதினார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்வதுடன், பிரச்சினை ஏதும் இருந்தால் கண்டிப்பாக நேரில் பார்த்து அதைக் களைவோம் என உறுதிப்படத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 50, திரு. எஸ்.ஆர். இராஜா, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**50—**

## மீன் அங்காடி

***31777—திரு. எஸ்.ஆர். இராஜா:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, பாலவாக்கம் குப்பம் பகுதியில் குளிர்சாதன வசதியுடன் மீன் அங்காடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தாம்பரம் தொகுதி, பாலவாக்கம் பகுதியில் குளிர்சாதன வசதியுடன்கூடிய மீன் அங்காடி அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.



2008 ஏப்ரல் 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவான்மியூர் குப்பம், கொட்டிவாக்கம் குப்பம், பாலவாக்கம் குப்பம், நீலாங்கரை குப்பம், ஈஞ்சம்பாக்கம் குப்பம் ஆகிய குப்பங்களிலே இருக்கின்ற மீனவர்கள் எல்லாம் அதிகமாக மீன்களைப் பிடித்து வந்து மையப் பகுதியாக இருக்கின்ற பாலவாக்கம் பகுதியிலே, சற்றேறக்குறைய 9 கிரவுண்ட் நிலப்பரப்பிலே மீன் நிலையம் அமைத்து, வியாபாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆக, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தங்கள்மூலமாக தெரிவித்துக்கொள்வது, அந்தப் பகுதியிலே குளிர்சாதன வசதியோடு ஒரு மீன் அங்காடி அமைத்துக் கொடுத்தால், அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற மீனவ மக்களுக்கு நன்மை பயக்கும் என்பதைத் தங்கள்மூலமாக தெரிவித்து, அந்தப் பணியை நடத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலவாக்கம் மீனவ கிராமத்திலிருந்து சுமார் 2 கி.மீ. தூரத்தில் கிழக்கு கடற்கரை சாலையிலுள்ள சின்ன நீலாங்கரையில் மீன் வளத் துறைக்குச் சொந்தமான நிலத்தில் சுமார் 15,50,000 ரூபாய் செலவில் சுமார் 2 டன்கள் அளவிற்கு மீன்கள் கெடாமல் பாதுகாக்கக்கூடிய குளிர்பதன அறை உட்பட 50 பேர் அமர்ந்து சுகாதார முறையில் மீன் வியாபாரம் செய்யத்தக்கவகையில் மீனவர் அங்காடி கட்டி முடிக்கப்பட்டு, அதில் கொட்டிவாக்கம் முதல் பெரிய நீலாங்கரை வரையிலுள்ள மீனவ மகளிர் மீன் வியாபாரம் செய்து வருகின்றனர். எனவே, அருகாமையிலுள்ள பாலவாக்கம் குப்பம் பகுதியில் குளிர்சாதன வசதியுடன் கூடிய இன்னொரு மீன் அங்காடி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லிய கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். இருந்தாலும், அந்தப் பகுதியிலே இருக்கின்ற மீனவர்கள் எல்லாம்

[2008 ஏப்ரல் 3

கடலுக்குச் சென்று மீன்பிடித்து திரும்புகின்றவகையில் அங்கே ஒரு லைட் ஹவுசை அமைக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். அதையும் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், அதேபோல தாம்பரம் நகரம், சேலையூர் கேம்ப் ரோடு பகுதி மற்றும் மேடவாக்கம் பகுதி போன்ற மையப் பகுதிகளைச் சுற்றி 25 முதல் 30 கிராம மக்கள் வருகிறார்கள். அங்கே தேவையான அரசு நிலங்களும் இருக்கின்றன. அங்கே அரசின் சார்பாக மீன் அங்காடி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டுள்ளதைப்போல, light house என்பது 50 கிலோ மீட்டர், 100 கிலோ மீட்டருக்கிடையிலே அமைக்கப்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். அருகிலே நம்முடைய நொச்சிக்குப்பம் பகுதியிலேதான் light house இருக்கிறது. அது சுமார் 100 கிலோ மீட்டர் தூரம் வரை உள்ள மீனவ மக்களுக்கு பயன்பாடாக இருக்கிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோல, மற்றொரு கேள்வியைக் கேட்டிருக்கின்றார்கள். நம்முடைய தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் தற்போது சென்னையில், அடையாறு, ராஜா அண்ணாமலைபுரம், நந்தனம், திருவான்மியூர், தேனாம்பேட்டை, அண்ணா நகர் மற்றும் ஆவடியில் மீன் விற்பனை அங்காடி அமைத்துள்ளது. இவற்றில், நந்தனம் மற்றும் அண்ணா நகரில் நவீன மீன் விற்பனை அங்காடி அமைக்கப்பெற்று, பொது மக்களின் பேராதரவோடு விற்பனை நடைபெறுகிறது. மேலும், தாம்பரம் தாலுகா, செம்பாக்கம் பேரூராட்சியில் நடமாடும் மீன் விற்பனை வாரந்தோறும், புதன் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற்று வருகிறது. செம்பாக்கம் மற்றும் வேளச்சேரி பகுதிகளில் அல்லது மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற ஏதாவதொரு பகுதியில் குறைந்தபட்சம் 750 சதுர அடி இடம் உள்ளாட்சியிடமிருந்தோ அல்லது மாவட்ட நிர்வாகத்திடமிருந்தோ கிடைக்கப்பெற்றால், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின்மூலமாக, குளிர்சாதன வசதியுடன் நவீன மீன் விற்பனை அங்காடி அமைக்க வழிவகை செய்யப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



2008 ஏப்ரல் 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

**[குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈழத் தமிழர்கள் பிரச்சினை குறித்து. . .

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி பிரச்சினை குறித்து. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாம் ஆய்விலே இருக்கின்றன. (குறுக்கீடுகள்) எல்லாமே ஆய்விலே இருக்கின்றன. (குறுக்கீடுகள்) பரிசீலனை செய்து எடுக்கப்படும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுத்திருக்கின்ற எல்லாமே ஆய்விலே இருக்கின்றன. அவற்றைப் பரிசீலனை செய்த பின்னர் எடுக்கப்படும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

## 3. கவன ஈர்ப்பு

### வால்பாறை தொகுதி, மக்களுக்குக் குடிநீர் வசதி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து கவன ஈர்ப்பு. திரு. கோவை தங்கம் அவர்கள் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம். (குறுக்கீடுகள்) எல்லாம் ஆய்விலே இருக்கின்றன. பரிசீலனை செய்து எடுக்கப்படும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. கோவை தங்கம், பேசுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் பொது மக்களுக்குப் போதிய குடிநீர் கிடைக்காததால் ஏற்பட்டுள்ள நிலை" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள், எல்லாம் பரிசீலனையில் இருக்கின்றன. (குறுக்கீடு) பார்ப்போம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

கோவை மாவட்டம், வால்பாறை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியில், வால்பாறை நகர பகுதி நீங்கலாக மொத்தம் 85 குடியிருப்புகள் அமைந்துள்ளன. அவற்றில் 69 குடியிருப்புகள் தனியார் தேயிலைத் தோட்டத்திற்குச் சொந்தமான பகுதியிலும் 11 குடியிருப்புகள் வனத் துறைக்குச் சொந்தமான பகுதியிலும் அமைந்துள்ளன.

மேற்படி 80 குடியிருப்புகட்கும் தனியார் தேயிலைத் தோட்ட நிறுவனங்கள் மற்றும் வனத் துறைமூலமாகக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

வால்பாறை மற்றும் வால்பாறை நகர எல்லைக்குட்பட்ட காமராஜ் நகர், துளசிங்க நகர், கோ ஆப்பரேடிவ் காலனி, சிலோன் காலனி, காந்தி நகர், கக்கன் காலனி, வாழைத் தோட்டம், சிதம்பரனார் சாலை ஆகிய பகுதிகளுக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 42 லிட்டர் குடிநீர் அக்காமலை தடுப்பணையிலிருந்து வால்பாறை நகராட்சிமூலம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பரளை, உருளிக்கல் பெரியார் நகர் ஆகிய இரண்டு குடியிருப்புகளுக்கு திறந்தவெளி கிணறுகள் மூலம் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 10 லிட்டர் குடிநீர் நகராட்சிமூலம் வழங்கப்பட்டு வருகிறது.



எனவே, வால்பாறை நகரம் மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள 8 பகுதிகளுக்கு பற்றாக்குறையாக உள்ள 48 லிட்டர் குடிநீரை நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் கிடைக்கும்வண்ணம் அக்காமலை தடுப்பணையிலிருந்து கூடுதலாக வழங்கவும், பரளை மற்றும் உருளிக்கல் பெரியார் நகர் ஆகிய இரண்டு குடியிருப்புகளுக்கு பற்றாக்குறையாக உள்ள 80 லிட்டர் குடிநீரை நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் கிடைக்கும் வண்ணம் புதிதாகத் திறந்த வெளிக்கிணறுகள் அமைத்து கூடுதலாக வழங்கவும் ரூபாய் 225 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்புற அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (UIDSSMT) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் இத்திட்டப்பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

மேற்படி திட்டப் பணிகள் ஜூன் 2008 மாத இறுதிக்குள் முழுமையாக முடிக்கப்பட்டு, பொதுமக்களுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் குடிநீர் வழங்குவதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வால்பாறை நகரப் பகுதிக்குச் சற்று தொலைவில் உள்ள ரொட்டிக்கடை, சோலையாறு அணை வலதுகரை, சோலையாறு அணை இடதுகரை ஆகிய குடியிருப்புகளுக்கு வால்பாறை நகராட்சிமூலம் குடிநீர் அபிவிருத்திப் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதம் நகராட்சிமூலம் வழங்கப்பட்டு வருகிறது.

வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் ஊரகப் பகுதியாக ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த அர்த்தநாரிபாளையம், அங்கலக்குறிச்சி, கம்பாளப்பட்டி, தென்செங்கம்பாளையம், மஞ்சநாயக்கனூர், கரையான்செட்டிபாளையம், காளியாபுரம், பிலிசின்னம்பாளையம், ரமணமுதலிபுதூர், தென் சித்தூர், பெத்தநாயக்கனூர் மற்றும் சோமத்துறை ஆகிய 12 கிராம ஊராட்சிகள் உள்ளன.

இவ்வூராட்சிகளில் மொத்தம் 54 குடியிருப்புகள் உள்ளன. இவற்றில் 50 குடியிருப்புகளுக்கு வேட்டைக்காரன்புதூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், பெத்தநாயக்கனூர் குடிநீர்த் திட்டம்,

தென்செங்கம்பாளையம் குடிநீர் திட்டம், அர்த்தநாரிபாளையம் குடிநீர் திட்டம், அங்கலக்குறிச்சி குடிநீர் திட்டம் மற்றும் கம்பாளப்பட்டி குடிநீர் திட்டம் மூலமாகவும், தனி மின்விசைத் திட்டங்கள் மூலமாகவும் மீதமுள்ள 4 குடியிருப்புகளுக்கு போதுமான அளவு பகுதியளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. பகுதியளவு குடிநீர் வழங்கப்படும் இந்நான்கு குடியிருப்புகளுக்கும் 2008-2009 ஆம் நிதியாண்டில் குடிநீர்த் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு போதுமான அளவு குடிநீர் வழங்க ஆவன செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை நகரம், காமராஜ் நகர், துளசிங்க நகர், கோ ஆப்பரேடிவ் காலனி, சிலோன் காலனி, காந்தி நகர், இந்திரா காந்தி நகர், கக்கன் நகர், வாழைத் தோட்டம், சிதம்பரனார் சாலை போன்ற பகுதிகளில் குடிநீர்த் தட்டுப்பாடு இருந்தது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அருமை அண்ணன் திரு. ஸ்டாலின் அவர்கள் பதவியேற்று, வால்பாறையிலுள்ள கலைக் கல்லூரியைத் திறந்து வைக்க வந்தபோது, நானும், பொதுமக்களும், அங்குள்ள குடிநீர்த் தட்டுப்பாட்டை அவரிடம் எடுத்துரைத்தோம். எங்களுடைய கோரிக்கையை ஏற்று, உடனடியாக ரூபாய் 2 கோடியே 25 இலட்சத்தில் வால்பாறை மக்களுடைய குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்ற மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், அருமை அண்ணன் திரு. ஸ்டாலின் அவர்களை மனமார, உளமாரப் பாராட்டுகின்றேன். மேலும், வால்பாறையில் நபர் ஒருவருக்கு 48 லிட்டர் குடிநீர் கிடைத்துக் கொண்டிருந்தது. தற்போது 90 லிட்டர் குடிநீர் வழங்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு உதவி புரிந்திருக்கின்றார். அதற்கும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். வால்பாறை, சோலையாறு அணை இடது கரை, சோலையாறு அணை வலது கரை, சேடல் அணை, உருளிக்கல், ரொட்டிக்கடை பகுதிகளில் இப்போது கொஞ்சம் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. நபர் ஒருவருக்கு சுமார் 70 லிட்டர் தண்ணீர் கிடைக்கிறது. அதையும் 90 லிட்டர் தண்ணீராகக் கிடைப்பதற்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து உதவி புரிய வேண்டுமென்று தங்களின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.





முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் அவர்கள் தெரிவித்ததைப்போல சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் இந்தத் திட்டப் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. மேற்படி திட்டப் பணிகள் ஜூன் 2008 இறுதிக்குள் முழுமையாக முடிக்கப்பட்டு, பொது மக்களுக்கு, அவர் தெரிவித்ததுபோல நபர் ஒருவருக்கு 90 லிட்டர் குடிநீர் வழங்குவதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை மலைப் பகுதியைப் போல, என்னுடைய தொகுதியின் கீழ்ப் பகுதியில், இருக்கிற சோமந்துறை, அர்த்தநாரிபாளையம், அங்கலக்குறிச்சி, கம்பாளப்பட்டி, தென்செங்கம்பாளையம், மஞ்சநாயக்கனூர், கரையான்செட்டிபாளையம், காளியாபுரம், பிலிசின்னம்பாளையம், ரமணமுதலிபுதூர், தென்சித்தூர், பெத்தநாயக்கனூர் ஆகிய ஊராட்சிகளிலும், வேட்டைக்காரன்புதூர், கோட்டூர் பேரூராட்சிகளிலும் பழைய பைப் இணைப்புகளை மாற்றிவிட்டு, புதிய பைப் லைன்களை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, ஆழியாறு அணைக்கு அருகிலே இருக்கின்ற கோட்டூரிலே குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. 2001-லே சுமார் 24 ஆயிரம் மக்கள் இருந்தார்கள். இப்போது அங்கே 29 ஆயிரம் மக்கள் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். கோட்டூர் ஆழியாறு நகரிலே குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதால், அருகில் இருக்கிற ஆழியாறிலிருந்து வருகின்ற பைப்பிலே இணைப்பு கொடுத்தால், அங்கே குடிநீர்ப் பஞ்சம் தீர்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதேபோல நவமலை, சின்னாற்றுபதியிலிருந்து ஆழியாறுக்கு, பொதுப் பணித் துறை குடியிருப்புக்குத் தண்ணீர் வருகிறது. அதிலேயிருந்து ஆழியாறு பகுதியில் இருக்கும் கோட்டூருக்கு தண்ணீர் கொடுத்தால்

ஆக, தமிழகத்திலே கொண்டு வருகின்ற திட்டங்களுக்கு மத்தியிலே அமைச்சர்களாக இருந்துகொண்டு, அதுவும் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பொறுப்பு வகிக்கின்ற அந்தத் துறையே தடை விதித்துவிட்டு, முட்டுக்கட்டை போட்டுவிட்டு, தமிழக மின் உற்பத்திக்கு எந்தெந்த வகையிலெல்லாம் தடை செய்ய முடியுமோ, அந்தந்த வகையிலெல்லாம் தடையைச் செய்துவிட்டு, நீங்கள் கேட்கிறீர்கள், 'உங்களுடைய ஆட்சிக் காலத்திலே மின்சார உற்பத்தியே செய்யவில்லையே' என்று சொன்னால், உங்களுக்கு எந்த விதத்திலாவது தார்மீகரீதியாக உரிமை இருக்கிறதா என்பதைத்தான் மீண்டும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, தடை விதித்தவர்களே நீங்கள். தமிழகத்தினுடைய வளர்ச்சிக்கு எல்லா வகைகளிலும் முட்டுக்கட்டை போட்டுவிட்டு, ஆனால் காரணத்தை அம்மா அவர்களின் ஆட்சிமீது திருப்ப முயற்சிக்கிறீர்கள். அதுவெல்லாம் மக்களுக்கு நன்றாகவே தெரியும்.

அதற்கு அடுத்தபடியாக, மற்றொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மத்தியிலே இருக்கின்ற அரசு, நீங்கள் பங்கு வகிக்கின்ற அரசு. மத்திய அரசினுடைய நிறுவனமான என்.எல்.சி.-யிலிருந்து, மத்தியத் தொகுப்பிலிருந்து 2,861 மெகா வாட் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குக் கிடைக்க வேண்டும். ஆனால், 500 மெகா வாட் குறைத்துக் கொடுப்பதை நீங்களே ஒத்துக்கொள்கிறீர்கள். ஆக, 500 மெகா வாட் குறையாமல் பெறுவதற்கு நீங்கள் உங்களுடைய செல்வாக்கை ஏன் பயன்படுத்தவில்லை?

இன்னும் சொல்கிறேன், இப்போது மத்திய அரசு, நாம் உற்பத்தி செய்கின்ற, இன்னும் சொல்லப் போனால், நிலக்கரியின் மூலமாக மின்சார உற்பத்தி செய்யப்படுகின்ற, அனல் மின் நிலையங்களுக்கு



அவர்கள் ஓராண்டு ஒப்பந்தப்படி, உரிமைப்படி, நமக்குக் கொடுக்க வேண்டிய, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குக் கொடுக்க வேண்டிய, ஏறத்தாழ 15 இலட்சம் டன் நிலக்கரியில் இன்றைக்கு 20 சதவீதம் குறைத்திருக்கிறார்கள். அதை உங்களால் கேட்டுப்பெற முடிந்திருக்கிறதா? அந்த 20 சதவிகிதம் நிலக்கரி குறைந்ததன் விளைவாக, வெளிநாட்டிலேயிருந்து நிலக்கரியை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டதன் விளைவாக, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குக் கூடுதல் செலவு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறதே, அதற்கு இந்த மத்திய அரசு காரணம் இல்லையா? அதை ஏன் நீங்கள் தட்டிக் கேட்கவில்லை?

அதுமட்டுமல்ல, மற்றொன்று. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு, புனல் மின் திட்டம், அனல் மின் திட்டம், எரிவாயுமூலமாக மின்சார உற்பத்தி, காற்றாலைமூலமாக மின் உற்பத்தி, biomass, co-generation இப்படிப் பல்வேறு வகைகளிலே உற்பத்திச் செய்யக்கூடிய வாய்ப்பு இருந்தாலும், நீர் மின் நிலையத்திலே உற்பத்திச் செய்வதில் மிகக் குறைந்த செலவாகும். அதேபோல, அடக்க விலை குறைவாக வரும். அதற்கடுத்து குறைவாக வருவது, எரிவாயுமூலமாக உற்பத்தி செய்வது, குறைந்த அடக்க விலை கொண்டதாகும். ஆக, எரிவாயுமூலமாக தமிழ்நாடு மின்சார வாரியம் உற்பத்தி செய்யத் தொடங்கியிருக்கின்ற திட்டங்களுக்கெல்லாம் மத்திய அரசு முழுமையாக எரிவாயு கொடுத்து ஒதுக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால், நரிமணம் மற்றும் குத்தாலம் போன்ற பகுதிகளிலே எல்லாம், நமக்கு மத்திய அரசு, நாள் ஒன்றுக்கு 4,50,000 கன மீட்டர் எரிவாயு வழங்க வேண்டும். ஆனால், இப்போது வழங்கிக் கொண்டிருப்பது, நான் கேள்விப்பட்ட வகையிலே, 70,000 கன மீட்டர் குறைத்துதான் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதுகுறித்து ஏதாவது தட்டிக் கேட்டீர்களா?

அதுமட்டுமல்ல, சென்ற முறை நாங்கள் இங்கே சொல்லும்போது, இனிமேல் தமிழ்நாட்டின் மின்சார உற்பத்திக்கு எரிவாயு ஒதுக்குகின்றபோது தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குத்தான் தரவேண்டுமென்று வற்புறுத்துவோம், கேட்டுப் பெறுவோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், அதற்குப் பின்பாக அதைப் பலமுறை வற்புறுத்தியும்கூட இன்றைக்கும் தனியாருக்குத்தான் மத்திய அரசு, அந்த எரிவாயுவை வழங்கிக்கொண்டிருக்கிறது. அதனுடைய இரகசியம் என்ன என்பது யாருக்குத் தெரியும்?

முற்பகல் 11-05

ஆக, எதற்காக அந்த வாயுவை தனியாருக்கு வழங்குகிறார்கள் என்று தெரியவில்லை. அதைத் தடுத்து நிறுத்தி இருக்கிறீர்களா? அல்லது இதேபோல மத்திய அரசு எல்லா வகைகளிலும் மாநில அரசு எடுத்த முயற்சிகளுக்கு மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்கான முயற்சிகளுக்கெல்லாம் தடையாக இருந்துகொண்டு இருக்கிறதே, அதை இந்த அரசு தட்டிக் கேட்டிருக்கிறதா? இன்னும் சொல்லப்போனால், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு புதியதாக எண்ணற்ற திட்டங்களை நீங்கள் அறிவித்து இருக்கிறீர்கள். ஆனால் அறிவித்ததற்கெல்லாம் நிலக்கரிக்கு எங்கே போவீர்கள்? எல்லாவற்றையும் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்தால் உற்பத்திச் செலவு கூடுதல் ஆகிவிடும். அதற்காக அன்றைக்கே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்காலத்திலே ஒரு தீர்க்கதரிசனத்தோடு, தொலைநோக்குப் பார்வையோடு ஒன்றைச் சொன்னார்கள். தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு என்று ஒரிஸா மாநிலத்தில் இருக்கின்ற Naugam Coal Block நிலக்கரிச் சுரங்கத்தை நமக்குச் சொந்தமாக்க வேண்டும் என்று கேட்டார்கள். பலமுறை வற்புறுத்தினார்கள். நீங்கள்கூடச் சொன்னீர்கள், நாங்களும் கேட்டிருக்கிறோம். நிச்சயமாக அதைக் கேட்டுப்பெறுவோம் என்று சென்ற முறை சட்டமன்றத்திலே சொன்னீர்களே. அதைக் கேட்டுப் பெற்றிருக்கிறீர்களா? இதுவரை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு என்று தனியாக அந்த நிலக்கரிச் சுரங்கத்தைக் கேட்டுப் பெற்றிருக்கிறீர்களா? அதை வேறு மாநிலத்திற்குக் கொடுத்துவிட்டார்கள்; அதுதான் வேதனை. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குக் கொடுக்கவில்லை. அதுபோல, கேஸ் ஒதுக்கீட்டில்கூட ஒரு இலட்சம் கன மீட்டர் நாம் கேட்டோம். ஆனால், வழுத்தூர் சுழலி எரி வாயுத் திட்டத்திற்கு 63,000 கன மீட்டர் தான் கொடுத்திருக்கிறார்கள். 1 இலட்சம் கன மீட்டர் கொடுக்கவில்லை. இப்படி எல்லா வகைகளிலும் நம்மை வஞ்சித்துக்கொண்டிருக்கிறார்கள். அதைப்போல, இன்னொன்றையும் சொன்னார். தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் சென்ற ஆட்சிக் காலத்திலே டிரான்ஸ்பார்மர்கள் மட்டுமல்ல, கட்டமைப்பு வசதிகளையும் நீங்கள் போதுமான அளவிற்கு செய்யவில்லை என்று மற்றொரு குற்றச்சாட்டைச் சொன்னார். போதுமான அளவிற்கு நீங்கள் எல்.டி. லைன், எச்.டி. லைன் எல்லாம் அமைக்கவில்லை என்று சொன்னார். கட்டமைப்பு வசதி என்றால் அதெல்லாம் வரும். ஆக, அதற்கும் ஒரு புள்ளிவிவரத்தைச் சொல்கிறேன். புரட்சித் தலைவி அம்மா அவர்கள்



ஆட்சிக் காலத்திலும், சென்ற உங்களுடைய தி.மு.க ஆட்சிக் காலத்திலும் இங்கே ஏற்படுத்தப்பட்ட சாதனைகளை ஒப்பிட்டுச் சொல்கிறேன். எச்.டி. லைனை பொறுத்த அளவிலே உங்களுடைய மொத்த ஐந்து ஆண்டு கால ஆட்சியிலே நீங்கள் 2,816 கி.மீ. தான் புதியதாக அமைத்தீர்கள். இல்லை, எச்.டி. லைனில் 11,268 கி.மீ. நீங்கள் அமைத்திருக்கிறீர்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே 14,079 கி.மீ. புதியதாக அமைத்து இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, கட்டமைப்பு வசதியிலே நாங்கள் பின்தங்கி இருக்கிறோமா? யார் ஆட்சியில் கூடுதலாக அமைக்கப்பட்டிருக்கிறது? அதேபோல எல்.டி. லைன், தாழ்வழுத்த மின்சாரத்திலே, உங்களுடைய ஆட்சிக் காலத்திலே நீங்கள் 34,194 கி.மீ. அமைத்திருக்கிறீர்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே 51,904 கி.மீ. அமைக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படியென்றால் கட்டமைப்பு வசதிகளை யார் கூடுதலாகச் செய்திருக்கிறார்கள்? அதைப்போல, டிரான்ஸ்பார்மர்களை பற்றிச் சொன்னார்கள். அதிலே வரிசைப்படி, ஆண்டுக் கணக்கிலே சொல்லவேண்டும் என்று சொன்னாலும் நான் சொல்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) உங்களுடைய ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட சரியான தகவல்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Mr. விசுவநாதன் (குறுக்கீடு) இல்லை. 20 minutes over. ஒரு நிமிடம் grace time. (குறுக்கீடு) இல்லை, இல்லை என்று நீங்கள் சொன்னால் முடியுமா? Grace time இல்லை. 2 minutes, அதுகூட grace time of the Chair.

**திரு. இரா. விசுவநாதன்:** அடுத்தபடியாக, மற்றொரு குற்றச்சாட்டைச் சொன்னார். ஒவ்வொன்றாக மாற்றி, மாற்றிச் சொல்வார். இந்தப் பற்றாக்குறைக்குக் காரணம் காற்று அடிக்கவில்லை, காற்றாலைகள் எல்லாம் இயங்கவில்லை, அதனால் இங்கே பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒன்று சொல்கிறேன் காற்றுக்கு எந்தப் பேதமும் இல்லை. அது அ.இ. அண்ணா தி.மு.க. ஆட்சியாக இருந்தாலும் சரி, அல்லது தி.மு.க. ஆட்சியாக இருந்தாலும் சரி, காற்று அடிக்கும் போது அடிக்கும், காற்று அடிக்காத போது அடிக்காது. ஆக, அதற்கு கட்சி வித்தியாசம் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்போது யார் பக்கம் காற்று அடிக்கிறது என்பதுதான் முக்கியம். காற்று இப்போது யார் பக்கம் அடிக்கிறது?

**திரு. இரா. விசுவநாதன்:** காற்றாலை மின்சார உற்பத்தி குறைந்து இருப்பதை ஒரு காரணமாக அமைச்சர் காட்டவேண்டிய அவசியம் இல்லை. காரணம் எந்த ஆட்சியாக இருந்தாலும் குறிப்பிட்ட காலத்தில்தான் காற்று வரும். அதையெல்லாம் நீங்கள் முன்கூட்டியே கண்டறிந்து, பற்றாக்குறை ஏற்படுகின்ற காலங்களில் மாற்று ஏற்பாடுகளைச் செய்து இருக்க வேண்டும். அதுதான் ஒரு சரியான நிர்வாகம். (மேசையைத் தட்டும் ஒலி) அதை நீங்கள் செய்யவில்லை. அதற்குமாறாக, தவறான தகவலைச் சொல்ல வேண்டாம். அதற்கு அடுத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு புள்ளிவிவரத்தைப் பெருமையாகச் சொன்னார்கள்.

இந்தக் காற்றாலை மின் உற்பத்தியில்—தமிழகம்தான் முதலிடம் பெற்றிருக்கிறது என்று சொல்லி 2007-2008-க்கான விருதை தமிழகம். . .

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்படியே நன்றி சொல்லி முடித்து விடுங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** இல்லை, இல்லை. அவர் பேசியதைச் சொல்லி முடித்துவிடுகிறேன். அவர் தேசிய விருதை குடியரசுத் தலைவரிடம் பெற்றிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு. *(குறுக்கீடுகள்)* Sir, don't raise any question against the Chair. *(குறுக்கீடு)* நீங்கள் கொறடா என்பதால் சும்மா எழுந்து நின்று பேசுவதையெல்லாம் நிறுத்திக்கொள்ள வேண்டும். *(குறுக்கீடு)* I have to keep the time. மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு. *(கூச்சல்-குழப்பம்)*

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தலைவர்களினுடைய பாதுகாவலரும். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மின்சாரத்தைத் தொட்டால் shock அடிக்கும் உட்காருங்கள். *(கூச்சல்-குழப்பம்)* போங்கள்.

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*



**திரு. மு. அப்பாவு:** தமிழக மக்களுக்காக அல்லும் பகலும் அயராது உழைத்தும் எங்களுக்கு, எங்கள் குடும்பத்திற்குத் தாயாக, தந்தையாக இருந்து, எங்களையெல்லாம் அரவணைத்து, பாதுகாத்து, வழிநடத்தி வருகின்ற முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்கி, என்னுடைய உரையைத் துவக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏதோ அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஏழைகளுக்காக, விவசாயிகளுக்கெல்லாம் மிகப் பெரிய உதவியைச் செய்ததை போன்று நீலிக் கண்ணீர் வடிக்கின்ற அ.தி.மு.க. உறுப்பினர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள நான் விரும்புகின்றேன். தமிழகத்தில் ஏழை விவசாயிகளுக்காக ஒன்றல்ல, இரண்டல்ல, 16 இலட்சம் பம்ப்செட் விவசாயிகளுக்கு 1989 ஆம் ஆண்டு இலவச மின்சாரத்தைத் தந்து, ஏழை விவசாயிகள் வாழ்வில் ஒளியேற்றியவர் தலைவர் கலைஞர் என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுபடுத்துகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, நடந்து முடிந்த வரவு-செலவுக் கூட்டத் தொடரிலும் தேர்தல் அறிக்கையில் அறிவித்தபடி மேலும் 2 இலட்சத்து, 40 ஆயிரம் ஏழை விவசாயிகளுக்கு அதே இலவச மின்சாரத்தைத் தந்து பெருமை சேர்த்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏழை விவசாயிகளுக்கு 6,866 கோடி ரூபாய் கடனை முழுமையாக இரத்து செய்ததோடு, மத்திய அரசு 60 ஆயிரம் கோடி ரூபாய் விவசாயக் கடனை இரத்து செய்ய வைத்ததும் தலைவர் கலைஞர்தான் என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுபடுத்துகின்றேன்.

அதுமட்டுமல்ல, விவசாயிகளுடைய பயிர் இன்சூரன்சுக்கான 50 சதவீதத் தொகையை நம்முடைய அரசே செலுத்துகின்ற அந்த வாய்ப்பைத் தந்ததும் தலைவர் கலைஞருடைய ஆட்சியில்தான். அதுமட்டுமல்ல, இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு மின் இணைப்பு வேண்டும் என்று எழுதிக் கொடுத்த 24 மணி நேரத்தில் அவர்களுடைய வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்குகின்ற ஒரே மாநிலம் தமிழ்நாடுதான். (மேசையைத் தட்டும் ஒலி) அ.தி.மு.க.-வினருக்கு ஒன்று தெரியும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பொறுப்பேற்றதும் சட்டம்-ஒழுங்கு கெட்டுவிட்டது, விலைவாசி ஏறிவிட்டது, இருண்டுவிட்டது என்பார்கள்.

D
Y 21, 31 PM
10 E. 6

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதை [illegible] அவர்கள் பேசுவார்கள். நீங்கள் point-க்கு வ[illegible]

228403
சென்னை-600 009

**திரு. மு. அப்பாவு:** அ.தி.மு. கழக ஆட்சிக் காலத்தில் எவ்வாறு தமிழகம் இருந்தது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு. 1989 முதல் 1991 வரை தலைவர் கலைஞருடைய ஆட்சியில் ஒரு யூனிட் current-க்கு குறைந்தபட்சம் 50 காசும், அதிகபட்சமாக 70 காசும் வசூலிக்கப்பட்டது. அதேபோல, கிராமப் பஞ்சாயத்துக்களில் உள்ள தெரு விளக்குக்கும், குடிநீருக்கும் 70 பைசா முதல் 75 பைசா வரை வசூலிக்கப்பட்டது. ஆனால், 1991-லே அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற அடுத்த நிமிடமே ஒரு முறை, இரண்டு முறை அல்ல, 5 ஆண்டு காலத்தில் 5 முறை மின் கட்டணம் உயர்த்தப்பட்டு, குறைந்தபட்சம் 55 பைசா என்பதை 65 பைசாவாக மாற்றி, அதிகபட்சம் 70 பைசா என்று இருந்ததை 3 மடங்கு உயர்த்தி 2 ரூபாய் 20 பைசாவாக அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் உயர்த்தப்பட்டது. அதுமட்டுமல்ல, நம்முடைய உள்ளாட்சித் துறை குடிநீருக்காக 70 காசு வசூலித்திருந்ததை ஒரு ரூபாய் 60 காசாக உயர்த்தியதும் அ.தி.மு.கழக ஆட்சிக் காலத்தில்தான். மீண்டும் தலைவர் கலைஞர் 1996 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்று, 2001 வரை தெரு விளக்குகள், குடிநீர் இணைப்புக்காக நம்முடைய பஞ்சாயத்துகள் செலுத்த வேண்டிய கட்டணத்தில் ஒரு பைசா கூட 5 ஆண்டுக் காலத்தில் உயர்த்தாத ஓர் அரசு என்றால் அது தமிழக அரசு, தலைவர் கலைஞருடைய ஆட்சியில் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, ஒரு தெரு விளக்கு புதிதாக அமைக்க ரூபாய் 7,500 கொடுக்க வேண்டும். சோடியம் விளக்குகள் அமைத்துக்கொள்ளலாம் என்று இரவையும் பகலாக மாற்றியது 1996 முதல் 2001 வரை தலைவர் கலைஞருடைய ஆட்சியில்தான் இத்தனையும் நடைபெற்றன என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுபடுத்துகின்றேன்.

*முற்பகல் 11-15*

அதுமட்டுமல்ல. 2001-லே அ.தி.மு. கழகம் ஆட்சிப் பொறுபேற்ற அடுத்த நிமிடமே கிராமப் பஞ்சாயத்துகளுக்கு 1 ரூபாய் 60 காசு என்று இருந்த மின் கட்டணத்தை 3 ரூபாய் 40 காசாக உயர்த்தியது. அதுமட்டுமல்ல, ஒரு புதிய மின் விளக்கு இணைப்புக்கு 7,500 ரூபாய் என்று இருந்ததை உயர்த்தி 1½ இலட்சம், 1 இலட்சம் கட்ட வேண்டும் என்று சொல்லி, சோடியம் விளக்குகள் அமைக்கக்கூடாது என்று சொல்லி, கிட்டத்தட்ட 2001 முதல் 2006 வரை தமிழகம் இருண்டு கிடந்ததை மக்கள் அறிவார்கள். மீண்டும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 2006-ல் பொறுப்பேற்ற பின்பு 3 ரூபாய் 40 காசு என்ற மின் கட்டணத்தை 3 ரூபாயாகக்



குறைத்தார்கள். அதேபோல, தலைவர் கலைஞருடைய நல்லாட்சியில் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு தளபதி அவர்கள் ஒரு புதிய தெரு விளக்கு அமைப்பதற்கு 9,500 ரூபாய் கட்டினால் போதும் என்று சொல்லி, அந்தப் பஞ்சாயத்திலே மின் கட்டணம் பாக்கியிருந்தாலும் கட்டலாம்; புதிய விளக்குகள் அமைத்துக் கொடுக்கலாம் என்று சொன்னவர் தலைவர் கலைஞர்.

நான் இந்த நேரத்திலே எதிர்க்கட்சி உறுப்பினர்களிடம் ஒன்றைக் கேட்கின்றேன். எதிர்க்கட்சியிலே இருக்கின்ற, எதிர்க்கட்சித் தலைவி அவர்கள் வாழ்கின்ற பங்களாவிலே கலர் டி.வி. இல்லாத அறையே இல்லை. ஆனால், தலைவர் கலைஞர் ஏழைக்குக் கொடுக்கின்ற அந்த கலர் டி.வி.யை, வழங்கக்கூடாது என்று ஒவ்வொரு நிமிடமும் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால் தலைவர் கலைஞர் எதிர் வரிசையிலே இருக்கின்ற ஜெயலலிதா அவர்களுடைய சொல்லைக் கேட்க மாட்டார்; ஏழைகள் பயன்பெறுகின்றார்கள் என்றால் அந்தத் திட்டத்தை உடனே நிறைவேற்றுவார். அவர் ஏழைகளுக்கு கலர் டி.வி. மட்டும் வழங்கவில்லை, 24 மணி நேரத்தில் அவர்களுக்கு மின் இணைப்பும் கொடுக்கின்றார் என்றால் அது இந்தியாவிலே தமிழ்நாட்டில் மட்டும்தான் (மேசையைத் தட்டும் ஒலி) நடைபெறுகிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

தேர்தல் அறிக்கையிலே சொன்ன கலர் டி.வி. கொடுத்தீர்களா என்று திரு. செங்கோட்டையன் அவர்கள் கேட்கின்றார்கள். நான் கேட்கின்றேன், 'தேர்தல் அறிக்கையில் சொன்னதைக் கொடுத்தீர்களா' என்று கேட்கின்றீர்கள் நீங்கள்; உங்கள் தேர்தல் அறிக்கையில் சொல்லவில்லை; நீங்கள் இந்த அவையிலே வாசித்த கவர்னர் உரையிலே சொல்லவில்லை; இந்த அவையிலே 1991 முதல் 1996 வரை நீங்கள் வரவு-செலவுத் திட்டங்களில் அறிவித்த, தொலைநோக்குத் திட்டத்தை நான் சொல்கிறேன். அதன்பின் யாருடைய ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டில் மின் உற்பத்தி கூடியது என்பதை இந்த மன்றமே தெரிந்துகொள்ளும். 1991 ஆம் ஆண்டு பொறுப்பேற்றவுடன் முன்னாள் முதல்வர் அவர்கள் மிகப் பெரிய அளவில் தொலைநோக்குச் சிந்தனையோடு, இந்த நாட்டில் 2000 ஆம் ஆண்டில் 4,293 மெகா வாட் மின்சாரத் தேவை; 1995 ஆம் ஆண்டு 1,707 மெகா வாட் மின்சாரத் தேவை; ஆகவே, அதை நிறைவேற்றும்வண்ணம் ஜெயங்கொண்டம், சோழபுரத்தில் பழுப்பு நிலக்கரிமூலம் அனல் மின் நிலையம் தொடங்க 5,000 கோடி ரூபாய்

செலவில் 1,500 மெகா வாட் மின் உற்பத்தி செய்யப்படும் என்று 1991-92 ஆம் ஆண்டு இதே சபையில் வரவு-செலவுத் திட்டத்திலே அறிவித்தார்கள். அதுமட்டுமல்ல, அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தைப் பாருங்கள். 7,000 கோடி ரூபாய் செலவில் 1,500 மெகா வாட் மின்சாரம் அதே ஜெயங்கொண்டத்தில் பழுப்பு நிலக்கரியைக் கொண்டு, அனல் மின் நிலையம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். நாட்கள் ஓடுகின்றன. மூன்றாவது வரவு-செலவுத் திட்டம், 1993-94-லே. அதே இடத்தில் 7,000 கோடி ரூபாய் செலவில் 1,500 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும். கடலூரிலே 3,000 கோடியிலே 1,000 மெகா வாட் மின்சாரம் உற்பத்திச் செய்யப்படும். நெய்வேலியில் 1,600 கோடி ரூபாய் செலவில் 250 மெகா வாட் கொண்ட இரண்டு மின் நிலையங்கள் அமைக்கப்படும், இது 1993-94-லே. 1994-95 வரவு-செலவுத் திட்டத்தில், எவ்வளவு பெரிய அண்டப்புளுகு என்று பாருங்கள். ஜெயங்கொண்டத்தில் 7,500 கோடி ரூபாய் செலவில் 1.500 மெகா வாட் மின் உற்பத்தி செய்வதற்காக தற்போது நிதி மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. 1991 ஆம் ஆண்டில் ஒரு திட்டத்தை அறிவித்து 1995 ஆம் ஆண்டு நிதி மதிப்பீடு தயாரிக்கப்படுகிறது என்கின்றார். அதுமட்டுமல்ல. கடலூரிலே 1,000 மெகாவாட் முதலிலும் 2,000 மெகா வாட் இறுதியிலும் மின் உற்பத்திச் செய்யப்படும் என்கின்றார்கள். வட சென்னையிலே 500 மெகா வாட், தூத்துக்குடியிலே 500 மெகா வாட் மின் உற்பத்திச் செய்யப்படும் என்றார்கள். அடுத்து, 1995-96. மக்கள் அவர்களை அடையாளம் கண்டு, அவர்களை ஆட்சியை விட்டு விரட்டுகின்ற நேரத்திலும் எவ்வளவு பெரிய புளுகு. நிதிநிலை அறிக்கையிலே கூறுகின்றார்கள், தனியார்மூலம் ரூ.29,925 கோடியில் 7,120 மெகா வாட் மின் உற்பத்தி செய்யப்படும், ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி சுரங்க மின் உற்பத்தித் திட்டத்திற்கு இறுதி நிலை சாத்தியக்கூறு ஆய்வில் உள்ளது. அடப் பாவிகளா! 5 ஆண்டுக் காலத்திலே இந்த ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி திட்டத்தை . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அப்பாவு அவர்கள் மற்றவர்களை 'அடப் பாவிகளா' என்பது ஒரு நகைச்சுவையாக இருக்கிறது.

(முற்பகல் 11-20)

**திரு. மு. அப்பாவு:** ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரிச் சுரங்க மின் உற்பத்தித் திட்டம் இறுதி நிலை சாத்தியக்கூறு ஆய்வில் உள்ளது



என்று இவ்வளவு பெரிய, ஐந்தாண்டு காலத்தில் இப்படி ஒரு புளுகைப் புளுகிவிட்டுச் சென்றிருக்கின்றார்கள்.

இப்போது பேசிவிட்டுச் சென்ற நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. விசுவநாதன் அவர்களை நான் கேட்கிறேன். 1991 முதல் 1995-96 வரை ஐந்தாண்டு காலத் திட்டத்தில் நீங்கள் ஜெயங்கொண்டத்திலோ அல்லது கடலூரிலோ அல்லது நெய்வேலியிலோ அல்லது வட சென்னையிலோ, அல்லது தூத்துக்குடியிலோ ஒரே ஒரு மெகா வாட் மின் உற்பத்திச் செய்வதற்காக ஒரே ஒரு ரூபாய் நீங்கள் அறிவித்ததாக இந்த மன்றத்திலே உங்களால் கூற முடியுமா? தலைவர் கலைஞர் 1989 முதல் 1991 வரை வட சென்னையிலே மூன்று அனல் மின் நிலையங்களை, 210 மெகா வாட் திறன்கொண்ட 3 அனல் மின் நிலையங்களையும், 120 மெகா வாட் திறன்கொண்ட பேசின் பிரிட்ஜ் மின் நிலையத்தைத் தவிர, அவர் ஆரம்பித்து உற்பத்தியை, வேலையை ஆரம்பித்த அந்த நான்கு திட்டங்களைத் தவிர, வேறு ஒரு யூனிட் மின்சாரத்தைவது அ.தி.மு.கழக ஆட்சியில் நீங்கள் உற்பத்திச் செய்திருப்பீர்களா என்பதை இந்த நேரத்திலே நான் கேட்கிறேன்.

அதுமட்டுமல்ல, ஆனால் நம்முடைய மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்று எத்தனை நாட்கள் ஆகிவிட்டன? இரண்டாண்டு காலம் முடிய இருக்கிறது. நான் கேட்கின்றேன்; நான் அவர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த இரண்டாண்டுகளில் மட்டும் மின் வாரியத்திற்குச் சொந்தத் திட்டமாக, வட சென்னையிலே 3,398 கோடி ரூபாய் செலவில் 600 மெகா வாட் மின் உற்பத்தி செய்ய ஒரு அனல் மின் திட்டம், பாரத மிகுமின் நிறுவனத்தோடு, அதாவது திருச்சியைச் சேர்ந்த BHEL நிறுவனத்தோடு இணைந்து வேலை தொடங்கப்பட்டு இன்னும் முப்பத்து ஒன்பதே மாதங்களில் வேலை முடிவடைய உள்ளது என்ற நல்ல செய்தியை இந்த நேரத்திலே நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல, மேட்டூர் அனல் மின் நிலையத்திலும் 2,651 கோடி ரூபாய் செலவில் 600 மெகா வாட் திறன்கொண்ட ஒரு மின் திட்டம் 2008-ல் தொடங்கப்பட்டுவிட்டது. 2011-ல் முடிவடைய இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதுமட்டுமல்ல. தலைவர் கலைஞருடைய நல்லாட்சியில், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் ஆற்காட்டார் அவர்கள்

முயற்சியில் தூத்துக்குடியிலே 4,770 கோடி ரூபாய் செலவில் 1,000 மெகா வாட் திறன்கொண்ட மின் திட்டப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுவிட்டன. வான்வழி ஒப்புதல் மற்றும் நிலக்கரி இணைப்பு உறுதி செய்யப்பட்ட அடுத்த நிமிடமே பணி ஆரம்பிக்கப்பட இருக்கிறது. அதேபோல, 600 மெகா வாட் திறன்கொண்ட எண்ணூர் அனல் மின் நிலையத்திற்காக நடப்பாண்டில் விரிவான திட்ட அறிக்கை-Detailed Project Report-தயாரிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுடைய பெரு முயற்சியினால், மத்தியிலே இருக்கின்ற நம்முடைய மின்சாரத் துறை அமைச்சரைச் சந்தித்து வட சென்னையிலுள்ள எண்ணூரில் ரூ.7,860 கோடி செலவில் 1,000 மெகா வாட் திறன்கொண்ட புதிய திட்டத்திற்கு மத்திய மின்சாரத் துறையின் அனுமதி பெற்று முதல் கட்டமாக 500 மெகா வாட் உற்பத்திச் செய்கின்ற பணி கடந்த செப்டம்பர் மாதம் தொடங்கப்பட்டு அதற்காக ஆயிரம் ஏக்கர் நிலமும் கையகப்படுத்தப்பட்டு பார்த... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தங்கள் உரையை இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** பாரத மிகுமின் நிலையத்தோடு இப்போது அந்த ஒப்பந்தம் செய்யப்பட்டு மிக விரைவிலேயே அந்தப் பணியும் ஆரம்பிக்கப்பட இருக்கிறது. அதேபோல எங்களுடைய பழைய திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடி மாவட்டம், உடன்குடியில் தமிழ்நாடு மின்சார வாரியமும் Bharat Heavy Electricals Limited-ம் இணைந்து அரசுக்குச் சொந்தமான 220 ஏக்கர் நிலத்தில் 1,600 மெகா வாட் திறன்கொண்ட மின் உற்பத்தித் திட்டத்தைத் தொடங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டு, அந்த நிலத்திலே பணி செய்வதற்கு முன் நுழைவு அனுமதியும் அரசால் கொடுக்கப்பட்டுவிட்டது.

நேற்றையதினம் நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், காற்றாலைமூலம் வருகின்ற மின்சாரத்தில் 60 சதவீதம் மின்சாரம்தான் எடுக்கப்படுகிறது; மீதியை எடுக்க முடியவில்லை என்று சொன்னார்கள். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அந்த நிலைதான் இருந்தது. ஆனால் தலைவர் கலைஞர் ஆட்சிப் பொறுப்பேற்றதும் நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் ஆற்காட்டார் அவர்கள் மத்திய மின்சாரத் துறை அமைச்சரைச் சந்தித்து, "கூடங்குளம் அணு மின் நிலையத்திலே



உற்பத்திச் செய்யப்படுகின்ற மின்சாரத்தைக் கொண்டுவருவதற்காக நெல்லை மாவட்டம், அபிஷேகப்பட்டியில் Power Grid Corporation of India Limited மூலம் செயல்படுத்தப்படுகின்ற அந்தத் திட்டம், கூடங்குளம் அணு மின் நிலையம் திட்டம் உருவாக்கப்பட்டால்தான் அங்கே பணி ஆரம்பிக்கப்படும். ஆனால் காற்றாலை மூலம் உற்பத்திச் செய்யப்படுகின்ற மின்சாரத்தைக் கொண்டுவருவதற்கான 300 கோடி ரூபாய் செலவிலுள்ள பணியை உடனே ஆரம்பித்துத் தாருங்கள்" என்று கேட்டார்கள். அந்தப் பணி ஆரம்பிக்கப்பட்டது. தமிழ்நாடு, கேரளா, பாண்டிச்சேரி, கர்நாடகம், ஆந்திரா ஆகிய 5 மாநிலங்களுக்கும் சொந்தமாக Power Grid Corporation of India-வால் உருவாக்கப்பட்டது அந்தத் திட்டம். ஆகவே, அவர்களெல்லாம், மற்ற மாநிலங்கள் எல்லாம் கூடங்குளம் அணு மின் நிலையம் உற்பத்தியைச் செய்கின்றபோதுதான் இந்தப் பணி நடைபெற வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் ஆற்காட்டார் அவர்கள் கடுமையாக முயற்சி செய்து, இந்தத் தென் மாநில மின் வாரியத் தலைவர்களையெல்லாம் அழைத்துப் பேசி, அவர்கள் சார்பாகக் கொடுக்கவேண்டிய அந்தப் பங்குக்கான நிதியையும் கொடுக்க வைத்து, அந்தத் திட்டத்தை இன்னும் 10 தினங்களுக்குள் ஆரம்பிக்கவிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் காற்றாலைகள்மூலம் எவ்வளவு மின் உற்பத்திச் செய்ய முடியுமோ, அத்தனையையும் கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்தவர் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-25

அதேபோல, ராஜீவ் காந்தி கிராம மின்னிணைப்புத் திட்டத்தின்மூலம், மத்திய அரசிடமிருந்து தமிழகத்திற்குச் சேரவேண்டிய 477 கோடி ரூபாய் நிதியையும், நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் நேரில் சென்று, முதற்கட்டமாக 100 கோடி ரூபாயை இப்போது பெற்றுவந்து, அந்தப் பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

தமிழ்நாட்டிலுள்ள 17 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள்மூலமும், 1,200 கோடி ரூபாய் செலவில் கிட்டத்தட்ட 24 மாத காலத்தில், 250 மெகா வாட் மின்சாரம் தயாரிப்பதற்கு ஏற்பாடு செய்ததும் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய நல்லாட்சியில்தான் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

நான் கேட்கின்றேன்; யாருடைய ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் அதிகமாக மின்சாரம் உற்பத்திச் செய்யப்பட்டது? மின்சாரப் பற்றாக்குறை ஏன் ஏற்பட்டது என்பதற்கு இந்த ஓர் உதாரணத்தைச் சொல்கின்றேன். கடந்தகால ஆட்சியில், 2001 முதல் 2006 வரை புதிய வீடுகளுக்குக் கொடுக்கப்பட்ட மின்னிணைப்புகள் 25 இலட்சம். ஆனால், கடந்த 2 ஆண்டுக் காலத்தில் மட்டும் 15 இலட்சம் மின்னிணைப்புகள் கொடுத்திருக்கின்றோம். 2001 முதல் 2006 வரை தொழிற்சாலைகளுக்குத் தமிழ்நாட்டில் கொடுக்கப்பட்ட மின்னிணைப்புகள் வெறும் 40 ஆயிரம். ஆனால் கடந்த 2 ஆண்டுக் காலத்தில் மட்டும் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய நல்லாட்சியில் 37 ஆயிரம் தொழிற்சாலைகளுக்கு மின்னிணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத். (குறுக்கீடு) இல்லை, இல்லை, திரு. அப்பாவு, உங்களுக்கு முடிக்கத் தெரியவில்லை. மின்சாரம் கிடைக்கிறது என்பதற்காக, grinder-ல் மாவு ஆட்டிக்கொண்டேயிருந்தால் எப்படி? நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** தமிழ்நாட்டில் எப்பொழுதெல்லாம் தலைவர் கலைஞருடைய நல்லாட்சி வருகின்றதோ, அந்த ஆட்சிக் காலத்தில்தான், எரிசக்தித் துறை மற்றும் மின்சார வாரியம் சீரோடும், சிறப்போடும், தொலைநோக்குச் சிந்தனையோடு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அத்திட்டங்கள் முடிவடைந்து, இன்றைக்குத் தமிழகம் மற்ற மாநிலங்களைவிட ஒளி வெள்ளத்தில் இருந்து கொண்டிருக்கிறது என்றால், அது முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞருடைய நல்லாட்சியில் தான்; (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் ஆற்காட்டார் அவர்களுடைய காலத்தில்தான் என்பதைக்கூறி, (மேசையைத் தட்டும் ஒலி) நல்ல வாய்ப்பினைத் தந்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத். Sir, allotted time for you is 15 minutes.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைமீது எனக்குப் பேச வாய்ப்பளித்த அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், எங்களுடைய தலைவர் திரு. டி. சுதர்சனம் அவர்களுக்கும்..



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Sir, உங்களுக்கு நான் வாய்ப்பைக் கொடுத்தேன். நீங்கள்...

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** உங்களுக்கும், மற்ற சக உறுப்பினர்களுக்கும் என்னுடைய பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு மனிதன் இயங்கவேண்டுமென்று சொன்னால், அதற்கு இருதயம் தேவை. அந்த இருதயம் இயங்கவேண்டுமென்று சொன்னால், அதற்கு மின் அலை தேவை; electric impulse என்று சொல்வார்கள்; அது தேவை. எவ்வளவுதான் உடல் சீராக இருந்தாலும், அந்த electric impulse இல்லையென்று சொன்னால், அந்த உடல் இயங்கக்கூடிய உடலாக இருக்காது. எனவே, அப்படிப்பட்ட முக்கியமான ஒரு மின்சாரத் துறைமீது நாம் பேசவிருக்கின்றோம். இன்றைக்குத் தமிழகத்திலே மட்டுமல்லாமல், இந்தியாவிலேயே the most powerful Chief Minister யாரென்று சொன்னால், சந்தேகமில்லாமல் நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட ஒரு powerful C.M. அந்த power துறையை, மின்சாரத் துறையை யாரிடம் கொடுத்திருக்கிறார் என்று சொன்னால், நம்முடைய ஆற்காட்டார் அவர்களிடம் கொடுத்திருக்கிறார். ஏனென்று சொன்னால், அவருடைய பண்பு, பக்குவம், அறிவு, நுண்ணறிவு, இதையெல்லாம் ஆராய்ந்து பார்த்து, டாக்டர் கலைஞர் அவர்கள் இவருக்கு இந்த மின்சாரத் துறையைத் தந்திருக்கிறார் என்று சொன்னால், யாரைப் பாராட்டுவது? நுண்ணறிவுமிக்க ஆற்காட்டாரைப் பாராட்டுவதா? அல்லது அவரை தன்னுடைய மின்சாரத் துறைக்கு இயக்கிக் கொண்டிருக்கிற டாக்டர் கலைஞர் அவர்களைப் பாராட்டுவதா என்றே தெரியாமல் இருந்துகொண்டிருக்கின்ற வேளையிலே, இன்றைய நிதிநிலை அறிக்கையிலே. . .

முற்பகல் 11-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 4 sub-station-ஆவது கேட்பீர்கள்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** இந்த நிதிநிலை அறிக்கையிலே சிலதெல்லாம் 'Searching for a needle in a haystack' என்று சொல்லுவார்கள். வைக்கோற்போரிலே குண்டூசியைத் தேடுகின்ற ஒரு பக்குவத்தை மற்ற உறுப்பினர்கள் கடைப்பிடிக்கின்றார்கள். எப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த நிதிநிலை அறிக்கை

தயாரிக்கப்பட்டிருக்கின்றது. நேற்றையதினம்கூட மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் பேசுகின்றபொழுது முரண்பாடான ஒரு சமூகத்திலே இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரித்துக்கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். எப்படிப்பட்ட சமூகத்திலே இன்று நாம் உழன்றுகொண்டிருக்கிறோம் என்று சொன்னால், ஒரு வீட்டிலே ஒரு குழந்தை இருக்கின்றது. காலையிலே அந்த வீட்டிற்கு ஒரு பத்திரிகையும் வருகிறது, ஒரு பால் பாக்கெட்டும் வருகிறது. அந்தக் குழந்தை என்ன செய்யும்? இரண்டையும் கையில் எடுத்துக்கொண்டு பத்திரிகையைக் கொண்டுசென்று அப்பாவிடம் கொடுக்கும், பால் பாக்கெட்டை அம்மாவிடம் தருவதுதான் நம்முடைய சமூகம். இது குழந்தைக்கு யார் சொல்லிக் கொடுக்கிறார்கள் என்று கேட்டால் இந்தச் சமுதாயம்தான் அதைச் சொல்லிக் கொடுக்கின்றது. ஆனால், அதே குழந்தை வீட்டு வாசலிலே பூட்டுவதற்கான சாவியைத் தந்தையிடம் கொடுத்து, bureau சாவியை அம்மாவிடம்தான் தரும். இதற்கும் இந்தச் சமுதாயம்தான் பொறுப்பு என்ற அடிப்படையிலே இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கின்றது. சிலர், 'ஆடுகிற மாட்டை ஆடிக் கறக்க வேண்டும். பாடுகிற மாட்டை பாடிக் கறக்க வேண்டுமென்று' சொன்னார்கள். ஆனால், நம்முடைய ஆற்காட்டார் அவர்கள் 'ஆடுகிற மாட்டை ஆடிக் கறப்பார்; பாடுகிற மாட்டை பாடிக் கறப்பார்; படுக்கிற மாட்டைப் படுத்தும் கறப்பார்; பறக்கிற மாட்டைப் பறந்தும் கறப்பார்' என்று அவருடைய பெருமையைச் சொல்லிக்கொண்டே போகலாம். டாக்டர் கலைஞர் அவர்கள், 'பேராசிரியருக்கும், எனக்கும் நல்ல ஒரு பாலமாக அமைந்து, நல்ல ஒரு நண்பனாக இருக்கிறார்' என்று கலைஞர் வாயினாலேயே புகழாரம் சூட்டப்பட்ட மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையைத் துவக்குகின்றேன்.

தமிழ்நாடு மின்சார வாரியம் 1957-லே நிறுவப்பட்டு சிறப்பாக செயல்படுகின்றது. இந்தச் சிறப்பு என்பதற்கு எப்படி நீங்கள் அளவுகோல் வைத்திருக்கிறீர்கள் என்று சிலர் கேட்பார்கள். எப்படிச் சிறப்பாகச் செயல்படுகிறது? ஆங்காங்கே மின் தட்டுப்பாடு இருந்தாலும் இருக்கலாம் என்றெல்லாம் குறை கூறுவார்கள். இருக்கலாம். ஆனால், ஒரு வகுப்பிலே ஒரு மாணவன் பரீட்சை எழுதும்பொழுது நூற்றுக்கு நூறு மதிப்பெண் எடுப்பவன்தான் சிறந்த மாணவன் என்று சொல்லிவிடமுடியாது. மற்றவர்களைவிட அவன் அதிக மதிப்பெண்கள் பெற்றிருக்கிறானா என்பதைப் பொறுத்துதான்,



அவன் சிறந்த மாணவன் என்ற ஒரு அளவுகோலை வைத்துதான் சொல்லமுடியும். மற்ற மாநிலங்களைவிட தமிழகத்திலே ஏழைகளின் நலனையும் பாதுகாத்து, பெண்களின் நலனையும் பாதுகாத்து, நோயாளிகளின் நலனையும் பாதுகாத்து, தொழிற்சாலைகளும் வரவேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு, எதிர்கால சந்ததியினர் நல்லமுறையிலே வாழவேண்டுமென்பதை மனதிலே வைத்துக்கொண்டு இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. எனவேதான், இந்த மின்சார வாரியம் சிறப்பான ஒரு மின்சார வாரியமாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. இதனால்தான் திருவள்ளுவர் சொல்வார்,

*'குணநாடிக் குற்றமு நாடி அவற்றுள்*
*மிகைநாடி மிக்க கொளல்'*

என்று. ஒருவனுடைய குணத்தையும் தெரிந்துகொள்ள வேண்டும். அவனிடம் இருக்கின்ற குற்றத்தையும் தெரிந்துகொள்ள வேண்டும். ஆனால், அதனுள் எது அதிகமாக இருக்கின்றதோ அதை வைத்துத்தான் அந்த மனிதனின் அளவுகோலை நாம் எடைபோட முடியும் என்ற அந்த வள்ளுவரின் வாக்குப்படி சிறப்பான ஒரு மின்சார வாரியம் இப்பொழுது செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. இந்த மின்சார வாரியத்திலே தற்போது மின் உற்பத்தி நிறுவு திறன் 10,122 மெகாவாட். இதிலே வாரிய உற்பத்தி நிலையங்கள் 5,597. தனியார்மூலம் கிடைப்பது மற்றும் Captive power plants என்றெல்லாம் நிறைய பிரிவுகள் இருக்கின்றன. சராசரி ஒரு நாளுக்குத் தேவைப்படும் மின்சாரம் 192 மில்லியன் யூனிட் என்று இந்தச் செயற்குறிப்பிலே இருக்கின்றது. இந்தச் சூழ்நிலையிலே வழுதூர் எரிவாயு சுழலி மின் திட்டம், 95 மெகா வாட் கொண்ட திட்டம் மார்ச் மாதத்திலே துவக்கப்பட்டது என்று இந்தக் குறிப்பேட்டில் சொன்னதன்மூலம் மீண்டும் ஒரு முறை 'சொன்னதைச் செய்கின்றது இந்த அரசு, செய்ததைச் சொல்லுகின்றது இந்த அரசு' என்பதற்கு ஒரு சான்றாக இந்தத் துவக்கவிழா அமைந்திருக்கின்றது.

நட்பைப் பற்றிப் பேசும்போது, பிசிராந்தையாரையும் கோப்பெருஞ்சோழனையும் பற்றிச் சொல்லுவார்கள். துரியோதனனையும், கர்ணனையும் சொல்லுவார்கள். கிருஷ்ணனையும், குசேலரையும் சொல்லுவார்கள். ஆனால், எனக்குத் தெரிந்தவரை இந்த நூற்றாண்டிலே நட்புக்கு இலக்கணமாகத் திகழ்வது அன்னை சோனியா காந்தியும் டாக்டர் கலைஞரும்தான் என்று சொன்னால் அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி)

மத்தியிலே என்ன கேட்டாலும் கொடுக்கின்ற ஓர் அரசாங்கம் இருக்கின்றது. மாநிலத்திலே இருந்து எது கேட்டாலும் கொடுக்கின்ற ஒரு பக்குவத்தை மத்திய அரசு பெற்றிருக்கின்றது என்ற சூழ்நிலையிலே இப்பொழுது அன்னை சோனியா காந்தியின் கருணைப் பார்வையினாலே தமிழகத்திற்கு Kaiga அணு மின் நிலையம்மூலம் நமக்குரிய பங்காக 54 மெகா வாட் மின்சாரம் கிடைப்பது ஒரு மகிழ்ச்சிகரமான நிலைமை. மேலும், அந்த நிலையத்தில் இரண்டாம் நிலைமூலம் 53 மெகா வாட் மின்சாரம் கிடைக்கின்றது. கூடங்குளம் அனல் மின் நிலையமும் ஆயிரம் மெகா வாட் உற்பத்தி செய்து தமிழகத்தைப் பிரகாசிக்கச் செய்யும் என்பதிலே சந்தேகம் இல்லை.

*முற்பகல் 11-35*

வட சென்னை அனல் மின் நிலையம், மேட்டூர் அனல் மின் நிலையம், தூத்துக்குடி மற்றும் எண்ணூர் அனல் மின் நிலையங்கள் எல்லாம் நம்முடைய முன்னேற்றப் பாதையின் சான்றுகளாகும். கடற்கரையோரம் இருக்கின்ற அனல் மின் நிலையத் திட்டங்களான வணிக மின் திட்டங்கள்மூலம் 17,000 மெகா வாட் தயாரிக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு நிகழ்வு நடக்குமே என்று சொன்னால் தமிழகம் இருளில் சூழ வாய்ப்பே இல்லை என்று ஆணித்தரமாகக் கூறிக்கொள்ளலாம்.

மேலும், இந்த மின் தடையைக் கட்டுப்படுத்துவதற்காக நம்முடைய வாரியத்தை ஆறு zone-களாகப் பிரித்து வட சென்னை, தென் சென்னை, கோயம்புத்தூர், திருச்சி போன்று பிரித்திருக்கிறார்கள். அங்கேயிருக்கின்ற தொழிற்சாலைகளுக்கு எல்லாம் ஒவ்வொரு நாள் Power Holidays என்று turn basis-ல் அவர்களுக்கு விடுமுறை அளித்திருக்கின்றார்கள். 75 sub-station-களை மின்சார வாரியம் இப்போது புதியதாக ஏற்படுத்தி, அதன்மூலம் transmission loss-ஐயும் பெரும் அளவிலே குறைத்திருக்கின்றார்கள்.

இப்பொழுது மிக முக்கியமான பிரச்சினை எதுவென்று சொன்னால், தமிழகத்திலே விவசாயிகளுக்கு இலவச மின்சார இணைப்பு வழங்குவதாகும். இந்தக் குறிப்பேட்டிலே பார்க்கும்போது, மின் இணைப்பு 5,000-ஆக இருந்தது, இப்போது 10,000 மின் இணைப்புகள் தந்திருப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். ஆனால், ஐந்து இலட்சம் மின்சார இணைப்புகளுக்காக விண்ணப்பித்து



விவசாயிகள் காத்துக்கிடக்கின்ற ஒரு நிலை இப்போது தமிழகத்திலே நிலவி வருகின்றது. விவசாயத்திற்கு இன்று மத்திய அரசாங்கமும் சரி, மாநில அரசாங்கமும் சரி போட்டி போட்டுக்கொண்டு நல்ல பல திட்டங்களை அறிவித்து, கடன் சுமையை நீக்கி அவர்களுடைய வாழ்க்கையிலே ஒளிவீச வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு செயல்பட்டுக்கொண்டிருக்கிற வேளையிலே, இப்போது mobile phone எல்லாம் விவசாயிகள் கையிலே எளிதாக கிடைக்கின்றது. அப்போதும் சிலர் சொன்னார்கள். எட்டாக் கனியாக இருக்கின்ற mobile phone விவசாயிகள் கையில் இருக்குமா என்று கேட்டார்கள். ஆனால், அதிகமாக நுகர்வோர்கள் இருக்க, இருக்க இப்போது அதனுடைய விலையும் குறைந்து கொண்டே இருக்கிறது. எனவே, நாமும் மின்சார இணைப்பை அதிகப்படுத்தி விவசாயிகளுக்கு உடனுக்குடன் தந்தால் நிச்சயமாக மின்சார வெட்டும் இருக்காது, அதன் காரணமாக விலையும் கண்டிப்பாக குறையும் என்பதிலே சந்தேகம் இல்லை.

Rajiv Gandhi Grameen Vidyutikaran Yojana என்ற ஒரு திட்டத்தின்கீழே மத்திய ஊரக மின்மயமாக்கல் புள்ளிவிவரத்தின்படி 15,400 ஊராட்சிக் குடியிருப்புகள் இருக்கின்றன. இங்கே 95 இலட்சம் வீடுகள் மொத்தமாக இருக்கின்றன. 95 இலட்சம் வீடுகளில் 75 இலட்சம் வீடுகள் மின் இணைப்புப் பெற்று மீதி இருக்கின்ற சுமார் 20 இலட்சம் வீடுகள் மின் இணைப்பு இல்லாமல் இருக்கின்ற ஒரு சூழ்நிலையைப் புள்ளிவிவரம் சொல்கின்றது. அப்படிப் பார்க்கும்போது ஐந்தாண்டு கால திட்டத்தின்கீழ் கிட்டத்தட்ட 3,67,500 வீடுகளுக்கு மின் இணைப்புத் தருவதாக நாம் ஒப்புக்கொண்டிருக்கிறோம். ஆனால் இதுவரை எத்தனை வீடுகளுக்கு மின் இணைப்பினைத் தந்திருக்கிறோம் என்பதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்துவார்கள் என்ற எண்ணத்தோடு கேட்க விழைகின்றேன்.

மேலும், உள்ளாட்சிமீது மின்சாரத் துறைக்கு நிறைய பாசம் உண்டு; நேசம் உண்டு. அதனால்தான் உள்ளாட்சி அமைப்புகள் தர வேண்டிய அந்த நிலுவையை 10 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாகக் குறைத்திருக்கின்றார்கள்.

இப்போது காற்றாலைமூலம் மின்சாரம் தயாரிக்கிறோம். தூத்துக்குடி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம், கோயம்புத்தூர் மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம் ஆகிய மாவட்டங்களிலே காற்றாலைகள்மூலம் சிறப்பாக மின்சாரம் எடுத்து அதன்மூலம் நாம் நம்முடைய மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திருமதி பிரதிபா பாட்டீல் அவர்கள் கையாலேயே முதல் பரிசைப் பெற்றிருக்கின்றோம்.

இதற்கெல்லாம் மேலாக சூரிய ஒளி. தமிழகத்திலே சூரிய ஒளிக்குப் பஞ்சமே இல்லை. இப்போது சூரியன் பரந்து விரிந்து இந்தியா முழுவதையும் ஆளத் தொடங்கியிருக்கின்றது. எதைக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், சூரியன் என்றால் உதய சூரியன். உதய சூரியன் ஆட்சியிலே நாம் இருந்து கொண்டிருக்கின்ற இந்த வேளையிலே நீங்கள் இந்த உதய சூரியன் ஆட்சியைத் தவிர, வேறு எந்த ஆட்சியாலும் சூரிய ஒளிமூலம் கிடைக்கின்ற மின்சாரத்தைத் தயாரிக்க மனது வராது. எனவே, நாம் இருக்கின்ற காலத்திலேயும், வரவிருக்கின்ற காலத்திலேயும் நிலைநாட்ட வேண்டும், பேர் சொல்ல வேண்டுமென்று சொன்னால் சூரிய ஒளிமூலம் மின்சாரம் தயாரிப்பதற்கு initial investment தான் தேவையே தவிர, recurring expenditure என்பது மிகமிகக் குறைவு. நம் நாட்டில் சூரிய ஒளிக்குப் பஞ்சமே இல்லை. எனவே, சூரிய ஒளிமூலம் நாம் மின்சாரத்தைத் தயாரிக்க முன்வர வேண்டும் என்ற கோரிக்கையையும் வைக்க விரும்புகிறேன். பொதுவாக உள்ள ஒரு பிரச்சினை என்னவென்று சொன்னால், மின்சார வெட்டு ஆங்காங்கே இருக்கின்றது என்று சொல்கிறார்கள். உண்மைதான். ஏன் இந்த நிலைமை என்று பார்க்கும்போது, நிர்வாகத்திலே நிறைய சிக்கல்கள் இருக்கக்கூடும். ஆயிரம் தடைகள் இருந்தாலும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் வருத்தப்பட வேண்டாம்.

*முற்பகல் 11-40*

அனைவரது தேவைகளையும் நம்மால் பூர்த்தி செய்துவிட முடியாது. "நம் கடமை பணி செய்து கிடப்பதே" என்பதுபோல, நீங்கள் எவ்வளவு முயற்சி செய்தாலும், நிர்வாகத்திற்கு வரும்போது சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்யும். அதைப் பூதக்கண்ணாடிபோல பெரிதுபடுத்திக் கொண்டிருப்பார்கள். ஆனால், ஒன்று. மாண்புமிகு அமைச்சர் அவர்களே, சம்சாரமும், மின்சாரமும் வாழ்க்கைக்குத் தேவை. மின்சாரம் இல்லையென்றால் சம்சாரத்திற்கு வேலை. ஏனென்றால், வருங்காலத்தில் குடிமக்கள் பெருகிவிடக்கூடாது என்கின்ற ஒரு நல்ல எண்ணத்தில், நம்முடைய மக்கள் கட்டுப்பாடோடு இருக்கவேண்டுமென்று சொன்னால், தடையில்லா மின்சாரத்தை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஒரு முக்கியமான பிரச்சினை, மின்சாரப் பற்றாக்குறை. மின்சாரப் பற்றாக்குறை ஏன் ஏற்படுகிறது? அணு ஆயுத ஒப்பந்தம் என்ற ஒரு



மிக முக்கிய பிரச்சினை நம்முன் பூதாகரமாக விஸ்வரூபம் எடுத்திருக்கிறது. யாரைக் கேட்டாலும் இது வேண்டாம். எதிர்க்க வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காக, எதிர்த்துக் கொண்டிருப்பவர்கள் சிலர். ஆனால், ஒருமுறை, ராஜீவ் காந்தி அவர்கள் கணினி வேண்டுமென்று சொன்னார்கள். "உண்ண உணவில்லை, கணினிமயம் எதற்கு" என்று கேட்டவர்களெல்லாம், ராஜீவ் காந்தி அவர்கள் கொண்டுவந்த திட்டத்தை இப்போது வரவேற்கின்றார்கள், பாராட்டுகின்றார்கள். எனவே, ஒருநாள் நிச்சயமாக அணு ஆயுத ஒப்பந்தம் கையெழுத்திடப்படும். கையெழுத்திடப்பட்டவுடன் அதை எதிர்க்கின்ற அனைவரும் இதை வரவேற்பார்கள், ஏற்றுக்கொள்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், அணு ஆயுத ஒப்பந்தம்பற்றி நான் தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். இராசசேகரன், என்ன, சொல்லுங்கள். (குறுக்கீடு) One minute. திரு. எஸ். இராசசேகரன், சொல்லுங்கள்.

***திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணு ஒப்பந்தம் கூடாது என்று இடதுசாரிக் கட்சிகள் சொல்லிக்கொண்டு வருகின்றன. அந்த ஒப்பந்தத்தினால் எந்தப் பலனும் இந்தியாவிற்கு ஏற்படப்போவதில்லை; மின்சார விலையும் குறையப்போவதில்லை; தேவையான மின்சாரமும் கிடைக்கப்போவதில்லை என்ற காரணத்தினால்தான் அந்த ஒப்பந்தம் வேண்டாமென்று இடதுசாரிக் கட்சிகள் எதிர்க்கின்றன என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாடு அமெரிக்காவோடு அணுசக்தி ஒப்பந்தம் 123 Agreement போடவேண்டுமென்று எண்ணுகிறது. ஆனால் இதை, இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆண்டுகொண்டிருக்கின்ற சீன நாட்டிலே அமெரிக்காவோடு ஒப்பந்தம்போட்டு, அந்த நாட்டிலே பல்வேறுவிதமான பயன்களை அனுபவித்துவிட்டபின்னால், இந்தியாவிலே இப்படிப்பட்ட ** இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு நியாயம்தானா? (குறுக்கீடு) (மேசையைத் தட்டும் ஒலி)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத், விரைவாகப் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) No, no. உட்காருங்கள், எல்லோரும். இதெல்லாம் வேண்டாம். இது Parliament-லே பேசவேண்டிய பேச்சு. உட்காருங்கள். (குறுக்கீடு) இது Parliament-லே விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டிய பிரச்சினை. டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத், பேசுங்கள்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள், இது . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் சொன்ன ** என்ற வார்த்தையை நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள், அவருடைய பெயருக்கேற்றாற்போல், எப்பொழுது பார்த்தாலும், "வை, வை" என்று கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருப்பதே அவருடைய வாடிக்கையாகிவிட்டது. (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, point of order. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக்குறிப்பிலிருந்து ** என்ற சொல் நீக்கப்பட்டுவிட்டது.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஒரு சிறிய விளக்கத்தை அளிக்கின்றேன். ஒரு Plant-டுடைய cost 4 million dollars. அணு ஆயுதத்திற்குத் தேவைப்படுகின்ற ஒரு Plant-டுடைய cost. . . (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, point of order. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், நீங்கள் எதிர்ப்புத் தெரிவித்த ** என்கின்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** அதை ** போட்டுக்கொள்ளுங்கள். Each Plant costs 4 million dollars. 2015 ஆம் ஆண்டிலே இந்தியாவிற்குத் தேவைப்படுகின்ற மின்சாரம் 40 ஆயிரம் மெகா வாட் என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத், நீங்கள் பேசுவதற்குக் கொடுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** முடித்துவிடுகிறேன். இப்போது 31 நாடுகளிலே 440 Nuclear Plants செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. இவர்களுடைய தந்தையாகவும், தாயாகவும், கம்யூனிசத்தின் கருவூலமாகத் திகழ்கின்ற சீனாவிலே 25 ஆண்டுகளாக, அணு ஆயுத ஒப்பந்தம் போட்டுத்தான் பரஸ்பர உறவை அவர்கள் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். இன்றையதினமும், நம்மீது விழுந்திருக்கின்ற sanction காரணமாக, ஒரு ராக்கெட் வாங்கவேண்டுமென்றாலும், ரஷ்யாவைத் தவிர, நமக்கு வேறு நாதி கிடையாது. அப்படிப்பட்ட நிலை மாறி, விஞ்ஞானிகளெல்லாம் technological transfer செய்துகொள்ளக்கூடிய நல்லதொரு நிலைமை இந்தியாவிற்கு வரும். எனக்கொன்று நினைவிற்கு வருகின்றது. நான்கு நாட்களுக்கு முன்னால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி. (குறுக்கீடு)

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** Sir, please. ஒன்றேயொன்றைச் சொல்லி முடித்துவிடுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழர்கள்மீது ஒகேனக்கலில் நடக்கின்ற தாக்குதல், கன்னட வெறியர்கள் தமிழர்கள்மீது கொண்ட ஒரு அலர்ஜி என்று சொன்னார்கள். அதைத்தான் நான் சொல்கின்றேன். கம்யூனிஸம் பேசுகின்றவர்களுக்கு சீனாவிடமிருந்து வாங்கினால் தவறில்லை, ரஷ்யாவிடமிருந்து வாங்கினால் தவறில்லை, அமெரிக்கர்கள்மீது மட்டும் ஒரு அலர்ஜி இருக்கிறது. இவர்கள் எங்களுடன் கூட்டணியில் இல்லை, டாக்டர் கலைஞரிடத்தில் இருக்கிறோம் என்று சொன்னார்கள். எனவே, டாக்டர் கலைஞர் அவர்கள்தான் இவர்களுடைய கடிவாளத்தை இழுத்துப் பிடித்து அணு ஆயுத ஒப்பந்தத்தை நிறைவேற்றி வைக்க வேண்டுமென்ற என்னுடைய

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தாழ்மையான கோரிக்கையை வைத்து விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடைசியாக ஒரு வார்த்தை. . .

முற்பகல் 11-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். விடைபெறுங்கள். (குறுக்கீடு) என்ன திரு. சிவபுண்ணியம், சொல்லுங்கள்?

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மின் வாரியத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெறுகிறது. அணு ஆயுத ஒப்பந்தத்தின்மூலமாக மின் உற்பத்தித் தேவை என்ற அடிப்படையிலே அவர் கருத்தைச் சொல்வதிலே எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. (குறுக்கீடு) இல்லை, இல்லை. நான் சொல்லிவிடுகிறேன். பிறகு நீங்கள் சொல்லுங்கள். Please, ஒரு நிமிடம். நான் சொல்வது என்னவென்றால், அமெரிக்காவிடம் ஒப்பந்தம் போடுவதைப் பற்றிக் கருத்து சொல்கிறபோது, சீனாவோடு போட்டால் ஏற்றுக்கொள்கிறோம், ரஷ்யாவோடு போட்டால் ஏற்றுக்கொள்கிறோம், அமெரிக்கா என்றால் அலர்ஜி என்று சொல்கிறார். இந்த நாடுகளோடு போடுகிற ஒப்பந்தத்திற்கும், அமெரிக்காவோடு போடுகிற ஒப்பந்தத்திற்கும் வித்தியாசத்தை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். இந்தியாவுடன் ஒப்பந்தம் போடுவதற்கு அமெரிக்க நாடாளுமன்றம் ஒப்புதல் அளிக்க வேண்டும். ஆனால், இந்திய நாடாளுமன்றத்தில் அதைப்பற்றி விவாதிக்கவே கூடாது என்று அமெரிக்கா சொல்கிறது. அதை இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறதே! மன்மோகன் சிங் அரசு ஏற்றுக்கொள்கிறதே! (மணியடிக்கப்பெற்றது) அது இந்திய இறையாண்மைக்கு உடன்பட்டதா? இந்திய இறையாண்மைக்கே வேட்டு வைக்கிற கொள்கை அது. அடகு வைக்கிற கொள்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், நீங்கள் சர்வதேச விஷயங்களை இங்கே பேச வேண்டாம். உட்காருங்கள். நமது தமிழ்நாட்டுக்குள்ளே வாருங்கள்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில நாடுகளோடு ஒப்பந்தம் போடுவது என்பது, அது ஒரு சம்பிரதாயமான முறையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நாடாளுமன்றத்திலே விவாதிப்பது என்பது வேறு, ஒப்பந்தம் போடுவது



என்பது வேறு. அருமை நண்பர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் நாடாளுமன்றத்திலே எதை விவாதிப்பது, சட்டமன்றத்திலே எதை விவாதிப்பது என்று தெரியாமல் பேசிக்கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால், நாடாளுமன்றத்திலே விவாதிக்க வேண்டிய அவசியமில்லை. ஒப்பந்தம் (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது பேசுகின்ற வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்த எங்களது. . . (குறுக்கீடு)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேலுசாமி, one minute.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் விஷ்ணுபிரசாத் அவர்கள் பேசுகின்றபோது இறுதி வார்த்தைகளிலே அணு ஆயுத ஒப்பந்தத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று தவறுதலாகச் சொன்னார். அது, அணு மின் ஒப்பந்தம். அதைத்தான் நண்பர் திரு. சிவபுண்ணியம் அவர்களும் தவறாகப் புரிந்துகொண்டு அணு ஆயுத ஒப்பந்தத்தை நிறைவேற்றச் சொல்கிறார்களே என்று சொன்னார். அது அணு ஆயுத ஒப்பந்தமல்ல. அது 123 Agreement regarding power, Nuclear power. அணு மின்சாரம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, திரு. வேலுசாமி, பேசுங்கள்.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையில் பேசுகின்ற வாய்ப்பினை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்த எங்களது தமிழினப் போராளி மருத்துவர் ஐயா அவர்களுக்கும், எங்களை வழி நடத்திச் செல்லுகின்ற எங்களது சின்ன ஐயா அவர்களுக்கும், எங்கள் கட்சியினுடைய தலைவர் மதிப்பிற்குரிய ஜி.கே. மணி அவர்களுக்கும், எனக்குப் பேசுகின்ற வாய்ப்பினை அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஏறக்குறைய 40 ஆண்டு கால அடிப்படை ஜீவாதார உரிமையான ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தை எப்பொழுது நிறைவேற்றுவார்கள் என்று எங்களது மாவட்ட மக்கள் ஏங்கிக் கொண்டிருக்கின்ற இந்த காலகட்டத்திலே, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஜப்பான் நாட்டிற்கு நமது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை அனுப்பி வைத்து 1,333 கோடி ரூபாயைப் பெற்று வந்து, அந்த ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டி, இந்த தருமபுரி மாவட்ட மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுத்தமைக்காக எங்கள் மாவட்ட மக்களின் சார்பாக எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதே நேரத்திலே, இந்தத் திட்டத்தைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று இப்போது கர்நாடகத்திலே இருக்கக்கூடிய சில தீய சக்திகள் சதித் திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, இந்தச் சதித் திட்டத்தை நமது தமிழக முதல்வர் அவர்கள் முறியடித்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவார்கள் என்பதில் நாங்கள் முழு நம்பிக்கையோடு இருந்து கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றோம்.

மத்திய அரசினுடைய ஆறாவது ஊதியக் குழு பரிந்துரையின் அடிப்படையிலே தமிழக அரசுப் பணியிலே உள்ளவர்களுக்கு அவர்கள் எதிர்பார்க்கின்ற ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-50*

அதேபோல, தமிழகத்திலேயுள்ள மக்கள் நலப் பணியாளர்கள், சாலைப் பணியாளர்கள், ஊராட்சிகளிலே பணிபுரிகின்ற குடிநீர்த் தொட்டி இயக்குநர்கள், துப்புரவுப் பணியாளர்கள், எழுத்தர்கள் இவர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும்.

மத்தியக் கூட்டுறவு வங்கிகள், அனைத்து கூட்டுறவு சங்கங்கள், தமிழ்நாடு கூட்டுறவு பொருள் வாணிபக் கழகத்திலே பணியாற்றுபவர்கள், இவர்கள் அனைவருக்கும் ஓய்வூதியம் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.



எங்கள் கட்சித் தலைவர் அவர்கள் இந்த மாமன்றத்திலே தொடர்ந்து வலியுறுத்தி வருகின்ற கோரிக்கைகளான, கடந்த ஆட்சி காலத்தில் நியமிக்கப்பட்ட இளநிலை உதவியாளர்கள் மற்றும் இடைநிலை உதவியாளர்கள், எழுத்தர் மற்றும் தட்டச்சர்கள் தொகுப்பு ஊதியத்தின் அடிப்படையிலே பணியாற்றி வருகிறார்கள். இவர்கள் அனைவரும் கல்வித் தகுதியின் அடிப்படையில் வேலைவாய்ப்பு அலுவலகத்தின்மூலமாக தேர்வு செய்யப்பட்டவர்கள். இவர்களுக்குப் பதிலாக இப்பொழுது, தேர்வாணையத்தின்மூலமாக தேர்வு நடத்தி புதியதாகத் தேர்வு செய்யப்பட உள்ளதாக தமிழக அரசு அறிவித்திருக்கிறது. ஆகவே, இந்த நிலையை மாற்றி ஏற்கெனவே தொகுப்பு ஊதியத்தின் அடிப்படையிலே பணிபுரிகின்ற அனைத்துப் பணியாளர்களையும் நிரந்தரமாக்க வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

மின்சார வாரியம், வனத் துறை, சுகாதாரத் துறை, பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, தலைமைச் செயலகம் மற்றும் சட்டமன்றப் பேரவைச் செயலகம் போன்ற துறைகளிலே தற்காலிகமாகப் பணியாற்றுகின்ற அனைத்து ஊழியர்களையும் நிரந்தரப்படுத்த வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே வருவாய்த் துறைமட்டுமல்லாது தமிழ்நாடு முழுவதும் எல்லாத் துறைகளிலும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பணியிடங்கள் தற்போது காலியாகவுள்ளன. இதனால் தமிழக அரசு அறிவித்திருக்கின்ற நலத் திட்டங்கள் அனைத்தும், மக்களுக்குச் சென்றடைவதிலே கால தாமதம் ஏற்படுகிறது. எனவே, வருவாய்த் துறையிலே இருக்கின்ற காலியிடங்களைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று பணிவன்போடு இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

உரிமை கேட்டு பல நாட்களாகப் போராடிக் கொண்டிருக்கின்ற நெய்வேலி N.L.C. தொழிலாளர்கள் ஏறக்குறைய 1,500 பேர் நேற்றையதினம் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். இவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றி அவர்களை விடுதலை செய்ய வேண்டும். நமது மாநில அரசாங்கமானது மத்திய அரசிடம் பேசி இவர்களுக்குரிய உரிமைகளைப் பெற்றுத் தந்து, அவர்களை விடுதலை செய்ய ஆவன செய்ய வேண்டுமாய் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழகத்திலே பெருகி வருகின்ற தொழிற்சாலைகள், உருவாகிக் கொண்டிருக்கின்ற இலட்சக்கணக்கான குடியிருப்புகள், பெருகி வருகின்ற வணிக நிறுவனங்களாலே மின்சாரத் தேவை பெருகிக் கொண்டே வருகிறது. ஆகவே, தேவைக்கு ஏற்ப மின்சார உற்பத்தி இல்லாத காரணத்தினாலே, தமிழகத்திலே பல மாதங்களாக மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டு, மக்கள் பல இன்னல்களுக்கு ஆளானார்கள் என்பது நமது அரசுக்கும் மக்களுக்கும் தெரிந்த ஒரு நிகழ்வாகும். ஆகவே, மின்சாரத் தட்டுப்பாட்டை முழுமையாக நிவர்த்தி செய்து கொள்வதோடு, நமக்குத் தேவையான மின்சாரத்தைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டுமென்று சொன்னால், முதலில் நமக்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்திச் செய்ய வேண்டும். இரண்டாவது, மின்சாரத்தைச் சிக்கனப்படுத்த வேண்டும். மூன்றாவது மின்சாரம் திருடுவோரைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல, வழித் தடங்களில் அதாவது, line-loss மூலம் மின்சாரம் வீணாவதைத் தடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். நாம் மின்சாரத்தைச் சிக்கனப்படுத்துவதற்குண்டான வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். பெரும்பாலும், அதாவது, வாடிக்கையாளர்கள் பயன்படுத்துகின்ற குண்டு பல்புகள்மூலமாக மின்சாரம் நிறைய வீணாகிறது. அதற்குப் பதிலாக C.F.L. என்கின்ற விளக்குகளைப் பயன்படுத்தினால் மின்சாரம் மிச்சமாவதோடு, அதற்கு மிகவும் குறைவான மின்சாரம்தான் தேவைப்படுகிறது. அதேநேரத்திலே வெப்பம் அதிகமாசு வெளிப்படுவதைக் கட்டுப்படுத்துகிற ஒரு வாய்ப்பும் உருவாகிறது. ஒட்டுமொத்தமாக உலகம் முழுவதும் வெப்பம் அதிகரித்து இயற்கை சூழ்நிலைகள் மாறி கடல் மட்டம் உயர்கின்றது, பருவ நிலை மாறுகின்றது, பனிமலைகள் உருகுகின்றன. ஆகவே, இந்தப் பருவநிலை மாறுவதனால்கூட, சமீபத்தில் பருவம் மாறி மழை பெய்த காரணத்தினால் தென் மாவட்டங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன என்பது நமது அரசுக்கு நன்றாகத் தெரியும்.

ஆகவே, இந்த நிலையைக் கருத்திற்கொண்டு மின்சார சிக்கனத்தை நாம் கையில் எடுத்துக்கொள்ள வேண்டும். பொதுவாக, வருடத்திற்கு ஒருமுறை 'மின்சார சிக்கன வாரம்' என்று ஒரு வாரத்தை மின்சாரத் துறையானது கொண்டாடி வருகிறது. ஆனால், அந்த 'மின்சார சிக்கன வாரம்' குறித்த விவரங்கள் மக்களுக்குச்



சென்றடைவதற்குண்டான வாய்ப்பு இல்லை. அது ஒரு சம்பிரதாயத்திற்காகக் கொண்டாடப்படுகிற விழாவாகவே இருந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

முற்பகல் 11-55

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் முயற்சியாலே மத்திய அரசு மற்றும் அருகில் இருக்கிற மாநிலங்களிலிருந்து மின்சாரம் பெற்று தற்போதுள்ள தட்டுப்பாடு ஓரளவுக்குக் குறைக்கப்பட்டு இருக்கிறது. இதனால், இப்போது ஓரளவுக்கு தமிழகத்திலே மின் தட்டுப்பாடு என்பது குறைந்து இருக்கிறது என்பதை நாம் மனமார வரவேற்கிறோம். அதேநேரத்திலே நமக்கு ஒரு நிரந்தரமான தீர்வு ஏற்பட வேண்டுமென்று சொன்னால், மின் உற்பத்தியைத் திட்டமிட்டு, நமது தேவைக்கேற்ப நம்மிடம் இருக்கிற இயற்கை வளங்களை வைத்து நாம் இப்போது போட்டிருக்கிற அனைத்துத் திட்டங்களையும் விரைவுபடுத்தி, வேகப்படுத்தி செய்வதன் மூலமாகத்தான் நம்முடைய தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள முடியும்.

வட சென்னை, மேட்டூர், தூத்துக்குடி, எண்ணூர், உடன்குடி போன்ற புதிய மின் உற்பத்தித் திட்டங்களை நாம் மனமார வரவேற்கிறோம். அதேநேரத்தில், இந்தத் திட்டப் பணிகளை வேகப்படுத்தி, கூடிய விரைவில் மின் உற்பத்தியைத் தொடங்குவதன்மூலம் தமிழகத்தினுடைய மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள முடியும். எனவே, மேற்கண்ட திட்டப் பணிகளை போர்க்கால அடிப்படையில் செய்து முடிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மரக்காணம், செய்யூர் ஆகிய இடங்களில் தேசிய அனல் மின் நிலையங்கள் தொடங்குவதற்கான எல்லா சாத்தியக்கூறுகளும் இருக்கின்றன என்பது ஏற்கெனவே அரசுகள் ஏற்றுக்கொண்ட நிகழ்ச்சியாகும். (மணியடிக்கப்பெற்றது) இந்த நிலையில் இப்போது இந்தத் திட்டங்கள் சம்பந்தமாக இந்த நிதிநிலை அறிக்கையிலும் மற்ற குறிப்புகளிலும் இந்த அரசு எந்தவொரு நிலைப்பாட்டையும் தெரிவிக்காதது அந்தப் பகுதி மக்களை மிகுந்த வருத்தத்திற்கு ஆளாக்கியிருக்கிறது. ஆகவே, வருங்காலத்தில் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி; இதன்மூலமாக உற்பத்திச் செய்யப்படுகிற மின் உற்பத்தித் திட்டமானது எல்லா சாத்தியக்கூறுகளும், நிலங்களும் கையகப்படுத்தப்பட்டு அனைத்தும் தயாரான நிலையில் இருக்கிறது என்று ஏற்கெனவே அரசால் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால், இன்றுவரை இந்தத் திட்டம் தொடங்கப்படுகிறதா அல்லது தனியாரிடம் ஒப்படைக்கப்படுகிறதா; எந்த நிலையில் இந்தத் திட்டம் இருந்துகொண்டிருக்கிறது என்பது தெரியவில்லை. இதை அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, இந்திய அளவிலே வேளாண்மையினுடைய உற்பத்தியானது மிக வேகமாகக் குறைந்துகொண்டிருக்கிறது என்பது அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஓர் உண்மையாகும். இந்த நிலையில், இப்போது மின்சார இணைப்பு வேண்டி ஏறக்குறைய 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பதிவு செய்து பல ஆண்டுகளாகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே *(மணியடிக்கப்பெற்றது)* வருடத்திற்கு 40 ஆயிரம் விவசாயிகளுக்கு இணைப்பு கொடுப்பதாகத் தெரிவித்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப். *(குறுக்கீடு)* உரையை முடியுங்கள்.

**திரு. இல. வேலுசாமி:** ஆகவே, இந்த நிலை நீடித்தால், 5 இலட்சம் விவசாயிகளுக்கும் இணைப்பு கொடுப்பதற்கு 10 ஆண்டுகளுக்கு மேலாகும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஓர் ஆண்டிற்கு ஒரு இலட்சம் விவசாயிகளுக்காவது இணைப்புகள் கொடுத்து விவசாய உற்பத்தியைப் பெருக்க ஆவன செய்ய வேண்டுமாய் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதேநேரத்திலே. .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப். *(குறுக்கீடுகள்)* உரையை முடியுங்கள்.

**திரு. இல. வேலுசாமி:** பெரும் பகுதி நிதியானது மின்சாரக் கட்டணமாகச் செலுத்த வேண்டிய சூழ்நிலை இருப்பதால் உள்ளாட்சி அமைப்புகளுக்குண்டான மின்சாரக் கட்டணத்தை இலவசமாக வழங்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொண்டு என்னுடைய தொகுதி சம்பந்தமான கோரிக்கையைச் சொல்லிவிடுகிறேன்.



சென்ற ஆண்டு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட தொழிற்பேட்டையினுடைய பணிகளானது இன்றைய வரையில் தொடங்கப்படாமல் இருக்கிறது. ஆகவே, பின்தங்கிய மாவட்டமான என்னுடைய தருமபுரி மாவட்டத்தில் உடனடியாக அந்தத் தொழிற்பேட்டையைத் தொடங்க வேண்டும். அதேபோல, தருமபுரி நகரத்திலே உள்ள எம்.ஜி.ஆர். நகரில் ஏறக்குறைய 30 ஆண்டுகளுக்கு மேலாகக் குடியிருந்து வருகிறவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

நண்பகல் *12-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப். உங்களுக்கு 10 நிமிடங்கள் ஒதுக்கப்படுகின்றன.

***திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமெரிக்காவுடனான அணுசக்தி ஒப்பந்தத்தை இடதுசாரிகள் எதிர்ப்பது தொடர்பான சில தவறான கருத்துகள் இந்த அவையில் பதிய வைக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவுடனான அணுசக்தி ஒப்பந்தத்தை இடதுசாரிகள் எதிர்ப்பதற்கான காரண. காரியங்களை சாதாரண மக்கள்கூட நன்கறிவார்கள். நமது நாட்டின் சுயசார்புத் தன்மைக்கும், இறையாண்மைக்கும் குந்தகம் ஏற்படுத்தும் வகையிலான இந்த ஒப்பந்தம் வேண்டாமென்பதுதான் இடதுசாரிகளின் நிலைப்பாடு. சைனா அதன் இறையாண்மையை காவு கொடுத்துக்கொண்டு, அமெரிக்காவுடன் அணுசக்தி ஒப்பந்தத்தை போடவில்லை என்பதையும், சைனாவிடம் அமெரிக்கா திணிக்காத நிபந்தனைகளை இந்தியாவிடம் திணிக்கிறது என்பதால்தான் இந்த ஒப்பந்தத்தை நாங்கள் எதிர்க்கின்றோம் என்பதையும் முதலிலேயே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

கடந்த சில மாதங்களாக மின் பற்றாக்குறையால் மின் தடை ஏற்பட்டாலும், வெளி மாநிலங்களிலிருந்தும், மத்தியத் தொகுப்பிலிருந்தும் மின்சாரம் வாங்கப்பட்டு, நிலைமை சாமர்த்தியமாக சமாளிக்கப்பட்டமை பாராட்டுக்குரியது. நகர்ப்புற வளர்ச்சி, தொழில் வளர்ச்சி என முன்னேறிவரும் தமிழகத்தின் அதிகரித்து வரும் மின்சாரத் தேவையை தமிழக அரசு ஒரு சவாலாகவே பார்க்க வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

2007-2012 வரையிலான 11-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கூடுதலாக 7,808 மெகா வாட் மின்சாரம் தேவை என கொள்கை விளக்கக் குறிப்பு கூறுகின்றது. அதாவது ஆண்டுதோறும் 1600 மெகா வாட் மின்சாரம் கூடுதலாகத் தேவை. வட சென்னையில் 600 மெகா வாட், மேட்டூரில் 500 மெகா வாட், தூத்துக்குடியில் 1,000 மெகா வாட், எண்ணூரில் 500 மெகா வாட், BHEL நிறுவனமும் வாரியமும் இணைந்து 1,600 மெகா வாட், NTPC நிறுவனமும் வாரியமும் இணைந்து 1,000 மெகா வாட், ஆக மொத்தம் 5,200 மெகா வாட் மின் உற்பத்திக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் மரபுசாரா துறைகளின் மூலமாகவும் கூடுதல் மின் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இம்முயற்சிகளை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கின்றது. எனினும் எவ்வளவுதான் விரைந்து செயல்பட்டாலும் இவ்விலக்கை அடைய குறைந்தபட்சம் 40 மாதங்கள் வரை ஆகலாம். இடைக்கால தேவையை நிவர்த்தி செய்வதற்கு கூடங்குளம் அணுமின் நிலையத்தின் இயக்கத்தை விரைவுபடுத்த, மத்திய அரசோடு தமிழக அரசு இடைவிடாது வற்புறுத்த வேண்டியது அவசியம். கூடங்குளத்தின் முதல் யூனிட் 2006-ல் தொடங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டாலும், இதுவரையிலே அது தொடங்கப்படவில்லை என்பது கவலையளிக்கிறது. இந்த ஆண்டு இறுதியிலாவது கூடங்குளத்தின் இரண்டு யூனிட்டுகளையும் செயல்பட வைத்தால், தமிழகத்தின் பங்காக சுமார் 1,000 மெகா வாட் மின்சாரம் கிடைக்க வழி பிறக்கும். இது தவிர மத்திய தொகுப்பிலிருந்தும், Kaiga அணுமின் நிலையத்திலிருந்தும் மத்திய அரசை வலியுறுத்தி கூடுதல் மின்சாரம் பெறவேண்டும். மேலும், நமது மின் உற்பத்தி நிலையங்கள் அவற்றின் முழுத் திறன் அளவுக்கு மின் உற்பத்திச் செய்வதை உறுதிப்படுத்த வேண்டும். மிகப் பெரிய சேவையை மக்களுக்கு ஆற்றி, பொன்விழாவையும் தாண்டி, குன்றென உயர்ந்து நிற்கும் மின் துறையை, பொதுத் துறையிலேயே விரிவடையச் செய்யவேண்டுமென வலியுறுத்துகின்றோம். ENRON போன்ற தனியார் நிறுவனங்கள் மகாராஷ்டிராவில் மின் துறையை எத்துணை சீரழித்தன என்பதை தமிழகம் கருத்தில் கொள்வது அவசியம் என்று கருதுகின்றோம்.

மின் கட்டண உயர்வு பற்றி அடிக்கடி பேசப்படுகின்றது. விலைவாசி போன்ற பிரச்சினைகளால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ள இத்தருணத்தில் மின் கட்டண உயர்வை தவிர்க்க வேண்டியது அவசியம். பதிலாக 7 தனியார் நிறுவனங்களிடமிருந்து யூனிட்டுக்கு 6 முதல் 9 ரூபாய் வரை விலை கொடுத்து மின்சாரம் வாங்குவதைக்



குறைக்க, இந்த நிறுவனங்களோடு பேச்சுவார்த்தை நடத்தலாம். விவசாயத்திற்கான இலவச மின் இணைப்பு 5 ஆயிரத்திலிருந்து 10 ஆயிரமாக உயர்த்தும் அறிவிப்பை வரவேற்பதுடன், சொந்தமாக விசைத்தறிக் கூடங்களை வைத்து, தொழிலாளர்களைக் கொண்டு இயங்கும் விசைத்தறி நெசவாளர்களுக்கும் இலவச மின்சாரம் சலுகை வழங்கவேண்டும்.

பிற்பகல் 12-05

உள்ளாட்சி அமைப்புகளுக்கான மின் கட்டணத்தை யூனிட்டுக்கு 2 ரூபாயாகக் குறைக்கவும் கேட்டுக்கொள்கிறோம். அரசுப் பள்ளிக்கூடங்களுக்கு, வணிக நிறுவனங்களுக்கான Tariff 2B-ன்படி மின் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அன்ன சத்திரத்தையும், ஆலயத்தையும்விட கல்விப் பணி புண்ணியம் தரும் என்றார் பாரதி. கல்விப் பணி ஒரு சேவைப் பணி என்ற முறையில் அரசு பள்ளிக்கூடங்களுக்கு இலவச மின்சாரம் அளிக்க இயலாத பட்சம் வீடுகளுக்கான tariff-படி மின் கட்டணத்தை மாற்றியமைக்க வேண்டும்.

கொள்கை விளக்கக் குறிப்பில் மின் தொடர் அமைப்பு ஒன்றினை Transmission Corporation, நிறுவ அரசு முடிவெடுத்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மின்சாரச் சட்டம், 2003-இன்கீழ் இந்த அமைப்பு கொண்டுவரப்படுவதால் இதில் தனியார்மய ஆபத்து இருப்பதாகவும், இம்முடிவு சரியானதாகாது எனவும் மார்க்சிஸ்ட் கட்சி கருதுகிறது. கொள்கை விளக்கக் குறிப்பில் ஊழியர்களின் பிரச்சினைப் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. 1-12-2006 முதல் தமிழ்நாடு மின்சார ஊழியர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஊதிய உயர்வு மற்றும் இதர சலுகைகள் தொடர்பான பேச்சுவார்த்தைகளை உடனே துவங்கவும், கடந்த ஆட்சிக் காலத்தில் ஊழியர்கள் இழந்த சலுகைகள் மற்றும் உரிமைகள் மீண்டும் வழங்கப்படவும் வேண்டும்.

வாரியத்தில் ஐம்பத்தி மூன்றாயிரத்திற்கும் மேற்பட்ட காலியிடங்கள், அதாவது அனுமதிக்கப்பட்ட பொறுப்பில் 65 சதவீதம் காலியாக உள்ளன. இவற்றைத் துரிதமாக நிரப்பவேண்டும். மின் விநியோகப் பிரிவுகளில் இருபத்தைந்தாயிரத்திற்கும் மேற்பட்ட helper பணியிடங்கள் காலியாக உள்ளன. இத்துறையில் ஒப்பந்தத் தொழிலாளர்களாக நீண்ட காலமாக பணிபுரிந்துவரும் இருபத்தைந்தாயிரம் பேர்களையும் helper பணியிடங்களில் நிரந்தரமாக நியமிக்கவேண்டும்.

இதுபோல், தமிழ்நாடு மின்சார வாரியத்தில், ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் பகுதி நேர துப்புரவாளர்களாகப் பணியாற்றி வருகின்றனர். இவர்களுக்கு மாத ஊதியம் ரூபாய் 850 தான் வழங்கப்படுகிறது. 4-7-1998-ல் நடந்த பேச்சுவார்த்தையின்போது, இவர்களுக்கு சத்துணவு ஊழியர்களுக்கு நிகரான ஊதியம் வழங்கப்படும் என, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அன்றைக்கே வாக்குறுதி கொடுத்திருந்தார் என்பதை நினைவுபடுத்துகிறோம். மேலும், சென்னை உயர் நீதிமன்றம் மேற்சொன்ன ஊதியத்தை அவர்களுக்கு 20-7-1997 முதல் வழங்கவேண்டுமென்று மூன்று முறை தீர்ப்பு வழங்கியுள்ளது. இதை அமல்படுத்த வேண்டும்.

இயற்கை அழகு மிக்க பிரபல சுற்றுலா மையமான கன்னியாகுமரியிலும், கன்னியாகுமரி மாவட்டத்தின் நெரிசல் மிக்க நகரங்களான நாகர்கோவில், மார்த்தாண்டம் ஆகிய இடங்களிலும் underground cable மூலம் மின் வசதி ஏற்படுத்த வேண்டும். மலையோரங்களிலும், தோட்டப் பிரதேசங்களிலும் அடிக்கடி மரங்கள் முறிந்து விழுந்து மின் தடையை ஏற்படுத்துவதுடன் வாரியத்திற்கும் பெரும் இழப்பு ஏற்படுத்துவதால் அங்கேயும் underground cable மூலம் இணைப்புத் தர ஆலோசனை செய்யலாம்.

விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட மலையோர கிராமங்களான வெள்ளறுக்கு, புறத்திமலை, வட்டப்பாறை, தேக்குமூடு, பெருங்குருவி, திருவட்டாறு தொகுதிக்குட்பட்ட மணலோடை, தோட்டமலை, தச்சமலை, பாலமோர், அரூர் தொகுதிக்குட்பட்ட, காரப்பாடி ஆகிய மலையோர குடியிருப்புகளில் (மணியடிக்கப்பெற்றது) சுதந்திர ஒளி வீசினாலும், மின்னொளி வீசவில்லை. சிறப்புத் திட்டம்மூலம் இப்பகுதிகளில் மின் வசதி செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் வலியஏலா என்ற பகுதியில் குடியிருக்கும் மக்கள் 60 ஆண்டுகளுக்கும் மேலாக மின் வசதி கோரி வருகின்றார்கள். அவர்கள் குடியிருக்கும் பகுதிகள் வருவாய்த் துறைக்கு சொந்தமானது. தொண்ணூற்றி எட்டே முக்கால் ஏக்கர் பூமிக்கு வருவாய்த் துறையிடம் ஆவணங்கள் உள்ளன. எனினும், வனத் துறை தேவையில்லாமல் குறுக்கீடு செய்கிறது. எனவே, இவ்விஷயத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலையிட்டு நல்ல தீர்வை ஏற்படுத்துமாறு பணிவோடு வேண்டுகிறேன். வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கும்போது ஏற்படும் நடைமுறைச் சிக்கலை...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது. உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி. (குறுக்கீடு) 10 minutes முடிந்துவிட்டது. (குறுக்கீடு) No, no. அடுத்து, திருமதி பத்மாவதி. (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள். என்ன என்று சொல்லுங்கள்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கும்போது ஏற்படும் நடைமுறைச் சிக்கல்களை இம்மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். குடிசைகளுக்கு, வீடுகளுக்கு, இலவச தொலைக்காட்சிப் பெட்டி பயனாளிகளுக்கு, மின் இணைப்பு வழங்கும்போது சில நேரங்களில் பக்கத்துச் சொத்திற்கு உரிமைதாரர், ஆட்சேபனை தெரிவித்தால் மின் இணைப்பு நிறுத்தப்படுகிறது. இத்தகைய நேர்வுகளில் மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது ஆர்.டி.ஓ. விசாரணை மேற்கொண்டு ஆட்சேபனை தெரிவித்தவருக்குப் பெரிய பாதிப்பு இல்லையெனில் அந்த மின் இணைப்பை வழங்க ஆணையிடும் முறை சில மாநிலங்களில் உள்ளன. இதுபோன்ற நடைமுறையினைத் தமிழகத்திலும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி அமர்கின்றேன். வணக்கம்.

பிற்பகல் 12-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

***திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகின் உயிர் சக்தி பெண். பெண்ணே சக்திதான். அதுபோல் உலக சக்திக்கு உதவுவது மின் சக்தி. பெண்களைக் குடும்ப விளக்கு என்றார் பாவேந்தர் பாரதிதாசன். அந்தக் குடும்ப விளக்குக்கும் தேவை மின் சக்தி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு 10 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

**திருமதி பி. பத்மாவதி:** இந்த எரிசக்தித் துறையில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும், என்னுடைய சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்னிலம் தொகுதியிலுள்ள பேரளத்தில் துணை மின் நிலையம் கொண்டு வர உத்தரவிட்ட மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் அதற்கான முழு உதவிகளை வழங்கிய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும், ஆதீனத்திற்குச் சொந்தமான நிலத்தை ஆர்ஜிதம் செய்ய உதவிய மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பிலும், என் தொகுதி மக்கள் சார்பிலும் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

21,600 மின்சார ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்ய வழிவகுத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மின்சாரம் அனைத்து வகைகளிலும் மிகவும் அவசியமான ஒன்று. நமக்கு வேண்டிய கருப்பு நிலக்கரி வெளியிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. இந்தச் சூழ்நிலையில் நவரத்தினங்களில் ஒன்றாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்ற நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தை, அந்த N.L.C.. பொது நிறுவனத்தைத் தனியாரிடம் விட்டுவிட வேண்டும் என்று முடிவெடுத்தபோது நாங்கள் எல்லாம் அதை எதிர்த்துக் குரல் கொடுத்தோம். தக்க தருணத்தில் அந்தப் பிரச்சினையில் தலையிட்டு, மத்திய அரசு எடுத்த அந்த முயற்சியைத் தடுத்து நிறுத்திய மிகப் பெரிய பெருமை நமது மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சாரும். எனவே, அந்த வகையில் இப்போது அந்த நெய்வேலிச் சுரங்கத்திலே பணியாற்றுகின்ற ஒப்பந்தத் தொழிலாளர்கள் 13 ஆயிரம் பேர் 29-3-2008 ஆம் தேதியிலிருந்து தொடர்ந்து காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். நேற்றையதினம்கூட 6 ஆயிரம் பேர் கைதாகி இருக்கிறார்கள். அவர்கள் நியாயமான கோரிக்கையை முன் வைத்திருக்கிறார்கள். அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அவர்கள் வழக்குத் தொடுத்தபோது நீதிமன்றமே 12 வாரங்களுக்குள் மூப்பு அடிப்படையிலே அவர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறது. அந்த நிருவாகம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை, ஒப்புக்கொள்ளவில்லை. பேச்சுவார்த்தைக்கும் சரியாக அவர்கள் வரவில்லை. எனவே, அவர்கள் அந்த 13 ஆயிரம் ஒப்பந்தத் தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்று கேட்டுப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சியர் அவர்கள் அதில் தலையிட்டுப் பேசி இருக்கிறார்கள். இருந்தாலும்கூட



அந்த நிருவாகத்தினுடைய தலைவர் பேச்சுவார்த்தைக்கு ஒப்புதல் அளிக்காமல், அவர்கள் இந்த நேரம் பார்த்து leave போட்டுவிட்டு டெல்லிக்குச் சென்று விட்டார்கள். அங்கே இருக்கின்ற அந்த ஒப்பந்தத் தொழிலாளர்கள் போனஸ் பெறுவதில் மிகப் பெரிய பிரச்சினை இருக்கிறது. ஊக்கத் தொகைதான் வழங்குவோம் என்று நிர்வாகத்தினர் சொல்கிறார்கள்.

அதேபோன்று, அங்கே மிகச் சிறந்த நவீன மருத்துவமனை ஒன்று இருக்கிறது. இருப்பினும் மருத்துவ வசதிகள் கூட அந்த ஒப்பந்தத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கவில்லை என்பதுதான் மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. எனவே, அந்தத் தொழிலாளர்கள் இந்த நியாயமான, முக்கியமான கோரிக்கையை வலியுறுத்திப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். தமிழகத்திலே கடந்த ஆட்சியிலே தொழிலாளர்களுடைய, பறிக்கப்பட்ட போராடிய சலுகைகளையெல்லாம் மீட்டுக் கொடுத்தது நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான். எனவே, இப்படிப்பட்ட ஒப்பந்தத் தொழிலாளர்கள், நியாயமான முறையில் போராடிக் கொண்டு இருக்கிறவர்கள் அந்த நிலக்கரிச் சுரங்கத்திலே முழுக்க, முழுக்க நிரந்தரத் தொழிலாளர்களை விட அதிக பளுவான வேலைகளை contract basis முறையில் செய்கிறார்கள். Contract-காரர்களால் சுரண்டப்படுகிறார்கள். உழைப்பு சுரண்டப்படுகிறது. அவர்களுடைய வியர்வை விரையமாக்கப்படுகிறது. இப்படிப்பட்ட அந்தத் தொழிலாளர்கள்மீது கருணை கொண்டு, பேச்சுவார்த்தையில் அந்த நிருவாகத்தை ஈடுபட வைத்து, உரிய சலுகைகளை, உரிமைகளைப் பெற்றுக் கொடுத்து அவர்களுடைய வாழ்க்கையைப் பாதுகாக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே இந்த மாமன்றத்தின்மூலம் நமது மாண்புமிகு முதல்வர் அவர்களை வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, காற்றாலைமூலமாக மின்சாரம் தயார் செய்வதில் உலகத்திலேயே இந்தியா 6-வது இடத்தைப் பெற்றுள்ளது. இந்தியாவில் தமிழகம் முதலிடத்தைப் பெற்றுள்ளதை நாம் வரவேற்கின்றோம். இன்றைக்கு காற்றாலைகள்மூலம் தமிழ்நாட்டில் உள்ள கணவாய்ப் பகுதியில் கிட்டத்தட்ட 55 ஆயிரம் மெகா வாட் மின்சாரம் உற்பத்தியாகிறது என்று கொள்கை விளக்கக் குறிப்பு சொல்கிறது. காற்றாலை மின்சாரத் தயாரிப்பு பெரும்பாலும் தனியாரிடம்தான் உள்ளது.

பிற்பகல் 12-15

மின்சார வாரியத்தின்மூலம் மின்சாரத்தைப் பெற்று அதற்கு ஈடாக இங்கே மின்சாரம் வழங்குவதில் இருக்கின்ற பிரச்சினைகளைத் தவிர்க்க தனியார்மூலம் உற்பத்திச் செய்யப்படும் மின்சாரத்தை, மின்சார வாரியம் நிறுத்தச் சொல்கிறது என்ற புகார்கூட எழுந்து வருகிறது. மின்சாரம் கிடைக்காத நேரத்தில் மின்சார வாரியம் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தக்கூடிய உள் கட்டமைப்புகளை உருவாக்கி, அதை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

கடல்சார் பல்கலைக்கழகம் நாகப்பட்டினத்தில் வர இருக்கிறது. கடல் அலைகளில் இருந்து தயாரிக்கப்படும் மின்சாரத்தை, ஆராய்ச்சி மையத்தின் மூலமாகவோ அல்லது கடல்சார் பல்கலைக்கழகம் மூலமாகவோ தயாரிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடலோரப் பகுதிகளில் அனல் மின் நிலையம் பெருகி வருகிறது. வளர்ச்சி பெற்ற அமெரிக்கா போன்ற நாடுகள் அனல் மின் நிலையத்தைத் தவிர்க்கின்றன. காரணம், கடலில் உள்ள வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படுகின்றன. சுற்றுப்புறச் சூழல் பாதிப்பு ஏற்படுகிறது, வளிமண்டலம் பாதிப்பு, புவி வெப்பமயமாக்கப்படுகிறது, எனவேதான் அதை அவர்கள் தவிர்க்கின்றார்கள். புனல் மின்சாரம் மாசுபடுதல் கிடையாது. எனவே, புனல் மின்சாரத்தை அதிகப்படுத்த நாம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்தத் தருணத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்தியா, அமெரிக்கா அணுசக்தி பற்றி இங்கே நாம் பேசினோம். இந்தியா, அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்தைப் பற்றி தெளிவான முடிவிற்கு நாம் வரவேண்டும். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் அதற்கு எதிரானவர்கள் அல்ல. அணுசக்திக்கு எதிரானவர்கள் அல்ல. ஆனாலும் கூடங்குளத்திலே நாம் அணு ஒப்பந்தம் செய்கின்றபோது, அன்றைக்கு ரஷ்யா நாட்டுடன் எந்தவித நிபந்தனையும் இல்லாமல் அந்த ஒப்பந்தம் போடப்பட்டது. அதேபோன்று, சீனாவில்கூட ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், நிபந்தனை கிடையாது. இன்றைக்கு நாம் ஏன் அதை எதிர்க்கிறோம் என்று சொன்னால், நிபந்தனை விதித்து இருக்கிறார்கள். அமெரிக்காவின், எந்த ஒரு கொள்கையில் இருந்து நாம் மாறுபட்டாலும், அந்த ஒப்பந்தத்தின்மூலம் உருவாக்கப்பட்ட அணு மின் நிலையங்களைச்



செயலிழக்கச் செய்வார்கள். அணு மின் சக்தி நிலையங்களில் இருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் விலைகூட அதிகமாக இருக்கிறது என்று மதிப்பிட்டுள்ளார்கள்.

ஈரானில் இருந்து எரிவாயு பாகிஸ்தான் வழியாக இந்தியாவுக்கு வருவது என்ற ஒப்பந்தத்தைக்கூட அமெரிக்கா தடுத்து நிறுத்திவிட்டது. அதன்மூலம் குறைந்த செலவில் அதிகமான மின்சாரத்தை உற்பத்திப் பண்ணக்கூடிய ஒரு வாய்ப்பு இருந்தது. அப்படி இருந்ததை அமெரிக்கா தடுத்து நிறுத்திவிட்டு, இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நிர்ப்பந்திப்பதைத்தான் இப்போது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இடது சாரிகள் எதிர்க்கின்றன என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அணு தொழில்நுட்ப வளர்ச்சியில், நம்முடைய கல்பாக்கம் அணு மின் நிலையம் தமிழகத்தில் மட்டுமல்ல இந்தியாவிற்கே ஒரு முன்னுதாரணமாக இருக்கிறது. தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் இறையாண்மைக்கு மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்ற வகையிலேதான் இந்த இந்திய, அமெரிக்க அணு ஒப்பந்தத்தைக் கைவிட்டு மரபுசாரா சூரிய ஒளி போன்ற வழிகளில் மின் நிலையங்கள் அமைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, உள்நாட்டு மீனவர்கள் பயன்படுத்தும் மின்சாரத்திற்கு, வணிகத்திற்குரிய கட்டணம் விதிக்கப்படுகிறது. தமிழகத்திலே விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கி பாதுகாத்த இந்த அரசு, விவசாயம் சார்ந்த சாதாரண விவசாயிகளான உள்நாட்டு மீன் உற்பத்தியாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கலாம். அப்படி வழங்க முடியாவிட்டால் ஒரு குதிரைத் திறனுக்கு ஆண்டுக்கு ரூ.250 என்று நிர்ணயம் செய்து உதவிட வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, தென்னை கழிவுப் பொருளில் இருந்து மின்சாரம் தயார் செய்துகொண்டிருக்கிறார்கள். அதில் குறிப்பாக நான் ஒன்றைச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், தேங்காய் உரிமட்டையை ஏற்றுமதி செய்கின்றார்கள். இந்தத் தேங்காய் உரிமட்டையை நமது தென் மாநிலங்களில் இலட்சோப இலட்சம் மக்கள் நம்பி இருக்கிறார்கள். கயிறு திரிப்பது மற்றும் பல்வேறு தொழில்களை தேங்காய் உரிமட்டையிலிருந்து செய்கிறார்கள். எனவே, ஒரு நேரத்தில் அதற்கான ஒரு கேள்வியை நம்முடைய

சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு தோழர் ராமசாமி அவர்கள் இங்கே கேட்கின்றபோது, நமது மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், இனிமேல் மின்சாரத்திற்காக தேங்காய் உரிமட்டை ஏற்றுமதி செய்வதைத் தடுத்து நிறுத்திவிடுவோம் என்று குறிப்பிட்டார்கள். ஆனால், இன்றுவரை அது தடுத்து நிறுத்தப்படவில்லை. இத்தொழிலில் சுமார் இரண்டு இலட்சத்திற்கு மேல் பெண்கள் வேலை செய்கின்றார்கள். அந்தத் தொழிலாளிகளைப் பாதுகாக்கக்கூடிய வகையில் அந்த உரிமட்டையை ஏற்றுமதி செய்யாமல், தேவையில்லாத கழிவுப் பொருள்களை ஏற்றுமதி செய்யலாம். சிறு தொழில்களை பாதிக்கக்கூடிய அளவில் இல்லாமலும் அவர்களை உரிய முறையில் பாதுகாக்கக்கூடிய வகையிலும் (மணியடிக்கப்பெற்றது) தேங்காய் உரிமட்டை ஏற்றுமதியைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று 2003-ல் தற்காலிக இளநிலை ஊழியர்களாக, ரூபாய் 4,000 தொகுப்பூதியத்தில் நியமிக்கப்பட்டவர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

ஓய்வு பெற்ற கிராம நிர்வாக அலுவலர்களுக்கு ஓய்வூதியத்தை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும். ஊராட்சிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஓய்வூதியம், அதேபோன்று, அவர்களுக்கான குடும்ப ஓய்வூதியத்தை அரசாங்கம் அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும். அதேபோன்று தற்காலிகப் பணியாளர்களாகத் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு துறைகளிலே பணியாற்றுகின்றவர்களை நிரந்தரமாக்க வேண்டும் (மணியடிக்கப்பெற்றது) என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

மின்சாரச் சட்டம் 2003-ஐப் பயன்படுத்தி, மின்சார வாரியத்தைப் பல கூறுகளாகப் பிரிப்பதை அரசு ஏற்கக் கூடாது என்றும் இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணன். (குறுக்கீடு)

**திருமதி பி. பத்மாவதி:** அதேபோன்று நிலக்கரி சுரங்கம் அமைப்பதற்கு நிலம் கொடுத்த விவசாயிகளுக்கு. . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பத்மாவதி, உங்களுக்குக் கொடுத்த நேரம் முடிந்து விட்டது. உட்காருங்கள். (குறுக்கீடு) சீக்கிரம் பேச்சை முடியுங்கள்.

**திருமதி பி. பத்மாவதி:** நன்றி. ஒரே ஒரு நிமிடத்தில் உரையை முடித்து விடுகிறேன். விவசாயிகள் கொடுத்த அந்த நிலங்களில் களப்பாலில் எரிவாயு இருக்கிறது. அதேபோன்று, நிலம் கொடுத்த விவசாயிகளுக்கு உரிய நஷ்டஈடு வழங்கப்படவில்லை. அங்குள்ள கழிவு நீரினால் அந்த நிலங்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. கருணைகூர்ந்து அவர்களுடைய பிரச்சினையைத் தீர்த்து அவர்களுக்கான நஷ்டஈட்டை அரசு வழங்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொண்டு, இந்தச் சிறப்பு வாய்ப்பிற்கு நன்றி சொல்லி முடிக்கிறேன். நன்றி. வணக்கம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது கேள்வி நேரம் இல்லை.

**திரு. தி. வேல்முருகன்:** இல்லை, இல்லை, Point of Order. ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No, no. திரு. வேல்முருகன், நேரம் இல்லை. அமைச்சர் உரையாற்றியதற்குப் பிறகு கேட்டுக்கொள்ளலாம். உட்காருங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள், என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, N.L.C. சம்பந்தமாக காலையில் மாண்புமிகு அமைச்சரைப் பார்த்தோம். இப்போது அனைத்து உறுப்பினர்களும் அதுபற்றிக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். மாலைப் பத்திரிகையில் அதுபற்றி செய்தி வரும், இன்றைக்கு மின்சாரத் துறை மானியம் என்பதால் கண்டிப்பாக தங்களுக்கான ஒரு நல்ல விடிவு கிடைக்குமென்று காத்துக்கொண்டிருக்கிறார்கள் நிலம் கொடுத்தவர்கள், வீடு கொடுத்தவர்கள். அவர்கள் தங்களுக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமகிருஷ்ணன் (குறுக்கீடு) சொல்லிவிட்டீர்கள் இல்லையா? எந்த சப்ஜெக்ட்க்கு வருகிறீர்கள் என்பதை நீங்கள் சொல்லிவிட்டீர்கள். அதற்குப் பதில் சொல்வார்கள், உட்காருங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No(குறுக்கீடு) நீங்கள், பத்திரிகைகளில் வரவேண்டுமென்பதற்காகச் சொல்ல முடியாது. உட்காருங்கள், வேல்முருகன். நீங்கள் எதிர்ப்பார்ப்பதைச் சொல்லிவிட்டீர்கள். நினைவுபடுத்திவிட்டீர்கள். அதற்குப் பதில் வரும். உட்காருங்கள். திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டின் தொழில் வளம், வேலைவாய்ப்பு, உற்பத்தி, தனி நபர் வருமானம், ஏற்றுமதி, உயர் கல்வி, ஆண்டின் வளர்ச்சி வீதம் ஆகியவைகள் எல்லாம் மின்சாரத் துறையின்மூலமாகத்தான் தரப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமகிருஷ்ணன், உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 10 நிமிடங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மின்சாரத் துறை என்பது இன்றியமையாதது. ஒரு நாட்டின் மின்சார உற்பத்தி, குறைந்த மின் கட்டணம், மின் நுகர்வோர் இவைகளின்மூலமாகத்தான் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி என்பது உயர்கின்றது. ஆகவே, மின்சாரம் என்பது தமிழக மக்களின் அன்றாடத் தேவைகளில் ஒன்றாக இருப்பதனால் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற அறிவிக்கப்படாத மின் வெட்டினை விரைவில் இரத்து செய்வதற்கு உண்டான முயற்சிகளில் ஈடுபட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, கம்பத்திலிருந்து 6 கி.மீ. தொலைவில் உள்ள மின் கட்டண அலுவலகத்திற்குச் சென்று மின்கட்டணம் செலுத்த வேண்டியிருக்கிறது. 2000-க்கும் மேற்பட்ட வணிகர்கள், 60-க்கும் மேற்பட்ட தொழில் முனைவோர்கள் 2 மாதத்திற்கொருமுறை 40,000 ரூபாய், 50,000 ரூபாய் எடுத்துச் சென்று மின் கட்டணம் செலுத்துகின்ற வேளையில் பாதுகாப்பற்ற நிலையும், பந்தோபஸ்து அற்ற நிலையும் இருக்கிறது. மேலும், கம்பம் ஒன்றியப் பகுதியில் அண்ணாபுரம், சாமண்டிபுரம், ஆங்கூர்பாளையம், பஞ்சகுளம் போன்ற பகுதிகளிலிருந்து பேருந்து மூலமாக கம்பத்திற்கு வந்து, அங்கிருந்து ஆட்டோ பிடித்துச் செல்ல வேண்டியுள்ளதால் ஆட்டோ செலவும் ஏற்படுகின்றது. தொழில் நஷ்டம், வருமான இழப்பு, போக்குவரத்து



இவற்றை எல்லாம் கருத்தில்கொண்டு, கம்பத்தில் காலியாக உள்ள பழைய நகராட்சி அலுவலகத்தில் மின் கட்டணம் செலுத்துவதற்காக உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, தற்போது நடைமுறையில் உள்ள இரு மாதங்களுக்கு ஒரு முறை மின்கட்டணம் செலுத்தும் முறையில் மக்கள் மீது மறைமுகமாகக் கூடுதல் கட்டணம் சுமத்தப்படுகின்றது.

குறிப்பிட்ட யூனிட்டுகளுக்கு மேலே பயன்படுத்தும்பொழுது யூனிட் கட்டணம் அதிகரிக்கின்றது. மாதத்திற்கு ஒரு முறை மின் கட்டணம் செலுத்துகின்ற பழைய முறைக்கே கொண்டு வரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன். தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சிறந்த மின் கட்டணப் பட்டியல் திட்டம், BEST-Billing of Energy Services by TNEB, மின் கட்டணம் செலுத்தும் முறையை எளிமையாக்கியுள்ள சூழ்நிலையில் மாதத்திற்கு ஒருமுறை கட்டணம் செலுத்தும் முறையைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-25

அதைப்போல, குண்டு பல்புகளைத் தடை செய்ய வேண்டுமென்று Green Peace அமைப்பு வலியுறுத்தி வருகின்றது. அதற்குப் பதிலாகக் குறைவான மின் சக்தியைப் பயன்படுத்தும் CFL - Compact Fluorescent Lamp விளக்குகளைப் பொருத்த வேண்டும். மானிய விலையில் CFL விளக்குகளை ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்க வேண்டும். ஏன் என்று சொன்னால், அது நீடித்து உழைக்கும், குறைந்த வெப்பத்தை அளிக்கக் கூடியது. அதே நேரத்தில், மின் சிக்கனமும் ஏற்படும் என்பதனால் CFL விளக்குகளை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போல, முல்லைப் பெரியாறிலிருந்து வருகின்ற தண்ணீரைப் பயன்படுத்தி லோயர் கேம்பிலே, பெரியாறு மின் நிலையத்தில் 140 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி ஆகின்றது. 1958 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் இரண்டாம் நாள் கர்ம வீரர் காமராஜர் அவர்களால் துவக்கப்பட்ட அந்த மின் நிலையத்தில் ஒரு வருடம்கூட அங்குள்ள 4 யூனிட் ஜெனரேட்டர்களும் இயங்கியதே

கிடையாது. வருடந்தோறும் மின் இழப்பு ஏற்படுகின்றது. Penstock என்கிற 4 நீர்வழிக் குழாய்களின் ஒரு குழாயில் 400 கன அடி வீதம் 1,600 கன அடி தண்ணீர், அந்த நீர்வழிக் குழாய்களின்மூலமாக மின் நிலையத்திற்கு வந்து 140 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட வேண்டும். ஆனால், இரண்டு முறை தீ பிடித்து, மூன்று முறை அந்த மோட்டார் நீரில் மூழ்கி பழுதுற்ற நிலையில் அடிக்கடி கோயம்புத்தூருக்கு எடுத்துச் சென்று, மீண்டும் கொண்டுவந்து பொருத்துவது என்ற நிலைதான் நீடிக்கின்றது. இதில் இன்னொரு நஷ்டமும் இருக்கின்றது. முக்கியமான நஷ்டம். 136 அடியில் நீர் எட்டுகின்றபோது தண்ணீரை அதிகமாக எடுக்க வேண்டுமென்று சொன்னால், இந்த penstock குழாய்களின்மூலமாக 1,600 கன அடி தண்ணீர் எடுக்க முடியும். ஆனால், இந்த யூனிட் இயங்காமல் இருப்பதனால் fore bay dam-லிருந்து scour-vent-ன் வழியாக, இறைச்சிபாலம் வழியாக 800 கன அடித் தண்ணீர்தான் எடுக்கப்படுகின்றது. அந்த வகையிலே பாசனமும் பாதிக்கப்படுகின்றது. ஆகவே, நவீன யுக்தியைப் பயன்படுத்தி அந்த 4 யூனிட்டுகளும் நவீனமயமாக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு விஷயத்தை இந்த அவையிலே எடுத்து வைக்க நான் விரும்புகிறேன். தமிழ்நாடு மின்சார வாரியம் 1957 ஆம் ஆண்டிலிருந்து பல போராட்டங்கள், பல எதிர்ப்புக்கள், பல சங்கடங்களையெல்லாம் சமாளித்து பல அரசுகளும் முயன்று, அதேபோல, தமிழ்நாடு மின்சார வாரியத் தலைவர்கள் மதிப்பிற்குரிய விஜயராகவன், பூர்ணலிங்கம் மற்றும் அப்பாத்துரை போன்றவர்களாலே அது ஒரு பெரிய கட்டமைப்பாக உருவாக்கப்பட்டது. 1957-ல் 3,80,000 மின் நுகர்வோர்கள்தான் இருந்தார்கள். இப்போது ஒரு கோடியே 80 இலட்சம் மின் நுகர்வோர்கள் இருக்கின்றார்கள். முன்பு 1,815 கிராமங்கள் மற்றும் நகரங்களுக்குத்தான் மின் இணைப்புகள் வழங்கப்பட்டன. இன்றைக்கு 8 இலட்சத்திற்கு மேல் கிராமங்கள் மற்றும் நகரங்களுக்கு மின் இணைப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. 33,000 பம்பு செட்டுக்கள் என்ற நிலை மாறி இன்றைக்கு 18 இலட்சத்திற்கு மேலான பம்பு செட்டுக்களுக்கு இணைப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. 10,000 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி, 1,415 துணை மின் நிலையங்கள், 1,73,000-க்கும் மேலான மின் மாற்றிகள், இவ்வளவு கட்டமைப்புகளும், இவ்வளவு வாய்ப்புகளும் இருந்தும் சமீபகாலமாக அறிவிக்கப்படாத மின் வெட்டினால் இன்றைக்கு தமிழகம் கடுமையாகப்



பாதிக்கப்பட்டிருக்கின்றது. என்னதான் அமைச்சர் அவர்கள் சமாளித்தாலும், என்னதான் சிரித்துக்கொண்டே நமக்கு அல்லது தமிழ்நாட்டு மக்களுக்கு ஆறுதல் சொன்னாலும்கூட அந்தக் கடுமை, அந்த வெப்பம் தமிழ்நாட்டு மக்களைத் தாக்கியிருக்கின்றது என்பதனை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதே நேரத்தில் அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்கின்றார்கள். கடந்த ஆட்சிக் காலத்திலே, மின் உற்பத்தி நிலையங்கள் உருவாக்கப்படவில்லை என்ற காரணத்தை அமைச்சர் அவர்கள் சொல்கின்றார்கள். மின் உற்பத்தி இல்லை என்று சொன்னாலும்கூட, அந்த ஆட்சியிலே இருள் அகற்றப்பட்டது, மின்சாரம் வழங்கப்பட்டது. இப்போது அந்த மின்சாரத்தை முறையாக வழங்காததன் விளைவாக, சிறு தொழில், குறுந் தொழில், பெருந்தொழில், விவசாயம் மற்றும் உயர் கல்வி மற்றும் எல்லோரும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆகவே, உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போல, காற்றாலை. நல்ல காற்று சக்தியும், திறன் சக்தியும் இருந்தும்கூட இந்த ஆண்டு காற்றாலையிலே தேவைப்பட்ட மின்சாரம் எடுக்காததற்கு முக்கிய காரணம் Micro Grid 5 லிருந்து 50 கிலோ வாட் கிராமப்புற பகுதிகளுக்குத் தேவைப்படுகிறது. அது இணைக்கப்படாதது மிகவும் முக்கியமான காரணமாகச் சொல்லப்படுகிறது. (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம். ஒரே ஒரு point. காற்றாலையை இயக்குவதற்கு turbine, speed, வினியோகிக்கும் கம்பி, இயந்திரங்களின் பாகங்கள், பராமரிப்பு, கவனிப்பு போன்றவை முக்கியத்துவம் பெறுகின்றன. பாகங்கள் இறக்குமதி செய்யப்படுவதால் தரமும், செயல்படும் விதமும் கேள்விக்குறியாக உள்ளது. தொழில்நுட்பமும் கேள்விக்குறியாக உள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதில் அதிகமாகக் கவனம் செலுத்தி காற்றாலைகள் மூலமும் உற்பத்தியிலும் அதிக மின்சாரம் எடுக்கவேண்டும் என்று கேட்டு அமைகின்றேன். நன்றி. வணக்கம்.

பிற்பகல் 12-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியம், எரிசக்தித் துறை, பணியாளர்கள் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறைகளின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. இரா. விசுவநாதன், திரு. மு. அப்பாவு, டாக்டர் எம்கே. விஷ்ணுபிரசாத், திரு. இல. வேலுசாமி, திரு ஞா. ஜாண் ஜோசப், திருமதி பி. பத்மாவதி, மற்றும் திரு. நா. இராமகிருஷ்ணன் ஆகியோர் தங்களுடைய அருமையான கருத்துகளை இங்கே எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் பதில் சொல்லக்கூடிய அருமையான வாய்ப்பை தமிழகத்திலே எட்டாவது முறையாக எனக்கு உருவாக்கித் தந்த தமிழினத் தலைவர் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தையும், என்னுடைய அன்பையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இங்கே பேசிய உறுப்பினர்களிலே முக்கியமானவர் திரு. விசுவநாதன், அ.தி.மு.க.-வை சேர்ந்தவர். அவருக்கு 20 நிமிட நேரம் ஒதுக்கப்பட்டு 22 நிமிடங்கள் பேசியதற்குப் பிறகு, நேரம் போதவில்லை என்று வெளியேறியிருக்கிறார். இங்கே நிருபர்கள் இருக்கிறார்கள். அவர்கள் சாட்சியாக இருக்கிறார்கள். எதிர்க்கட்சியினர் வெளியேறுவதற்குக் காரணம் நேரமில்லாத நிலைமை அல்ல, அவர் பேசியது அத்தனையும் உண்மைக்குப் புறம்பானது என்கிற காரணத்தால்தான் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் வெளியேறினார்களே தவிர, வேறு ஒன்றும் இல்லை. அவருடைய ஆட்சிக் காலத்திலே 2,047 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்ததாக அவர் சொன்னார். மின்சார இலாகா உயிரோடுதான் இருக்கிறது. அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர் சொன்னதை நிரூபித்தால் எந்தத் தண்டனைக்கும் நான் தயாராக இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய ஆட்சிக் காலத்திலே உண்மையிலேயே மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது 348.5 மெகா வாட்தான். ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்திலே திட்டம் தீட்டிய பிள்ளைப்பெருமாநல்லூர், Madurai Power Corporation, S.T.C.M.S., போன்ற நிறுவனங்கள் உற்பத்தி செய்ததையும் அவர்களுடைய ஆட்சியிலே செய்ததாகச் சேர்த்து ஒரு கணக்கு சொன்னார்கள். அதுகூடப் பரவாயில்லை, ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், மத்தியத் தொகுப்பிலிருந்து தால்சர், Neyveli Lignite Corporation, இராமகுண்டம் போன்ற நிறுவனங்களிலே உற்பத்திச் செய்த 900 மெகா வாட் மின்சாரத்தையும் ஏதோ அ.தி.மு.க. ஆட்சிதான் உற்பத்தி செய்ததுபோல் இங்கே ஒரு கணக்கு சொல்லிவிட்டுப் போய்



இருக்கிறார்களே, இது நியாயமா என்பதை அவர்களுக்கு மனசாட்சி இருந்தால் எண்ணிப் பார்க்கவேண்டும். அதைவிட வேடிக்கை, 1,000 மெகா வாட் மின்சாரம் உற்பத்திச் செய்ய Neyveli Lignite Corporation-னோடு ஒப்பந்தம் செய்தோம், 1,000 மெகா வாட் N.T.P.C. யோடு ஒப்பந்தம் செய்தோம் என்றெல்லாம் சொல்லிவிட்டுப் போனார்கள். இந்த ஒப்பந்தங்கள் செய்து இருந்தால் இதுவரையில் 2,000 மெகா வாட் மின்சாரம் வந்திருக்கவேண்டும். ஐந்து ஆண்டுகளாக வரவில்லை. அப்படி என்றால் என்ன அர்த்தம்? MoU செய்துவிட்டால் போதுமா? நிதி ஒதுக்க வேண்டாமா? ஒன்றையும் செய்யாமல் மின்சாரத்தை உற்பத்தி செய்வதில் அக்கறையே செலுத்தாமல் இன்றையதினம் தி.மு.க. மீது பழிபோட முயற்சிக்கிறார்கள். அதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இரண்டாவது, டிரான்ஸ்பார்மர்கள் பற்றிச் சொன்னார்கள். அவர்களுடைய ஆட்சியிலே ஓர் ஆண்டுக்கு 4,874 டிரான்ஸ்பார்மர்கள்தான் வாங்கப்பட்டன. அவற்றினுடைய விளைவைத்தான் கடந்த ஆண்டு நாம் அனுபவித்தோம். ஆனால் தி.மு.க. ஆட்சியிலே ஓராண்டுக்கு வாங்கப்படுகின்ற டிரான்ஸ்பார்மர்களின் எண்ணிக்கை 9,000 ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) அதனுடைய விளைவாகத்தான் இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே உள்ளபடியே மின்சாரத் தட்டுப்பாடு இருந்ததை மறுக்கவில்லை. ஜனவரி மாதம், பிப்ரவரி மாதத்திலே காற்று வீசாத காரணத்தால் தட்டுப்பாடு இருந்தது, அதை நாங்கள் மறைக்கவே இல்லை. ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று மத்திய அரசாங்கத்திலே டாக்டர் மன்மோகன் சிங் அவர்களையும், அன்னை சோனியாகாந்தி அவர்களையும் சந்தித்து 300 மெகா வாட் மின்சாரத்தைப் பெற்று வந்ததன் காரணமாக ஓரளவுக்கு நாம் அதைச் சமாளித்தோம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-35

என்னிடத்திலே விவரங்கள் இருக்கின்றன. எங்கே வேண்டுமானாலும், யார் வேண்டுமானாலும் பார்க்கலாம். மார்ச் மாதம் 1 ஆம் தேதியிலேயிருந்து இன்று வரையிலே எங்கேயாவது மின்சாரத் தட்டுப்பாடு, மின்சாரப் பற்றாக்குறை ஒரேயொரு கிராமத்தில் இருந்தால்கூட எடுத்துச் சொல்லுங்கள், எங்கேயாவது சிறு தவறுகள் ஏற்பட்டு transformer failure ஆகியிருந்தால் தவிர,

மின்சாரம் இல்லையா என்று சொன்னால் இருக்கிறது. நம்மிடத்திலே கையிலே இருப்பது 8,500 மெகா வாட். ஆனால், இந்த மாதத்திலே எவ்வளவு மின்சாரத்தை மிச்சமாக வைத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னால், ஒரு குறிப்பிட்ட தேதியிலே சொல்லுகிறேன். 1,087 மெகா வாட் 20-3-2008 அன்று நம்மிடத்திலே மிச்சமாக இருந்திருக்கிறது. அதைப்போல, 600 மெகா வாட் 9-3-2008-ல் மிச்சமாக இருந்திருக்கிறது. இப்படி ஒவ்வொரு நாளும் 500 மெகா வாட்டிலிருந்து 1,000 மெகா வாட் வரையிலே மிச்சமாக இருக்கிறது. மின்சார வாரியத்திலே Load Despatching Centre என்ற ஓர் அமைப்பு இருக்கிறது. எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அங்கே போய் பார்த்துக் கொள்ளலாம். அந்த அளவிற்கு நமக்கு மின்சாரம் கூடுதலாக இருக்கிறது. இருந்தாலும்கூட தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய தலைவர் டெல்லியிலே Power Trading Corporation-னோடு கலந்து பேசி, கேரளாவிலே உள்ள காயங்குளத்திற்குப் போய் கலந்து பேசி, வட மாநிலங்களிலே கலந்து பேசி, இவ்வளவு மிச்சமிருந்தால்கூட கோடைக் காலத்திலே பற்றாக்குறை ஏற்பட்டால் என்ன செய்வது என்று எண்ணி, 600 மெகா வாட் கூடுதலாக மின்சாரம் பெறுவதற்கு ஒப்பந்தம் செய்திருக்கிறார் என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே மாண்புமிகு கம்யூனிஸ்ட் உறுப்பினர் சொன்னார், நாட்டினுடைய சீதோஷ்ண நிலைகள் எல்லாம் மாறுகின்றன என்று. அதை நம்முடைய வல்லுநர்கள் எல்லாம் தெரிவித்து இருக்கிறார்கள். ஏன் சுனாமி வந்தது? ஏன் இந்த மாற்றம்? அதைப்போல, எப்போதாவது நவம்பர், டிசம்பர் மாதங்களிலே காற்று வீசாமல் இருந்திருக்கிறதா என்றால், இல்லை. ஜனவரி மாதம் வரையிலே காற்று வீசும். இந்த ஆண்டு வீசவில்லை. அதைப்போல மார்ச் மாதம் எப்போதாவது 380 மில்லி மீட்டர் மழை பெய்திருக்கிறதா என்றால், இல்லை. இந்த ஆண்டு பெய்திருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்றால், இயற்கையிலே பல மாற்றங்கள் உலகம் முழுவதும் ஏற்படுகின்றன. அது தமிழ்நாட்டிலும் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையிலேதான் மின்சாரப் பற்றாக்குறை நமக்கு ஜனவரி, பிப்ரவரி மாதத்திலே ஏற்பட்டாலும்கூட, மழை பெய்த காரணத்தாலே ஒரு நாளைக்கு 2,000 மெகா வாட் மின்சாரத்தைப் பயன்படுத்த வேண்டிய விவசாயிகள், மழை அதிகமாகப் பெய்ததன் காரணமாக அதைப் பயன்படுத்தாத காரணத்தால் நாம் மிச்சமாக மின்சாரத்தைச் சேமித்து வைத்திருக்கின்றோம். ஆனால், ஒன்று, நமக்கு மார்ச் மாதம்



மட்டுமல்ல, ஏப்ரல் மாதம் 30 ஆம் தேதி வரையில் இந்தப் பிரச்சினை இருக்கலாம். இருந்தாலும் எந்த இடத்திலேயும் மின்சார வெட்டோ, மின்சாரத் தடையோ இல்லாத அளவிற்கு இந்த மின்சார வாரியம் பார்த்துக்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. அப்பாவு அவர்கள் இந்த அரசாங்கத்தினுடைய திட்டங்களை எல்லாம் மிக விளக்கமாக எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அவர்களுக்கு நன்றி. நம்முடைய டாக்டர் விஷ்ணு பிரசாத் அவர்கள் பேசும்போது கூடங்குளம் மின்சாரத்திலே 1,000 மெகா வாட் மின்சாரம் வரவேண்டும் என்றும் அதைத் துரிதப்படுத்த வேண்டும் என்றும் சொன்னார்கள். நாங்களும் துரிதப்படுத்திக் கொண்டிருக்கின்றோம். இரஷ்ய அரசாங்கம் கட்டுமானப் பணிகள் முடித்து Nuclear Power உற்பத்தி தொடங்குவதில் கொஞ்சம் காலதாமதம் ஆகிறது. இருந்தாலும் இந்த ஆண்டு டிசம்பர் மாதத்திலே அவர்கள் மின்சாரம் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிக் கொடுத்தால் இன்னும் 1,000 மெகா வாட் மின்சாரம் நமக்குக் கிடைக்கும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வேலுசாமி அவர்கள் பேசுகின்ற நேரத்தில், தொகுப்பு ஊதியத்திலே இருக்கின்றவர்களை எல்லாம் நிரந்தரமாக ஆக்க வேண்டும், Time Scale கொடுக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். கலைஞருடைய ஆட்சிக் காலத்திலேதான் கடந்தகால ஆட்சியிலே பாதிக்கப்பட்ட தொழிலாளிகளுக்கெல்லாம் வாரி, வாரி வழங்கி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பல இலாகாக்களிலே தொகுப்பூதியத்திலே இருந்தவர்களை எல்லாம் மாற்றி இருக்கிறார்கள். ஏதாவது விடுபட்டு இருக்குமானால் அதையும் இந்த அரசாங்கம் பரிசீலிக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

நெய்வேலியிலே இன்றையதினம் 12 ஆயிரம் ஒப்பந்தத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். அதைத் தீர்த்து வைக்க வேண்டும் என்று நம்முடைய வேல்முருகனும் கேட்டார், மற்றவர்களும் கேட்டார்கள். நான் மத்திய அமைச்சரிடத்திலே பேசி இருக்கிறேன். அவர் ஒரு வார காலத்திற்குள்ளாக அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய சுரங்கத் துறை அமைச்சர் திரு. தாசரி நாராயண ராவ் அவர்களிடத்திலே

பேசியபோது ஒரு வார காலத்திற்குள்ளாக இந்தப் பிரச்சினையை நான் தீர்த்து வைக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். என்னுடைய இந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு அவர்கள் வேலை நிறுத்தம் செய்வதை விட்டுவிட்டு, மறுபடியும் வேலைக்குச் செல்ல வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன். எனவே, இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு இந்த அரசு நிச்சயமாக எல்லா முயற்சிகளையும் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

*பிற்பகல் 12-40*

திரு. ஜாண் ஜோசப் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே சில கருத்துகளைச் சொன்னார்கள். Transmission Corporation ஒன்று உருவாகப்போகிறது; அதைத் தனியாரிடத்திலே கொடுத்துவிடக் கூடாது என்று சொன்னார்கள். உறுதியாகச் சொல்கிறேன். தமிழ்நாட்டிலே உருவாக்கப்பட இருக்கின்ற Transmission Corporation-க்கு தமிழ்நாடு மின்வாரியத்தினுடைய தலைவர்தான் தலைவராக இருப்பார். (மேசையைத் தட்டும் ஒலி) Transmission Chief Engineer-ஆக இருப்பவர் Managing Director-ஆக நியமிக்கப்படுவார். எந்தக் காரணத்தைக் கொண்டும், தி.மு.க. ஆட்சியிலே மட்டுமல்ல, இனி யார் ஆட்சிக்கு வந்தாலும் அதைத் தனியார்மயம் ஆக்காத வகையிலே சட்டம் இயற்றப்படும் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திருமதி பத்மாவதி அவர்கள் பேசுகின்ற நேரத்திலே பல கருத்துகளைச் சொல்லியிருக்கின்றார்கள். குறிப்பாக, அவர்களும் நெய்வேலி ஒப்பந்தத் தொழிலாளர்கள் பற்றிப் பேசினார்கள். நான் அதற்குப் பதில் சொல்லியிருக்கின்றேன். திரு. இராமகிருஷ்ணன் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, கம்பத்திலே மின் கட்டணம் செலுத்த வசதி செய்து தர வேண்டுமென்று சொன்னார்கள். நிச்சயமாக ஏப்ரல் மாதத்திற்குப் பிறகு கம்பத்திலே மின்சாரக் கட்டணத்தைச் செலுத்துவதற்கான அலுவலகம் ஒன்று திறந்து வைக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாதம் இரு முறை என்பதை ஒரு முறையாக மின் கட்டணம் செலுத்த வேண்டும் என்றும் அவர் சொன்னார். இதே கருத்தை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயகாந்த் அவர்கள்கூட இந்த அவையிலே சொன்னார்கள். ஆனால், வேடிக்கை என்னவென்றால், அந்தக் கட்சியினுடைய தலைவர் திரு. பண்ருட்டி



இராமச்சந்திரன் அவர்கள், இந்தத் துறைக்கு அமைச்சராக இருந்த காலத்திலேதான் 1-10-1987-ல்தான், மாதம் ஒரு முறையாக இருந்ததை இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை செலுத்தினால் போதும் என்று உத்தரவு போட்டார்கள். ஆனால் ஒரு சந்தேகம் உறுப்பினர்களுக்கு இருக்கிறது. அப்படிச் செய்த காரணத்தினாலே நம்முடைய குடியிருப்புகளுக்கு மின் கட்டணம் அதிகமாகச் செலுத்த வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படும் என்று இங்கே கருத்துகள் சொல்லியிருக்கிறார்கள். அது உண்மையல்ல. ஒரு மாதத்திற்கு மின் கட்டணம் எவ்வளவு செலுத்த வேண்டுமோ அதை இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கட்டும்போதும், அதை இரண்டாகப் பெருக்கிக்கொள்ள வேண்டுமே தவிர, அந்தக் கட்டணத்தை நிச்சயமாக அதிகம் செலுத்த வேண்டிய அவசியம் தமிழ்நாட்டிலே யாருக்கும் வராது. அப்படி எங்கேயாவது ஒருவருக்கு வந்திருக்கிறது என்று எடுத்துச்சொன்னால்கூட அதை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்கு மின்சார இலாகா தயாராக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையிலே, கடந்த ஆண்டு வரவு-செலவிலே 3,405 கோடி ரூபாய் பற்றாக்குறை ஏற்பட்டது. இந்த ஆண்டு 4,728.08 கோடி ரூபாய் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்று கேட்டால் மின் வாரியத் தலைவர் இந்தக் கோடை காலத்திலே மின்சாரத்தை முழுமையாகப் பெற்று, எந்தக் குறைபாடும் இல்லாமல் மின்சாரத்தை வழங்க வேண்டுமென்று வாங்கிய காரணத்தால், ஒரு யூனிட் மின்சாரத்தை 7 ரூபாய் என்று கொடுத்து வாங்கியிருக்கிறோம். அதனுடைய விளைவு ஏறக்குறைய 4,728 கோடி ரூபாயிலே 1,000 கோடி ரூபாய்க்கு மேல் அதிகமான கட்டணம் செலுத்தி மின்சாரத்தை வாங்கியிருக்கின்ற காரணத்தினாலே இந்த இழப்பை நாம் ஏற்க வேண்டியிருக்கிறது. அதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 1,510 கோடி ரூபாய் இழப்பை ஈடு செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, உங்களுக்கு உறுதியாகச் சொல்கிறேன், மே மாதம் 15 ஆம் தேதிக்குப் பிறகு காற்று வீசும். அப்படி வீசுகின்ற நேரத்திலே 1,000 மெகா வாட் மின்சாரம் நமக்கு அதிகமாகக் கிடைக்கும். அந்த 1,000 மெகா வாட் மின்சாரத்தை இதுவரையிலே 5 ரூபாய் 2 காசு என்று மராட்டியம், பஞ்சாப் ஆகிய இரு மாநிலங்களுக்கு விற்றுக் கொண்டிருந்தோம். அதற்குப் பதிலாக இனிமேல் Power Trading Corporation-க்கே யூனிட் ஒன்றுக்கு 7 ரூபாய் என்று விற்பதற்கு ஒப்பந்தம் செய்திருக்கின்றோம்.

(மேசையைத் தட்டும் ஒலி) அப்படி 7 ரூபாய்க்கு விற்றால் சுமார் 1,000 கோடி ரூபாய் இந்த ஆண்டு மின்சார வாரியத்திற்கு இலாபம் வரும். இந்த இலாபத்தையெல்லாம் வைத்துக்கொண்டு, ஓரளவிற்கு இந்த இழப்பைச் சரிக்கட்ட முடியும் என்று மின்சார இலாகா கருதுகிறது. நானும் நிச்சயமாக நம்புகின்றேன்.

இந்த மின்சார உற்பத்தியிலே, உச்சத் தேவை எவ்வளவு என்று கேட்டால், அ.தி.மு.க.காரர்கள் பேசிவிட்டு வெளியே போய்விட்டார்கள். அ.தி.மு.க. ஆட்சியிலே 7,800, 8,000 மெகா வாட்டுக்கு மேலே உச்சத் தேவை எட்டியதே கிடையாது. ஆனால், இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகுதான் 9,076 மெகா வாட் மின்சாரம் ஒரு நாளைக்கு, 20-2-2008 அன்று எட்டியிருக்கிறது என்று சொன்னால், அதற்குக் காரணம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 13 தொழிற்சாலைகளுக்கு ஒப்பந்தம்போட்டு, 10 புதிய தொழிற்சாலைகள் இன்றையதினம் இயங்க ஆரம்பித்து, அவை ஏறக்குறைய 800 மெகா வாட் மின்சாரத்தைக் கூடுதலாகப் பயன்படுத்துகின்ற காரணத்தினால்தான், இந்த மின்சாரத்தினுடைய உச்சத் தேவை அதிகரித்திருக்கிறது. அதுமட்டுமல்ல. அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே ஒரு நாளைக்குப் பயன்படுத்தப்பட்ட மின்சாரத்தினுடைய அளவு 12 கோடி யூனிட்.

ஆனால் தி.மு.க. ஆட்சியிலே உச்சத் தேவை எவ்வளவு என்று கேட்டால் 19 கோடி யூனிட். ஆக 12 கோடிக்கும் 19 கோடிக்கும் இடையிலே இருக்கக்கூடிய 7 கோடி யூனிட் மின்சாரம் ஒரு நாளைக்கு அதிகமாகத் தேவைப்படுகிறது என்று சொன்னால், அதனுடைய அடிப்படையை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். தி.மு.க. ஆட்சியிலே மின்சாரத்தைப் பயன்படுத்துகின்றவர்கள் அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள் என்பது மட்டுமல்ல; தொழில்கள் பெருகி வருகிற காரணத்தாலே மின்சாரம் எவ்வளவுதான் உற்பத்தியை செய்தாலும் அதனுடைய தேவை அதிகமாகிக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

பிற்பகல் 12-45

அதுமட்டுமல்ல, புதிதாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இப்போது ஆட்சிக்கு வந்தவுடன் மின் வாரியத்திற்கு சில திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். 7,800 மெகா வாட் மின்சாரத்தை



உற்பத்திச் செய்ய இந்த அரசு திட்டம் தீட்டியிருக்கிறது. அந்தத் திட்டத்திலே வட சென்னை, மேட்டூர், தூத்துக்குடி, இப்படி பல மின் திட்டங்களை நாம் உருவாக்கி 7,800 மெகா வாட் மின்சாரத்தை உற்பத்திச் செய்ய மின்சார இலாகாவும், BHEL-ம், NTPC-யும், நெய்வேலியும் சேர்ந்து உற்பத்தி செய்ய இருக்கின்றோம். அதற்கான ஒப்பந்தங்கள் எல்லாம் தயார் செய்யப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இன்றையதினம் மின் விநியோகத்தினுடைய நிலைமை எப்படி இருக்கிறது என்று கேட்டால், நாம் உற்பத்திச் செய்கின்ற மின்சாரத்தைப் பொறுத்தவரையிலே, தமிழகத்திலே பரவலாகத் தொழிற்சாலைகளுக்கெல்லாம் மின்சாரம் தருகிறோம். இந்த இடைக்காலத்திலே, அதாவது மார்ச் மற்றும் ஏப்ரல் இந்த இரண்டு மாதங்களுக்கு மட்டும் நமக்கு இருக்கக்கூடிய மின்சாரம் போதாது என்றாலும்கூட, வெளி மாநிலங்களிலிருந்து 600 மெகா வாட் வாங்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம் என்றாலும்கூட, இரவு நேரங்களிலே மாணவர்கள் பரீட்சைக்குப் படிப்பதற்காக மின்சாரம் இல்லாமல் இருக்கக் கூடாது, தமிழ்நாட்டினுடைய கடைக் கோடியிலே இருக்கக்கூடிய குடிசையிலும்கூட மின்சாரம் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான், தொழில் அதிபர்களையெல்லாம் கூப்பிட்டு, அவர்களோடு கலந்துபேசி, staggering holidays என்று சொன்னார்கள். எல்லோரும் ஞாயிற்றுக் கிழமைகளிலே விடுமுறை விடுவதற்குப் பதிலாக, தமிழகத்தை ஆறு மண்டலங்களாகப் பிரித்து, ஒரு மண்டலம் திங்கட்கிழமை, இன்னொரு மண்டலம் செவ்வாய்க்கிழமை என்று பிரித்து, நீங்கள் தொழிற்சாலைகளை நடத்துங்கள், உங்களுக்கு எந்தவிதமானத் தடையும் இல்லாமல் மின்சாரத்தைத் தருகிறோம் என்று சொன்ன நேரத்திலே மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு போனார்கள். அப்போது ஆறு மணியிலேயிருந்து பத்து மணி வரையிலே உங்கள் சொந்த ஜெனரேட்டர்களைப் பயன்படுத்துங்கள் என்று கேட்டபோது, அவர்கள் எங்களைத் திருப்பிக் கேட்டது, அப்படி ஜெனரேட்டர் பயன்படுத்துவதற்கு நாங்கள் furnace oil-ஐப் பயன்படுத்துகிறோம், அதற்கு VAT வரியை இரத்து செய்வீர்களா என்று கேட்டார்கள். இரத்து செய்கிறோம் என்று சொன்னோம். மின்சாரக் கட்டணத்திலே சலுகை தருவீர்களா என்று கேட்டார்கள். ஒரு யூனிட்டிற்கு 10 காசு சலுகை தருகிறோம் என்று சொன்னோம். இதன்மூலமாக 40 கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு இழப்பு ஏற்பட்டாலும் பரவாயில்லை; மாணவர்களுடைய கல்விதான்

முக்கியம்; அவர்கள் விளக்கே இல்லாமல் இருக்கக் கூடாது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்காக நஷ்டத்தை ஏற்றுக்கொண்டு இந்த வசதிகளைச் செய்து கொடுத்திருக்கின்றோம். மே மாதம் ஒன்றாம் தேதிக்குப் பிறகு எந்தத் தொழிற்சாலையும் staggering holidays விட வேண்டிய அவசியம் இருக்காது. எல்லாத் தொழிற்சாலைகளும் ஞாயிற்றுக்கிழமையிலே விடுமுறை வைத்துக்கொள்ளலாம். அது அவர்கள் விருப்பம். எனவே, இப்படிப்பட்ட காரியங்களையும் மின்சார வாரியம் செய்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய மதிப்பிற்குரிய இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் முதலமைச்சர்கள் மாநாட்டைக் கூட்டினார்கள். வெளிப்படையாகப் பேசினார்கள். உலகத்திலே எந்த ஒரு பிரதமரும் அப்படிப் பேச மாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்று சீனாவிலே *8* இலட்சம் மெகா வாட் மின்சாரம் உற்பத்திச் செய்திருக்கிறார்கள். அதனால்தான் அந்த நாடு அவ்வளவு முன்னேறியிருக்கிறது, ஆனால் நம்முடைய நாட்டிலே இதுவரையிலே ஒரு இலட்சத்துச் சில்லறை மெகா வாட் மின்சாரம்தான் இருக்கிறது. இன்னும் *1,20,000* கிராமங்களுக்கு மின்சாரமே கிடைக்கவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையிலே இந்த 11-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே நாம் ஒரு இலட்சம் மெகா வாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டுமென்று சொன்னால், மாநில அரசுகள் எங்கெங்கே வாய்ப்பு இருக்கிறதோ அந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி தமிழ்நாடு அரசாங்கமாக இருந்தாலும் சரி, எந்த அரசாங்கமாக இருந்தாலும் சரி, நம்மிடத்திலே பணம் இல்லை, மத்திய அரசாங்கத்திலேயும் பணம் இல்லை, எனவே Merchant Power Project என்று சொல்லக்கூடிய வணிக மின் நிலையங்களை மின்சாரம் உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்துங்கள் என்று கூறினார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். 11-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இந்தியாவிற்குத் தேவைப்படுகிற மின்சாரம் *1,00,000* மெகா வாட். ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இதுவரையிலே *17,140* மெகா வாட் மின்சாரத்தை வணிக முறையிலே உற்பத்தி செய்ய அனுமதி தந்திருக்கிறார்கள். இன்னும் ஒரு *20,000* மெகா வாட் மின் உற்பத்திச் செய்வதற்கு விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. தமிழக அரசினுடைய சொந்த முயற்சியிலே *7,800* மெகா வாட் மின்சாரம் உற்பத்திச் செய்யப் போகிறோம். இஃதன்னியில் மத்திய அரசாங்கம் இதுவரையில் இந்தியாவிலே எங்குமே இல்லாத அளவிற்கு *2* Ultra Mega Power Projects-ஐ நமக்குக்



கொடுத்திருக்கிறது. ஒன்றை நாம் செய்யூரிலே தொடங்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கின்றோம். அதைப்போலவே, இன்னொரு அனல் மின் நிலையத்தை மரக்காணத்திலே தொடங்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கின்றோம். எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால், *50* ஆயிரம் மெகா வாட் மின்சாரத்தை இன்னும் *5* ஆண்டுக் காலத்திற்குள்ளாகத் தமிழ்நாட்டிலேயே இந்தியாவினுடைய தேவையைப் பூர்த்திச் செய்யக்கூடிய அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) நாம் உற்பத்திச் செய்து, வட மாநிலங்களுக்கு அனுப்பக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் *12-50*

மத்தியிலே இருக்கின்ற நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே வந்தபோது எங்களைப் பாராட்டினார்கள். "இந்தியாவினுடைய தேவையிலே ஏறக்குறைய பாதியை, தமிழ்நாட்டிலிருந்து நீங்களே பூர்த்தி செய்துவிடுவீர்கள்போலிருக்கிறது. அப்படிச் செய்தால், உள்ளபடியே கலைஞருக்கு டெல்லியிலே நானே ஒரு சிலை வைப்பேன்" என்றுகூட என்னிடத்திலே சொன்னார்கள். அந்த அளவிற்கு மின்சாரப் பற்றாக்குறை அகில இந்தியாவிலும் இருக்கும்போது, தமிழ்நாடு அரசாங்கம் இவ்வளவு முயற்சிகளை எப்படி எடுக்க முடிகிறது என்று கேட்டால், எங்கெங்கே நாம் சிறு துறைமுகங்களை அமைக்கமுடியுமோ, அங்கெல்லாம் துறைமுகங்களை அமைத்துத் தந்து, ஒவ்வோர் இடத்திலேயும் *7,000* அல்லது *8,000* மெகா வாட் மின்சாரம் உற்பத்திச் செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கின்றோம்.

கடலூரிலே ஒரு புதிய துறைமுகம் வருகிறது; அதைப்போல, திருவாரூரிலே ஒரு புதிய துறைமுகம் வருகிறது; நாகப்பட்டினத்திலே ஒரு துறைமுகம் வருகிறது. திருக்கடையூரிலே ஒரு துறைமுகம் வருகிறது; செய்யூரிலே ஒரு துறைமுகம் வருகிறது. இந்தத் துறைமுகங்களுக்கு, வெளிநாட்டிலேயிருந்து நிலக்கரியைக் கொண்டுவந்து, Merchant Power Project மூலமாக மின்சாரத்தை உற்பத்திச் செய்யவிருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல; இப்படி இவ்வளவு மின்சாரத்தை நாம் உற்பத்திச் செய்துவிட்டு, அதை எப்படி மற்ற மாநிலங்களுக்கு அனுப்புவது? அதற்கு Transmission Corporation ஒன்று வேண்டும். இருக்கிற

transmission lines போதாது. அதற்காக இந்த line-களை அதிகப்படுத்தி, அதன்மூலம் மின்சாரத்தை அனுப்பவேண்டுமென்று சொன்னால், அதற்கு ஒரு Corporation தேவை; 25 ஆயிரம் கோடி ரூபாய் பணம் தேவை என்று முடிவெடுத்துதான். ஒரு சட்டத்தைக் கொண்டு வருகிறோம். Transmission Corporation ஒன்றை உருவாக்கி, தனியார் வங்கிகள் மற்றும் சில அரசு நிறுவனங்கள், இவர்களெல்லாம் முதலீடு செய்து, 25 ஆயிரம் கோடி ரூபாய் அதற்கு மூலதனம் செய்தால், அதன்மூலமாக தமிழகத்திலேயிருந்து பெங்களூரிலே இருக்கக்கூடிய Southern Grid-க்குக் கொண்டுபோய் மின்சாரத்தை நாம் இணைக்க முடியும். Southern Grid-லே அந்த மின்சார இணைப்பைக் கொடுத்துவிட்டால், அங்கிருந்து Northern Grid, Eastern Grid, Western Grid, இந்த மூன்று Grid-களுக்கும், அவர்கள் எங்கு வேண்டுமானாலும் மின்சாரத்தை அனுப்பமுடியும் என்ற ஒரு நிலையை உருவாக்கியிருக்கின்றோம். அப்படி உருவாக்கப்படுகின்ற நேரத்தில், நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, மீண்டும் சொல்கிறேன், அந்த Transmission Corporation அரசுக்குத்தான் சொந்தமாக இருக்குமே தவிர, எந்தக் காரணத்தைக் கொண்டும் அதைத் தனியாரிடத்திலே கொடுக்கமாட்டோம் என்பதை மறுபடியும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றையதினம் மின் பயன்பாடு எப்படியிருக்கிறது என்பதைப்பற்றி நான் ஏற்கெனவே சொன்னேன். இருந்தாலும்கூட, அதை இன்னும் துல்லியமாகப் பயன்படுத்துவதற்குத் தமிழ்நாடு மின்சார வாரியம் எல்லாவிதமான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். மின்சாரத்தை வெளி மாநிலங்களிலிருந்து வாங்குகிறோம் என்று நான் ஏற்கெனவே சொன்னேன். எங்கெங்கேயிருந்து வாங்குகிறோம் என்ற விவரம் இருக்கிறது. திரிபுராவிலேயிருந்து வாங்குகிறோம், குஜராத்திலேயிருந்து வாங்குகிறோம், சட்டீஸ்கரிலேயிருந்து வாங்குகிறோம்; Power Trading Corporation-லேயிருந்து வாங்குகிறோம். இப்படிப் பல இடங்களிலிருந்து மின்சாரத்தை வாங்குகிறோம் என்று சொன்னால், இப்போதைக்கு நாம் வாங்கவில்லை. அப்படி ஒரு பஞ்சம் ஏற்பட்டால், தேவை ஏற்பட்டால் வாங்குவதற்கு ஒப்பந்தம் செய்து வைத்திருக்கிறோம். இப்போது 8,500 மெகாவாட் வரையிலே பிரச்சினையில்லை. ஆனால், இன்னும் இருக்கக்கூடிய மீதி 25 நாட்களிலே, ஏதாவது மின்சாரத் தேவை அதிகமானால், அதைச் சமாளிப்பதற்கும் மின்சார வாரியம் முன்கூட்டியே திட்டமிட்டிருக்கிறது என்பதற்காகத்தான் இதை நான் சொல்ல விரும்புகின்றேன்.



மின் இழப்பைப் பற்றி கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்று இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள்; மின்சாரத்தைத் திருடுகிறார்கள் என்று சொன்னார்கள்; அது உண்மை. ஆனால், எல்லோரும் திருடுகிறார்கள் என்று சொல்லமுடியாது. 1% அல்லது 2% மின்சாரத்தைத் திருடுகிறார்கள். அதை நாம் கண்டுபிடிக்கிறோம். நம்முடைய மின்சார வாரியத்திலே இருக்கக்கூடிய காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் அதைக் கண்டுபிடித்து, ஒரு கோடி ரூபாய் அளவிற்கு மின்சாரத்தைத் திருடியிருப்பார்களேயானால், அவர்களுக்கு 4 கோடி ரூபாய் அபராதம் போடுகிறோம். அதோடு மட்டுமல்ல; அவர்களைக் கைது செய்கிறோம். இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுக்கின்ற காரணத்தினாலே, தமிழ்நாட்டிலே மின் இழப்பு என்பது மிகமிகக் குறைவு. நான் சொன்னால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். இந்தியாவிலே தமிழ்நாட்டில் 18% மின் இழப்பு ஏற்பட்டிருக்கிறது; அஸ்ஸாமிலே 51.7% மின் இழப்பு.

ராஜஸ்தானிலே 44.7% மின் இழப்பு. ஒரிசாவிலே 44% மின் இழப்பு. இப்படி மற்ற மாநிலங்களிலே 40, 45, 50% என்று இருக்கின்ற நேரத்திலே தமிழ்நாட்டில் 18 சதவிகிதமாக மின் இழப்பு இருக்கிறது. இருந்தாலும், நாங்கள் அதையும் 15 சதவிகிதமாகக் குறைக்க வேண்டுமென்று சொல்லி நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். நம்மிடம் 1,70,000 transformer-கள் இருக்கின்றன. அதிலே, 70,000 transformer-கள் தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் போன்ற இடங்களிலே இருக்கின்ற transformer-கள். அங்கெல்லாம் மின்சாரத்தைத் திருட வாய்ப்பே கிடையாது. ஏனென்றால் விவசாயத்திற்குத்தான் பயன்படுத்துகின்றார்கள். எனவே, அந்த இடங்களிலே மீட்டர்களைப் பொருத்த வேண்டாமென்று சொல்லிவிட்டு, எங்கெங்கே தொழிற்சாலைகள் இருக்கின்றனவோ அந்த இடங்களிலே உள்ள ஒரு இலட்சம் transformers-களிலே மீட்டர் பொருத்தினால் எங்கே, யார் மின்சாரத்தைத் திருடினாலும் உடனே கண்டுபிடித்துவிட முடியும். அடுத்த நாளே நடவடிக்கை எடுக்க முடியும் என்ற காரணத்தினாலே ஒரு இலட்சம் transformer-களிலே மீட்டர் பொருத்துவது என்று இந்த அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. இதன்மூலமாக 3 ஆண்டு காலத்திலே 18 சதவிகிதமாக இருக்கக்கூடிய line-loss 15 சதவிகிதமாகக் குறைக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

பிற்பகல் 12-55

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. விசுவநாதன் அவர்கள் பேசும்போது, மின்தொடர் மற்றும் மின் பகிர்மான மூலதனச் செலவு எங்களுடைய ஆட்சிக்காலத்திலேதான் அதிகம் செய்தோம்; இந்த ஆட்சியிலே ஒன்றும் செய்யவில்லை என்று சொன்னார்கள். அது தவறு என்பதற்கும் புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. 2005-2006-லே அதற்காக அவர்கள் எவ்வளவு செலவிட்டார்கள் என்றால் 600 கோடி ரூபாய். 2006-2007 தி.மு.க. ஆட்சியிலே 1,480 கோடி ரூபாய் மின்தொடர் மற்றும் மின் பகிர்மான மூலதனச் செலவுக்காக ஓதுக்கியிருக்கின்றோம். 2007-2008-லே 1,600 கோடி ரூபாய் செலவாகியிருக்கிறது. இப்பொழுது 2008-2009-லே கிட்டத்தட்ட 2,000 கோடி ரூபாய் மூலதனச் செலவு செய்யத் தயாராக இருக்கின்றோம்.

அதுமட்டுமல்ல, நான் மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்கிறேன். இந்தியாவில் நீங்கள் எந்த மாநிலத்தை வேண்டுமானாலும் எடுத்துப் பாருங்கள். நிதிநிலை அறிக்கையிலே நம்முடைய மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் அறிவித்தார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஏற்கெனவே தமிழகத்தினுடைய எதிர்காலத்தை எண்ணிப்பார்த்து, 90 புதிய துணை மின் நிலையங்கள் இந்த ஆண்டு தொடங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் பலபேர் துணை மின்நிலையம் வேண்டுமென்று கேட்கிறார்கள். எந்த மாநிலத்திலேயும் 50 துணை மின் நிலையங்களுக்கு மேல் ஓர் ஆண்டிலே அனுமதிப்பது கிடையாது. ஆனால், நம்முடைய முதலமைச்சர் 90 துணை மின் நிலையங்களை அமைக்க அனுமதி கொடுத்திருக்கிற காரணத்தினாலே (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக மட்டும் 1,600 கோடி ரூபாய் நாம் செலவழிக்கவிருக்கின்றோம். அதுமட்டுமல்ல. அந்தத் துணை மின் நிலையங்கள் எங்கெங்கே அமைக்கப்போகிறோமோ அந்த இடங்களிலேயெல்லாம் பேரறிஞர் அண்ணாவினுடைய நூற்றாண்டு விழா இந்த ஆண்டு வருகின்ற காரணத்தினாலே 'பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா துணை மின் நிலையம்' என்று போட்டு (மேசையைத் தட்டும் ஒலி) தாம்பரம் அல்லது ஆற்காடு அல்லது வேலூர் அல்லது குத்தாலம் அல்லது பண்ருட்டி என்று பெயர்கள் போடுவோம். அந்த ஊர்களின் பெயர் கீழே இருக்கும். ஆனால், மேலே அண்ணாவினுடைய பெயர் தாங்கியிருக்கும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.



இலவச மின்சாரத்தைப் பொறுத்தவரையிலே, இங்கேகூட பலர் பேசினார்கள். ஆனால் அண்ணா தி.மு.கவினர் வேகமாகப் பேசிவிட்டுச் சென்றார்களே. அவர்கள் பேசியதை நான் இங்கே படித்துக்காட்ட விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஏறக்குறைய 18 இலட்சத்து 60 ஆயிரம் பம்பு செட்டுகளுக்கு இலவச மின்சாரம் கொடுக்கிறோம். அதில் ஏழை-பணக்காரர் என்று பார்க்கவில்லை. சிறிய விவசாயியா, பெரிய விவசாயியா என்று பார்க்கவில்லை. அதுமட்டுமல்ல, விவசாயத்திற்கு மட்டுமல்ல, வீட்டிலே சொந்தமாகத் தறி வைத்திருந்தால் 100 யூனிட். விசைத்தறி வைத்திருந்தால் 500 யூனிட், குடிசைகளுக்கு ஒரு விளக்குக்கு மட்டும் இருந்தால் போதாது. அவர்கள் டி.வி-க்கு பயன்படுத்த வேண்டுமென்றாலும் இலவசம். அதைப்போல, 1,000 ரூபாய்க்குக் கீழே வருமானமுள்ள இந்துக் கோயில்கள், கிறித்தவக் கோயில்கள், இசுலாமியக் கோயில்கள், எதுவாக இருந்தாலும், அவற்றுக்கெல்லாம் இலவச மின்சாரத்தை நாம் தந்துகொண்டிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படி இலவச மின்சாரத்தை இவ்வளவு துறைகளுக்குத் தருகின்ற நேரத்திலே, நம்முடைய உறுப்பினர் திரு. ஞானசேகரன் 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24-ஆம் தேதி இந்த அவையிலே பேசினார். 'அ.தி.மு.க. ஆட்சியிலே சிறு விவசாயிகள், குறு விவசாயிகளுக்குத்தான் இலவச மின்சாரம் என்று சொல்லியிருக்கிறீர்களே, பெரிய விவசாயிகள் என்ன பாவம் செய்தார்கள்' என்று அவர் கேட்கிறார். அதற்கு, முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா என்ன பதில் சொன்னார் தெரியுமா? 'பெரிய விவசாயிகளுக்கும் இலவசமாக மின்சாரம் வழங்கவேண்டுமென்று கேட்பதில் எந்த நியாயமும் இல்லை' என்று சொன்னார். அப்படிப்பட்டவர்களெல்லாம் இன்று வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். இதையெல்லாம் எங்கே எடுத்துச் சொல்வோமோ என்று பயந்துகொண்டு போனார்களே தவிர, நேரம் போதவில்லை என்ற காரணம் தவறு என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், கலைஞர் ஆட்சியில் அப்படி அல்ல. 15 Horse Power வைத்துக் கொண்டிருக்கிறீர்களா, 20 Horse Power மோட்டார் வைத்துக் கொண்டிருக்கிறீர்களா, எல்லோருக்கும் இலவச மின்சாரம். இப்படி யார் வேண்டுமானாலும், விவசாயிகள் எத்தனை Horse Power வைத்துக்கொண்டிருந்தாலும் இலவசமாக மின்சாரத்தைப் பயன்படுத்தலாம் என்று சொல்லியிருக்கின்ற ஒரே மாநிலம் இந்தியாவிலேயே நம்முடைய மாநிலம்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-00*

ஆண்டுக்கு 40,500 மின் இணைப்புகள் விவசாயத்திற்குக் கொடுக்கிறோம். இதுபற்றிக்கூட மாண்புமிகு உறுப்பினர்கள் சில பேர் பேசினார்கள். ஆனால் நம்மிடத்திலே இருக்கின்ற விண்ணப்பங்களுடைய எண்ணிக்கை 5,25,099. இவற்றை நாம் ஆண்டுதோறும் 40,000, 40,000 என்று கொடுக்க வேண்டுமென்றால் குறைந்தது 12 ஆண்டுகள் ஆகும். ஆனால் ஒரு இலட்சம் விவசாயிகளுக்கு ஒரு ஆண்டிலே கொடுங்கள் என்று கேட்கிறார்கள். கொடுப்பதற்கு எங்களுக்கும் விருப்பம்தான். ஆனால், ஒரு இலட்சம் பம்பு செட்டுகளுக்கு நாம் மின்சார இணைப்புக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அதற்கென்று தனியாக 1,500 கோடி ரூபாய் நிதியை ஒதுக்க வேண்டும். அப்படி ஒதுக்க முடியாத சூழ்நிலையிலேதான் 40,500 என்று இப்போது ஒதுக்கிக் கொண்டிருக்கிறோம். எதிர்காலத்திலே முடிந்தால் அதை உயர்த்துவதற்கு முயற்சிப்போம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இன்றையதினம் பில் கட்டுவதைக் கணினிமயமாக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதைக் கணினிமயமாக ஆக்கிக்கொண்டிருக்கின்றோம். அதிலே மதுரை, திருச்சி, வேலூர் மாவட்டங்கள் தவிர, மற்ற மாவட்டங்களிலே கணினிமயமாக்கிவிட்டோம். இந்த மூன்று மாவட்டங்களிலே இந்த ஆண்டு ஆக்க இருக்கிறோம். இப்படி கணினிமயம் ஆக்கிவிட்டால் கன்னியாகுமரியிலிருந்து வருகின்ற ஒருவர் அவருடைய வீட்டுக்குச் செலுத்த வேண்டிய மின் கட்டணத்தை சென்னையிலே கட்டலாம் அல்லது கோயம்புத்தூரிலே கட்டலாம். எங்கு வேண்டுமானாலும் தமிழ்நாட்டுக்குள்ளே மின் கட்டணத்தைச் செலுத்த முடியும். அப்படிப்பட்ட ஒரு திட்டத்தையும் இந்த அரசாங்கம் இந்த ஆண்டோடு செய்து முடிக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து மின் தடையை நீக்குவது. இப்போது மின் தடையை நீக்க வேண்டுமென்று சொன்னால் அங்கே ஆட்கள் போக வேண்டும். transformer-லே ஏற வேண்டும், repair செய்ய வேண்டும். இப்படி ஆட்கள் போய் ஒரு குறிப்பிட்ட நேரத்திலே மின் தடையை நீக்க முடியவில்லை என்று கலைஞர் அவர்கள் நினைத்த காரணத்தால் ஏன் இதையெல்லாம்கூட கணினிமயமாக ஆக்கக்கூடாது என்று



கேட்டார்கள். உடனே மின்சார வாரியத் தலைவர், அதனுடைய உறுப்பினர்கள் எல்லோரும் கலந்து பேசி அதைத் தாராளமாகச் செய்யலாம், கொஞ்சம் செலவாகும் என்று சொன்னார்கள். செலவு எவ்வளவு ஆனாலும் பரவாயில்லை, இந்த மின் தடையை நீக்குவதற்குக் கணினிமயமாக ஆக்குங்கள் என்று சொன்னார்கள். நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, ஈரோடு, சேலம் மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் எல்லாம் இப்போது கணினிமயமாக்கிவிட்டோம். இன்னும் திருநெல்வேலி, நாகர்கோயில், வேலூர் ஆகிய பகுதிகளிலே கணினிமயம் ஆக்க வேண்டும். இது என்னவென்று கேட்டால், தமிழ்நாட்டிலே ஏழு இடங்களிலேதான் தலைமைப் பொறியாளர் அலுவலகங்கள் இருக்கின்றன. மற்ற மூன்று இடங்களிலும் கணினிமயம் ஆக்கிவிட்டோமேயானால் சென்னையிலே 100 மெகா வாட் அதிகமாக இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள், இயற்கையாகவே computer மூலமாக திருநெல்வேலியிலே பற்றாக்குறை இருக்குமானால் தானாகவே அந்த மின்சாரம் அங்கே போய்ச் சேர்ந்துவிடும். இதுவரையிலே இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இந்த முறையைப் பின்பற்றவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டிலேதான் முதன்முதலாகக் கணினிமூலமாக மின் தடையைக்கூட சரி செய்ய முடியும் என்ற முறையைக் கண்டுபிடித்து இந்தத் திட்டத்தை அமல்படுத்தியிருக்கின்றோம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அடுத்து இராஜீவ் காந்தி மின்னொளித் திட்டம். இராஜீவ் காந்தி பெயராலே உள்ள இந்தத் திட்டத்திற்கு இதுவரையிலே இந்தியாவிலே இரண்டு ஆண்டுகளாக நிதியை ஒதுக்கிக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இந்தத் திட்டத்தின்மூலமாக தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே இரண்டாண்டு காலத்திலே 5.24 இலட்சம் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. இதற்கான பணத்தை மத்திய அரசாங்கம்தான் கொடுக்கிறது. 447.41 கோடி ரூபாய் இதற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். இதன்மூலமாக 5,24,000 குடும்பங்களுக்கும் நாங்கள் மின்சாரத்தை ஏழையெளியவர்களுக்கு கொடுக்க இருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். முதன்முதலிலே இது இந்தியாவிலே உள்ள அனைத்து வீடுகளுக்கும் மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று டாக்டர் மன்மோகன் சிங் நினைக்கின்ற அந்தக் கனவு 11-வது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே

முடிவடையப்போவது தமிழ்நாட்டிலே மட்டும்தான் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-05

ஊரக மின்மயமாக்கல் கழகம் 16 ஆயிரம் கோடி ரூபாய் கடனாகக் கொடுத்திருக்கிறது. வேறு எந்த மாநிலத்திற்கும் இவ்வளவு தொகை கொடுத்தது கிடையாது. ஏனென்றால், நாம்தான் நூற்றுக்கு நூறு கிராமங்களை மின்சாரமயம் ஆக்கியிருக்கின்றோம் மின் கட்டமைப்பை மேம்படுத்தி இருக்கிறோமென்று தெரிந்தவுடனே, நம்முடைய மத்திய மின் துறை அமைச்சர் திரு. ஷின்டே அவர்கள் பரிந்துரை செய்து, நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த நிதி அமைச்சர் அங்கேயிருக்கின்ற காரணத்தினாலே, தமிழ்நாட்டிற்கு நாங்கள் ரூபாய் 16 ஆயிரம் கோடி கடனாகத் தருகிறோம், இன்னும் மிச்சம் மீதியிருக்கின்ற பகுதிகளுக்கும் கட்டமைப்பை மேம்படுத்துங்கள்; எங்கெங்கே மின்சாரத்தைக் கொண்டுபோக வேண்டுமோ, அங்கெல்லாம் கொண்டு செல்லுங்கள், hamlets என்று சொல்கின்றோமே, எங்காவது ஐந்து வீடுகள், பத்து வீடுகள், பதினைந்து வீடுகள் இருந்தால், அந்த வீடுகளுக்கும் மின்சார இணைப்பைக் கொடுங்கள் என்று சொல்லி, 16 ஆயிரம் கோடி ரூபாய் கடனாகக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே முதற்கட்டமாக, இதுவரை 1,352 கோடி ரூபாய் நம்முடைய தமிழகத்திற்கு மத்திய அரசு கொடுத்திருக்கிறது என்ற அந்த மகிழ்ச்சியான செய்தியையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மின்சார விற்பனையைப் பற்றி நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வைத்திலிங்கம் அவர்கள், "அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே மின்சாரம், அப்படியே உபரியாக இருந்தது. நாங்கள் எப்படியெல்லாம் விற்பனை செய்தோம், தெரியுமா? ஆண்டாண்டிற்கு விற்பனை செய்தோம்" என்று சொன்னார்கள். உடனே நான்கூட எல்லாக் கணக்குகளையும் எடுத்துப் பார்த்தேன். 2001-2002-ல் ஒரு யூனிட்கூட விற்கப்படவில்லை. 2002-2003-ல் ஒரு யூனிட்கூட விற்கப்படவில்லை. 2003-2004-ல் ஒரு யூனிட்கூட விற்கப்படவில்லை. 2004-2005-ல் ஒரு யூனிட்கூட விற்கப்படவில்லை. 2005-2006-லே கொஞ்சம் விற்றிருக்கிறார்கள். எந்த அளவிற்கு விற்றிருக்கின்றார்கள் என்று கேட்டால், 230 கோடி ரூபாய்க்கு விற்றிருக்கின்றார்கள். ஆனால், நாங்கள் இந்த இரண்டாண்டு காலத்திலே எவ்வளவுக்கு விற்பனை செய்திருக்கிறோம்



என்று கேட்டால், 2006-2007-லே 225 கோடி ரூபாய்க்கும், கடந்த ஆண்டு 340 கோடி ரூபாய்க்கும் மின்சாரத்தை விற்பனை செய்திருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு, 2008-2009-லே ஆயிரம் கோடி ரூபாய்க்கு நம்முடைய surplus மின்சாரத்தை Power Trading Corporation-க்கு விற்பனை செய்யப்போகிறோம் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

காற்றாலைகளைப் பற்றிச் சொன்னார்கள். காற்றாலைகள்மூலமாக 3,693 மெகா வாட் மின்சாரம் தமிழகத்திலே உற்பத்தியாகிறது. இந்தியாவிலே அல்ல, ஆசியாவிலேயே நாம்தான் முதலிடத்திலே இருக்கின்றோம். உலகத்திலே நாம்தான் இரண்டாவது இடத்திலே இருக்கின்றோம். இப்படி, இவ்வளவு காற்றாலைகள் அமைத்துங்கூட, கோடைக் காலத்திலே காற்று வரவில்லையே தவிர, மீதி நேரத்தில் நமக்குத் தேவையான காற்று வீசி, மின்சாரம் மிச்சமாக இருக்கின்ற காரணத்தினால்தான், நாம் விற்பனை செய்கிறோம். இதை இன்னும் ஊக்குவிப்பதற்காக, 5,000 மெகா வாட் வரையிலே காற்றாலைகளை அமைப்பதற்கான ஒரு திட்டத்தையும் தமிழக அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவிக்க விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள், solar energy-யிலே நீங்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று சொன்னார்கள். அது நூற்றுக்கு நூறு உண்மை. வருடத்திலே 365 நாட்களிலே 350 நாட்களுக்கு சூரிய வெளிச்சம் இருக்கின்ற நாடு இந்தியாதான். மீதி நாடுகளிலே இவ்வளவு சூரிய வெளிச்ச நாட்கள் கிடையாது. இதை நாம் பயன்படுத்த வேண்டுமென்று நினைக்கின்ற நேரத்தில், ஒரு மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய, 21 கோடி ரூபாய் செலவாகிறது. அதற்காகத் தலைவர் கலைஞர் அவர்கள், நம்முடைய T.E.D.A. Chairman அவர்களையும், ஒரு தலைமைப் பொறியாளரையும் இரண்டு நாடுகளுக்கு அனுப்பி வைத்தார்கள். ஸ்பெயின், ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கே மட்டும் எப்படி மின்சாரத்தை மலிவாக சூரிய ஒளிமூலம் உற்பத்தி செய்கிறார்கள், இங்குமட்டும் ஏன் அவ்வளவு செலவாகிறது என்று அங்கேபோய் ஆராய்ச்சி செய்துவிட்டு வாருங்கள் என்றார்கள். அங்கேபோய் வந்ததனுடைய பயனாக, இப்பொழுது உங்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன், ஸ்பெயின், ஜெர்மனி ஆகிய இரண்டு நாடுகளும், தேவைப்பட்டால் தமிழ்நாட்டிற்கு சூரிய ஒளியின்மூலமாக

மின்சாரத்தை உற்பத்திச் செய்ய, ஒரு மெகா வாட் மின்சாரத்தை 14 கோடி ரூபாய்க்கு உற்பத்தி செய்து தருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் கேட்கலாம், 14 கோடி ரூபாய் மூலதனம் போட்டு, உற்பத்திச் செய்ய யார் முன்வருவார்கள் என்று. Solar energy என்று சொன்னால், ஒரு மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய 14 கோடி ரூபாய் மூலதனம் என்று சொன்னால், மூலதனம் செய்ய பலபேர் தயாராக இருக்கிறார்கள். யார், யார் காற்றாலைகளை அமைத்திருக்கிறார்களோ, அவர்களிடத்திலே இலட்சக்கணக்கான ஏக்கர் நிலம் இருக்கிறது. சூரிய ஒளிமூலம் நாம் மின்சாரத்தைத் தயாரிக்க வேண்டுமென்றால், Photo-voltaic கருவி இருக்க வேண்டும். அந்தப் பொருட்களை அவர்கள் பூமிக்கடியிலே போட்டுத்தான் அந்த செல்கள்மூலமாக, மின்சாரத்தை உற்பத்திச் செய்யவேண்டும். ஆகவே, அப்படி உற்பத்திச் செய்வதற்கு ஒரு மெகா வாட்டிற்கு 14 கோடி ரூபாய் என்றால் நாங்கள் 50 மெகா வாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யத் தயாராக இருக்கிறோம் என்று சில நிறுவனங்கள் இப்பொழுது நம்மை அணுகியிருக்கின்றன. இதற்குக் காரணம், மத்திய அரசாங்கமே தற்போது ஒரு முடிவிற்கு வந்திருக்கிறது. Solar energy-ஐ நாம் ஊக்கப்படுத்த வேண்டுமென்று சொல்லி, ஒவ்வொரு மாநிலத்திற்கும் 10 மெகா வாட் வரையிலே Solar energy-ஐ உற்பத்தி செய்து பயன்படுத்துவார்களானால் அவர்களுக்கு ஒரு யூனிட்டிற்கு 12 ரூபாய் மானியமாகத் தருகிறோம். மாநிலங்கள் மூன்று ரூபாய் போட்டுக்கொள்ளுங்கள். 15 ரூபாய்க்கு ஒரு யூனிட் மின்சாரத்தை வாங்கினால் Solar energy உற்பத்தி செய்கின்றவர்கள் உற்சாகத்தோடு வருவார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சலுகையை 10 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து மத்திய அரசாங்கம் வழங்கும் என்றும் வாக்குறுதி தந்திருக்கிறார்கள். இந்த அடிப்படையிலேதான் பல Solar energy கம்பெனிகள் மின்சாரம் தயாரிப்பதற்குத் தமிழகத்திற்கு வந்து கொண்டிருக்கின்றன என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

*பிற்பகல் 1-10*

Transmission Corporation-ஐப் பொறுத்தவரையில், நான் ஏற்கெனவே சொன்னேன். அதிலே, 66 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் எங்கிருக்கிறதோ, 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் எங்கிருக்கிறதோ, 220 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் எங்கிருக்கிறதோ, அவை எல்லாவற்றையும் சேர்த்துதான் அந்த



Corporation-க்குக்கீழே கொண்டு வர இருக்கிறோம் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அ.தி.மு.க.-காரர்கள், ஏதோ அவர்களுடைய ஆட்சியிலேதான் அனல் மின் திட்டங்களுக்கெல்லாம் பரிசுகள் வாங்கினோம் என்று சொன்னார்கள். தி.மு.க. ஆட்சியிலும் மேட்டூர், வடசென்னை, தூத்துக்குடியில் 85 PLF-தான் இருக்கிறது. அதற்குமேலே யார் உற்பத்திச் செய்தாலும், விருதுகள் தருகிறோம் என்று மத்திய அரசாங்கம் ஒவ்வோர் ஆண்டும் அறிவிக்கிறது. அதனால், நம்முடைய வாரியம் தமிழகத்திலே உள்ள வடசென்னை, மேட்டூர், தூத்துக்குடி ஆகிய அனல் மின் நிலையங்களிலே மிக அதிக அளவில் உற்பத்தி செய்து 91 PLF வரை எட்டி சாதனை செய்துள்ளது. அதற்காக சில விருதுகளையும் பெற்றுக் கொண்டிருக்கிறது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மின் வாரிய ஊழியர்களைப் பொறுத்தவரையிலே நான் மகிழ்ச்சியோடு சொல்ல வேண்டுமென்றால், ஒப்பந்தப் பணியாளர்கள். ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரம் ஆக்க வேண்டும் என்று இங்கேகூட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். முதன் முதலிலே 2000-2001-லேயே தமிழகத்தில் இருக்கக்கூடிய எல்லா அனல் மின் நிலையங்களிலும் பணியாற்றிய 10,000 Contract worker-களை நிரந்தரம் ஆக்கிய அரசு கலைஞருடைய அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய சிவபுண்ணியமோ அல்லது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் யாராவது இருந்தால்கூட தயவுசெய்து மன்னித்துக் கொள்ள வேண்டும், கேரளாவிலோ அல்லது West Bengal-லிலோ, திரிபுராவிலோகூட—Contract labourers யாரும் நிரந்தரம் செய்யப்படவில்லை. ஏனென்று கேட்டால், உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பு கொடுத்தது. Contract labour என்பவன் அந்த நிறுவனத்திலுடைய நிரந்தரத் தொழிலாளி அல்ல. யாருக்கோ Contract செய்வதற்காக அவன் பணிக்கு வந்தான். அவனை நிரந்தரம் செய்யத் தேவையில்லையென்று தீர்ப்பு கொடுத்துள்ளது. ஆனால், அதையும் மீறி மனிதாபிமான அடிப்படையில் நாம் நிரந்தரம் செய்தோம்.

அதுமட்டுமல்ல, இப்பொழுது என்ன சொன்னார்களென்றால், விநியோகப் பிரிவிலே (distribution side) பணியாற்றுகிறார்களே அவர்களையும் நிரந்தரம் செய்ய வேண்டுமென்ற குரல் எழுப்பப்பட்டு,

கடந்த ஆண்டு நான் அறிவித்ததைப்போல ஓர் ஆண்டுக்கு 6,000 பேர் என்று சொல்லி, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய 21,600 ஒப்பந்தத் தொழிலாளர்களையும் கலைஞர் அரசு நிரந்தரம் செய்யப்போகிறது. இப்பொழுது 12,000 பேரை நிரந்தரம் செய்துவிட்டோம். மீதம் இருப்பவர்களை அடுத்த ஆண்டிற்குள்ளாக நிரந்தரம் செய்துவிடுவோம் என்ற அந்த மகிழ்ச்சியான செய்தியையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய சட்டசபையிலே எப்படி கலைஞர் அவர்களுக்குப் பொன்விழா எடுத்தோமோ அதைப்போல, தமிழ்நாடு மின்சார வாரியத்திலேயும் ஒரு பொன்விழா கொண்டாடினோம். கலைஞர் எப்பொழுது சட்டசபைக்கு வந்தாரோ அப்பொழுதுதான் தமிழ்நாடு மின்சார வாரியமே உதயமானது. நம்முடைய முதலமைச்சர் கலந்து கொண்டார். நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் முன்னிலை வகித்தார். அந்த விழாவிலே நம்முடைய முதலமைச்சர் அறிவித்தார். இந்தப் பொன்விழா ஆண்டையொட்டி தமிழ்நாடு அரசு மின்சார வாரியத்திலே பணியாற்றக்கூடிய சுமார் 80,000 தொழிலாளர்களுக்கும் ஆண்டுக்கு ஒருமுறை increment கொடுப்பது போல—இந்த விழாவையொட்டி தனியாக ஒரு increment உங்கள் அனைவருக்கும் கொடுக்கிறேன் என்று அறிவித்தார்கள். அதுமட்டுமல்லாமல், ஒவ்வொருவருக்கும் 1,000 ரூபாயை ரொக்கப் பரிசாக அறிவித்துள்ளார்கள். மின்வாரிய ஓய்வூதியதாரர்களுக்கும் இதுபோல ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது. அதுமட்டுமல்ல, அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே 5 வருடங்களுக்கு ஒரு முறை என்று இருந்த சம்பள விகிதங்களின் மாற்றத்தை இப்பொழுது 4 வருடங்களுக்கு ஒருமுறை என்று மாற்றி, சங்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்தி, அதற்கான ஒரு குழு அமைத்து, இந்த ஆண்டே அந்தச் சம்பள விகிதங்களையும் மாற்றித் தருவதற்கான ஏற்பாட்டைச் செய்துகொண்டிருக்கிறோம் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இந்த அளவிற்கு இந்தத் துறை மிகச் சிறப்பாகச் செயல்படுவதற்குக் காரணம் எரிசக்தித் துறைச் செயலாளர் மின் வாரியத் தலைவர், உறுப்பினர்கள், பொறியாளர்கள், பணியாளர்கள் அத்தனைபேரும் சேர்ந்துதான் இந்தத் துறையை இப்படி உற்சாகமாக ஊக்குவித்துக் கொண்டிருக்கிறார்களே தவிர, ஒரு முதலமைச்சர், ஒரு மின்சாரத் துறை அமைச்சர் மட்டும் இதைச் செய்யவில்லை.



நாங்கள் இதையெல்லாம் அறிவிக்கின்றோம். அவர்கள் சொல்வதை நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம். கேட்கின்ற பணத்தைக் கொடுக்கின்றோம். ஆனால், இதையெல்லாம் நிறைவேற்றுவது அந்த வாரியத்தினுடைய தலைவரும், உறுப்பினர்களும், பொறியாளர்களும் மற்றும் தொழிலாளர்களும்தானே தவிர, வேறு யாரும் அல்ல. அவர்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியையும், பாராட்டுதல்களையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-15

இந்த மானியக் கோரிக்கைக்கு 454 பேர் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருந்தீர்கள். நான் கொடுத்த விளக்கத்தை ஏற்றுக்கொண்டு அந்த 454 வெட்டுத் தீர்மானங்களையும் தயவு செய்து நீங்கள் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இன்னும் நீங்கள் ஏதாவது கேட்டால்கூட, அப்போதைக்கப்போது கேள்வி நேரத்திலேகூட, கேட்பதையெல்லாம் கொடுத்துக்கொண்டிருக்கின்றேன். இன்னும் ஏதாவது வேண்டுமென்று சொன்னாலும்கூட, அதையும் செய்து தர தயாராக இருக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நிர்வாகச் சீர்திருத்தத் துறை குறித்து, மாண்புமிகு உறுப்பினர்களில் ஒருசிலர் இங்கே பேசினார்கள். அதைப் பற்றியும் நான் இங்கே சில விளக்கங்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தப் பணியாளர்கள் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையைப் பொறுத்தவரையில் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன், கடந்த ஆட்சியிலே அரசாங்க ஊழியர்கள் பட்டபாட்டை யாரும் மறக்க முடியாது. இந்த ஆட்சி மாற்றம் ஏற்பட்டதற்கு கலைஞருடைய முயற்சி, அறிவு, ஆற்றல், திறமை அத்தனையும் 100-க்கு 99 சதவிகிதமாக இருந்தாலும், அதிலே 1 சதவிகிதமாவது, அரசாங்க ஊழியர்கள்தான் காரணம் என்பதை இந்த அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் இந்த அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்டவுடனே, TESMA-வை இரத்துச் செய்தோம். அதுமட்டுமல்ல, ஐந்து ஆண்டு காலம் தேர்வாணையத்தைப் பூட்டி வைத்தார்கள். ஒரு ஆளைக்கூட நியமனம் செய்யவில்லை. ஆனால், இந்த அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்டவுடனே அதற்குத் தலைவரை நியமித்தோம். (குறுக்கீடு) அவர் சொல்வதைப்போல, அவர்கள் கட்சியைச் சேர்ந்த 8 பேரை உறுப்பினர்களாகப் போட்டார்களே தவிர, தலைவரைக்கூட

நியமிக்கவில்லை. ஆனால், இந்த ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்டவுடனே திரு. காசி விஸ்வநாதன் என்ற ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியைத் தலைவராக ஆக்கி, 14 பேரை உறுப்பினர்களாக நியமித்து, இன்றையதினம் எல்லாத் துறைகளுக்கும் வேண்டிய பணியாளர்களை அந்தத் தேர்வாணையம் நியமனம் செய்து கொண்டிருக்கின்றது என்று நான் உங்களுக்கு மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்கிறேன், இந்த ஆட்சி பொறுப்பேற்றுக்கொண்ட 2006 மே 13 ஆம் தேதிக்குப் பிறகு, 2,32,417 பேர்களுக்கு புதிதாக வேலையை உருவாக்கித் தந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஒவ்வொரு துறை வாரியாகக் கேட்டால்கூட என்னிடத்திலே விவரம் இருக்கிறது. ஆனால், நேரத்தைக் கருதி நான் அதை முழுமையாகச் சொல்ல விரும்பவில்லை. இவ்வளவு இலட்சக்கணக்கானவர்களுக்கு, இரண்டு ஆண்டு காலத்திலே இந்தப் பணிகளைச் செய்ய முடிந்திருக்கிறது என்றால் அது கலைஞருடைய தயாள உள்ளமே தவிர, வேறு ஒன்றும் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, ஓய்வு பெறுவதற்கு 33 ஆண்டுகள் சர்வீஸ் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். கலைஞர் பார்த்தார். 33 ஆண்டுகள் வேண்டியதில்லை. 30 ஆண்டுகள் நீங்கள் வேலை செய்திருந்தாலே அந்த முழுப் பலனும் உங்களுக்கு கிடைக்கும் என்று சொல்லி, அதையும் செய்து கொடுத்தார்கள்.

அதுமட்டுமல்ல, பறிக்கப்பட்ட சலுகைகள் அனைத்தையும் திருப்பிக் கொடுத்தார். பல சங்கங்களுடைய பெயர்ப் பலகைகள்கூட கிடையாது. எப்படி மிசா காலத்திலே வாய்ப்பூட்டுச் சட்டம் போடப்பட்டதோ அதைப்போல ஒரு சட்டம், கொடுமையான சட்டம், கடந்தகால ஆட்சியிலே இருந்தது. அந்தப் பணியாளர்கள் இன்று மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், ஜனவரி மாதம் 1 ஆம் தேதி, 41 சதவிகிதமாக இருந்த D.A.-வை 47 சதவிகிதமாக முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலேயே உயர்த்திக்காட்டி, அந்தச் சலுகைகள் உங்கள் அத்தனைப் பேருக்கும் கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, மத்திய அரசின் ஆறாவது சம்பளக் கமிஷன் அறிக்கை வந்தவுடன், அதையும் பரிசீலனை செய்து, அரசாங்க ஊழியர்களுக்கு எதைச் செய்ய முடியுமோ, அதையெல்லாம் இந்த அரசு செய்யும் என்று சொல்லியிருக்கிறார்கள் என்றால், அரசாங்க ஊழியர்கள்மீது இந்த அரசு எந்த அளவிற்கு அக்கறை நம்பிக்கை வைத்திருக்கிறது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.



அதுமட்டுமல்ல, நாம் தீட்டுகின்ற திட்டங்களை, கிட்டத்தட்ட 60 ஆயிரம் கோடி ரூபாய்க்கு நிதிநிலை அறிக்கையிலே நாம் செலவிடப் போகிறோம் என்று அறிவித்திருக்கின்றோம். அதை மக்கள் மத்தியிலே கொண்டுபோய் சேர்ப்பது யார்? அரசாங்க ஊழியர்கள்தான். அதனால்தான், அரசாங்க ஊழியர்களுடைய பிரச்சினை எதுவாக இருந்தாலும் இங்கே இருக்கக்கூடிய எல்லா அமைச்சர்களுக்கும், தலைவர் கலைஞர் அவர்கள் இட்டிருக்கின்ற ஆணை, பணியாளர்ககள் பிரச்சினையை காது கொடுத்துக் கேளுங்கள். அதிலே இருக்கக்கூடிய உண்மைகளை எடுத்துச் சொல்லுங்கள். உங்களாலே தீர்க்க முடியாவிட்டால் என்னிடத்திலே வந்து சொல்லுங்கள், நான் அதற்குத் தீர்வு காண்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள் என்றால், அரசாங்க ஊழியர்கள்தான் இந்த அரசாங்கத்தினுடைய முதுகெலும்பு என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-20

அதுமட்டுமல்ல, இந்தத் துறையிலேகூட மின்னணு ஆளுகை அமல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு துறையிலேயும் தபால்கள் கொடுப்பதிலே இருந்து, G.O.-க்கள் வெளியிடுவதிலிருந்து இதுவரையிலே நாம் எப்படி செய்து கொண்டிருந்தோம் என்றால், அவரவர்களுடைய computer-களில் கொடுத்த அதன் copy இருக்கும். இனிமேல், அப்படி இல்லை. இந்த அரசாங்கத்திலே பிறப்பிக்கின்ற G.O.-க்கள் எதுவாக இருந்தாலும், அதையெல்லாம் காஷ்மீரிலிருந்து, கன்னியாகுமரியிலிருந்து, ஏன் அமெரிக்காவிலிருந்துகூட அந்த G.O.-விலே என்ன போட்டிருக்கிறார்கள் என்று தெரிந்துகொள்ளக்கூடிய அளவிற்கு இணைய தளத்தில் வெளியிட்டு வருகிறோம் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தேர்வாணையத்தைப் பொறுத்தவரையிலே, நான் சொல்லி இருந்தாலும்கூட, இன்னமும் பல துறைகளிலே தேர்வாணையத்தின் மூலமாக ஆட்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அவர்களையெல்லாம் இந்த ஆண்டே தேர்ந்தெடுப்பதற்கான எல்லா முயற்சிகளையும் செய்து கொண்டிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்மூலமாக, இதற்கு முன்னாலே தகவல் பெற வேண்டுமென்றால் 50 ரூபாய் என்று இருந்தது. ஒருநாள், முதல்வர் அவர்கள் கூப்பிட்டார்கள், எதற்காக இதற்கு 50 ரூபாய் என்று வைத்திருக்கிறீர்கள் என்ற கேட்டார்கள். இல்லை, இல்லை, அதற்காக அதிகாரிகள் எல்லாம் வேலை செய்ய வேண்டும், நிறைய வேலை இருக்கிறது என்றேன். ஏழை ஒருவன் தகவல் பெற வேண்டும் என்று நினைத்தால், 10 ரூபாய் கட்டி ஒரு விண்ணப்பம் போட்டால் போதும், உடனே அவர் கேட்கின்ற தகவலைக் கொடுங்கள் என்று ஆணை பிறப்பித்தது நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் அதற்காக ஒரு நீதிபதியையும் நியமித்து அந்தப் பணிகளும் செம்மையாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. உறுப்பினர்கள் எல்லாம் அதிலே மிகச் சிறப்பாகப் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

இதுவரையிலே, இந்த மாநிலத்தில் இஸ்லாமியர்களுக்கும், கிறித்துவர்களுக்கும் தனியாக இட ஒதுக்கீடு கிடைக்காமல் இருந்தது. பல ஆண்டு காலமாகப் போராடினார்கள். ஆனால், முதல்வர் கலைஞர் அவர்கள்தான் துணிந்து, மூன்றரை சதவிகிதம் இஸ்லாமியர்களுக்கும், மூன்றரை சதவிகிதம் கிறித்துவர்களுக்கும் இட ஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவித்தார்கள். அது எப்படி முடியும் என்று சில பேர் கேட்டார்கள்; நீதிமன்றம் அனுமதிக்குமா என்று கேட்டார்கள். ஆந்திராவிலே, உச்ச நீதிமன்றம் மறுத்து விட்டதே என்று சொன்னார்கள். ஆனால், கலைஞர் அவர்கள் ஆந்திராவைப்போல் செய்யவில்லை. இங்கே இருக்கக்கூடிய பின்தங்கிய வகுப்பினர் இட ஒதுக்கீட்டிலே இவர்களும் ஏற்கெனவே இருக்கிற காரணத்தாலே, மக்கள் தொகை அடிப்படையிலே கணக்குப் போட்டு, மூன்றரை சதவிகிதம் இஸ்லாமியர்களுக்கும், மூன்றரை சதவிகிதம் கிறித்துவர்களுக்கும் என்று இட ஒதுக்கீடு செய்த காரணத்தாலே ஒருவர்கூட நீதிமன்றம் போகவில்லை என்பதோடு பலரும் இப்போது சர்வீஸ் கமிஷன்மூலமாகத் தேர்வு எழுதி, மூன்றரை சதவிகிதம் இட ஒதுக்கீடு அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசு அலுவலர்கள், ஆசிரியர்களுக்காக எல்லா நலத் திட்டங்களையும் நாம் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னாலும்கூட, இங்கே 1-1-2008 முதல் 41 சதவிகிதத்திலிருந்து 47 சதவிகிதம் அகவிலைப்படியை உயர்த்திக்கொடுக்கப் போகிறோம் என்று



சொன்னாலும்கூட, சம்பள கமிஷன் அறிக்கை வந்தவுடனே நாம் சொன்னதைப்போல, முதலமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்கள், அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பணியிடங்களைப் பொறுத்தவரையிலே, ஒன்றை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். ஏற்கெனவே 1996-லிருந்து 2001 வரையில் backlog எவ்வளவு இருக்கிறது என்று முதன்முதலில் கண்டுபிடித்தவரே கலைஞர்தான். அப்போது பல இடங்களிலே காலியிடங்கள் இருந்தன, அவை நிரப்பப்படாமல் இருந்தன. அப்போது திரு. கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ.-ஆக இருந்தார். அவர் இதுகுறித்து கேட்டார், அமைச்சரவை கூடிற்று, அந்த இடங்களையெல்லாம் நாங்கள் நிரப்புகிறோம் என்று சொன்னோம். நிரப்பிக் கொண்டே வந்தோம், இடையிலே ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. நான் பெருமைக்காகச் சொல்லவில்லை, ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, அந்த *5 ஆண்டு காலத்திலே ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடியினர்களுக்கும் ஒரேயொரு இடத்தில்கூட backlog பணியிடத்தில் நியமனம் செய்யவில்லை. ஆனால், இப்போது தலைவர் என்ன ஆணையிட்டிருக்கிறார் என்றால், அந்த backlog vacancies பற்றிய விவரங்களை எல்லாம் எடுங்கள், எந்தெந்த இடங்களிலே அவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்து தர வேண்டுமோ, அந்த இடங்களில் ஒதுக்கீடு செய்யுங்கள். தகுதி படைத்தவர்கள் அத்தனைபேருக்கும் promotion கொடுங்கள்; அதன்மூலமாக அந்தச் சமுதாயம் முன்னேறட்டும், அதன்மூலம் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகள் அல்லது உரிமைகளைப் பெறட்டும் என்று சொல்லி அதையும் ஆணையாகப் பிறப்பித்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நிர்வாகச் சீர்திருத்தக் குழு என்ற ஒன்று நியமிக்கப்பட்டு நீதிபதி டாக்டர் ஏ.கே. இராஜன் தலைமையிலே 10 பேர் கொண்ட உறுப்பினர்களை நியமித்து, ஒரு செயலாளரை நியமித்து, அதன்மூலமாக அரசுக்கு விரைவிலே ஓர் அறிக்கை தரக் கேட்டிருக்கிறார்கள்.

முதல் அறிக்கையை விரைவில் கொடுக்க இருக்கின்றார்கள். தொடர்ந்து இன்னோர் அறிக்கையைக் கொடுத்தால், அந்த நிருவாக சீர்திருத்தக் குழுவினுடைய முழு அறிக்கையும் கிடைக்கும். அது

கிடைத்தவுடன் இன்னும் இந்த நிருவாகம் மிகச் சிறப்பாக நடைபெறுவதற்கு இந்த அரசு எல்லாதவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

*பிற்பகல் 1-25*

குறிப்பாக பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையிலே Anna Institute of Management என்ற ஒன்று இருக்கிறது. இதைப்பற்றி பலருக்குத் தெரியாது. இங்கே இருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் திரு. துரைமுருகன், நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர், இப்படி சிலபேருக்கு அதுபற்றித் தெரியும். அது அமைச்சர்கள் குடியிருக்கின்ற அந்தப் பகுதியில்தான் இருக்கின்றது. அங்கே போய் பார்த்தால், வெளிநாட்டிலேகூட அப்படி ஒரு Institute இருக்காது. அவ்வளவு அருமையான Institute இருக்கிறது. ஐ.ஏ.எஸ். படித்தவர்கள், மற்றவர்களுக்கெல்லாம் அங்கே பயிற்சி கொடுக்கின்றோம். இப்பொழுது ஐ.ஏ.எஸ். தேர்வு எழுதவேண்டுமென்று சொன்னால்கூட, தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர்களுக்கெல்லாம் பயிற்சி கொடுக்கின்றோம். Anna Institute of Management-லே அப்படி பயிற்சி கொடுத்ததிலே, நான் மகிழ்ச்சியோடு சொல்கின்றேன், 200 பேருக்குப் பயிற்சி கொடுத்தோம், முதற்கட்டத் தேர்விலே 54 பேர் இந்த ஆண்டு தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால் (மேசையைத் தட்டும் ஒலி) எந்தக் காலத்திலே பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிட இளைஞர்களுக்கு ஐ.ஏ.எஸ். தேர்வில் தேர்ச்சி கிடைப்பதற்கு இதுவரையிலே முயற்சி எடுத்தார்கள் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

அதுமட்டுமல்ல, தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள், இதுமட்டும் செய்தால் போதாது, இன்னும் நம்முடைய அரசாங்கத்திலே பணியாற்றக்கூடியவர்களுடைய திறமையை மேம்படுத்த, M.B.A. படித்தவர்களைப்போல, I.I.M. Institute-லே படித்தவர்களைப்போல, இவர்களுக்கெல்லாம் பயிற்சி கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். அதற்காக Anna Institute of Management-லே ஒரு பிரிவு திறக்கப்பட்டு, ஏப்ரல் மாதத்திலேயிருந்து ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற அதிகாரிகளெல்லாம் போய் அங்கே பயிற்சி எடுத்துக்கொள்ளலாம். அங்கே பயிற்சி பெற்றால் என்ன



பலன் என்று கேட்டால், அவர்கள் பணித் திறன் மேலும் அதிகரிக்கும். தவிர, அவர்கள் ஓய்வு பெற்றதற்குப் பிறகு, தமிழ்நாட்டிலே இப்பொழுது நிறைய கார்ப்பரேட் நிறுவனங்கள் வந்துகொண்டிருப்பதால், எப்படி 13 புதிய தொழிற்சாலைகள் வந்ததோ, அதைத் தொடர்ந்து கார்ப்பரேட் நிறுவனங்கள் வந்துகொண்டிருப்பதால், இங்கே ஓய்வு பெற்றுவிட்டு, ஓர் ஐ.ஏ.எஸ். அதிகாரி அந்த நிறுவனங்களிலே வேலைக்குச் சென்றால், குறைந்தது 2 இலட்சம் ரூபாய் சம்பளம் பெறலாம். இதே நிலையில் கலைஞர் அவர்கள் இன்னும் ஐந்தாண்டுக் காலம், ஆறு ஆண்டுக் காலம் இன்னொரு முறை முதலமைச்சராக வருவாரானால், நான் உறுதியாகச் சொல்கின்றேன், எந்த ஐ.ஏ.எஸ். அதிகாரியும் 55 வயதிற்குப் பிறகு அரசாங்கத்தில் பணியாற்றமாட்டார்கள். அவரவர்கள் voluntary retirement எழுதிக் கொடுத்துவிட்டு, நமக்கு 20 ஆண்டுகள் சர்வீஸ் முடிந்துவிட்டது, அரசாங்கம் கொடுக்கும் பென்ஷன் போதும், எங்கேயாவது கார்ப்பரேட் கம்பெனியில் வேலை செய்யலாம், அதற்கான பயிற்சியை Anna Institute of Management-ல் கொடுக்கிறார்கள் என்று அந்தப் பயிற்சியைப் பெற்று அதன்மூலமாக அவர்கள் பல நிறுவனங்களுக்குச் செல்ல முடியும். தமிழ்நாட்டிலே மட்டுமல்ல, வெளிநாட்டிலே போய்கூட அவர்கள் வேலை செய்ய முடியும். வெளிநாட்டிற்குச் சென்றால் 5 இலட்சம் ரூபாய் வரை சம்பளம் கிடைக்கும். தமிழ்நாட்டில் அவர்கள் பணியாற்ற விரும்பினால் குறைந்தது, 2 முதல் 3 இலட்சம் ரூபாய் வரையில்கூட சம்பளம் கிடைக்கும். அப்படிப்பட்ட நல்ல எதிர்காலத்தை தமிழகத்தில் இருக்கக்கூடிய அதிகாரிகளுக்கும், மற்றவர்களுக்கும் உருவாக்குவதற்காக Anna Institute of Management என்ற நிறுவனம் மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. (குறுக்கீடு) இங்கே இருக்கின்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை அனுப்பிவிட்டால் நாம் என்ன செய்வது என்று கேட்கிறார்கள். அவர்கள் சென்றுவிட்டால், அடுத்து அவர்களுக்குக் கீழே இருக்கின்றவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். அவர்களுக்கும் ஒரு வாய்ப்பு கிடைக்கிறது. இதனால் நமக்கு வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கும். பலபேருக்கு நல்ல எதிர்காலம் விளையும். எனவே இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை கலைஞருடைய ஆட்சியில் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு சொல்கின்ற நேரத்தில், 'இதையெல்லாம் செய்யும் துறை P. & A.R.' அந்தத் துறைமூலம் தான் கடந்த ஆட்சியிலே செய்ததுபோல 12 இலட்சத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்களுடைய பிரச்சினையில்

அவர்களுக்கு increment cut செய்ய வேண்டுமா? அவர்கள்மீது விசாரணை வேண்டுமா? அவர்களைத் தண்டிக்க வேண்டுமா என்றால் அதற்கு இந்தத் துறைதான். ஆனால் கலைஞர் என்ன செய்தார் தெரியுமா?

ஒரு பணியாளர் 30 ஆண்டுக் காலம், 33 ஆண்டுக் காலம் பணியாற்றிவிட்டு, ஓய்வு பெறுகின்ற கடைசி நாளிலே அவர்மீது குற்றச்சாட்டுகள் நிலுவையிலிருந்தால் அவரை suspension செய்து ஆணையிடுவார்கள். இதற்காக அமைச்சரவையைக் கூட்டி ஒரு முடிவெடுத்தார்கள். இனிமேல் எந்த அரசாங்க ஊழியனும் ஓய்வு பெறும் கடைசி நாளன்று தற்காலிகப் பணி நீக்கம், (suspension) செய்யப்படக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) அவன் ஓய்வுபெற்று வீடு செல்கின்ற நேரத்திலே மனைவியும், மக்களும் மகிழ்ச்சியோடு வரவேற்க வேண்டுமே தவிர, கண்ணீரும் கம்பலையுமாக வரவேற்கக்கூடாது. எனவே, அவர்கள்மீது ஏதாவது புகார் இருந்தால், retire ஆவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னாலேயே ஒரு முடிவு எடுங்கள். அதை விட்டுவிட்டு, retire ஆகிற அந்த நாளிலே போய், அவர்களை suspension செய்யாதீர்கள் என்று உத்தரவு போட்டார். அதை இந்த அரசு பின்பற்றுகிறது. எனவே, எதிர்காலத்தில் அரசு ஊழியர்கள் ஓய்வு பெறுகின்ற கடைசி நாளிலே, யாரும் கண்ணீரும் கம்பலையுமாக வீடு செல்லமாட்டார்கள். அப்படிப்பட்ட ஒரு நல்ல ஆட்சியை கலைஞர் உருவாக்கித் தந்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தனை அறிவிப்புகளுக்கும் உறுதுணையாக இருப்பது P. & A.R. என்ற இலாகா, அதனுடைய செயலாளர் மற்றும் அதிகாரிகள். அதேபோல, Anna Institute of Management-லே இருக்கக்கூடிய செயலாளர்கள், நிருவாகிகள், அத்தனை பேரும் மிகச் சிறப்பான முறையிலே பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அளவிலே என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).



நான், ஏற்கெனவே, தாங்கள் கொடுத்திருக்கின்ற வெட்டு தீர்மானங்களையெல்லாம் திரும்பப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். மீண்டும் ஒருமுறை மின்சார வாரியம் மற்றும் P. &A. R-ஐ பொறுத்த வரையில் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் திரும்பப் பெற்று கேட்டிருக்கின்ற மானிய தொகையை பெற்றுத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 14. (குறுக்கீடுகள்) வாக்கெடுப்பிற்குப் போகவேண்டும். என்ன வேண்டும்? (குறுக்கீடுகள்) சொல்லுங்கள். திரு. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையின்போது I.A.S. அதிகாரிகள் வெளிநாடுகளுக்குப் போகலாம் என்ற அளவிலே ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஏற்கெனவே, தமிழ்நாட்டைச் சேர்ந்த திறமையான I.A.S. அதிகாரிகளும், குறிப்பாகத் தமிழர்களும், இங்கு சரியான முறையில் அவர்களுக்கான, பதவிக்கு தகுந்தவாறு, பணிகளுக்குத் தகுந்தவாறு, திறமைக்குத் தகுந்தவாறு, வாய்ப்பு அளிக்காத காரணத்தால், நிறைய I.P.S. அதிகாரிகள் வெளி மாநிலங்களுக்கும், மத்தியப் பணிகளுக்கும் சென்று கொண்டிருக்கிறார்கள். I.A.S. அதிகாரிகளும் அவ்வாறு சென்று கொண்டிருக்கிற சூழ்நிலையில், தங்களுடைய கருத்து ஏற்புடையதாக இருக்குமா அல்லது வேறு ஏதாவது விளக்கம் சொல்ல விரும்புகிறார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலான I.A.S. அதிகாரிகள் ஓய்வு பெற்றதற்குப் பிறகுதான் செல்வார்கள் என்று சொன்னேன். அவர்கள் 55 வயது ஆனதற்குப் பிறகுகூட போகவேண்டுமென்று நினைத்தால் போகலாம். அவர்கள் போனதற்குப் பிறகு கீழே இருக்கின்றவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும், பதவி உயர்வு கிடைக்கும். திறமை என்பது இப்போது எல்லோருக்குமே வந்துவிட்டது. எனவே, யாருக்கும் அச்சம் தேவையில்லை. நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த வரையிலே,

இங்கே 60 வயதிலே ஒரு I.A.S. அதிகாரி எந்த அளவிற்குத் திறமை பெற்று இருக்கின்றாரோ, அதே திறமையை 55 வயதிலேயே பெற்றிருக்கக்கூடிய பல I.A.S. அதிகாரிகள் தமிழ்நாட்டிலே இருக்கின்றார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம், சொல்லுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் நெய்வேலி ஒப்பந்தத் தொழிலாளர்கள் குறித்து இங்கே ஒரு நல்ல அறிவிப்பை வெளியிட்டார்கள். மத்திய அரசாங்கத்திலும் கோரி, அதற்குரிய தீர்வை அளிப்பேன் என்று சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய பணிவான வேண்டுகோள் என்பது மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் அந்தத் தீர்வை காண்பதற்கான முயற்சியை பேரவையிலேயே அறிவிப்புமூலமாகச் செய்ய வேண்டுமென்று பணிவோடு, வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் காலையிலேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே இதுபற்றிப் பேசி இருக்கிறேன். நிச்சயமாக மாண்புமிகு மத்திய சுரங்கத் துறை அமைச்சர் தாசரி நாராயணன் அவர்களை இந்த வாரம் வரச்சொல்லி, இதே Neyveli Lignite Corporation-க்குச் சொந்தமான Guest House-லே உங்களை அழைத்து—உங்களையெல்லாம் என்றால் நீங்கள் அல்ல, தொழிற்சங்கத் தலைவர்களை அழைத்துப்பேசி, ஒரு வார காலத்திற்குள்ளாக நெய்வேலி நிலக்கரி சுரங்கத்திலே பணியாற்றக்கூடிய contract labour-கள் பிரச்சினையில் நானும் உடனிருந்து செய்துகொடுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

***திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I.T.I. முடித்துவிட்டு வேலையில்லாதவர்களுக்கு 1998-லே நீதிமன்ற ஆணைப்படி வேலை வழங்கப்படும் என்று அறிவித்து



இதுவரை அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படவில்லை. நேற்றைக்கு முன்தினம்கூட சென்னையிலே மிகப்பெரிய மறியல் போராட்டத்தை நடத்தினார்கள். I.T.I. படித்து முடித்த 50 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பில்லை. எனவே, மின்சாரத் துறையிலே அவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படவேண்டுமென்று கேட்டு, தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்கள் நல்ல பதிலைத் தரவேண்டுமென்று கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I.T.I. படித்தவர்கள் மூன்றாயிரம் பேரை இந்த ஆண்டு மின்சாரத் துறையிலே பணியமர்த்த இருக்கின்றோம். அரசாங்கத் துறையில் மட்டுமல்லாமல், கடலூரிலே கப்பல் கட்டும் தளம் வருகிறது. அங்கே மூன்றாயிரம் பேரைப் புதிதாக வேலைக்கு எடுக்கப் போகிறார்கள். இங்கே நம்முடைய காட்டுப்பள்ளியிலே ஒரு கப்பல் கட்டும் தளம் வருகிறது. அங்கே ஐந்தாயிரம் பேருக்கு வேலை கிடைக்க வாய்ப்பிருக்கிறது. தனியார் தொழிற்சாலைகள் புதிதாக வந்து கொண்டிருக்கின்றன அல்லவா, அங்கேயெல்லாம் I.T.I. படித்தவர்களைக் குறைந்தது 12,000 ரூபாய் சம்பளம் கொடுத்து நியமனம் செய்துகொண்டிருக்கிறார்கள். கலைஞர் அவர்கள் ஆட்சியைத் தொடர்ந்து தமிழகத்திலே இருக்கச் செய்தால் எல்லோருக்குமே வேலை கிடைத்துவிடும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 14—எரிசக்தித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 14-எரிசக்தித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிந்த அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் அவையில் இல்லை.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,231,16,07,000/-, மூலதனக் கணக்கில் ரூ.100,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.3,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

## (ஆ) கோரிக்கை எண் 35–பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 35 - பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிந்த அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் அவையில் இல்லை.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.37,31,67,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.15,01,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)



ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

## 4. அறிவிப்புகள்–தொடர்ச்சி

## (ஆ) பேரவை விவாதத்தில் பேச கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட நேரம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று 3-4-2008 அவையில் அ.இ.அ.தி.மு.க. உறுப்பினருக்குப் பேச 20 நிமிடங்கள் ஒதுக்கப்பட்ட நிலையில் அவர் எடுத்துக்கொண்ட நேரம் 22 நிமிடங்கள். ஆனால் ஆளுங்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒதுக்கப்பட்ட நேரம் 15 நிமிடங்கள் மட்டும்தான். அப்படி இருந்தும் பிரதான எதிர்க்கட்சி என்று தங்களுக்குப் பேசுவதற்கு அதிக நேரம் வாய்ப்பளிக்கப்படவில்லை எனக் கூறி வெளிநடப்புச் செய்திருப்பது எந்த விதத்திலும் நியாயமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2008-2009 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது 6 நாட்கள் நடைபெற்ற பொது விவாதத்தில் தி.மு.க. சார்பில் 7 உறுப்பினர்கள் 2 மணி நேரம் 21 நிமிடங்களும், அ.இ.அ.தி.மு.க. சார்பில் 9 உறுப்பினர்கள் 4 மணி 10 நிமிடங்களும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பாக 11 உறுப்பினர்கள் 3 மணி 23 நிமிடங்களும், பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக 7 உறுப்பினர்கள் 2 மணி 22 நிமிடங்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) சார்பாக 5 உறுப்பினர்கள் 1 மணி 22 நிமிடங்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக 5 உறுப்பினர்கள் 1 மணி 03 நிமிடங்களும், ம.தி.மு.க. சார்பாக 4 உறுப்பினர்கள் 43 நிமிடங்களும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பாக 2 உறுப்பினர்கள் 20 நிமிடங்களும், தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பாக ஒரு உறுப்பினர் 20 நிமிடங்களும், நியமன உறுப்பினர் 11 நிமிடங்களும் உரையாற்றி உள்ளனர். எனவே சட்டமன்றப் பிரதான எதிர்க்கட்சியான அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களுக்கு மற்ற சட்டமன்றக் கட்சிகளை விட விவாதத்தில் கலந்துகொள்ள அதிக நேரம் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

அதாவது அ.இ.அ.தி.மு.க. சார்பில் 9 உறுப்பினர்கள் 4 மணி 10 நிமிடங்கள் பேசியுள்ளனர். ஆளுங்கட்சி சார்பில் 7 உறுப்பினர்கள் 2 மணி 21 நிமிடங்கள் மட்டுமே பேசியுள்ளனர். அதாவது அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் தி.மு.க. உறுப்பினர்களைக் விடகூடுதலாக 1 மணி 49 நிமிடங்கள் பேசியுள்ளனர். பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர்களும் விவாதத்தில் கலந்து கொண்டு தங்களது ஜனநாயகக் கடமையைச் சிறப்புற ஆற்றும் வகையில் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பேசும் நேரத்தைக் குறைத்துக்கொண்டு அதைப் பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெருந்தன்மையுடன் தெரிவித்த கருத்திற்கிணங்க அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களுக்கு விவாதத்தில் பங்குகொள்ள அதிக நேரம் ஒதுக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (4-4-2008) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-39 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

- ஏதுமில்லை -

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

19. மானியக் கோரிக்கை எண் 14-எரிசக்தித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

20. தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை பற்றிய மக்கள் சாசனம், 2008. (தமிழ், ஆங்கிலம்)

21. தமிழ்நாடு மின்சார வாரியம் பற்றிய மக்கள் சாசனம், 2008. (தமிழ், ஆங்கிலம்)

22. மின் ஆய்வுத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2008. (தமிழ், ஆங்கிலம்)

23. மானியக் கோரிக்கை எண் 35-பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)



## இணைப்பு-I

[91 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க]

## மானியக் கோரிக்கை எண் 14-எரிசக்தித் துறை கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009

## தமிழ்நாடு மின்சார வாரியம்

தமிழ்நாடு மின்சார வாரியம் 1948 ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டத்தின்கீழ் 01-07-1957 அன்று நிறுவப்பட்டு மின்சார சட்டம், 2003-ன்படி தொடர்ந்து செயல்பட்டு வரும் ஓர் அமைப்பாகும். மின் உற்பத்தி, அனுப்புகை மற்றும் பகிர்மானம் ஆகியவற்றை சீரிய முறையில் மேற்கொண்டு மின் பயனீட்டாளர்களுக்கு தரமான மின்சாரத்தை வழங்குவது தமிழ்நாடு மின்சார வாரியத்தின் முதன்மையான குறிக்கோளாகும்.

29-02-2008 அன்றுள்ளபடி தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கையிருப்பில் உள்ள மொத்த மின் உற்பத்தி நிறுவு திறன் 10,122 மெகாவாட்டாகும். இதில் வாரிய மின் உற்பத்தி நிலையங்கள் 5,597 மெகாவாட், தனியார் மின் உற்பத்தி நிலையங்கள் 1,154 மெகாவாட், மத்திய மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து பங்கு 2,861 மெகாவாட், வெளிப்புற உதவியாக 335 மெகாவாட் மற்றும் பிற (தன்பயன் மின்னாக்கிகள்) 175 மெகாவாட் ஆகியவை அடங்கும். இவை தவிர தனியார் காற்றாலைகளிலிருந்து 3,693 மெகாவாட்டும், இணைமின் உற்பத்தி நிலையங்களிலிருந்து 451.6 மெகாவாட் மின்சாரமும் மற்றும் தாவரவியல் (Bio-mass) நிலையங்களிலிருந்து 104.85 மெகாவாட் மின்சாரமும் கிடைக்கப் பெறப்படுகிறது.

இதுவரை எட்டப்பட்ட உச்ச மின் தேவை 9,076 (20-02-2008) மெகாவாட்டாகும். மின்பயனீட்டு அளவின் வளர்ச்சி ஆண்டொன்றிற்கு 9 விழுக்காடாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 2007-08 நிதியாண்டின் மின் பயனீட்டளவு பிப்ரவரி 2008 வரை 60,518 மில்லியன் யூனிட்டுகளாகும். ஒரு நாளின் உச்ச பயனீடு 191.283 மில்லியன் யூனிட்டுகளாக நிதியாண்டில் எட்டப்பட்டுள்ளது.

29-02-2008 நிலவரப்படி மொத்தம் 1,193 துணை மின் நிலையங்களும், 1.61 இலட்சம் கி.மீ. மிக உயரழுத்த/உயரழுத்த மின் கம்பிகளும், 5.12 இலட்சம் கி.மீ. தாழ்வழுத்த மின் கம்பிகளும், 1.80 இலட்சம் மின் பகிர்மான மின் மாற்றிகளும் மற்றும் 192.15 இலட்சம் மின் இணைப்புகளும் உள்ளன.

**I. மின் உற்பத்தித் திறனை அதிகரித்தல்**

தமிழ்நாடு மின்சார வாரியம் பதினோராவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (2007-2012) அதனுடைய மின் உற்பத்தித் திறனை 7,808 மெகாவாட் அளவிற்கு உயர்த்தவும் அதற்குத் தக்கவாறு மின் அனுப்புகை மற்றும் மின் பகிர்மானத்தை விரிவாக்கவும் திட்டமிட்டுள்ளது.

2007-08 ஆம் ஆண்டில், வாரியத் துறையில் 95 மெகாவாட் திறன் கொண்ட வழுதூர் எரிவாயு சுழலி மின் திட்டம் இராமநாதபுரம் மாவட்டத்தில் மார்ச் 2008-ல் இயக்கி வைக்கப்படும்.

மத்தியத் துறையில், ஒவ்வொன்றும் 220 மெகாவாட் திறனுடைய இரண்டு பிரிவுகளை கொண்ட கைகா அணுமின் நிலையம் நிலை-2லிருந்து முதல் பிரிவு 06-05-2007 அன்று இயக்கிவைக்கப்பட்டு, இதிலிருந்து தமிழ் நாட்டின் பங்காக 54 மெகாவாட் மின்சாரம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கிடைக்கிறது.

2008-2009-ல் வாரியத் துறையில் பெரியார் வைகை தடுப்பணை திட்டங்கள் நிலை-1 (2X2 மெகாவாட்), நிலை-2 (2X1.25 மெகாவாட்) மற்றும் நிலை-4 ( 2X1.25 மெகாவாட்) ஆக மொத்தம் 9 மெகாவாட் அளவிற்கு இயக்கி வைக்கப்படும். மத்தியத் துறையில், கைகா அணுமின் நிலையம் நிலை-2-ன் 220 மெகாவாட் திறன் கொண்ட இரண்டாவது பிரிவும், கூடங்குளம் அணுமின் நிலையம் நிலை-1-ன் 1000 மெகாவாட் திறன் கொண்ட முதல் பிரிவும் 2008-09-ல் இயக்கி வைக்கப்படும். இதிலிருந்து தமிழ் நாட்டின் பங்காக முறையே 53 மெகாவாட் மற்றும் 463 மெகாவாட் மின்சாரம் கிடைக்கப்பெறும்.

வாரியத் துறையில் வடசென்னை அனல் மின் நிலையத்தில் 600 மெகாவாட் மின் திட்டத்தை நிறுவுவதற்காக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதே இடத்தில் மேலும் ஒரு 600 மெகாவாட் மின் திட்டம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேட்டூர் அனல் மின் நிலையத்தில் ஒரு 500 மெகாவாட் மின் திட்டத்தை இ.பி.சி. முறையில் நிறுவுவதற்காக ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.





மார்ச் 2008-க்குள் உத்தரவு வழங்கப்படும். இதை போலவே தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் 1,000 மெகாவாட் நிறுவுத் திறன் கொண்ட மின் திட்டத்தையும், எண்ணூரில் 500 மெகாவாட் திறன் கொண்ட மின் திட்டத்தையும் நிறுவுவதற்கான ஆய்த்தப் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. இதற்குண்டான ஒப்பந்தப் புள்ளிகள் விரைவில் கோரப்படும்.

கூட்டுத் துறையில் வடசென்னையில் 2X500 மெகாவாட் திறன் கொண்ட மின் திட்டத்தை நிறுவுவதற்காக உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இது தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் தேசிய அனல் மின் கழகத்தின் கூட்டுத் துறை நிறுவனமான என்.டி.இ.சி.எல். என்ற நிறுவனத்தால் செயல்படுத்தப்படும். இதே இடத்தில் மேலும் ஒரு 500 மெகாவாட் மின்திட்டம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தூத்துக்குடியில், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்துடனான 1,000 மெகாவாட் மின் திட்டத்தை நிறுவுவதற்காக இந்திய அரசின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. அனுமதி பெறப்பட்டவுடன் திட்டப்பணிகள் துவங்கப்படும். கூட்டுத் துறையில், உடன்குடியில் 2X800 மெகாவாட் திறன் கொண்ட மின் திட்டத்தை பாரத் மிகு மின் நிறுவனத்துடன் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. தமிழக அரசு திட்டம் தேர்வு செய்யப்பட்டுள்ள நிலத்திற்கு உண்டான முன் நுழைவு அனுமதிக்கான உத்தரவை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கியுள்ளது. இந்த திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பில் உள்ளது.

மாநிலத்தில் உள்ள 15 கூட்டுறவு மற்றும் இரண்டு பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் இணை மின் உற்பத்தி திறனை நிறுவி மாநிலத்தின் மின் உற்பத்தியை அதிகரிக்கவும் அரசு திட்டமிட்டுள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியம் அடுத்த இரண்டு ஆண்டுகளில் இந்த திட்டத்தில் கூடுதலாக 185 மெகாவாட் மின் திறனை அதிகரிக்க சுமார் ரூபாய் 925 கோடி முதலீடு செய்யும்.

கடற்கரையோர அனல் மின் திட்டங்களை வணிக மின் திட்டங்கள் என்ற பெயரில் நிறுவப்படுவதை தமிழ்நாடு அரசு ஊக்குவித்து வருகிறது. தமிழக அரசு, மொத்தம் 17,140 மெகாவாட் அளவிற்கு பத்து கம்பெனிகள் வணிகமுறை அனல் மின் திட்டங்கள் நிறுவுவதற்கு ஏதுவாக வசதிகள் செய்து தரும் பொருட்டு விருப்பம் கோரும் கடிதம் (letter of facilitation) அளித்துள்ளது. மேலும் சுமார் 15,000 மெகாவாட் அளவில் வணிகமுறை அனல்மின் திட்டங்கள்

[2008 ஏப்ரல் 3

அமைக்க பத்துக்கும் மேற்பட்ட நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் அரசின் தீவிர ஆய்வில் உள்ளன.

**II. மின் விநியோக நிலைமை**

வாரியத்தின் அனல், புனல், எரிவாயு மற்றும் காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களின் கடந்த ஐந்து வருட மின் உற்பத்தியின் விவரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன :

(மில்லியன் யூனிட்)

| வ. எண் | விபரம் | 2002-2003 | 2003-2004 | 2004-2005 | 2005-2006 | 2006-2007 | 2007-2008 (பிப்ரவரி) வரை |
|---|---|---|---|---|---|---|---|
| I | **வாரிய மின் உற்பத்தி** | | | | | | |
| 1 | அனல்மின் நிலையங்கள் (2970 மெகாவாட்) | 21080 | 20430 | 20004 | 18795 | 21228 | 19320 |
| 2 | புனல் மின் நிலையங்கள் (2184 மெகாவாட்) | 2724 | 2067 | 4426 | 6141 | 6292 | 6135 |
| 3 | எரிவாயு மின் நிலையங்கள் (424 மெகாவாட்) | 1107 | 1593 | 2003 | 1964 | 1944 | 1245 |
| 4 | காற்றாலை (19 மெகாவாட்) | 18 | 24 | 17 | 15 | 17 | 12 |
| | மொத்தம் (I) | 24929 | 24114 | 26450 | 26915 | 29481 | 26712 |
| II | **மின் கொள்முதல்** | 21485 | 25384 | 25895 | 29811 | 33557 | 33806 |
| | மொத்த மின் உற்பத்தி (I&II) | 46414 | 49498 | 52345 | 56726 | 63038 | 60518 |



2008 ஏப்ரல் 3]

எண்ணூர் அனல் மின் நிலையத்தின் செயல்பாடானது புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் பணிகளுக்குப்பின் சிறந்த முறையில் இயங்கி வருகிறது. 30 விழுக்காட்டிற்கும் குறைவாக இருந்த நிலைய சுமை காரணி தற்போது 2007-08-ல் 50 விழுக்காடு அளவிற்கு உயர்ந்துள்ளது.

2002-2003-ல் 6,957 மெகா வாட்டாக இருந்து உச்ச மின்தேவை படிப்படியாக 7,228 மெகா வாட் (2003-2004), 7,473 மெகாவாட் (2004-2005), 8,209 மெகா வாட் (2005-2006), 8,803 (2006-2007) மெகா வாட் என உயர்ந்து 2007-2008 ஆம் ஆண்டில் மின்தேவை 9,076 மெகா வாட்டாக இருக்கிறது. ஒவ்வொரு வருடமும் 200 முதல் 300 மெகா வாட் அளவிற்கு உயர்ந்து வந்த மின் தேவை கடந்த இரண்டு வருடங்களாக 500 முதல் 600 மெகாவாட் அளவிற்கு உயர்ந்துள்ளது.

2008-2009 ஆம் ஆண்டின் மின் தேவை 9,500 மெகா வாட்டாக இருக்கும். சராசரி மின் பயனீட்டளவு நாளொன்றுக்கு 180 மில்லியன் யூனிட்டுகளாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

மேட்டூர் நீங்கலாக 07-03-2008 அன்றுள்ளபடி நீர் இருப்பு 1218.67 மில்லியன் யூனிட்டுகளாக இருந்தது. இது கடந்த வருடம் இதே நாளில் 1,215.45 மில்லியன் யூனிட்டுகள் என்ற அளவில் இருந்தது. 2006-2007 ஆம் ஆண்டில் புனல் மின் உற்பத்தி 6,292 மில்லியன் யூனிட்டுகளாக இருந்தது. 2007-2008 ஆண்டின் இலக்கான 4,491 மில்லியன் யூனிட்களுக்கு எதிராக புனல் மின் உற்பத்தி பிப்ரவரி 2008 வரை 6,135 மில்லியன் யூனிட்களை உற்பத்தி செய்துள்ளது.

**மின் பற்றாக்குறையைப் பூர்த்தி செய்ய எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்**

**மத்திய மின் உற்பத்திக் கட்டமைப்பிலிருந்து பெறப்படும் கூடுதல் மின் பங்கீடு**

கூடுதல் மின் உற்பத்தி நிலையங்கள் அமைப்பதில் உள்ள இடர்பாடுகள் மற்றும் மத்திய அணுமின் நிலைய உற்பத்தி குறைபாட்டினாலும், இந்தியா முழுவதுமாக 15 விழுக்காடு மின் பற்றாக்குறை இருக்கும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 3

மேலும், இந்த நிலைமையைச் சீர்செய்ய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கூடுதல் மின் ஒதுக்கீடு செய்ய மத்திய மின் துறையை அணுகி உள்ளார். அதன் விளைவாக, 300 மெகா வாட் அளவிற்கு தெற்கு மண்டலத்திற்குரிய ஒதுக்கீடு செய்யப்படாத பங்கிலிருந்து மத்திய மின் துறை அமைச்சகம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 26-12-2007 முதல் மாலை உச்ச நேரத்திற்கு (18:00 நேரம் முதல் 22:00 நேரம் வரை) ஒதுக்கீடு செய்துள்ளது. பின்னர் இது 200 மெகா வாட்டாக 19-01-2008 முதல் குறைக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழக மின்சார வாரியம் SWAP முறையை பின்பற்றி பஞ்சாப், மத்திய பிரதேசம், மேற்கு வங்காளம் மற்றும் ஜம்மு காஷ்மீர் மாநிலங்களிலிருந்து மின்சாரத்தை பெற்று வருகிறது. அவை ஜூலை மற்றும் ஆகஸ்டு மாதங்களில் திருப்பி கொடுக்கப்படும். இதுபோன்று தமிழ்நாடு மின்சார வாரியத்தால் மற்ற மாநிலங்கள் / மின் வணிகர்களிடமிருந்தும் மின்சாரம் கொள்முதல் செய்யப்படுகிறது.

இந்நிலையில், மின் நுகர்வோர்க்கு மிக குறைந்த இடர்பாடுகளுடன் கூடிய மின் தேவை மேலாண்மை தமிழகத்தில் நடைமுறை படுத்தப்பட்டுள்ளது. உச்ச மின் தேவையைக் குறைப்பதற்காக கீழ்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:

(அ) தொழிற்சாலைக்கான விடுமுறை நாட்களை முறைவைத்தளிப்பதன் மூலம்

(ஆ) தன்பயன் மின்னாக்கிகளை (captive sets) உச்ச கட்ட நேரத்தில் பயன்படுத்துவதன் மூலம்

## III. மின் தொடர் மற்றும் மின் பகிர்மான மேம்பாட்டுத் திட்டங்கள்

பதினோராவது திட்டக் காலத்தின் (2007-2012) திட்ட மதிப்பீடு ரூ.21,159.14 கோடியாகும். 2008-2009 ஆம் ஆண்டிற்கான மூலதன திட்ட மதிப்பீடு ரூ.3,460.00 கோடியாகும். வெவ்வேறு பிரிவுகளில் இப்பணிகளுக்கான திட்ட மதிப்பீடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:



2008 ஏப்ரல் 3]

(ரூபாய் கோடியில்)

| வ. எண். | விவரம் | பதினோராவது திட்ட மதிப்பீடு (2007-12). | 2008-09 ஆம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|
| 1. | உற்பத்தி | 12497.67 | 1519.61 |
| 2. | புதுப்பித்தலும், நவீனமயமாக்குதலும் | 551.47 | 66.59 |
| 3. | மின் அனுப்புகை மற்றும் மின்பகிர்மானம் | 7000.00 | 1707.44 |
| 4. | ஊரக மின்மயமாக்குதல் | 500.00 | 163.10 |
| 5. | நில அளவை மற்றும் ஆய்வுகள் | 610.00 | 3.26 |
| | மொத்தம் | 21159.14 | 3460.00 |

மின் தொடர் மற்றும் மின் பகிர்மான அமைப்பை மேம்படுத்தும் வகையில் 2007-2008 ஆம் ஆண்டில் பல்வேறு மின் அழுத்தங்களில் 75 புதிய துணை மின் நிலையங்களும் சுமார் 1,400 சுற்று கிலோ மீட்டர் மிக உயரழுத்த மின் கம்பிகளும் அமைக்கப்பட்டுள்ளது. பதினோராவது திட்டக் காலத்தில் (2007-2012) மொத்தம் 300 புதிய துணை மின் நிலையங்களை அமைக்கவும், 4,000 சுற்று கிலோமீட்டர் மிக உயரழுத்த மின்கம்பிகள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

2006-2007 ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் இழப்பானது மின் உற்பத்தி மின் விற்பனை, மற்றும் விவசாய மற்றும் குடிசை மின் இணைப்புகளுக்கான கணக்கிடப்பட்ட மின் விற்பனை ஆகியவைகளை கொண்டு 18 விழுக்காடு என்று மதிப்பிடப்பட்டது. தமிழ்நாடு மின்சார வாரியம் ஆண்டொன்றுக்கு ஒரு விழுக்காடு என்ற கணக்கில் 11-வது திட்டக்கால இறுதிக்குள் 15 சதவிகிதம் என்ற இலக்கை அடைய கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்து வருகிறது:

(அ) உயரழுத்த மற்றும் தாழ்வழுத்த விகிதத்தை உயர்த்துதல் — 0.5%

(ஆ) துணை மின் நிலையங்கள் மற்றும் மிக உயரழுத்த இணைப்பு பாதைகளை அமைத்தல் — 0.3%

[2008 ஏப்ரல் 3

| | | |
|---|---|---|
| (இ) | தாழ்வழுத்த மின் தேக்கிகளை அமைத்தல், பகிர்மான கம்பிகளை வலுவூட்டுதல் மற்றும் பழுதடைந்த மின் அளவிகளை மாற்றுதல் போன்றவை | 0.2% |

1 **விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்புத் திட்டம் (Accelerated Power Development and Reforms Programme)**

விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்பு திட்டத்தின்கீழ் பத்தாவது திட்ட காலத்தில் 2002-2003 இந்திய அரசு 25 திட்டங்களுக்கு மொத்தம் ரூபாய். 968.20 கோடிக்கு ஒப்புதல் அளித்தது. இந்திய அரசு அனுமதிக்கப்பட்ட திட்ட செலவில் 50 விழுக்காட்டிற்கு (25% கடன் மற்றும் 25% உதவி) நிதி வழங்குகிறது. மீதமுள்ள 50 விழுக்காடு ஊரக மின் மயமாக்கல் கழகத்திடமிருந்து கடனாக பெறப்படுகிறது. பின், மத்திய மின் துறை அமைச்சகம் ஆலோசனைக்குண்டான செலவுகளை தவிர்த்ததால் திட்டத்தின் மதிப்பீடு ரூபாய் 929.21 கோடியாக நிர்ணயிக்கப்பட்டது. இந்த திட்டங்கள் 6 மாநகராட்சிகள், 5 மின் பகிர்மான வட்டங்கள் மற்றும் 14 நகரங்களில் இயக்கத்தில் உள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியம் ஏறக்குறைய ரூபாய் 800 கோடியை இத்திட்டத்தின்கீழ் செலவிட்டுள்ளது. இந்த திட்டங்கள் முடியும் தருவாயில் உள்ளன. இவை 2007-08 ஆண்டில் முடிக்கப்படும்.

நகர்ப்புற பகுதிகளில் மின் இழப்பை 15 விழுக்காட்டிற்கு கீழே குறைக்கும் பொருட்டும் தகவல் தொழில் நுட்பத்தின் மூலம் மின் கணக்கு மற்றும் மின் தணிக்கை என்ற குறிக்கோள்களுடனும் இந்திய அரசு 11-வது திட்டக்காலத்திற்கு திருத்திய விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்பு திட்டத்தை கொண்டுவர இருக்கிறது. இந்த திட்டத்திற்குண்டான நிதியை வழங்கும் வழி முறைகள் இந்திய அரசின் மின் துறை அமைச்சகத்தின் தயாரிப்பில் உள்ளது. வழி முறைகளின் பெயரில் திட்டங்கள் அனுப்பப்படும்.

**2. ஊரக மின் மயமாக்கல் நிறுவனம் (Rural Electrification Corporation) உதவும் திட்டங்கள்**

ஊரக மின்மயமாக்கல் (Rural Electrification Corporation) நிறுவனம் 2003-2004 முதல் ஐந்தாண்டு திட்ட செயல்பாடாக மின் தொடர் இழப்பைக் குறைப்பதற்காக நிதி உதவி வழங்கி வருகிறது.



2008 ஏப்ரல் 3]

கீழ்க்காணும் மாவட்டங்களில் மின் தொடர் இழப்பைக் குறைக்கும் திட்டங்களுக்கு இந்த நிறுவனம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது :

| வ எண். | மாவட்டம் | திட்ட மதிப்பீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. | கோயமுத்தூர் (வடக்கு) | 87.86 |
| 2. | திருச்சி (வடக்கு) | 138.92 |
| 3. | திண்டுக்கல் | 109.35 |
| 4. | மதுரை | 75.64 |
| | மொத்தம் | 411.77 |

**3. மின் நிதிக் கழகம் உதவும் திட்டங்கள்**

மின் நிதி கழகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்களும் அதன் விவரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

| வ. எண். | ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்கள். | ஒப்புதல் அளவு. (ரூபாய் கோடியில்) | மேற்கொள்ளப்பட பணியின் விவரம். |
|---|---|---|---|
| 1. | 21 திட்டங்கள் | 260.94 | ஆவணங்கள் செயலாக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 2. | 16 திட்டங்கள் | 60.20 | 16 துணை மின் நிலையங்களை நிறுவுதல் |
| 3. | 50 திட்டங்கள் | 122.05 | 22 துணை மின் நிலையங்களை நிறுவுதல் மற்றும் 39 துணை மின் நிலையங்களில் திறன் மின் மாற்றியின் திறனை அதிகரித்தல் |

[2008 ஏப்ரல் 3

**4. இராஜீவ்காந்தி கிராமப்புற மின்மயமாக்கல் திட்டம் (Rajiv Gandhi Grameen Vidyutikaran Yojana)**

இந்திய அரசின் மின்துறை அமைச்சகம் இராஜீவ்காந்தி கிராமப்புற மின்மயமாக்கல் திட்டம் (RGGVY) என்ற திட்டத்தை கிராமப்புறங்களில் மின்கட்டுமானம் அமைத்து அனைத்து கிராமப்புறங்களில் உள்ள வீடுகளுக்கு 2012 ஆண்டுக்குள் மின்சாரம் வழங்குவதை முக்கிய நோக்கமாக கொண்டு தொடங்கி வைத்தது.

ஊரக பகுதிகளில் உள்ள அனைத்து குடியிருப்புகளையும் மின்மயமாக்கும் முகமாக தமிழ்நாட்டின் 26 மாவட்டங்களில் ரூ. 447.41 கோடி மதிப்பீட்டிலான திட்டங்களுக்கு முதல் கட்ட (அனுப்பப்பட்ட மொத்தம் 29 மாவட்டங்களில் உள்ள திட்டங்களில்) ஒப்புதல் இந்திய அரசிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

இத்திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## IV. பொது

**1. விவசாயிகள், கைத்தறி நெசவாளர்கள் மற்றும் விசைத்தறி நெசவாளர்கள், தோட்டக்கலை பயிர்கள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் கிராம மற்றும் பேரூராட்சிகளுக்கு மின்சாரம்**

(அ) விவசாய இணைப்புகளில் சாதாரண திட்டத்தில் (இலவச திட்டம்) கொடுக்கப்படும் இணைப்புகளின் இலக்கு எண்ணிக்கை 5000-த்திலிருந்து 10000-மாக உயர்த்தப்பட்டுள்ளது.

(ஆ) சுயநிதித் திட்டத்தின்கீழ் வரும் 2.4 இலட்சம் விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது.

(இ) சொந்தமாகத் தறிக் கூடம் வைத்திருந்து தாமே நெசவுத் தொழிலில் ஈடுபடும் கைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதங்களுக்கு 100 யூனிட்டுகள் வரை மின்சாரம் இலவசமாக வழங்கப்படுகிறது.

(ஈ) அதே போல சொந்தமாக தறிக் கூடம் அமைத்து தாமே விசைத்தறி இயக்கும் விசைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதங்களுக்கு 500 யூனிட்டுகள் வரை' இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது.



2008 ஏப்ரல் 3]

(உ) தோட்டக்கலை பயிர்களுக்கான மின் இணைப்புகளுக்கு கட்டண விகிதம் தற்போதுள்ள கட்டணம் V-லிருந்து IIIA-க்கு குறைக்கப்பட்டுள்ளது.

(ஊ) தெருவிளக்குகளுக்கான மின் இணைப்புகளை துரிதமாகக் கொடுக்கும் பொருட்டு ஒரு இடத்திற்கு நிலையான கட்டணமாக ரூ. 9,500 வசூலிக்க முடிவு எடுக்கபட்டுள்ளது.

(எ) உள்ளாட்சி அமைப்புகள் மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைக் கட்டணத்தின் மீது விதிக்கப்படும் அபராத வரி 13-03-2007 முதல் 12 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாக குறைக்கப்படுவதோடு, அதற்கு முன்புள்ள காலத்திற்கான நிலுவையாக உள்ள அனைத்து அபராத வரித் தொகையினையும் அரசு தள்ளுபடி செய்துள்ளது.

(ஏ) மின்கட்டணங்களுக்கான கேட்பு பெறப்பட்ட நாளிலிருந்து 20 நாட்களுக்குள் உள்ளாட்சி அமைப்புகள் முழுத் தொகையினையும் செலுத்திட வேண்டுமென்ற கால அளவு 13-03-2007 முதல் 60 நாட்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

(ஐ) கிராம ஊராட்சிகளில் உள்ள தெரு விளக்குகள் மற்றும் குடிநீர் திட்டங்களுக்கு ஒரு யூனிட்டுக்கு மின்சார கட்டணமாக யூனிட்டுக்கு 3 ரூபாய் 40 காசிலிருந்து 3 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது. அதைப் போலவே பேரூராட்சிகளுக்கு ஒரு யூனிட்டுக்கு மின்சார கட்டணமாக 3 ருபாய் 40 காசிலிருந்து 3 ரூபாய் 30 காசுகளாக குறைக்கப்பட்டுள்ளது. நகராட்சிகளுக்கும் மாநகராட்சிகளுக்கும் 3 ருபாய் 50 காசிலிருந்து 3 ரூபாய் 30 காசுகளாக குறைக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டணச் சலுகை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திற்கும் பொருந்தும்.

**2. இலவச வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகள் வழங்கும் திட்டத்தில் பயன்பெறும் குடிசைவாசிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குதல்**

மாநிலத்தில் உள்ள ஏழைக் குடும்பங்களுக்கு இலவசமாக வண்ணத் தொலைக்காட்சி பெட்டி வழங்குதல் தற்போதைய அரசின் தேர்தல் விளக்க அறிக்கையாகும். செயற்பாட்டின் முதல் கட்டமாக 30,000 குடும்பங்கள், பெருவாரியாக நீலகிரி மாவட்டத்தில் உள்ள

பழங்குடியினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நீலகிரி மலைத்தொடர் பகுதிகளில் உள்ள அணுக முடியாத குன்றுகளில் வசிக்கும் 4,209 குடும்பங்களுக்கு சாதனைக் கால அளவில் முப்பது நாட்களுக்குள் மின் இணைப்புகள் வழங்கப்பட்டன. தமிழ்நாடு மின்சார வாரியம் சமத்துவபுரம் பகுதிகளில் 374 குடும்பங்களுக்கு புதிய மின் இணைப்புகளை வழங்கியது. இலவச வண்ணத் தொலைக்காட்சி விநியோகத்தின் இரண்டாவது கட்டத்தில் மொத்தம் 1,14,209 குடும்பங்களுக்கு புதிய இணைப்புகள் வழங்கப்பட்டன. மேலும் மூன்றாவது கட்டத்தில் மொத்தம் 1,464 குடும்பங்களுக்கு புதிய இணைப்புகள் வழங்கப்பட்டன. இதுவரை இத்திட்டத்தில் மொத்தம் 1,20,256 இலவச மின் இணைப்புகள் வழங்கப்பட்டன.

**3. மாண்புமிகு முதலமைச்சரின் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்**

நிலமில்லா விவசாயிகளுக்கு இரண்டு ஏக்கர் நிலம் வழங்கும் மாண்புமிகு முதலமைச்சரின் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தில் நிலங்களை விவசாயத்திற்கு பயன்படுத்த ஏதுவாக மின்சாரம் இலவசமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 17 மாவட்டங்களில் மொத்தம் 74 மின் இணைப்புகள் வழங்கப்பட்டு இலவச மின்சாரம் விநியோகிக்கப்பட்டு வருகிறது. விண்ணப்பங்கள் பெறப்பட்டவுடன் மின் இணைப்புகள் உயர் முன்னுரிமையில் வழங்கப்படுகின்றன.

**4. கணினிமயமாக்கப்பட்ட மின் தடை நீக்கும் மையங்கள்**

கணினிமயமாக்கப்பட்ட மின் தடை நீக்கும் மையங்கள் சென்னை, கோவை, மதுரை, திருச்சி, ஈரோடு, சேலம் மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. மேலும் இந்த வசதி திருநெல்வேலி, நாகர்கோவில் மற்றும் வேலூர் ஆகிய மாவட்ட தலைநகரங்களில் விரிவுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**5. கணினி மயமாக்கப்பட்ட தாழ்வழுத்த மின்கட்டணப் பட்டியல் மற்றும் வசூல்**

தாழ்வழுத்த மின் பயனீட்டாளர்கள் தங்கள் மின் கட்டணத்தை எளிதாக செலுத்தும் வண்ணம் தமிழ்நாடு மின்சார வாரியம் கணினிமயமாக்கப்பட்ட தாழ்வழுத்த மின் கட்டணப் பட்டியல் திட்டத்தை - BEST (Billing of Energy Services by TNEB) ரூபாய் 215 கோடி செலவில் நடைமுறைப்படுத்தி வருகிறது இத்திட்டம் 615 நகர்புற பிரிவுகளில் செயல்பாட்டில் உள்ளது. மீதமுள்ள 1,805 ஊரகப் பிரிவுகளில் இது மார்ச் 2008-க்குள் முடிக்கப்படும்.





இந்த திட்டம் BEST முடிக்கப்பட்டவுடன் மின் கட்டணம் எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் கட்டலாம் என்பது சாத்தியமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**6. மின் தொடர் அமைப்பை நிறுவுதல்**

ஏற்கெனவே குறிப்பிட்டவாறு, 11-வது திட்டக்காலத்தில் 7,808 மெகாவாட் அளவிற்கு மின் உற்பத்தி மாநில / மத்திய / கூட்டுத் துறையின் வாயிலாக நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இது தவிர தமிழக அரசு 10 கடற்கரை ஒட்டிய அனல் மின் திட்டங்களை வணிக மின் திட்டங்கள் வாயிலாக 17,140 மெகாவாட் அளவிற்கு அடுத்த 60 மாதங்களில் உற்பத்திச் செய்வதை எளிதாக்க அரசு கடிதம் அளித்துள்ளது.

இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரம் மற்றும் அடுத்த மாநிலங்களுக்கு அனுப்பக்கூடிய உபரி மின்சாரம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, புதிய மின் தொடர் அமைப்பு நிறுவப்பட வேண்டும். இதற்கு சுமார் ரூ.25,000 கோடியளவிற்கு முதலீடு செய்து உயர் மின்னழுத்தத் தொடர் மற்றும் துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும். இந்தப் பணிகள் மற்றும் புதிய உற்பத்தி திட்டங்களை நிறைவேற்ற வாரியத்திற்கு போதுமான அளவு நிதி வசதி மற்றும் நிதி ஆதாரங்கள் இல்லாத காரணத்தினால் புதிய நிதி திரட்டும் வழிமுறைகளை கண்டறிய வேண்டும். தனியாக மின் தொடர் அமைப்பு நிறுவப்படும்பட்சத்தில், நிதி ஆதாரங்களை பொது மற்றும் நிதி நிறுவனங்களிலிருந்தும் திரட்டுவதற்கு வழிவகை செய்யப்படும்.

மேலும், மின்சார சட்டம் 2003-ன்படி மின் தொடருக்காகத் தனியாக மாநில பயன்பாட்டு நிறுவனம் இருக்க வேண்டும். சட்டத்தின் தேவைப்படி இந்த நிறுவனம் மாநில அரசின்கீழ் செயல்படும். மற்றும் அரசுக்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தை தனியார் மயமாக்கும் நோக்கம் இல்லை. எனவே, 66 கி.வோ. மற்றும் அதற்கு மேலே உள்ள துணை மின் நிலையங்கள் மற்றும் மின் தொடர் அமைப்புகள் தனி மின் தொடர் நிறுவனமாக உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாநில அரசின்கீழ் செயல்படும் இந்த மின் தொடர் நிறுவனம் தமிழ்நாடு மின்சார வாரியத் தலைவரின்கீழ் இயங்கும் மற்றும் தலைமைப் பொறியாளர் (மின் தொடர்) அதன் மேலாண் இயக்குநராக இருப்பார்.

[2008 ஏப்ரல் 3

## தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையானது, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டப் பணிகளை மாநிலத்தில் ஊக்கப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட, இந்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் சார்பு அமைப்பாகும். இந்த அமைப்பு, கூட்டுக்கழகப் பதிவு சட்டத்தின்கீழ் கூட்டுக்கழகமாகப் பதிவு செய்யப்பட்டு, 1985 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றது. இது தமிழ்நாடு அரசின் எரிசக்தித் துறை கட்டுப்பாட்டின்கீழ் இடம் பெற்றுள்ளது.

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, கீழ்க்குறிப்பிடப் பற்றவற்றை தன் முக்கியக் குறிக்கோள்களாகக் கொண்டுள்ளது:-

- தமிழ்நாட்டிலுள்ள புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களின் இருப்பைத் தெரிவு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்
- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்கள் மற்றும் அவற்றின் பயன்பாடுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
- மாநில கட்டமைப்பின் ஒட்டு மொத்த எரிசக்திப் பயன்பாட்டில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் பங்கை அதிகரித்தல்
- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் அதன் மூலம் தனித்து இயங்கும் சாதனங்களின் பயன்பாட்டை ஊக்கப்படுத்துவதன் மூலம் மரபு சார்ந்த எரிபொருட்களால் ஏற்படும் பசுமைக்குடில் வாயுக்களின் வெளிப்பாட்டைக் குறைத்தல்
- சிறு கிராமங்களில் எரிசக்தியில் தன்னிறைவைப் பெற நிலையான, பாதுகாப்பான எரிசக்திக் கொள்கையை உருவாக்குதல் மற்றும் செயல்படுத்துதல்

தமிழ்நாட்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள் மூலம் 31-3-2007-ல் 3,834 மெகா வாட்டாக இருந்த மின் உற்பத்தித் திறன் தற்பொழுது 29-02-2008 வரை 4,115 மெகாவாட்டாக உயர்ந்துள்ளது. இது நாட்டின் மொத்த உற்பத்தித் திறனில் 37 விழுக்காடாகும். இதில் சுமார் 98 விழுக்காடு தனியார் துறை மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் முக்கிய பங்காக காற்று சக்தி மூலம் 3,711 மெகாவாட் பெறப்பட்டுள்ளது. (நாட்டின் திறனில் 50 விழுக்காடு).



2008 ஏப்ரல் 3]

மற்றவை கரும்புச் சக்கையிலிருந்து மின்சாரம் 213 மெகாவாட், தாவர சக்தியிலிருந்து மின்சாரம் 99 மெகா வாட் மற்றும் சிறுபுனல் மின்சாரம் (25 மெகா வாட் வரை) 87 மெகா வாட் ஆகும். 2006-2007 ஆம் ஆண்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் மாநிலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரம் 6,570 மில்லியன் யூனிட்டாகும். கட்டமைப்பின் பயனீட்டில் இது ஏறத்தாழ 10 விழுக்காடாகும். மொத்த உற்பத்தித் திறனில் 27 விழுக்காடு மற்றும் உற்பத்தியில் 10 விழுக்காடு ஆகியவற்றை அடைந்துள்ள தமிழ்நாட்டின் இந்த சாதனை, பிற மாநிலங்களின் சாதனைகளை விட மிகவும் முன்னணி சாதனையாகும். மேலும் இத்தகைய சாதனை அளவுகள், நாடு முழுவதும் 2012 அல்லது அதற்குப் பிறகு எட்டப்பட வேண்டியக் குறியீடுகளாகும்.

### I. மின் கட்டமைப்பிற்கேற்ற மின் உற்பத்தி

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களான காற்று சக்தி, தாவர சக்தி போன்றவற்றின் மூலம் மின் உற்பத்தி செய்து மின் கட்டமைப்பிற்கு வழங்கி, மரபு சார்ந்த மின் உற்பத்தியை கூட்டுவதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. பத்தாவது ஐந்தாண்டு (2002-2007) காலத்தில், இந்த மின் உற்பத்தி 1000 மெகா வாட்டிலிருந்து 3,834 மெகா வாட்டாக உயர்ந்துள்ளது. இது தமிழ்நாடு மின்சார வாரிய கட்டமைப்பின் திறனில் 27 விழுக்காடாகும். இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள, 2012-ஆம் ஆண்டில் அடையவேண்டிய இலக்கான 10 விழுக்காடை விட, இது மிக அதிகமாகும். அகில இந்திய அளவில் இது 8 விழுக்காடு மட்டுமே 29-02-2008 வரையிலான, 2007-2008 ஆண்டில், 281 மெகா வாட் திறன் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. உலக வெம்மை மற்றும் தட்பவெப்ப மாற்றம் ஆகியவற்றால் பாதிப்பு உண்டாகும் இந்நாளில், உலகின் வளர்ச்சி அடைந்த நாடுகளுக்கு ஒப்ப, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் மின்கட்டமைப்பிற்கேற்ற அதிக சதவீத மின் உற்பத்தியை அடைந்துள்ள தமிழ்நாட்டின் சாதனை மிகப் பாராட்டத்தக்க ஒன்றாகும்.

#### 1. காற்று சக்தி

காற்றானது எல்லா இடங்களிலும், சிதறலாக இருந்தாலும், பரவலாக இருக்கிறது. அதிலிருந்து மின் உற்பத்தி செய்யும்போது சுற்றுச்சூழல் மாசுபடுவதில்லை. எனவேதான் இது உலக அளவில் மிக வளமுள்ள சுத்தமான எரிசக்தியாகக் கருதப்படுகிறது.

[2008 ஏப்ரல் 3

தமிழ்நாட்டில், மூன்று கணவாய்கள் அடங்கிய, நீளமான மலைத் தொடர்கள் உள்ளன. கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள பாலக்காட்டுக் கணவாய் பகுதியின் காற்றுவளம் 1,650 மெகா வாட், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள செங்கோட்டை கணவாய் பகுதியின் காற்றுவளம் 1,300 மெகா வாட், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஆரல்வாய்மொழிப் பகுதியின் காற்றுவளம் 2,100 மெகா வாட் மற்றும் பிற இடங்களில் 450 மெகா வாட் ஆக மொத்தம் 5,500 மெகா வாட் என்று கணிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் மற்றும் மாநில அரசின் நிதி உதவியுடன் நடத்திய காற்று வள ஆய்வின்படி, மாநிலத்தில் 8 மாவட்டங்களிலுள்ள 41 இடங்கள், காற்றாலை மின் திட்டங்களுக்கு உகந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவற்றில் இதுவரை 26 இடங்களில் காற்றாலைப் பண்ணைகள் தனியார் துறை மூலம் அமைக்கப்பட்டுள்ளன. தவிர 19 மெகா வாட், 1986 முதல் 1993 வரையுள்ள ஆண்டுகளில், செயல்விளக்கப் பண்ணைகளாக தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையும் தமிழ்நாடு மின்சார வாரியமும் இணைந்து நிறுவியுள்ளன. இவை தற்பொழுது தமிழ்நாடு மின்சார வாரியத்தால் இயக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. மாநிலத்தில் காற்றாலை மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ள மொத்த உற்பத்தித்திறன், பொதுத் துறையிலுள்ள 19 மெகா வாட் உட்பட 31-03-2007 வரை (7,349 இயந்திரங்களுடன்) 3475 மெகா வாட் ஆகும். 2007-2008 ஆம் ஆண்டில், 29-02-2008 வரை ஏற்படுத்தப்பட்ட கூடுதல் திறன் 236 மெகாவாட் ஆகும். பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் (2002-2007) ஏற்படுத்தப்பட்ட கூடுதல் திறன்கள் பின் வருமாறு.

| ஆண்டு | கூடுதல் மின் உற்பத்தி திறன் (மெகா வாட்) | மின் உற்பத்தி (மில்லியன் யூனிட்) |
|---|---|---|
| 2002-03 | 133 | 1305.703 |
| 2003-04 | 371 | 1714.475 |
| 2004-05 | 679 | 2260.732 |
| 2005-06 | 858 | 3444.281 |
| 2006-07 | 577 | 5268.840 |
| மொத்தம் | 2,618 | 13,994.030 |



2008 ஏப்ரல் 3]

31-03-2007 வரை காற்றாலைகள் மூலம் மொத்தம் 20,682 மில்லியன் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 2006-2007 ஆம் ஆண்டில் 5,269 மில்லியன் யூனிட் உற்பத்தியானது. இது தமிழ்நாட்டு மின் கட்டமைப்பின் பயனீட்டளவில் 8.5 விழுக்காடாகும். மாநிலத்தில் காற்றாலை மூலமான மின் உற்பத்தித் திட்டத்தில், 2002-2007 கால ஆண்டுகளில் அடைந்துள்ள பாராட்டத்தக்க சாதனைக்காக, முதல் பரிசு வழங்கப்பட்டுள்ளது. இதற்கான விருது மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் **திருமதி பிரதிபா தேவிசிங் பாட்டீல்** அவர்களால், புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் வெள்ளி விழா கொண்டாட்டத்தின்போது 22-11-2007 அன்று வழங்கப்பட்டது. நாட்டிலேயே முதன் முறையாக, கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள ஓடந்துறை கிராமப் பஞ்சாயத்து, 350 கிலோவாட் திறன் கொண்ட ஒரு காற்றாலையை நிறுவி, உற்பத்தியாகும் மின்சாரத்தை மின் கட்டமைப்பிற்குச் செலுத்தி வருகிறது. இது 31-03-2006 அன்று முதல் இயக்கத்திற்கு கொண்டு வரப்பட்டது.

காற்றாலைகள் நிறுவுவதற்கு, வரிச் சலுகைகள், சுங்கவரி மற்றும் உள்நாட்டு வருமான வரிவிலக்கு மற்றும் 10 ஆண்டுகளுக்கு வரிவிலக்கு ஆகிய சலுகைகளை இந்திய அரசு வழங்குகிறது. தமிழ்நாட்டில் உள்ள காற்றாலைப் பண்ணைகளிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்கு, மாநிலத்திற்குள் கட்டமைப்பு மின்வசதியைப் பயன்படுத்தும் உரிமை, முதல் முக்கியத்துவம் கொடுக்கும் கொள்முதல் ஆணைகள் ஆகியவற்றைத் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அறிவித்துள்ளது. மே மாதம் 2006-ல் அறிவிக்கப்பட்ட திருத்தப்பட்ட கொள்முதல் ஆணைப்படி, ஏற்கனவே ஒப்பந்தம் கையொப்பமான திட்டங்களுக்கு ஒரு யூனிட்டிற்கு ரூ.2.75-வீதமும், கையொப்பமாக வேண்டிய திட்டங்களுக்கு ஒரு யூனிட்டிற்கு ரூ.2.90 வீதமும் வழங்கப்பட்டு வருகின்றன. வீலிங் மற்றும் பாங்கிங் கட்டணங்களில் மாற்றம் ஏதும் இல்லாமல் அதே 5 சதவீத அளவிலேயே உள்ளன. இந்த புதிய கட்டணங்கள் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 14-09-2007 தேதியிட்ட ஆணைப்படி நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுவிட்டது.

69 காற்றுவள இடங்களில் காற்று ஆய்வு செய்து 1986 ஆம் ஆண்டிலிருந்து காற்றுவள ஆய்வு மையங்கள் நிறுவப்பட்டு அவற்றில், காற்றின் ஆண்டு சராசரி வேகம் மணிக்கு 18 கி.மீட்டர் மற்றும் அதற்கு மேல் உள்ளதும், ஆண்டு சராசரி காற்று அடர்த்தி 30 / 50 மீட்டர் உயரத்தில் சதுர மீட்டருக்கு 150 / 200 வாட் மற்றும்

அதற்கு மேல் உள்ளதுமான, 41 காற்றுவள இடங்கள், வணிக ரீதியாக காற்றாலை அமைப்பதற்குத் தகுந்த இடங்களாக, புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தால் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 26 இடங்களில் தனியார் மூலம் இதுவரை காற்றாலைகள் நிறுவப்பட்டுள்ளன. இந்திய அரசின் காற்று தொழில்நுட்ப மையத்தின் (C-WET) மூலம் பல்வேறு மாவட்டங்களில் 9 புதிய காற்று ஆய்வு மையங்கள் நிறுவும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஒன்று முடிவடைந்துள்ளது) இவற்றை அமைப்பதற்கு மாநில அரசு 20 விழுக்காடு செலவை ஏற்கிறது, மீதம் 80 விழுக்காடை புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் அளிக்கிறது.

காற்று வளமிக்க இடங்களில் அமைக்கக் கூடிய காற்றாலைப் பண்ணைகளின் திறனை நிர்ணயிக்கும் வகையில், அந்த இடங்களில் நிலவும் காற்றின் சக்தி நுண் ஆய்வு செய்யப்பட்டு, தேவைப்படும் தகவல்கள் அளிக்கப்படுகின்றன. புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் நிதி உதவியுடன் ஆய்வு செய்யப்பட்ட 19 இடங்கள் தவிர, மாநில அரசின் நிதி உதவியுடன் மேலும் 8 இடங்களில் காற்று சக்தி தொழில் நுட்ப மையம்மூலம் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இந்த 27 இடங்களில் மொத்தம் 6,385 மெகா வாட் திறன் உள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது.

மின் கட்டமைப்புடன் இணைக்கக்கூடிய மெகா வாட் திறன் கொண்ட காற்றாலை இயந்திரங்கள் தவிர, 30 கிலோ வாட் திறன் கொண்ட தனித்து இயங்கும் காற்றாலை இயந்திரங்களும் உள்ளன. குடிநீர் அல்லது சிறு விவசாயப் பயன்பாட்டிற்காக நீர் இறைப்பதற்கும் காற்றாலைகளை நேரடியாகப் பயன்படுத்தலாம். இத்தகைய அமைப்புகளை நிறுவுவதற்காக, புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் மானியம் வழங்குகிறது.

**2. தாவர சக்தி மின்சாரம்**

சூரிய ஒளி சக்தியைப் பயன்படுத்தி, போட்டோ சிந்தஸைஸ் முறையில், பச்சைத் தாவரங்களிலிருந்து பெறும் சக்தி தாவர எரிசக்தி ஆகும். தாவரப் பொருட்களிலுள்ள உயிர்சக்திப் பொருட்கள் எரிசக்தியாக மாற்றப்படுகின்றன. மனித முயற்சியால் அந்த தாவரப் பொருட்களை மீண்டும் உற்பத்தி செய்துகொள்ளலாம். புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் நிதி உதவியுடன், அண்ணா பல்கலைக்கழகத்தால், மாவட்ட அளவில்



மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி தமிழ்நாட்டிலுள்ள உபயோகத்திற்குப் பின் எஞ்சியுள்ள தாவரப் பொருட்களின் மின் உற்பத்தித்திறன் மொத்தம் 487 மெகா வாட் என கணிக்கப்பட்டுள்ளது. சர்க்கரை ஆலைகளில், கரும்புச் சக்கைமூலம் இணை மின்சார உற்பத்தித்திறனாக மேலும் 450 மெகா வாட் உள்ளது.

தாவரப் பொருட்களிலிருந்து, எரிவாயுவை உற்பத்தி செய்தோ, அல்லது, எரித்தோ, எரிசக்தி பெறலாம். தாவரப் பொருட்களை எரிக்கும்போது, தண்ணீர் சூடாகி, நீராவி பெற்று டர்பைன்மூலமாக மின்சாரம் உற்பத்தி செய்யலாம். தாவரங்களிலிருந்து எரிவாயு உற்பத்தி செய்து அதை வெப்ப அல்லது மின்சக்தித் தேவைகளுக்கும் பயன்படுத்தலாம்.

தாவரப் பொருட்கள் மற்றும் கரும்புச் சக்கையிலிருந்து இணை மின்சாரம் உற்பத்திச் செய்யக் கூடிய மொத்தத் திறன் 29-02-2008 வரை 474.60 மெகா வாட்டாகும். (கரும்புச் சக்கை இணை மின்சாரம் 375.60 மெகாவாட் + தாவரப் பொருட்களிலிருந்து மின்சாரம் 99 மெகா வாட்) இணை மின்சாரத் திட்டத்தின்கீழ், கரும்பு ஆலைகளின் சுய தேவைபோக, மின் கட்டமைப்பிற்குச் செலுத்தப்படும் உபரி மின்சாரம் 213 மெகா வாட் ஆகும்.

தாவர சக்தி மூலம் மின் உற்பத்தித் திட்டங்களுக்காக, தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் தலைமை மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்களின்கீழ் அரசால் நியமிக்கப்பட்ட நிலைக் குழு மொத்தம் 328 மெகா வாட் திறன் கொண்ட 32 திட்டங்களைப் பரிந்துரை செய்தது. அவற்றின் நடவடிக்கைகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. 5 திட்டங்கள் (39.7) விரைவில் செயலாக்கப்பட உள்ளன. இதைத்தவிர 7 திட்டங்கள் (87 மெகாவாட்) ஏற்கனவே செயல்பாட்டில் உள்ளன.

இத்திட்டங்களுக்கு துரிதப்படுத்தப்பட்ட தேய்மானம், சலுகைச் சுங்கத்தீர்வை, உள்நாட்டு வரியில் விலக்கு, 10 ஆண்டுகள் வருமான வரி விலக்கு போன்ற நிதி சம்பந்தமான சலுகைகள் இந்திய அரசால் அளிக்கப்படுகின்றன. டிசம்பர் 2006 முதல், மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்ட, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின் உற்பத்தித் திட்டங்களுக்கு (தனியார் துறையில் காற்று சக்தி தவிர) புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம், வட்டி மானியத்திற்குப் பதிலாக, முதலீட்டு மானியம் வழங்கி வருகிறது. அம்மானியம் அந்தத் திட்டங்கள் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்ட பிறகு, சம்பந்தப்பட்ட

[2008 ஏப்ரல் 3

நிதி நிறுவனங்கள் வழியாக வழங்கப்படும். கூட்டுறவு பொது / கூட்டுத் துறைகளிலுள்ள கரும்புச் சக்கை இணை மின் திட்டங்களுக்கு 50 விழுக்காடு மானியத்தை கடன் ஒப்புதலளித்த உடனே, அந்த நிதி நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது. மீதி மானியம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்ட பிறகு வழங்கப்படும். தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையம் 2006 மே திங்களில் அறிவித்த கொள்முதல் ஆணைப்படி, தமிழ்நாடு மின்சார வாரியம் வாங்கும் ஒரு யூனிட் மின்சாரத்திற்கு ரூ.3.15 வீதம் வழங்கப்படுகிறது. மேலும் வீலிங் கட்டணமாக 25 கிலோ மீட்டர் தூரத்திற்குள் 3 விழுக்காடும், 25 கிலோ மீட்டருக்குமேல் 6 விழுக்காடு கட்டணமும் வசூலிக்கப்படுகிறது.

**3. நகர மற்றும் தொழிற்சாலைக் கழிவுகளிலிருந்து மின் உற்பத்தி**

தொழில் போன்ற செயல் வகைகளிலிருந்து திட மற்றும் திரவக் கழிவுகள் வெளிவருகின்றன. நகர்ப்புறச் செயல்வகைகளிலிருந்து, திட மற்றும் திரவக்கழிவுகளும், தொழிற்சாலைகளிலிருந்து பொதுவாக திரவக்கழிவுகளும் வெளியாகும். அந்த இரண்டு வித கழிவுகளிலிருந்து பயோமத்தனேஷன் மற்றும் எரிக்கும் செய்முறைகளின் மூலம் எரிசக்தி உற்பத்தி செய்யலாம்.

நீர்ச் சத்து மற்றும் உயிர்ச் சத்து அதிகமுள்ள தாவரக் கழிவுகளிலிருந்து எரிசக்தி பெறுவதற்கு பயோமத்தனேஷன் முறையே உகந்ததாகும். நகர்ப்புற திடக் கழிவுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட உயிர்க் கழிவுகள், அதிக அளவு பயோலாஜிக்கல் ஆக்சிஜன் டிமாண்டு / கெமிக்கல் ஆக்சிஜன் டிமாண்டு கொண்டன என்பதால், இந்த முறையைப் பயன்படுத்தலாம்.

அதிக அளவு உயிர்ச் சத்து கொண்ட செரிமானமாகாத பொருட்கள் மற்றும் குறைந்த நீர்ச் சத்து உள்ள கழிவுகளிலிருந்து எரித்தல் மூலம் நீராவி உற்பத்தி செய்து சாதாரண டர்பைன்கள் மூலம் மின் உற்பத்தி செய்யலாம். இந்தத் திட்டங்களுக்கு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் மானியம் அளிக்கிறது. உற்பத்தி ஆகும் மின்சாரத்தை ஏற்றுமதி செய்வதற்கு, தமிழ்நாடு மின்சார வாரியத்துடன் மின் கொள்முதல் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். மாநிலத்தில் மொத்தம் 3 திட்டங்கள் 4.25 மெகா வாட் திறன் கொண்டவை, 250 கிலோ வாட் திறன் கொண்ட கோயம்பேடு காய்கறி வளாகம் உட்பட, செயல்பாட்டிலுள்ளன.



2008 ஏப்ரல் 3]

**4. சூரிய சக்திமூலம் மின் உற்பத்தி**

சூரிய சக்திமூலம் மின் உற்பத்தியை நாட்டில் ஊக்குவிக்கும் விதமாக, இந்திய அரசின், புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம், ஜனவரி 2008-ல் புதிய வழிகாட்டு முறைகளைக் கொண்டுவந்துள்ளது. அதன் சிறப்பு அம்சங்கள் பின்வருமாறு.

சூரிய சக்திமூலம் மின் கட்டமைப்பிற்கேற்ற மின் உற்பத்திக்கு, முதல் தடவையாக, ஊக்கத்தொகை அளிக்கப்பட உள்ளது. சூரிய ஒளி சக்திமூலம் மின் உற்பத்தி செய்வதற்கு, ஒரு யூனிட் மின்சாரத்திற்கு அதிகபட்சமாக ரூ.12, சூரிய வெப்பசக்திமூலம் மின் உற்பத்திக்கு ஒரு யூனிட் மின்சாரத்திற்கு ரூ.10 அளிக்கப்படும். ஒரு மெகா வாட் அல்லது அதற்கும் மேலான திறன் கொண்ட, மின் திட்டம்மூலம் மின் உற்பத்தி செய்து, மின் கட்டமைப்பிற்கு வழங்கும் திட்டங்களுக்கு இந்த ஊக்கத்தொகை அளிக்கப்படும். 31-12-2009-க்குள் செயல்பாட்டிற்கு வரும் இத்திட்ட முதலீட்டாளர்களுக்கு இந்த ஊக்கத்தொகை ஒரு நிலையான அளவில், 10 ஆண்டுகளுக்கு வழங்கப்படும். இந்த மானியம், தற்போதுள்ள பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், மத்திய மற்றும் மாநில மின் உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் பொது / தனியார்த் துறையில், சூரிய ஒளி சக்தி மின் உற்பத்தியாளர்கள் இந்தியாவில் நிறுவியுள்ள அல்லது நிறுவ உள்ள நிறுவனங்களுக்கு வழங்கப்படும். இத்திட்டத்திற்கான அதிகபட்ச உற்பத்தித் திறன் 5 மெகா வாட் கொண்ட ஒரே திட்டமாகவோ அல்லது குறைந்தது 1 மெகா வாட் கொண்ட பல திட்டங்கள் இணைந்ததாகவோ இருக்கலாம். இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு மாநிலமும் 10 மெகா வாட் வரை நிறுவலாம். இத்திட்டங்கள், நிறுவுதல், உரிதாக்குதல் மற்றும் செயல்படுத்துதல் என்ற அடிப்படைகளில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இது சம்பந்தமாக, தமிழ்நாட்டில், கட்டமைப்புடன் இணைந்த சூரிய சக்தி மின் உற்பத்தித் திட்டங்களைச் செயலாக்க விரும்பும் திட்ட முதலீட்டாளர்களிடமிருந்து, 'விருப்பம் தெரிவித்தல்' கோருவதற்காக, தமிழ் நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, மாநில அரசிடம் அனுமதி கோரியுள்ளது. இத்திட்டங்கள் மூலம் உற்பத்தியாகும் மின்சாரத்தை, தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயிக்கும் விலையில் வாங்கும்.

[2008 ஏப்ரல் 3

மேலும், சூரிய சக்திமூலம் மின்உற்பத்தியில் அண்மையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் ஆகியவை பற்றி தெரிந்து கொள்வதற்காக, மாநில அரசு, தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் தலைவர் மற்றம் மேலாண்மை இயக்குநர் அவர்களையும் அதன் பொது மேலாளராக உள்ள, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் முதுநிலைப் பொறியாளர் அவர்களையும் ஸ்பெயின் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளுக்குச் செல்ல அனுமதி அளித்துள்ளது. இந்நாடுகளில் பல சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையங்கள் செயல்பாட்டில் உள்ளன. இவர்கள் அந்த இடங்களுக்குச் சென்று, சில நிலையங்களைப் பார்வையிட்டு அங்குள்ள அரசு நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களுடன், தமிழ்நாட்டில் மாநில அரசு / தமிழ்நாடு மின்சார வாரியத்துடன் இணைந்து சூரிய சக்தி மின் உற்பத்தித் திட்டங்கள் நிறுவுவது சம்பந்தமாக கலந்தாலோசிப்பார்கள்.

## II. தனித்து இயங்கும் புதுப்பிக்கத்தக்க எரிசக்திச் சாதனங்கள்

புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் மிகப் பெரிய நலன் என்னவென்றால், அது எங்கு தேவையோ, அங்கேயே கிடைக்கும் சூரிய சக்தி, காற்று சக்தி, தாவர சக்தி போன்ற ஆதாரங்கள்மூலம் உற்பத்தி செய்யலாம் என்பதாகும். இதன்மூலம், மின் இழப்பு ஏற்படுத்தும் நீண்ட மின் கடத்திகள் தேவைப்படும், மைய மின் உற்பத்தி அமைப்புகளின்மீதுள்ள பளு குறைக்கப்படும். இத்தகைய அமைப்புகளை, தொழிலகங்கள், நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில், புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் அல்லது மாநில அரசு உதவியுடனோ அல்லது இரண்டும் சேர்ந்தோ நிறுவுவதற்கு தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை ஊக்கப்படுத்துகிறது. இத்தகைய பலவிதமான அமைப்புகள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு.

### 1. சூரிய வெப்பச் சக்திச் சாதனங்கள்

சூரிய வெப்பச் சக்திச் சாதனங்கள், சூரிய வெப்பச் சக்தியை இதற்கென தனியாக உள்ள கருப்பு வண்ணம் பூசப்பட்ட உலோகத்தாலான சேகரிப்பான்மூலம் கிரகித்து, நீர் மற்றும் காற்றைச் சூடாக்குகிறது. சூரிய வெப்பச் சுடுநீர் அமைப்பு, சுடுகாற்று அமைப்பு / உலர்த்திகள் மற்றும் சூரிய அடுப்பு போன்றவை மக்கள் பயன்படுத்தி வரும் சில சூரிய வெப்ப சக்திச் சாதனங்கள் ஆகும்.



2008 ஏப்ரல் 3]

### 1.1 சூரிய வெப்பச் சுடுநீர் அமைப்பு

சூரிய வெப்பச் சுடுநீர் அமைப்பு, சூரியனின் வெப்பத்தை ஈர்த்து, சுடுநீராக்கும் ஒரு அமைப்பாகும். இதை வீடுகள் மற்றும் விடுதிகள், மருத்துவமனைகள், தொழிற்சாலைகள் போன்றவை, தங்களுக்குத் தேவைப்படும் சுடுநீரைப் பெற பயன்படுத்திக்கொள்ளலாம். 4 அல்லது 5 நபர்கள் கொண்ட ஒரு வீட்டிற்கு நாள் ஒன்றுக்கு 100 லிட்டர் திறன் கொண்ட சூரிய வெப்ப சுடுநீர் அமைப்பு தேவைப்படும். ஒரு 2 கிலோ வாட் மின்சார ஹீட்டருக்குப் பதிலாக இதைப் பயன்படுத்தி, ஆண்டு ஒன்றுக்கு 1,500 யூனிட் மின்சாரம் வரை மிச்சப்படுத்தலாம். அதன் விலையை 3 முதல் 5 ஆண்டுகளில் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். அதன் வாழ்நாட்களான 15/20 ஆண்டுகளில், மீதமுள்ள காலங்களுக்கு எந்தவிதச் செலவுமின்றி சுடுநீர் கிடைக்கும். தேவைப்படும் அதிக அளவு திறன் கொண்ட அமைப்பை 100 லிட்டர் வீதம் பெருக்கியும் அமைத்துக்கொள்ளலாம். இதை அமைப்பதற்கு நிழல் விழாத திறந்தவெளி தரை அல்லது மேல்தளம் இருக்க வேண்டும். 100 லிட்டர் அமைப்பிற்கு 3 சதுர மீட்டர் அளவு இடம் தேவைப்படும். இது தானாக இயங்கக் கூடியது. இந்த அமைப்பின் எந்த பாகத்தையும், இதற்கான பயிற்சி பெற்றவர் வந்து இயக்க வேண்டும் என்ற அவசியமில்லை.

இதன் இத்தகைய சிறப்பு அம்சங்கள் காரணமாக, மாநில அரசு கட்டட துணை விதிகளைத் திருத்தி 2002 ஆம் ஆண்டில் சில வகையான புதிய கட்டடங்களில், சூரிய வெப்பச் சுடுநீர் அமைப்புகள் நிறுவுவதைக் கட்டாயமாக்கியது.

இந்திய அரசின், புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம், குறைந்த வட்டிக்கடனாக, வீடுகளுக்கு 2 விழுக்காடு, துரிதப்படுத்தப்பட்ட தேய்மான வரிச் சலுகை பெறாத நிறுவனங்களுக்கு 3 விழுக்காடும், அத்தகைய வரிச்சலுகை பெறும் தொழில் / வணிக நிறுவனங்களுக்கு 5 விழுக்காடும் இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் மற்றும் பொது / தனியார் வங்கிகள்மூலம் அளிக்கிறது. வட்டி மானியத்திற்கு ஈடாக முதலீட்டு மானியமாக, பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு ஒரு சதுர மீட்டர் அளவு சேகரிப்பானுக்கு ரூ.1,100 வீதமும், பதிவு செய்யப்பட்ட வணிக அமைப்புகளுக்கு ஒரு சதுர மீட்டர் அளவு சேகரிப்பானுக்கு ரூ.825 வீதமும், வேறெந்த வங்கி / நிதி நிறுவனங்களிடமிருந்தும் கடன் பெறாதவர்களுக்கு வழங்கப்படுகிறது.

[2008 ஏப்ரல் 3

மாநில அரசு, சூரிய வெப்பச் சுடுநீர் அமைக்கும் வீட்டு மற்றும் நிறுவனப் பயனாளிகளுக்கு, முன்பு மானியம் அளித்து வந்தது. ஆனால் தற்பொழுது, அரசு நிறுவனங்களுக்கு மட்டும் 100 சதவீதச் செலவை வழங்கி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஒரு சில அரசு விடுதிகள் / மருத்துவமனைகளில் சூரிய வெப்பச்சுடுநீர் அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன. 2007-2008 ஆம் ஆண்டிற்கு அரசு விடுதிகள் / நிறுவனங்களில் மொத்தம் 5,000 லிட்டர் திறன் கொண்ட அமைப்புகளை நிறுவ தமிழக அரசு ரூ.10.00 இலட்சம் வழங்கியுள்ளது. இதைத் தவிர மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சட்ட சபையில் செய்த அறிவிப்பின்படி, அமைச்சர்கள் மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகளின் வீடுகள், மாநில விருந்தினர் இல்லம், சட்ட மன்ற உறுப்பினர்களின் விடுதிகள், குடியிருப்புகள் மற்றும் அரசினர் தோட்டத்திலுள்ள ஐ.ஏ.எஸ். மற்றும் ஐ.பி.எஸ். அதிகாரிகளின் பலமாடிக் குடியிருப்புகள் ஆகியவற்றில் மொத்தம் சுமார் ரூ.2.00 கோடி செலவில், சூரிய வெப்பச்சுடுநீர் அமைப்புகள் நிறுவும் பணி மேற்கொள்ளப்பட உள்ளன. தமிழ்நாட்டில், மொத்தம் 3,522 வீடுகளிலும், 440 தொழிலக / நிறுவனங்களிலும் மற்றும் 61 அரசுக் கட்டடங்களிலும் 31-3-2007 வரை சூரிய வெப்பச்சுடுநீர் அமைப்புகள் பலவகையான மானியத் திட்டங்களின்கீழ் நிறுவப்பட்டுள்ளன.

## 1.2 சூரிய வெப்பச் சுடு காற்று அமைப்பு

சூரிய வெப்பச் சுடு காற்று அமைப்பு, அல்லது சூரிய வெப்ப உலர்த்தி, சூரியனின் வெப்ப சக்தியைக் கொண்டு காற்றை சூடாக்கி, உலர்த்த வேண்டிய பொருள்கள்மேல் செலுத்துகிறது. காற்றின் வெப்பம் 30 டிகிரி முதல் 40 டிகிரி செல்சியஸ் வரை உயர்த்தப்படுகிறது. அதன்மூலம் விறகு, கரிபோன்ற மரபு சார்ந்த எரிபொருட்களின் பயன்பாட்டை 25 விழுக்காடு வரை குறைக்கலாம். சூரிய வெப்பச் சுடுகாற்று அமைப்புகள், தற்பொழுது, தேயிலையை உலர்த்தவும், பழங்கள், காய்கறிகள் மற்றும் தானியங்கள் ஆகியவற்றை உலரவைக்கவும் பயன்படுத்தப்படுகின்றன. மீன்கள், துணி, உப்பு, வாசனைப் பொருட்கள், தோல் ஆகியவற்றை உலர்த்துவதற்கும் கூட இவை பயன்படுத்தப்படுகின்றன. சூரிய வெப்ப சுடுகாற்று அமைப்பின்மூலம் ஒரே சீரான வெப்பத்தில் உலர வைப்பதால் உலர்த்தப்படும் பொருட்களின் தரம் கூட்டப்படுகிறது.



2008 ஏப்ரல் 3]

இந்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம், சூரிய வெப்பச் சுடுகாற்று அமைப்புகளை நிறுவுவதற்கு, வணிக நோக்கில்லாத நிறுவனங்களுக்கு விலையில் 50 விழுக்காடு அல்லது ஒரு சதுர மீட்டர் சேகரிப்பானுக்கு ரூ.2,500 வரை வணிக மற்றும் தொழிலகப் பயனாளிகளுக்கு விலையில் 35 விழுக்காடு அல்லது ஒரு சதுர மீட்டர் சேகரிப்பானுக்கு ரூ.1,750 வரை மானியம் வழங்குகிறது.

மாநில அரசும், இந்திய அரசின் மானியம் வழங்காத 2003-2004 மற்றும் 2005-2006 ஆம் ஆண்டுகளில், மொத்தம் 498 சதுர மீட்டர் சேகரிப்பான் கொண்ட 32 அமைப்புகள் நிறுவுவதற்கு மானியம் வழங்கி உள்ளது. மொத்தமாக 4,575 சதுர மீட்டர் சேகரிப்பான் கொண்ட 46 அமைப்புகள் மானியத் திட்டத்தின்கீழ் நிறுவப்பட்டுள்ளன.

## 1.3 சூரிய அடுப்பு

சூரிய அடுப்பானது, சூரியனின் வெப்ப சக்தியைக் கொண்டு உணவு சமைப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது. பெட்டி வடிவம் மற்றும் தட்டு வடிவம் என்ற இரண்டு வகையான சூரிய அடுப்புகள் புழக்கத்தில் உள்ளன. பெட்டி வடிவ சூரிய அடுப்பு, 4 அல்லது 5 நபர்கள் கொண்ட ஒரு குடும்பத்திற்குப் போதுமானதாகும். 2 முதல் 3 மணி நேரத்திற்குள் உணவு சமைக்க முடியும். அடுப்பு வெளியே வெயிலில் வைக்கப்பட வேண்டும் மற்றும் ஒரே நேரத்தில் 4 வகையான உணவு வகைகளையும் சமைக்கலாம். வெயில் இல்லாத சமயத்தில் உணவு சமைப்பதற்கு ஏதுவாக மின்சார ஹீட்டருடன் இணைந்தும் கிடைக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு 4 எல்.பி.ஜி. சிலிண்டர்கள் மிச்சமாகும். ஆனால் பெட்டி வடிவ சூரிய அடுப்பில் உணவுப் பதார்த்தங்கள் பொரிக்க முடியாது. இந்த வகை சூரிய அடுப்பிற்கு அரசு மானியம் இல்லை. ஆனால் இந்திய அரசின், புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் ஏற்பாட்டின்படி, அதிக எண்ணிக்கையில் பயன்படுத்த முன்வரும் பயனாளிகளுக்கு, இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவனம் மற்றும் சில வங்கிகள்மூலம் வட்டியில்லாக் கடன் வழங்கப்படுகிறது.

தட்டு வடிவ சூரிய அடுப்பில், பெட்டி வடிவ அடுப்பைவிடக் குறைந்த நேரத்தில் உணவு சமைக்கலாம். இதைச் சப்பாத்தி தயாரிப்பதற்கும் மற்றும் பொரிப்பதற்கும் பயன்படுத்தலாம். ஆனால் ஒருசமயத்தில் ஒரே ஒரு வகை உணவு மட்டுமே சமைக்க முடியும்.

விலையில் 30 விழுக்காடு வரை இந்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் மானியம், உண்டு. மாநில அரசும், 2006-2007 ஆம் ஆண்டில், மத்திய உணவு மையம் / விடுதிகளுக்கு 40 தட்டு வடிவ சூரிய அடுப்புகளை முழுச் செலவில் வழங்குவதற்கு ரூ.2.40 இலட்சம் ஒப்புதல் அளித்துள்ளது. அவை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலத் துறை மாணவ விடுதிகளில் அமைப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

ஏற்கெனவே நீராவி கொதிகலன் பயன்படுத்தப்பட்டு, பல ஆயிரம் நபர்களுக்கு சமைக்கப்படும் இடங்களில், சூரிய நீராவி அடுப்புகள் நிறுவலாம். திருப்பதி கோயிலில் நிறுவப்பட்டுள்ள இத்தகைய அமைப்பு நன்கு செயல்பட்டு வருகின்றது.

**2.0 சூரிய ஒளி மின் அமைப்புகள்**

சூரிய ஒளிச் சக்தியானது, சூரிய ஒளி மின் (சிலிகான்) செல்கள்/ மாட்யுல்கள்மூலம் மின்சாரமாக மாற்றப்பட்டு பல்வேறு மின் சாதனங்களை இயக்கப் பயன்படுத்தப்படுகிறது.

**2.1 சூரிய ஒளி மின் சாதனங்கள்**

சூரிய ஒளி மின் சாதனங்கள் எனப்படுபவை, வீட்டு விளக்குகள், அலுவலக விளக்குகள் மற்றும் தெரு விளக்குகள் ஆகிய தேவைகளுக்காகப் பயன்படுத்தக் கூடியவை. இவற்றை இந்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம், விலையில் 50 விழுக்காடு வரை மானியம் வழங்கி, மாநிலத்தில் ஊக்குவிக்கிறது. ஊரகப் பகுதிகள் மற்றும் நகரப் பகுதிகளிலுள்ள ஊராட்சி அமைப்புகள், இந்த மானியத்தைப் பெற்று தங்களின் தொடரும் மின் செலவைக் குறைக்கலாம்.

2006-2007 ஆம் ஆண்டில், இந்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம், தமிழ்நாட்டிற்கு 4,000 சூரிய ஒளி வீட்டு விளக்குகளையும் 900 சூரிய ஒளி தெரு விளக்குகளையும் மானியத் திட்டத்தின்கீழ் ஒதுக்கியுள்ளது. அவை மாவட்ட ஆட்சியர்கள் மூலம் பல்வேறு மாவட்டங்களில் நிறுவுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசின் பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவான ஒப்புதல் பெறப்படாத நிலையில் 2007-2008 ஆம் ஆண்டிற்கு ஒதுக்குதல் எதுவும் செய்யப்படவில்லை. மொத்தமாக 5,647 சூரிய ஒளி தெரு விளக்குகள், 1,236 சூரிய ஒளி வீட்டு விளக்குகள் மற்றும் 285 சூரிய ஒளி பம்புகள், மானியத் திட்டத்தின்கீழ் மாநிலத்தில் நிறுவப்பட்டுள்ளன.



2007-2008 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் தொலை தூரத்திலுள்ள ஆரம்பச் சுகாதார மையங்களுக்கு, ரூ.2 இலட்சம் வீதம் 5 சூரிய ஒளி சக்தி மூலம் இயங்கும் குளிர்சாதனப்பெட்டி வழங்க ரூ.10.00 இலட்சத்தை மாநில அரசு ஒதுக்கியுள்ளது. இதன்மூலம் அத்தியாவசியமாகத் தேவையாகும் தடுப்பூசிகள், உயிர்காக்கும் மருந்துகள் அங்குள்ள மக்களுக்கு கிடைக்கும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**2.2 தொலை தூரக் குக்கிராமங்களில் மின் வசதி**

தமிழ்நாட்டிலுள்ள எல்லா கிராமங்களுக்கும் நீண்ட காலத்திற்கு முன்பே மின்வசதி அளிக்கப்பட்டு விட்டது. ஆனால் வனப்பகுதிகளிலுள்ள சில தொலைதூரக் குக்கிராமங்களுக்கு, நீண்ட தூரத்திலுள்ளதாலும் மற்றும் வனத் துறையின் ஒப்புதல் பெறுவதிலுள்ள சிரமம் ஆகிய காரணங்களால் மின்வசதி எட்டாமல் உள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியம் அளித்த மின் கட்டமைப்புமூலம் மின்வசதி அளிக்கமுடியாத, குக்கிராமங்களின் பட்டியலின் அடிப்படையில் இந்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம், முதல் கட்டமாக, 150 தொலைதூரக் குக்கிராமங்களில் சூரிய ஒளி விளக்குகள்மூலம் மின்வசதி அளிக்க 5 ஆண்டு பராமரிப்பு உட்பட அதன் செலவை மத்திய, மாநில அரசுகள் ஏற்கும் வகையில் ஒப்புதல் அளித்துள்ளது. 12 மாவட்டங்களிலுள்ள 128 குக்கிராமங்களில் 5,190 சூரிய ஒளி தெரு விளக்குகள் அமைக்கும் பணி மார்ச் 2007-ல் முடிக்கப்பட்டுள்ளது. இதற்கான மொத்தச் செலவு ரூ.8.25 கோடி ஆகும். பிற குக்கிராமங்களில் சிலவற்றிற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் பின்னர் மின்வசதி அளித்துள்ளது.

மேலும் இரண்டாவது கட்டமாக, 6 மாவட்டங்களிலுள்ள 74 குக்கிராமங்களுக்கு மின் வசதி அளிக்கும் திட்டம், இந்திய அரசின் ஒப்புதல் பெற்ற பிறகு செயல்படுத்த எடுத்துக்கொள்ளப்படும். இது முடிந்தவுடன், தமிழ்நாடு மின்சார வாரியத்தால் அடையாளம் காட்டப்பட்ட தொலைதூர குக்கிராமங்கள் அனைத்திற்கும் மின்வசதி அளிக்கப்பட்டுவிடும்.

[2008 ஏப்ரல் 3

### 3.0. தாவர சக்தி வாயுக் கலன்

விறகு, மரக்கழிவு, விவசாயக்கழிவுகள் ஆகிய தாவர திடப்பொருட்களை மாற்றி எளிதில் எரியக்கூடிய ப்ரட்யுசர்காஸ் எனப்படும் எரிவாயு பெறலாம். இந்த வாயுவை எரித்து நேரிடையாக வெப்பசக்தி அல்லது மின்சாரத் தேவைக்குப் பயன்படுத்தலாம். வீணாக இருக்கும் நிலங்களில் எரிசக்தி பண்ணைகள் அமைத்து அதற்குத் தேவைப்படும் தாவரப் பொருட்களைப் பெறலாம். மேலும் அரிசித் தவிடு, தேங்காய் மட்டைகள், விவசாயத்தில் மிச்சமாகும் பொருட்கள், மரக்கிளைகள், சிறிய தழைகள் ஆகிய பலவிதமான விவசாயக் கழிவுகளை தாவர சக்திக்கலனில் எரிபொருளாகப் பயன்படுத்தலாம்.

இந்தக் கலனை அமைப்பதற்கு இந்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் கீழ்க்குறிப்பிடும் அளவில் மானியம் வழங்குகிறது.

| | | |
|---|---|---|
| ,தொழிற்சாலைகள் / நிறுவனங்கள் வெப்பப் பயன்பாடு | : | ரூ.2.0 இலட்சம் / 300 கி.வா. |
| மின் பயன்பாடு / இருளிபொருள் | : | ரூ.2.50 இலட்சம்/100 கி.வா. |
| 100 சதவீத காஸ் என்ஜின் | : | ரூ. 15.00 இலட்சம் / 100 கி.வா. (கல்வி நிறுவனங்கள்)<br>ரூ.10.00 இலட்சம் / 100 கி.வா. (வணிக தொழில் பயன்பாடு) |
| **மத்திய / மாநில அரசு மானியத்திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட கலன்கள்** | | |
| தொழிற்சாலைகள் / நிறுவனங்கள் | | 2670 கி.வா (வெப்பம்)<br>2140 கி.வா. (மின்சாரம்) |
| கிராம ஊராட்சிகள் (குறைந்த திறன் கலன்கள்) | | 634 கி.வா (65 எண்கள்) |

### 4.0. சாண எரிவாயுக் கலன்

சாண எரிவாயு எளிதில் எரியக் கூடிய வாயுவானதால், எரிபொருளாக உபயோகப்படுத்தலாம். தொழில்நுட்ப ரீதியாகவும்,



2008 ஏப்ரல் 3]

வணிக ரீதியாகவும், சாண எரிவாயுவை, மாட்டுச் சாணம், விவசாயக் கழிவு, சமையல் கழிவு, கரும்பு ஆலை வீழ்படிவு மற்றும் மனிதக் கழிவுகளிலிருந்து உற்பத்தி செய்யலாம். கிராமப் பகுதிகளில் அதிகரித்து வரும் எரிசக்தித் தேவையைத் தீர்வு காண்பதற்கான மிகச் சிறந்த வழிகளில் ஒன்று இத்திட்டமாகும். இது வீடுகளில் சமைப்பதற்கும், விளக்கு எரிப்பதற்கும் மற்றும் கிலோவாட் அளவில் மின் உற்பத்தி செய்வதற்கும் உகந்ததும் மற்றும் தூய்மையான எரிபொருளுமாகும்.

இந்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் சாண எரிவாயுக் கலன்கள் அமைத்து மின் உற்பத்தி செய்வதற்கு திட்டம் ஒன்றுக்கு ரூ.5.00 இலட்சம் அல்லது திட்டச் செலவில் 20 விழுக்காடு மானியம் வழங்குகிறது. புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் 2 சாண எரிவாயு கலன்களுக்கு மானியம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. 10 கிலோ வாட் திறன் கொண்ட ஒரு கலனும், 5 கிலோ வாட் திறன் கொண்ட மற்றொன்றும் கோயம்புத்தூர் மற்றும் சேலம் மாவட்டங்களில் சுயஉதவிக் குழுக்களால் நிறுவப்பட உள்ளன. உற்பத்தியாகும் மின்சாரம் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் மின்வசதி வழங்க பயன்படுத்தப்படும்.

ஊராட்சிகளிலுள்ள மகளிர் சுகாதார மையங்களிலும் மற்றும் நிறுவனங்களிலும் சாண எரிவாயு கலன் அமைப்பதற்கு 30 சதவீத செலவை மானியமாக மாநில அரசு வழங்கியுள்ளது. ஊரக வளர்ச்சித் துறை அமைப்புகள் மூலமாக மொத்தம் 20 நிறுவனங்களிலும் 41 பஞ்சாயத்துகளிலும் 2003-2004 மற்றும் 2004-2005 ஆம் ஆண்டுகளில் நிறுவப்பட்டுள்ளன.

### 5.0. நுண்புனல் மின் நிலையம்

2.5 மெகா வாட்டிற்குட்பட்ட சிறுபுனல் மின்திட்டங்கள், சுற்றுப்புறச் சூழலுக்கு உகந்தனவாகவும் மற்றும் தொலை தூரப் பகுதிகளில் மின்உற்பத்தி செய்யக்கூடியனவாகவும் உள்ளதால் அவை இந்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. அவை சிக்கனமானதும் மற்றும் குறைந்த காலத்தில் நிறுவக் கூடியதாகவும் உள்ளன. மாநிலத்தில் பெரிய அளவு நீர் மின் திட்டங்களோடு, இவற்றையும் தமிழ்நாடு மின்சார வாரியம் செயல்படுத்தி வருகின்றது. கிலோ வாட் அளவிலான நுண்புனல் இயந்திரம், உள்நாட்டிலேயே தயாரிக்கப்படுகிறது. அவற்றைத் தொலைத் தூரங்களிலுள்ள

சிறுகால்வாய்கள், நீரோடைகள் மற்றும் ஆற்றுப் படுகைகளில் பொருத்தி மின்சாரம் தயாரித்து சொந்த உபயோகத்துக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம். இதன்மூலம் சிறிய தொழில்முனைவோர் ஊக்கப்படுத்தப்பட்டு, தங்களது தொழிற்சாலைகளில் இந்த அமைப்புகளை நிறுவி, உள்ளூர் மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தி பொருளாதாரம் மேம்பட வழிவகுக்கும். எனவே, 2007-2008 ஆம் ஆண்டில் மாநில அரசு ரூ. 2.00 இலட்சம் வீதம் 5 கிலோ வாட் திறன்கொண்ட 5 நுண்புனல் மின் நிலையம் ஏற்புடைய கிராம ஊராட்சிகளில் நிறுவ ரூ. 10.00 இலட்சம் ஒதுக்கியுள்ளது. இத்திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது.

## III. பிற திட்டங்கள்

### 1. கிராம எரிசக்திக் காப்பீட்டுத் திட்டம்

இந்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம், மின் வசதியில்லாத மற்றும் தொலைதூரக் குக்கிராமங்களில், அங்கேயே கிடைக்கும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களைக் கொண்டு அவற்றின் மொத்த எரிசக்தித் தேவையை பூர்த்தி செய்யும் விதமாக ஒரு புதிய திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. தமிழ்நாட்டில் கிருஷ்ணகிரி, தர்மபுரி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களிலுள்ள 4 குக்கிராமங்களில், இத்திட்டம், வனத் துறை மூலமாக சோதனை முறையில் செயல்படுத்தப்படுகிறது. அதற்கான 90 விழுக்காடு செலவை (ரூ.49.54 இலட்சம்) புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகமும் மீதமுள்ள செலவை மாநில அரசும் வழங்கியுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள பெரியகல்லுபள்ளி மற்றும் ஜோடுகரை மற்றும் தர்மபுரி மாவட்டத்திலுள்ள காராப்பாடி ஆகிய இடங்களில் இப்பணிகள் முடிவடைந்துள்ளன. திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள தென்மலையில் இப்பணி முடிவடையும் நிலையிலுள்ளது. இத்திட்டத்தின்கீழ் வனப்பகுதியிலுள்ள புங்கம் விதைகளிலிருந்து தாவர எரிப்பொருட்கள் மூலம், மின்சாரம் உற்பத்தி செய்து தெருவிளக்கு எரியவும், சமைப்பதற்கு சாண எரிவாயுக் கலன்கள் வழங்கி, அங்கு எரிசக்திப் பாதுகாப்பு பெறும்வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகமும், உலக வங்கி நிதியுடன் செயல்படுத்தும் திட்டத்தின்கீழ் மேலும் 5 குக்கிராமங்களை தெரிவு செய்துள்ளது.





### 2. மாற்றியமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டம்

முன்னதாக 21 வட்டாரங்களில் மட்டும் செயல்படுத்தப்பட்டு வந்த ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டத்தை, புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம், எல்லா ஊரக மாவட்டங்களிலும் செயல்படுத்தும் விதமாக மாற்றியமைத்துள்ளது. இத்திட்டச் செலவிற்காக ரூ. 145.00 இலட்சங்கள் ஒதுக்கி, 14 மாவட்டங்களில் செயல்படுத்த, மாநில அரசு 2005-2006-ல் ஒப்புதல் அளித்தது. அதே அளவு நிதியான ரூ. 145.00 இலட்சம், நிர்வாகச் செலவுக்காக புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தால் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் 3 தொகுப்பு கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு, விரிவான எரிசக்தித் திட்டம், மாவட்ட அளவிலான இத்திட்டத்திற்கான அமைப்பு (ஊரக வளர்ச்சித் துறை அலுவலகத்தில்) தயாரிக்கும். இதற்கு அங்கேயே உள்ள மாவட்ட தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள் உதவி செய்யும். அவற்றிற்கு மாவட்ட அளவிலான திட்ட அமைப்பு, (தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையிலுள்ளது) மாநில அளவிலான தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்துடன் இணைந்து வழிமுறை அளிக்கும். இத்திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது.

### 3. விளம்பரம் மற்றும் விழிப்புணர்வுப் பணிகள்

புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் பயன்பாட்டினை விரிவுபடுத்தவும், எரிசக்திச் சிக்கனத்தைத் தொழிற்சாலைகள் மற்றும் பிற நிறுவனங்களில் செயல்படுத்தவும், தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை கருத்தரங்குகள் மற்றும் கண்காட்சிகளை நடத்தி வருகின்றது. அதன் காரணமாக பெரும்பாலான ஊராட்சிகள், சூரிய ஒளி தெரு விளக்குகள், வீட்டு விளக்குகள், தாவர சக்தி வாயுக்கலன்கள் மற்றும் சாண எரிவாயுக் கலன்கள் ஆகியவற்றின் சிறப்பான பலன்களை அறிந்துள்ளதன் காரணமாக, அத்தகைய அமைப்புகளை நிறுவி தொடர் மின் செலவைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றன. மேலும் 120 பொறியியல் கல்லூரிகளில் எரிசக்தி மன்றங்கள் அமைத்து, புதுப்பிக்கத்தக்க எரிசக்திகளின் சிறந்த பலன்களை, மாணவர்களுக்குத் தெரியப்படுத்தி, மக்களின் அன்றாட தேவைகளுக்கேற்ப, அவற்றை எளிதில் பயன்படுத்தும் வகையில் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு மாணவர்கள் ஊக்கப்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இராஜீவ் காந்தி புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நாளான ஆகஸ்ட் 20-ஆம் நாள் அன்று மாவட்ட அளவில் எல்லா மாவட்டங்களிலும், மாநில அளவிலும், பேரணிகள், மாணவர்களுக்கான போட்டிகள், கலை விழா மற்றும் தாவர எரிபொருளான புங்கம் மரக்கன்றுகள் நடுதல் போன்ற நிகழ்ச்சிகளுடன் கொண்டாடப்பட்டது. அப்பொழுது, தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையால் தயாரிக்கப்பட்ட "குளோபல் வார்மிங்" என்ற ஆங்கிலக் கையேடு ஒன்று வெளியிடப்பட்டது. இதன் தமிழாக்கமான "சூடாகும் பூமி" என்ற கையேடு, ஏற்கனவே, பூமி நாளான 22-4-2007 அன்று வெளியிடப்பட்டது.

**4. புதுப்பிக்கத்தக்க எரிசக்திப் பூங்கா**

புதுப்பிக்கத்தக்க எரிசக்திச் சாதனங்களின் பயன்பாடு குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக, பல்வேறு நிறுவனங்களில் புதுப்பிக்கத்தக்க எரிசக்திப் பூங்கா நிறுவப்படுகிறது. மாவட்ட அளவில் நிறுவப்படும் முதல் பூங்காவிற்கு 75 சதவீதமும், அதே மாவட்டத்தில் 2-வது பூங்காவிற்கு 50 சதவீதமும் மானியமாக இந்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் அளிக்கிறது. இதுவரை மொத்தம் 19 பூங்காக்கள், 18 மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. மேலும் சில பூங்காக்களுக்கு, புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் ஒப்புதல் அளித்திருந்தாலும் அமைச்சகத்தின் சில நடைமுறைகளைப் பின்பற்ற முடியாமல் உள்ளதால், அவற்றைச் செயல்படுத்த முடியாத நிலையில் உள்ளது. அவற்றை மாற்றியமைக்குமாறு அமைச்சகம் , கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், சென்னை கோட்டூர்புரத்திலுள்ள தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தில், மாநில அளவிலான எரிசக்திப் பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது. புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம், பூங்கா அமைக்கும் செலவினத்திற்காக ரூ.89.00 இலட்சம் அளவிற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதன் கட்டுமானப் பணிக்காக மாநில அரசு ரூ. 52.00 இலட்சம் வழங்கியுள்ளது.

**5. எரிசக்திச் சிக்கனம்**

தற்போதைய தலையாய பிரச்னை உலக வெம்மையாகும். அதைக் கட்டுப்படுத்த, நிலத்தடி எரிபொருட்களை அதிக அளவு



பயன்படுத்துவதால் ஏற்படும், உலகை மாசுபடுத்தும் வாயுக்களான-பசுமைக்குடில் வாயுக்களைக் குறைக்க வேண்டியது முக்கியத் தேவையாகிறது. அதற்கு எரிசக்தித் திறன் மற்றும் சிக்கன நடவடிக்கைகள் எடுப்பது மிக அத்தியாவசியமாகிறது. 2007-2008 ஆண்டில் மாநில அரசு, ஊராட்சிகளிலுள்ள தெரு விளக்குகளில் வழக்கமான குழல் விளக்குகளுக்குப் பதில் 1,000 சிறு குழல் விளக்குகள் அமைக்க ரூ. 6.50 இலட்சம் வழங்கியுள்ளது. இந்த சிறுகுழல் விளக்குகள், குழல் விளக்குகளைவிட 60 சதவீதத்திற்கும் குறைவான மின்சாரத்தையே செலவழிக்கின்றன. பின்வரும் காலங்களில், மேலும் பல ஊராட்சிகளுக்கு இத்திட்டம் விரிவாக்கப்பட உள்ளது.

**6. மின்கலத்தால் இயங்கும் வாகனங்கள்**

பெட்ரோலிய பொருட்களின் பயன்பாட்டை குறைக்கவும், அதைக் கொண்டு இயங்கும் வாகனங்கள் வெளியேற்றும் நச்சுப்புகையைக் கட்டுப்படுத்தவும், மின்கலத்தால் இயங்கும் வாகனங்களைப் பயன்படுத்துவது ஒரு சிறந்த வழியாகும். இந்த வாகனங்கள் பெட்ரோல் இல்லாமல் இயங்கவல்லன. சத்தம் வெளிப்படுத்துவதில்லை, சுற்றுப்புறத்தை மாசுபடுத்துவதும் இல்லை. மிருகக்காட்சி சாலை போன்ற இடங்களில் குறைந்த அளவு தூரத்திற்கு மக்களைக் கொண்டு செல்வதற்கு மிக உகந்ததாகும். நிறுவனங்கள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் இத்தகைய வாகனங்களைப் பயன்படுத்தவதற்கு, இந்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம், அதன் விலையில் 33 விழுக்காடு வரை மானியம் வழங்குகிறது. அதன் பயன்பாட்டை மேலும் ஊக்குவிப்பதற்காக, மாநில அரசு 2007-2008 ஆம் ஆண்டில், வண்டலூர் மிருக காட்சிச் சாலைக்கு, 16 இருக்கைகள் கொண்ட 2 வேன்களுக்கு கூடுதல் மானியமாக ரூ.10.00 இலட்சம் வழங்கியுள்ளது.

**7. மதிப்பீடு ஆய்வு**

மாநிலத்தில் நிறுவப்பட்டுள்ள காற்றாலைகள் பற்றிய தகவல்கள் மற்றும் அதன் செயல்பாடுகளை மதிப்பீடு செய்யும் ஆய்வு ஒன்றை மேற்கொள்ள, மாநில அரசு 2007-2008 ஆண்டில் ரூ.5.00 இலட்சம் வழங்கியுள்ளது.

அரசு மானியத்துடன் 2002-2003 முதல் 2005-2006 வரையுள்ள ஆண்டுகளில் நிறுவப்பட்டுள்ள புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைப்புகளான சூரிய ஒளித் தெருவிளக்குகள், சூரிய ஒளி வீட்டு

விளக்குகள், சூரிய வெப்பச் சுடுநீர்க் கலன்கள், சூரிய வெப்பச் சுடுகாற்று அமைப்புகள் மற்றும் கழிப்பறையுடன் இணைந்த எரிவாயுக் கலன்கள் ஆகியவற்றை ஆய்வு செய்ய, மாநில அரசு 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.8.00 இலட்சம் வழங்கியுள்ளது.

**8. ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகள்**

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை அண்ணா பல்கலைக் கழகத்துடன் இணைந்து கீழ்காணும் ஆராய்ச்சித் திட்டங்களை ரூ.40.00 இலட்சம் செலவில் மேற்கொண்டுவருகிறது. இந்தச் செலவை மாநில அரசும், அண்ணா பல்கலைக்கழகமும் சரிசமமாக ஏற்கும்.

(i) இரவிலும், விடியற்காலையிலும், சமைப்பதற்கு ஏற்றாற்போல், வெப்பச்சக்தியைச் சேமிக்கும் ஆற்றல் கொண்டதான சூரிய சக்திச் சமைப்பான்களை (Solar Cooker) உருவாக்குவது.

(ii) எரிசக்தி திறன்மிக்க கட்டடங்களை சூரிய வெப்பத்தைத் திரட்டிப் பயன்படுத்தும் வகையில் (Solar passive architecture) வடிவமைப்பது.

(iii) சர்க்கரை ஆலைகளில் இணை மின் உற்பத்தி திட்டங்களில் கிடைக்கும் வெப்ப சக்தியைத் (Co-generation) பயன்படுத்தும் வகையில் கரும்புச்சக்கை உலர்த்தும் கலன்களை வடிவமைப்பது.

**9. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்**

மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், அரசு 2007-2008 ஆம் ஆண்டில், கோயம்புத்தூர், கன்னியாகுமாரி மற்றும் தேனி ஆகிய 3 மாவட்டங்களில் 99 சூரியஒளித் தெருவிளக்குகளை அமைப்பதற்கு ரூ.29.70 இலட்சம் வழங்கியுள்ளது.

**10. சிறப்புப் பொருளாதார மண்டலம்**

புதுப்பிக்கத்தக்க எரிசக்திச் சாதனங்களை தயாரிப்பதற்கான, ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்தை தமிழ்நாட்டில், இந்திய அரசின் ஒப்புதலுடன் அமைப்பதற்கு, தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை நடவடிக்கை எடுத்துள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் செங்கல்பட்டு வட்டத்தில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சாதனங்களை மட்டும் தயாரிக்கக்கூடிய, உலகளவில் முதலாவதான சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒன்றை அமைக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் 14-7-2007 அன்று மாநில அரசுக்கும் தனியார் முதலீட்டாளர்களுக்கும் இடையே கையொப்பமானது.





தாவர சக்தி இந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் தாவரசக்தி கொதிகலன், வாயுக் கலன், டைஜஸ்டர்ஸ், சிறப்பு வாயு என்ஜின்கள், சூரிய ஒளிச் சாதனங்கள்/ அமைப்புகள், சூரிய வெப்ப அமைப்புகள், காற்றாலைகள், புனல் இயந்திரங்கள் மற்றும் கார்பன் எரிமின்கலன் ஆகியவற்றை தயாரிக்கும் சுமார் 40 உற்பத்தி நிறுவனங்கள் பங்கேற்பார்கள். இடம் பெறும் நிறுவன உரிமையாளர்கள் மூலம் ரூ.2,300 கோடிக்கு மேலாக மூதலீடு செய்யப்படும். 5,000 நபர்களுக்கு நேரடியாகவும், 10,000 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்கும்.

**IV. 2008–2009 ஆம் ஆண்டில் பகுதி–2 திட்டத்தின்கீழ் புதிய திட்டங்கள்**

2008-2009 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் பகுதி-2 திட்டங்களுக்காக ரூ.75.40 இலட்சம் நிதி ஒதுக்க அரசு தீர்மானித்துள்ளது :

| வ. எண் | திட்டங்கள் | 2008-09 ஆம் ஆண்டிற்கான மொத்தச் செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சூரிய சக்தியால் இயங்கும் தடுப்பூசி குளிர்சாதனப் பெட்டி (5 எண்கள்) | 10.00 |
| 2 | தொகுப்பு வீடுகளுக்கு சூரிய ஒளி வீட்டு விளக்குகள் (100 எண்கள்) | 15.00 |
| 3 | ஊராட்சிகளில் காற்று மின்னாக்கிகள் அமைப்பது (5 x 1 கி. வாட்) | 12.50 |
| 4 | அரசு மருத்துவமனைகள், விடுதிகளுக்கு சூரிய சக்தி சுடுநீர் அமைப்புகள் (10000 லிட்டர்) | 20.00 |
| 5 | நுண்புனல் மின் நிலையம் அமைத்தல் (5 x 5 கி.வாட்) | 10.00 |
| 6 | புதுப்பிக்கத்தக்க எரிசக்திச் சாதனங்களுக்கான சோதனைக் கருவிகள் | 3.90 |
| 7 | புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பற்றிய பயிற்சித் திட்டம் | 4.00 |
| | மொத்தம் | 75.40 |

## மின்சார ஆய்வுத் துறை

### முன்னுரை மற்றும் நிர்வாகம்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில், மின்சாரம் பொதுப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. மின்சார சட்டம், 2003-இல் (2003 ஆம் ஆண்டின் 36-வது சட்டம்) இந்திய மின்சார சட்டம், 1910, மின்சார (வழங்கல்) சட்டம், 1948 மற்றும் மின்சார ஒழுங்குபடுத்துதல் ஆணைய சட்டம், 1998, ஆகியவைகள் நீக்குவதற்கு சட்டமியற்றப்பட்டுள்ளது. மேற்கண்ட சட்டம், 10-06-2003 முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.

செப்டம்பர் 1961-லிருந்து அரசு தலைமை மின் ஆய்வாளரை துறைத் தலைவராக கொண்டு மின்சார ஆய்வுத் துறை உருவாக்கப்பட்டது, 01-08-1993 முதல் தலைமைச் செயலகத்தில் / எரிசக்தி துறை தனியாக உருவாக்கப்பட்டபோது, அத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் மின் ஆய்வுத் துறை வந்தது.

### செயல்பாடுகள்

மின்சார ஆய்வுத் துறையிடம் கீழ்க்கண்ட கடமைகளும் செயல்பாடுகளும் ஒப்படை செய்யப்பட்டுள்ளது:—

1. 2003, ஜூன் 10 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வந்த, மின்சார சட்டம், 2003 (சட்டம் 36/2003) இன்கீழ் ஒழுங்குமுறைகள் (regulations) விதிக்கப்படும் வரையில், இந்திய மின்சார விதிகள் 1956 இன்கீழ் ஆய்வுகள் மற்றும் பணிகள் மேற்கொள்ளுதல்.
2. தமிழ்நாடு மின்தூக்கி சட்டம், 1997 (Tamil Nadu Lift Act, 1997) மற்றும் தமிழ்நாடு மின் தூக்கி விதிகள், 1997 (Tamil Nadu Lift Rules, 1997) இச்சட்டத்தை நடைமுறைப்படுத்த தினசரிகளில் விளம்பரம் செய்வதன்மூலம் அரசு உறுதியாக நடவடிக்கை எடுத்து வருகிறது.
3. தமிழ்நாடு திரையரங்க (ஒழுங்குமுறை) விதிகள், 1957-இன்கீழ் திரையரங்குகளின் மின்சாதனங்கள் நிறுவுதல் தொடர்பாக குறிப்பிட்டுள்ள கடமைகள்.



4. மின்சார தொழில்நுட்பம் தொடர்புடைய இந்திய தர நிர்ணயங்களை உருவாக்கும் இந்திய தர நிர்ணய குழுமத்தில் உறுப்பினராக பணிபுரிதல்.
5. அரசு தலைமை மின் ஆய்வாளர், இந்திய மின்சார விதிகள், 1956-இன் விதி எண் 45-ன்கீழ் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு மின்சார உரிமம் வழங்கும் வாரியத்திற்கு பதவி வழியின் காரணமாக ஏற்கப்பட்ட தலைவராக பணிபுரிதல்.
6. அரசு தலைமை மின் ஆய்வாளர், தமிழ்நாடு திரையரங்க (ஒழுங்குமுறை) விதிகள், 1957-இன்படி உருவாக்கப்பட்ட திரைப்படக் கருவி இயக்குனர்களுக்கான தேர்வாணையத்திற்கு பதவி வழியின் காரணமாக ஏற்கப்பட்ட தலைவராக பணிபுரிதல்.
7. சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு, எரிசக்தி ஒரு அவசியமான இடு பொருளாகிறது. எரிசக்தி தேவை இயற்கையாக கிடைக்கும் எரிபொருளை எரிப்பதன்மூலம் பெறப்படுகிறது.

அதிக வள ஆதாரங்களை சேமிக்கக்கூடியதே எரிசக்தி திறப்பாடு ஆகும். இது தேசிய வள ஆதாரங்களை பயன்படுத்துவதில் முன்னேற்றம், எரிசக்தி இறக்குமதியினை குறைத்தல் வணிகத்தில் சமநிலை, அயல்பரிமாற்றத்தில் சேமிப்பு, புதிய எரிசக்தி உற்பத்தி வசதிகளுக்கு தேவையான மூலதனத்தை குறைத்தல் மற்றும் எரிசக்தி பயன்பாடு மற்றும் உற்பத்தியால் ஏற்படுகின்ற சுற்றுப்புற தூய்மைக்கேடுகளை குறைத்தல் ஆகிய எண்ணற்ற பயன்களை அளிக்கக் கூடியதாகும்.

இதனை எய்துவதற்கு ஏதுவாக மத்திய அரசு எரிசக்தி சேமிப்புச் சட்டம் 2001-ஐ ஓர் அறிவிக்கையின்மூலம் வெளியிட்டது. இச்சட்டத்தின் பிரிவு 15(d)-இல் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி தமிழ்நாட்டில், எரிசக்தி சேமிப்புச் சட்டம், 2001 (மத்திய சட்டம் 62/2001)-ஐ நடைமுறைப்படுத்தவும், ஒருங்கிணைக்கவும், கட்டுப்படுத்தவும், மின் ஆய்வுத் துறையை, மாநில ஒருங்கிணைப்பு முகமையாக (Designated Agency) தமிழக அரசு ஓர் அறிவிக்கைமூலம் நியமித்துள்ளது.

[2008 ஏப்ரல் 3

எரிசக்தி சிக்கன நடவடிக்கை மூலமாக உலக தட்பவெப்ப நிலை மாறுபாட்டில் பெரும் பங்கு வகிக்கும் கரியமில வாயு வெளியேற்றத்தைக் குறைப்பது சிறந்த வழிமுறை என தமிழக அரசு கருதுகிறது.

எரிசக்தி சேமிப்பு நடவடிக்கைகள் குறித்த பல்வேறு திட்டங்களை மாநில ஒருங்கிணைப்பு முகமை நிறைவேற்றுவதற்கு ஏதுவாக மாநில எரிசக்தி சேமிப்பு நிதி மாநில அரசால் 2007-இல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2007-2008 ஆம் நிதி ஆண்டில் எரிசக்தி சிக்கன நடவடிக்கைகளுக்காக மாநில அரசும் மத்திய அரசும் பல்வேறு திட்டங்களுக்கு ஒப்புதல் மற்றும் நிதியும் வழங்கியுள்ளன. இதன் அடிப்படையில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் தமிழ்நாடு எரிசக்தி ஒருங்கிணைப்பு முகமையால் மேற்கொள்ளப்படுகின்றன:—

➤ (அ) தொலைக்காட்சி மற்றும் நாளேடுகளில் எரிசக்தி விழிப்புணர்வு குறித்த பிரச்சாரம்

(ஆ) தமிழ்நாடு அரசு மின் ஆய்வுத் துறை மற்றும் அரசுத் துறைகளில் உள்ள அலுவலர்களுக்கும் விழிப்புணர்வு பயிற்சிகள் அளித்தல்

➤ அரசு கட்டடங்களில் எரிசக்தி சிக்கன வழிமுறைகளை தணிக்கையின்மூலம் கண்டறிந்து செயல்படுத்துதல்

➤ மற்ற மாநில ஒருங்கிணைப்பு முகமை மற்றும் எரிசக்தி சேமிப்பு குழுமத்துடன் தொடர்பு கொள்வதற்காக இணைய தளம் நிறுவுதல்.

(அ) மத்திய அரசு சான்று பெற்றுள்ள எரிசக்தி மேலாளர், எரிசக்தி தணிக்கையாளர் மற்றும் அதிக அளவில் எரிசக்தியை உபயோகிக்கும் வரையறுக்கப்பட்ட நிறுவனங்களைக் கண்டறிந்து விவர குறிப்பு ஏற்படுத்துதல்.

(ஆ) இவர்களுக்காக மேலாண்மை பயிற்சி மற்றும் கலந்தாய்வு கூட்டங்கள் நடத்துதல்



2008 ஏப்ரல் 3]

➤ தமிழ்நாடு எரிசக்தி முகமைக்கு தகவல் தொழில்நுட்பம், கணினி மற்றும் மென் பொருட்கள் அடங்கிய உள்ளமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்

➤ தேசிய எரிசக்தி சிக்கனம் குறித்த விழிப்புணர்வு நாளாக டிசம்பர் 14ஐ அனுசரித்தல்

➤ அதிக அளவில் பயனீட்டாளரால் உபயோகப்படுத்தப்படும் மின் சாதனங்களான குழல் விளக்குகள், குளிர்சாதன கருவிகள், குளிர்சாதனப் பெட்டிகள், பகிர்வு மின் மாற்றிகள் போன்ற சாதனங்களின் உபயோகம் மற்றும் தேவை குறித்து மாநில அளவில் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரம் மேற்கொள்ளுதல்

2008-2009 ஆம் நிதி ஆண்டில் இத்தகைய திட்டங்கள் தீவிரப்படுத்தப்பட்டு மின்சாரம் மற்றும் எரிபொருள் பற்றாக்குறையை சமாளிக்கும் பொருட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

**இந்திய மின் விதிகள், 1956—ன்கீழ் வரும் செயல்பாடுகள்**

1. மின் உற்பத்திக் கழகங்கள், தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் உயர் மின்னழுத்த நுகர்வோர்கள் ஆகியோரால் நிறுவப்படும் உயர் மற்றும் அதிக உயர் அழுத்த மின்னமைப்புகளுக்கு இந்திய மின்சார விதிகள் 1956-இன் 63 ஆவது விதியின்படி ஒப்புதல் அளித்தல்.

2. உயர் மின்னழுத்த நிறுவனங்கள் மற்றும் மின் வணிக நிறுவனங்கள் ஆகியவற்றை இந்திய மின்சார விதிகள் 1956-இன் விதி எண் 46-இன்கீழ் காலமுறை ஆய்வு செய்தல்.

3. மின் விநியோகஸ்தர்களுடைய, உயர் மற்றும் அதிக உயர் மின்னழுத்த அமைப்புகளை, இந்திய மின்சார விதிகள், 1956-இன் விதி எண் 46-இன்கீழ் காலமுறை ஆய்வு செய்தல்.

4. இந்திய மின்சார விதிகள் 1956-இன் விதி 44-ஏ-இன்கீழ் மின் உற்பத்தி, மின் விநியோகம் மற்றும் மின் உபயோகம் ஆகியவற்றில் எற்படும் மின் விபத்துகள் குறித்து தகவல் பெறப்பட்டதும், விபத்து நடந்த இடத்தில் புலனாய்வு செய்தல் மற்றும் அறிக்கை தயாரித்தல்.

[2008 ஏப்ரல் 3

**தமிழ்நாடு மின்சார நுகர்வு அல்லது விற்பனை மீதான வரிச் சட்டம் மற்றும் விதிகள், 2003**

இச்சட்டம் ஏற்கெனவே இம்மாநிலத்தில் அமலில் இருந்த தமிழ்நாடு மின்சார நுகர்வு வரிச் சட்டம், 1962, மற்றும் தமிழ்நாடு மின் தீர்வை சட்டம், 1939 ஆகியவற்றிற்கு மாறாக 16-6-2003 முதல் புதியதாக அமல்படுத்தப்பட்ட ஒன்றாகும்.

**அ. இச்சட்டத்தின்படி மின் வரி**

(i) சுயமாக உற்பத்தி செய்து பயன்படுத்திக் கொள்ளப்படும் மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு 10 காசுகள்.

(ii) தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் ஏனைய உரிமதாரர்களால் விற்பனை செய்யப்படும் மின்சாரத்திற்கான நுகர்வு கட்டணத்தின்மீது 5 விழுக்காடு ஆகும்.

**ஆ விலக்களிக்கப்பட்டது**

கீழ்க்கண்ட இனங்களுக்கு இந்த மின் வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது:—

1. அனைத்து அரசுத் துறை பயன்பாடுகள்
2. இரயில்வே துறை பயன்பாடுகள்
3. உள்ளாட்சி அமைப்புகளின் பயன்பாடுகள்
4. தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் ஏனைய உரிமதாரர்களால் விற்பனை செய்யப்படும் வீட்டு உபயோகம், குடிசைக்கான மின் விநியோகம் மற்றும் விவசாயப் பயன்பாட்டிற்கென வழங்கப்படும் மின்சாரம்.
5. சிறப்புப் பொருளாதார மண்டலங்களிலுள்ள தொழில் நிறுவனங்கள் மற்றும் இதர அமைப்புகளின் பயன்பாட்டிற்காக விற்பனை செய்யப்படும் மின்சாரம்.
6. தமிழ்நாட்டில் முதன்முறையாகத் தொடங்கப்படும் புதிய தொழில் நிறுவனங்களின் பயன்பாட்டிற்காக விற்பனை செய்யப்படும் மின்சாரத்திற்கு முதலீடு செய்யப்படும் தொகையினைப் பொறுத்து வர்த்தக ரீதியான உற்பத்தி தொடங்கும் நாள் முதல், 3/4/5 ஆண்டுகளுக்கு விலக்களிக்கப்படும்.



2008 ஏப்ரல் 3]

**திருத்தங்கள்**

1. தமிழ்நாடு மின்சார நுகர்வு அல்லது விற்பனையின் மீதான வரி (திருத்தச்) சட்டம், 2007-ன்படி, (தமிழ்நாடு அரசு 2007 ஆம் ஆண்டு 38-வது சட்டம்), தமிழ்நாடு மின்சார நுகர்வு அல்லது விற்பனையின் மீதான வரிச் சட்டம், 2003-க்கு, கீழ்க்கண்டவாறு திருத்தங்கள் வழங்கப்பட்டன:—

(i) பிரிவு 2-ன் 2 ஆம் கூறுக்குப் பின்னர், கூறு 2(A) புகுத்தப்பட்டு அதில், "பெரும அளவு தேவைப்பாட்டின் பேரில் கட்டணம்" என்ற சொற்றொடருக்குப் பொருள் அளிக்கப்பட்டுள்ளது.

(ii) பிரிவு 2-ன்கீழ் உள்ள கூறு (7)-க்குப் பதிலாக "நுகர்வுக் கட்டணம்" என்ற சொல்லுக்குப் பொருள் அளிக்கப்பட்டுள்ளது.

(iii) பிரிவு (2)-ன் கூறுகள் 8 மற்றும் 12 நீக்கப்பட்டன.

(iv) பிரிவு 3-ன் உட்பிரிவு (1)-ன் கூறுகள் (A) மற்றும் (b)-ல் உள்ள "நிகரக் கட்டணம்" என்ற சொல் "நுகர்வுக் கட்டணம்" என மாற்றப்பட்டன.

(v) பிரிவு 6-ன் உட்பிரிவு (1)-ன்கீழ் வரும் விளக்கத்தில் "மின் சக்தி கட்டணங்கள்" என்ற சொற்றொடர் "நுகர்வுக் கட்டணங்கள்" என மாற்றப்பட்டது.

(vi) பிரிவு 20-ன் உட்பிரிவு (1)-க்கான வரம்புரையில், "ஆனால் அத்தகைய நீக்கம் எதுவும் பாதித்தல் ஆகாது" என்ற சொற்றொடருக்கு பதில் "ஆனால், வேறுபட்டதொரு உட்கருத்து தோன்றினால் அன்றி, அத்தகைய நீக்கமானது பாதித்தல் ஆகாது" என்று மாற்றியமைக்கப்பட்டது.

2. தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனையின் மீதான வரி (திருத்தச்) சட்டம், 2008 (தமிழ்நாடு அரசு 2008 ஆம் ஆண்டு 5-வது சட்டம்)-ல் தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனையின் மீதான வரிச் சட்டம், 2003-க்கு திருத்தம் வழங்கப்பட்டது. பிரிவு 14 அதன் (1) ஆம் உட்பிரிவாக மறு எண்ணிடப்பட்டு அதன்கீழ் உட்பிரிவுகள் (2) மற்றும் (3) சேர்க்கப்பட்டுள்ளன. இந்த உட்பிரிவுகளின்படி அரசானது, அறிவிக்கையின் வாயிலாக, வரம்புக்குட்படுத்தப்பட்ட மின்சார உற்பத்தி நிலையங்களின் சொந்த பயன்பாட்டிற்கான மின்சார நுகர்வின்மீது இந்தச் சட்டத்தின்படி செலுத்தத்தக்க மின்சார வரியைப்

பொறுத்தமட்டில் விலக்களிக்கலாம் அல்லது அதன் வீதத்தைக் குறைக்கலாம். மேலும், அவ்வாறு வழங்கப்பட்ட அறிவிக்கை எதனையும் நீக்கம் செய்யலாம்.

### தர நிர்ணய சோதனைக் கூடம் மற்றும் நடமாடும் ஆய்வுக் கூடங்கள்

அரசு தர நிர்ணய மின் ஆய்வுக் கூடம், சென்னையிலுள்ள கிண்டியிலுள்ளது. நடமாடும் ஆய்வுக் கூடங்கள் சென்னை, சேலம், திருநெல்வேலி, மற்றும் தர நிர்ணய சோதனைக் கூடம், மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சி ஆகிய நகரங்களில் இயங்கி வருகின்றன.

### 2008–2009 ஆம் ஆண்டிற்கான பகுதி–2 திட்டத்தின்கீழ் புதிய திட்டம்

| வ. எண் | திட்டப் பணியின் விவரம் | 2008-2009 ஆம் ஆண்டிற்கான மொத்தச் செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | மின் ஆளுமைத் தீர்வினை மின் ஆய்வுத் துறையின் மாவட்ட அளவிலான அலுவலகங்களுக்கு விரிவாக்குதல் | 13.30 |





## தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் 27-06-1991 ஆம் தேதி அன்று நிறுவப்பட்டது. இந்நிறுவனம் பாரத ரிசர்வ் வங்கியில் வங்கிசாரா நிதி நிறுவனமாக பதிவு செய்யப்பட்டு உள்ளது. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமானது தமிழ்நாடு மின் திட்டங்களுக்கு, குறிப்பாக மின் உற்பத்தி, மின் பங்கீடு மற்றும் மின் வினியோகத் திட்டங்களுக்குத் தேவையான நிதியைத் திரட்டுவதாகும். இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 50 கோடியாகும். இதில் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 22 கோடி.

### வைப்பீட்டுத் தொகைகள்

இந்நிறுவனம், வைப்பீட்டாளர்களுக்குப் பரிவோடு சிறந்த சேவை புரிந்தும், தொடர்ந்து இலாபம் ஈட்டியும் வைப்பீட்டுத் தொகையை அதிகரித்ததோடு மட்டுமின்றி வைப்பீட்டாளர்களின் மனதில் நிலையான இடத்தைப் பெற்றுள்ளது. மேலும் வைப்பீடுகளுக்கு அதிக வட்டி வழங்குவதாகக் கூறி சில தனியார் நிதி நிறுவனங்களின் செயல்கள் காரணமாக பாதிக்கப்பட்ட பொதுமக்கள் தமிழ்நாடு மின்விசை நிதி நிறுவனத்தின்மீது நம்பிக்கை கொண்டனர். இதுமட்டுமன்றி, இந்நிறுவனம் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் அளிக்கும் வட்டியை விட ஒரு சதவிகிதம் அதிகம் வழங்குவதன் பயனாக 1991-1992 ஆம் ஆண்டில் ரூ. 2.09 கோடியாக இருந்த வைப்பீட்டுத் தொகை 07-03-2008 அன்று ரூ. 2,579.75 கோடியாக வளர்ந்துள்ளது. அதே போன்று, 1991-1992 ஆம் ஆண்டில் 816 ஆக இருந்த வைப்பீட்டாளர்களின் எண்ணிக்கை 07-03-2008 அன்று 2,64,220 ஆக வளர்ந்துள்ளது.

மேலும் இந்நிறுவனம் பிறிதொரு சாதனையாக 07-03-2008 அன்று வரை ரூ. 478.79 கோடிகளை ஓராண்டில் வைப்பீடாகப் பெற்றுள்ளது. இந்த நிதியாண்டின் இறுதியில், அதாவது மார்ச் 2008-இல் நிகர வைப்பீட்டுத் தொகை ரூ. 500 கோடியாக இருக்கும். இதற்குமுன் பெறப்பட்ட அதிகபட்ச நிகர வைப்பீட்டுத் தொகை, 2004-2005 ஆம் ஆண்டு பெறப்பட்ட நிகர வைப்பீட்டுத் தொகை ரூ.325.94 கோடி ஆகும்.

மேலும் தமிழ்நாடு மின்விசை நிதி நிறுவனம் 07-05-2007-விருந்து வைப்பீடுகளுக்கு அளித்து வரும் வட்டி விகிதம் கீழ்க்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது:—

| காலம் (Period) | வட்டி விகிதம்(%) ஓராண்டிற்கு (per annum) |
|---|---|
| 12 மாதங்கள் | 9.00 |
| 24 மாதங்கள் | 9.50 |
| 36, 48 & 60 மாதங்கள் | 10.00 |

இதுமட்டுமின்றி, இந்நிறுவனம் 58 வயது நிரம்பிய மூத்த குடிமக்களிடமிருந்து (Senior Citizens) பெறப்படும் 12 மற்றும் 24 மாதங்களுக்கான வைப்பீடுகளுக்குக் கூடுதலாக 0.25 சதவிகிதமும், 36, 48 மற்றும் 60 மாதங்களுக்கான வைப்பீடுகளுக்கு 0.50 சதவிகிதமும் வழங்கி வருகிறது.

**கடனுதவி**

இந்நிறுவனத்தால் திரட்டப்படுகின்ற நிதி தமிழ்நாடு மின் வாரியத்தின் மின் உற்பத்தி/ மின் பங்கீடு மற்றும் மின் விநியோகத் திட்டங்களுக்குக் கடனாக அளிக்கப்பட்டு வருகிறது. இந்நிறுவனம் தொடங்கிய நாள் முதல் ரூ. 7,806.49 கோடிகளை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குக் கடனாக அளித்துள்ளது. இதில் 07-03-2008 அன்று நிலுவையில் உள்ள நிகர கடன் தொகை ரூ. 3,080.32 கோடியாகும். மேலும், இந்நிறுவனம் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு நிறுவனம் ஆகியவற்றிற்கும் ரூ. 69.70 கோடி கடனுதவி அளித்துள்ளது. இந்நிறுவனம் மற்றொரு சாதனையாக, இந்த ஆண்டில் மட்டும் அதிகபட்ச நிகரக் கடன் தொகையாக ரூ. 635.81 கோடிகளை 07-03-2008 அன்று வரை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கி இதற்கு முன் 2004-2005 ஆம் ஆண்டு அதிகபட்ச நிகரக் கடன் தொகையாக ரூ. 330.49 கோடி என்ற சாதனையைக் கடந்துள்ளது.

**அரசுத் திட்டங்கள் செயலாக்கம்**

சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் இந்நிறுவனம் இதுவரை ரூ.309.66 கோடிகளை





(07-03-2008 வரை). வைப்பீட்டுத் தொகையாக 2,03,308 குழந்தைகளுக்காகப் பெற்றுள்ளது.

திருக்கோயில்களின் ஒருகால பூஜை திட்டத்தின்கீழ் ரூ.25.51 கோடிகளை 10,202 திருக்கோயில்களிடமிருந்து இந்நிறுவனம் வைப்பீட்டுத் தொகையாகப் பெற்றுள்ளது.

பள்ளி மாணவ, மாணவியரின் வருவாய் ஈட்டும் தாய் அல்லது தந்தை விபத்தில் இறந்து விட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ அவர்களது கல்வி மற்றும் பராமரிப்புக்காக, நிதி வழங்கும் திட்டத்தின்கீழ் ரூ.3.75 கோடிகளை (07-03-2008 வரை) வைப்பீட்டு நிதியாகப் பெற்றுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட 241 ஆதரவற்ற குழந்தைகள், பெண்கள் மற்றும் திருமணம் ஆகாத வளரிளம் பெண்களின் பெயரில் வைப்பீடு செய்ய அரசிடமிருந்து ரூ. 8.15 கோடிகளை வைப்பீடு நிதியாகப் பெற்றுள்ளது.

**இலாபம் மற்றும் ஈவுத் தொகை**

இந்நிறுவனம் தொடங்கப்பட்ட 1991 ஆம் ஆண்டிலிருந்தே தொடர்ந்து இலாபம் ஈட்டி வருகிறது. செலுத்தப்பட்ட மூலதனத்தில் 20 விழுக்காடு ஈவுத் தொகையாக பன்னிரண்டு ஆண்டுகளாக கடந்த 1995-1996 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து அரசிற்கு வழங்கி வருகிறது. 2006-2007 நிதியாண்டு வரை இந்நிறுவனம் ஈவுத் தொகையாக மொத்தம் ரூ.47.62 கோடிகளை தமிழ்நாடு அரசுக்கு வழங்கி உள்ளது.

**எதிர்காலத் திட்டங்கள்**

1. 2008-2009 ஆம் நிதியாண்டில், ரூ.300 கோடிகளை நிகர வைப்பீட்டுத் தொகையாக பொதுமக்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து திரட்ட திட்டமிட்டுள்ளது.

2. 2008-2009 ஆம் நிதியாண்டில், எரிசக்தி மற்றும் அடிப்படைக் கட்டுமானத் திட்டங்களுக்காக ரூ.1,200 கோடிகளை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குக் கடனாக வழங்கத் திட்டமிட்டுள்ளது.

3. இந்த நிதியாண்டில் மேலும் ரூ.50 கோடிகளை இதர நிறுவனங்களுக்குக் கடனாக வழங்கத் திட்டமிட்டுள்ளது.

## இணைப்பு—II

[91 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க]

## மானியக் கோரிக்கை எண் 35—பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2008—2009

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை 1976 ஆம் ஆண்டு நவம்பர் 6 ஆம் நாளில், 1973 ஆம் ஆண்டு திரு. வர்கீஸ் அவர்கள் தலைமையின்கீழ் அமைக்கப்பட்ட மாநில நிருவாகச் சீர்திருத்த ஆணையத்தின் பரிந்துரையின்பேரில், தோற்றுவிக்கப்பட்டது. அரசின் செயல்பாடுகளில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாகவும் அரசுப் பணியாளர்களின் எண்ணிக்கை அதிகமானதாலும் இத்துறை ஏற்படுத்தப்பட்டது. இத்துறை பின்வரும் இரண்டு அலகுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு அலகும் தனித் தனிச் செயலாளரின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகிறது.

(i) பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

(ii) பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி) துறை.

2. இத்துறையானது அறிவுரை வழங்கும் பணிகள், சட்டப்பூர்வமான பணிகள் மற்றும் நிருவாகப் பணிகள் ஆகிய முக்கியப் பணிகளை ஆற்றி வருகிறது.

### அறிவுரை வழங்கும் பணிகள்

"தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள் மற்றும் தலைமைச் செயலக அறிவுறுத்தல்கள்" ஆகியவற்றில் வரையறுக்கப்பட்டுள்ளபடி கீழ்க்கண்ட இனங்கள் தொடர்பாக அறிவுரை வழங்கும் ஒரு துறையாக பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை செயல்பட்டு வருகிறது:

(i) தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளின்கீழ் வரும் பல்வேறு பதவிகளுக்குக் காலியிட மதிப்பீட்டை நிர்ணயம் செய்தல், பதவி உயர்வு மற்றும் உயர் பதவியில் பணி நியமனம் ஆகியவற்றுக்கான தேர்ந்த பட்டியல் தயாரித்தல்;



(ii) அரசு அலுவலர்களின் பணியை வரன்முறைப்படுத்துதல் மற்றும் தகுதிகாண் பருவத்தினை முடித்தல் தொடர்பாக சிறப்பு/ பொது விதிகளைத் தளர்த்துவது பற்றிய கருத்துருக்களைப் பரிசீலனை செய்தல்;

(iii) அடிப்படை விதிகளில் உள்ள பல்வேறுபட்ட காப்புரைகள் குறித்த ஆலோசனை வழங்குதல்;

(iv) தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி பொதுவிதி 35-இன்கீழ் முதுநிலையைத் திருத்துவது குறித்த கருத்துருக்களை ஆய்வு செய்தல்;

(v) அரசு பணியில் நியமனம் செய்ய வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதிக்குச் சமமான கல்வித் தகுதி நிர்ணயித்தல் / அங்கீகரித்தல் குறித்த கருத்துருக்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் அமைக்கப்படும் அங்கீகரிப்புக் குழு முன் வைத்தல் மற்றும் மேற்படி குழுவின் பரிந்துரையின்பேரில் ஆணை வெளியிடுதல்.

### சட்டப்பூர்வமான பணிகள்

அரசுப் பணியாளர்களின் பணிகள் தொடர்பாக பின்வரும் சட்ட மற்றும் ஒழுங்கு முறை விதிகளை இத்துறை நிருவகித்து வருகிறது:

(அ) மாநில அரசின் பல்வேறு துறைகளில் பணிபுரியும் அனைத்து வகை அரசுப் பணியாளர்களின் பணியினை முறைப்படுத்தும் பணி விதிகள் (அகில இந்தியப் பணிகள் நீங்கலாக);

(i) தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி விதிகள் (பகுதி I மற்றும் II);

(ii) தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்தை விதிகள், 1973;

(iii) தமிழ்நாடு அரசு அடிப்படை விதிகள்;

(iv) தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள்;

(v) தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள், 1955.

[2008 ஏப்ரல் 3

(ஆ) அனைத்து அரசுத் துறைகளுக்கும் உள்ள பொதுவான, சில குறிப்பிட்ட பணியாளர் வகையினரை முறைப்படுத்தும் பணி விதிகள்:

(i) தமிழ்நாடு அமைச்சுப் பணி சிறப்பு விதிகள்;

(ii) தமிழ்நாடு அடிப்படைப் பணி சிறப்பு விதிகள்;

(iii) தமிழ்நாடு பொது சார்நிலைப் பணி சிறப்பு விதிகள் இனம் XXII.

(இ) தலைமைச் செயலகப் பணி:

(i) தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணி சிறப்பு விதிகள்;

(ii) தமிழ்நாடு பொதுப்பணி சிறப்பு விதிகள்-இனம் XII மற்றும் XII A.

(ஈ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (Tamil Nadu Public Service Commission):

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகள், 1954;

(உ) தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005.

தமிழ்நாடு தகவல் பெறும் உரிமை (கட்டண) விதிகள், 2005.

**அரசு அலுவலர்கள்**

தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு அரசின் அலுவல்கள் பின்வரும் விதிகளின்படி இத்துறையின்கீழ் நிருவகிக்கப்பட்டு வருகின்றன:

(i) தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள் மற்றும் தலைமைச் செயலக அறிவுறுத்தல்கள்;

(ii) அவ்வப்போது வெளியிடப்படும் மாண்புமிகு முதலமைச்சரின் நிலை ஆணைகள்;

(iii) தமிழ்நாடு தலைமைச் செயலக அலுவலகக் கையேடு.



2008 ஏப்ரல் 3]

**நிருவாகப் பணிகள்**

(i) தலைமைச் செயலகத்தில் ஓர் அலகு முறையின் (One Unit System) கீழ் வரும் அரசு சார்புச் செயலாளர்களின் நிலைவரை அனைத்துப் பணியாளர்களின் பணி அமைப்பு குறித்து இத்துறையில் கவனிக்கப்பட்டு வருகிறது.

(ii) மேலும் பணியாளர் சங்கங்களுக்கு அங்கீகாரம் அளித்தல் மற்றும் அவற்றின் கூட்டமைப்பு மன்றக் கூட்டங்களை நடத்துவது போன்ற பணிகளை இத்துறை செய்து வருகிறது.

(iii) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு மாநில தகவல் ஆணையம் மற்றும் நிருவாகச் சீர்திருத்தக் குழு ஆகியவை இத்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றன.

**பணியாளர் சங்கங்கள்**

(i) இந்த அரசு பொறுப்பேற்றபின், அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களின் நலத்தினைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் (மின்சாரம்) அவர்கள், தலைமைச் செயலக வளாகத்தில் இயங்கும் அரசு அங்கீகாரம் பெற்ற தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கம், தமிழ்நாடு தலைமைச் செயலக அலுவலர்கள் சங்கம், தமிழ்நாடு சட்டமன்றச் செயலக நிருபர்கள் சங்கம், தமிழ்நாடு அரசு தலைமைச் செயலக ஊர்தி ஓட்டுநர்கள் சங்கம் மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலக உதவியாளர்கள் மற்றும் அடிப்படைப் பணியாளர்கள் கிளைச் சங்கங்களின் நிர்வாகிகளுடன் பல்வேறு கோரிக்கைகள் குறித்து கலந்துரையாடல் நடத்தினார்.

(ii) மேலும், தலைமைச் செயலக ஊழியர்களின் நலன் பாதுகாக்கப்படும் வகையில் தலைமைச் செயலகப் பணியாளர்கள் அனைவரும் ஓரே சங்கமாக இயங்குவதெனவும் இதற்காகப் பதிவேடு எழுத்தர் முதல் கூடுதல் செயலாளர் வரை அனைவரையும் உறுப்பினர்களாகச் சேர்க்க வகை செய்யும் பொருட்டு சங்க துணை விதிகளைத் திருத்தம் செய்வதென தீர்மானம் செய்யப்பட்டது. இது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் (மின்சாரம்) அவர்கள் சம்பந்தப்பட்ட சங்க நிர்வாகிகளுடன் பேசினார். அதன் விளைவாக தமிழ்நாடு தலைமைச் செயலக அலுவலர்கள் சங்கம் தமிழ்நாடு தலைமைச் செயலக சங்கத்துடன் இணைந்து ஓரே சங்கமாகச் செயல்பட விருப்பம் தெரிவித்தது. இதனை ஆய்வு செய்து அரசு

ஆணை (நிலை) எண் 30, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (சே) துறை, நாள்: 22-02-2008-இல் தலைமைச் செயலக சங்க விதிகளுக்கு தக்க விதித் திருத்தங்கள் வெளியிடப்பட்டன.

(iii) மற்ற சங்கங்களின் இதர கோரிக்கைகள் பரிசீலனையில் பல்வேறு நிலைகளில் உள்ளன.

### அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் நலன்

1. அரசின் செயல்பாடு மற்றும் அரசின் நலத் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் மிக முக்கிய பணியில் ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஈடுபட்டுள்ளதால், அவர்களின் நல்லுறவின் அவசியத்தை இந்த அரசு உணர்ந்துள்ளது.

2. முந்தைய அரசு, அரசு ஊழியர்களின் பல்வேறு சலுகைகளைப் பறித்தது. இவ்வரசு அவைகளை மீண்டும் அரசு ஊழியர்களுக்கு வழங்கியதுடன், தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகள் பராமரிப்புச் சட்டம், 2003 (டெஸ்மா) திரும்பப் பெறுதல், பணி நியமன தடைச் சட்டம் விலக்கிக் கொள்ளுதல், வேலை நிறுத்த நாட்களை பணிக்காலமாக வரன்முறை செய்தல், முழு ஓய்வூதியம் பெற நிர்ணயிக்கப்பட்ட 33 ஆண்டுகள் என்றிருந்ததை 30 ஆண்டு பணிக்காலமாகக் குறைத்தல், பொங்கல் போனஸ் /கருணைத் தொகை வழங்கல், 6-வது ஊதியக் குழுவின் நிலுவைத் தொகையை மூன்று தவணைகளில் வழங்கல் பண்டிகைக்கால முன்பணத்தை ரூ. 1,000-லிருந்து ரூ. 2,000/-ஆக உயர்த்துதல் போன்ற பல சலுகைகளையும் வழங்கியுள்ளது.

### அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் நலன் குறித்து 2008–2009 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட சலுகைகள்

1. அகவிலைப்படி தற்போதுள்ள 41 சதவிகிதத்தோடு கூடுதலாக 6 சதவிகிதம் உயர்த்தப்பட்டு மொத்த அகவிலைப்படி 47 சதவிகிதமாக 01-01-2008 முதல் வழங்கப்படுவதோடு, இந்த அகவிலைப்படி உயர்வு நிலுவைத் தொகை ரொக்கமாக வழங்கப்படும்.

2. ஓய்வூதியர்களிடமிருந்து பிப்ரவரி 2008 வரை பெறப்பட்ட மருத்துவச் செலவின விண்ணப்பங்கள் அனைத்திற்கும் ஈட்டுத் தொகை வழங்க ஏதுவாக ரூ. 10 கோடி மானியமாக அளிக்கப்படும்.





3. வயதான காலத்தில் ஓய்வூதியர்கள் பெறும் மருத்துவச் சிகிச்சைகளுக்கு உரிய தொகையை மீளப் பெறும் வகையில், மாதந்தோறும் ரூ. 50/- பிடித்தம் செய்து மேற்கொண்ட மருத்துவச் செலவினத்தில் தற்போது உள்ள 75 சதவிகிதம் அல்லது ரூபாய் ஐம்பதாயிரம் என்ற உச்ச வரம்பு, 75 சதவிகிதம் அல்லது ரூபாய் ஒரு இலட்சம் என உயர்த்தி வழங்கப்படும்.

### நிருவாகச் சீர்திருத்தக் குழு

1. வெளிப்படையான மற்றும் ஊழலற்ற நிருவாகத்தினை தலைமைச் செயலகம் முதல் கிராமம் வரை அளிப்பதற்காக, சென்னை உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி டாக்டர் ஏ.கே. இராஜன் அவர்கள் தலைமையில் பத்து உறுப்பினர்கள் மற்றும் ஒரு உறுப்பினர்—செயலர் கொண்ட நிருவாகச் சீர்திருத்தக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது.

2. நிருவாகத்தில் வெளிப்படையான தன்மையை ஊக்குவிப்பதற்காகவும், ஊழல் மற்றும் சிவப்பு நாடா முறை ஆகியவற்றை நீக்குவதற்காகவும் நிருவாகச் சீர்திருத்தக் குழு தனது குறிப்பாய்விற்கான (Terms of Reference) தலைப்புகளை வெளியிட்டுள்ளது.

3. நிருவாகச் சீர்திருத்தக் குழு, சென்னை பெரியார் திடல், பெரியார் மைய கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. அக்குழு தனது குறிப்பாய்விற்கான தலைப்புகள் குறித்து பல அம்சங்களை விவாதிக்க இதுவரை பதின்மூன்று கூட்டங்களை நடத்தியுள்ளது.

4. நிருவாகச் சீர்திருத்தக் குழுவின் குறிப்பாய்வுத் தலைப்புகள் குறித்த பொது வினாப் படிவம் ஒன்று தயாரிக்கப்பட்டு, அது அனைத்து துறைத் தலைவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களின் கருத்து கோரி அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் நிருவாகச் சீர்திருத்தக் குழுவின் உறுப்பினர்களைக் கொண்டு சில முக்கிய துறைகளுக்கான துணைக் குழுக்களும் அமைக்கப்பட்டு, அவரவர்களின் குறிப்பிட்ட துறைகளுக்குரிய சிறப்பு வினாப் புலங்களைத் தயாரித்து, அதனை அத்துறைகளுக்கு அனுப்பி அதன் மீது குறிப்பு வழங்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

5. இது குறித்து முன்னணி தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் வெளியிடப்பட்ட பொது அறிவிப்பினைத் தொடர்ந்து, பொது மக்களின் கருத்துகள் அடங்கிய சுமார் 1,700 மனுக்கள் பெறப்பட்டு, அவை குழுவின் ஆய்வில் உள்ளன.

[2008 ஏப்ரல் 3

6. இக்குழு வேலூர், கோவை, சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களுக்கு நேரில் சென்று, அம்மாவட்ட அலுவல் சாராதோர் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள் உட்பட முக்கிய அலுவலர்களுடன், அவரவர் தலைமையிடங்களில் அலுவல் நடைமுறைகள் குறித்து கலந்தாய்வுக் கூட்டங்களையும் நடத்தியுள்ளது. மேற்படி குழு தனது ஆய்வின் ஒரு பகுதியாக பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கல்வித் துறை, ஆதிதிராவிடர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறை மற்றும் வருவாய் துறை ஆகிய துறைகளின் கீழுள்ள துறைத் தலைமைகளுடன் ஏற்கெனவே மேற்படி துறைகளுக்கு அனுப்பப்பட்ட சிறப்பு வினாத் தொகுப்பிலுள்ள சிறப்பு அம்சங்கள் குறித்து கலந்தாலோசித்தது.

7. இக்குழு தனது முதல் அறிக்கையை அரசுக்கு விரைவில் சமர்ப்பிக்கும்.

**மக்கள் சாசனம்**

1. ஒவ்வொரு துறையிலும் மக்கள் சாசனத்தை உருவாக்க வேண்டுமென்று அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மக்கள் சாசனம் என்பது மக்களுக்கு அளிக்கப்படும் சேவைகள் குறித்து மக்களுடைய கேள்விகட்கு பதில் சொல்லும் பொறுப்பும், அதில் ஒளிவுமறைவற்ற தன்மையை உறுதி செய்வதும் ஆகும். பொது மக்கள் தங்கள் உரிமைகள் பற்றி அறிந்து கொள்வதற்கான விழிப்புணர்வையும் மற்றும் தங்களுக்கு வழங்கப்படும் சேவைகளின் தரங்களை அறிந்துகொள்ளும் நிலையையும் அதிகரிக்கச் செய்யவேண்டும். மேலும் அத்துறையின் திட்டப் பணிகளுக்கு அடிப்படையாக உள்ள சிறந்த பொதுப்பணி கோட்பாடுகளைக் காலத்திற்கேற்றவாறு உருவாக்கவும் மக்கள் சாசனம் உதவுகிறது.

2. மக்கள் சாசனத்தை தயாரிப்பதற்காக கோட்பாடுகளை உள்ளடக்கி கையேடு ஒன்று தயாரித்து அனைத்து துறைகளுக்கும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையினால் அனுப்பப்பட்டுள்ளது. தலைமைச் செயலகத்தில் உள்ள அனைத்துத் துறைகளும் (விலக்களிக்கப்பட்ட ஐந்து துறைகள் தவிர) மற்றும் சில அரசு நிறுவனங்களும் மக்கள் சாசனத்தைத் தயாரித்து அவைகளைச் சட்டமன்றப் பேரவைமுன் வைத்துள்ளன. பொது மக்களுடன் நேரடித் தொடர்பு இல்லாத காரணத்தினால் மக்கள் சாசனத்தைத்



2008 ஏப்ரல் 3]

தயாரிப்பதிலிருந்து கீழ்க்கண்ட ஐந்து துறைகள் விலக்களிக்கப்பட்டுள்ளன.

(i) பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை.

(ii) திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை.

(iii) மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை.

(iv) பொதுத் துறை

(v) சட்டத் துறை

3. அனைத்து மக்கள் சாசனங்களும் www.tn.gov.in. (NICNET/INTERNET) இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளன. இவ்விணையதளம் தலைமைச் செயலகத் துறைகள்/ துறைத் தலைமை அலுவலகங்கள்/ தமிழ்நாடு அரசின்கீழ் உள்ள வாரியங்கள் / கழகங்கள் ஆகியவை தயாரிக்கும் மக்கள் சாசனங்களையும் உள்ளடக்கியதாகும்.

**தகவல் மற்றும் சேவை மையம்**

அரசு நடைமுறைகளை மக்கள் புரிந்துகொள்ளவும், தங்கள் கோரிக்கைகளின் தற்போதைய நிலையைத் தெரிந்துகொள்ளவும் தகவல் மற்றும் சேவை மையம் திறக்கப்பட வேண்டுமென்று அனைத்துத் தலைமைச் செயலகத் துறைகளும், மாவட்ட ஆட்சியர்களும், அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அரசின் ஆணைக்கேற்ப தகவல் மையங்கள் மாவட்ட ஆட்சியர் மற்றும் துறைத் தலைமை அலுவலகங்களில் இயங்கி வருகின்றன.

**மின்னணு ஆளுகை**

1. ஒளிவுமறைவற்ற, சிறந்த மின்னணு ஆளுகையினை உரிய அளவுக்குப் பயன்படுத்தும் வகையில் இந்நாள் வரை திருத்தப்பட்ட இத்துறையின் சட்டங்களும் விதிகளும் மின்னணு முறைக்கு மாற்றப்பட்டு அரசு வலைதளம் "www.tn.gov.in" இல் தேசிய தகவல் மையத்தின் (NIC) உதவியுடன் வெளியிடப்பட்டுள்ளன.

2. அனைத்துத் தலைமைச் செயலகத் துறைகளிலும் பயன்படுத்தப்படும் சட்டங்கள், விதிகள் மற்றும் அரசு ஆணைகள் யாவும் இன்றைய நிலைக்கேற்ப உருவாக்கப்பட்டு, கணினியில் அரசு வலைதளத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

3. இத்துறையில் மின்னணு கோப்பு கையாளும் முறையின் (EFPS) கீழ் கணினிமயமாக்கப்பட்ட தபால் விநியோக மையம் 01-01-2007 முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. கணினி மயமாக்கப்பட்ட தபால் விநியோக முறை 01-01-2008 முதல் இதர அனைத்து செயலகத் துறைகளுக்கும் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது.

4. அனைத்துச் செயலக அலுவலர்கள் மற்றும் பணியாளர்களது பணி விவரங்கள் அனைத்தும் கணினிமூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றன. (PINFOSYS.)

5. மின்னணு ஆளுகையின் ஒரு பகுதியாக மின்னணு திறன்முறையினை (Secretariat-e-knowledge System) தலைமைச் செயலகத்திலுள்ள துறைகளில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக செயல்முறை வரைவினை (Reguest For Proposal - RFP) அனுப்புமாறு மின்னணு ஆளுகை இயக்குநரிடம் கோரப்பட்டுள்ளது. அவ்வரைவுத் திட்டம் பெறப்பட்டவுடன் இத்திட்டம் தலைமைச் செயலகத்தின் அனைத்து துறைகளிலும் செயல்படுத்தப்படும்.

6. மின் ஆளுகையினை தலைமைச் செயகத்தில் திறம்பட செயல்படுத்தும் பொருட்டு முக்கிய நடவடிக்கைகளான வரவு-செலவுத் திட்ட மேலாண்மை, அலுவலர் மற்றும் பணியாளர்களின் சம்பளப் பட்டியல், பணியாளர்களின் பணி விவரங்கள், நீதிமன்ற வழக்குகளையும், தகவலறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் பெறப்படும் மனுக்களையும் கண்காணித்தல், சட்டமன்றப் பேரவை வினாக்களுக்கு விடையளித்தல் போன்றவற்றை தேசிய தகவல் மையத்தின் தொழில்நுட்ப உதவியுடன் கணினிமயமாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

7. இந்த ஆண்டு மின்னணு கோப்பு கையாளும் முறை (EFPS) மற்றும் தபால் விநியோக முறை (TDS) தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

**நிருவாகச் சீர்திருத்தங்கள்**

நிருவாகச் சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக, இத்துறை முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து, பின்வரும் புதிய திட்டங்களை, இங்கிலாந்து அரசின் பன்னாட்டு வளர்ச்சித் துறையின் நிதியுதவியுடன் செயல்படுத்த வறுமை ஒழிப்பிற்கான தகுதியினை மேம்படுத்துதல் திட்டத்தின் (CBPR) கீழ் மைய அரசின் பணியாளர் பொதுமக்கள் குறைதீர்ப்பு மற்றும் ஓய்வூதியத் துறைக்கு அனுப்பியுள்ளது.





(i) சிவகங்கை மாவட்டத்தில், வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்களை பயோமெட்ரிக் (Bio-metric) முறையில் கண்டறிந்து, வறுமையினை முழுமையாக மட்டுப்படுத்தும் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் (ரூ. 20.19 இலட்சம்)

(ii) விழுப்புரம் மாவட்டம், வருவாய்த் துறையில் (வருவாய் நிருவாகத்தில்) இலவசமாகத் தொலைபேசிமூலம் பொதுமக்கள் குறை தீர்க்கும் திட்டம் (ரூ. 6.00 இலட்சம்)

(iii) விழுப்புரம் மாவட்டத்தில் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் பணிபுரிவோரின் வருகையின் பயோமெட்ரிக் (Bio-metric) அடிப்படையில் அளவீடு செய்யும் முறை (ரூ. 70.85 இலட்சம்).

மேற்குறிப்பிட்ட 3 திட்டங்களை மைய அரசு ஏற்றுக்கொண்டு, இனம் (i) மற்றும் (ii)-ல் குறிப்பிட்ட திட்டங்களுக்கான நிதி ஒப்புதலை வழங்கியுள்ளது.

2. இந்திய அரசின், நிருவாகச் சீர்திருத்தம் மற்றும் ஓய்வூதியம் பெறுவோர் குறைதீர்ப்பு மற்றும் தகவல்-நுட்பவியல் துறைகளால் தோற்றுவிக்கப்பட்ட சிறந்த அரசு வலைத் தளத்திற்கான 2007-2008 ஆம் ஆண்டுக்குரிய தேசிய மின்னணு ஆளுகை (தங்கம்) விருதை தமிழ்நாடு அரசின் வலைதளமான www.tn.gov.in பெற்றுள்ளது.

**தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005**

1. தகவல் பெறும் உரிமையானது ஒரு ஜனநாயக நாட்டிலுள்ள மக்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்றாகும். தகவல் பெறும் உரிமைச் சட்டம் 15-06-2005 அன்று இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலைப் பெற்று 12-10-2005 முதல் செயலுக்கு வந்தது. அரசின் செயல்பாட்டின் வெளிப்படையான தன்மையையும் பொறுப்புடைமையையும் மேம்படுத்தும் பொருட்டு மக்களுக்குத் தேவைப்படும் தகவல்களை அவர்களுக்கு பொது அதிகாரிகளின் மூலம் அளிப்பது இச்சட்டத்தின் நோக்கமாகும்.

2. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின்கீழ் அடிப்படை உரிமையாக அரசாங்கம், நாடாளுமன்றம், சட்டமன்றப் பேரவைகள் மற்றும் நீதிமன்றங்களிலிருந்து மக்கள் தகவலைப் பெறுவதற்கு இச்சட்டம் வகை செய்கிறது. இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாடு 1997 ஆம் ஆண்டு தகவல் பெறும்

உரிமைச் சட்டத்தை இயற்றியது. 2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் இயற்றப்பட்ட பிறகு, மைய அரசு சட்டம் தமிழ்நாடு 1997 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தைவிட மேலோங்கி நிற்கிறது.

3. மைய அரசு, இச்சட்டத்தின்படி அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்தவும், குறித்தளிக்கப்பட்ட செயற்பணிகளை ஆற்றவும், மையத் தகவல் ஆணையத்தை அமைத்துள்ளது. அது போன்று தமிழக அரசும் இச்சட்டத்தின்படி அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்தவும், குறித்தளிக்கப்பட்ட செயற்பணிகளை ஆற்றவும், தமிழ்நாடு மாநிலத் தகவல் ஆணையத்தை அமைத்துள்ளது. மைய மற்றும் மாநிலத் தகவல் ஆணையங்களுக்குரிய அதிகாரங்களும் மற்றும் பதவிப் பணிகளும் இச்சட்டத்தின் அத்தியாயம் V-ல் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வாணையத்தில் மாநிலத் தலைமை தகவல் ஆணையர் ஒருவரும், இரு மாநிலத் தகவல் ஆணையர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இம்மாநிலத் தகவல் ஆணையத்தில் செயலாளர் மற்றும் பணியாளர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

4. "தகவல் பெறும் உரிமைச் சட்டத்தைக் கண்காணித்தல் மற்றும் செயல்படுத்துதல்" குறித்த பொருள் பொதுத் துறையிலிருந்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறைக்கு 21-11-2006 ஆம் நாளிலிருந்து மாற்றப்பட்டுள்ளது. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் சிறப்பு ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் அவர்கள் இச்சட்டத்தின் மாநில ஒருங்கிணைப்பு அலுவலர் (State Nodal Officer) ஆவார். தமிழ்நாடு மாநிலத் தகவல் ஆணையத்தின் பணியாளரமைப்பையும் இத்துறை கவனிக்கிறது. தகவல் பெறும் உரிமைச் சட்டம் குறித்த வழிகாட்டி கையேடு ஒன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்காக இத்துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இது மீண்டும் பரிசீலிக்கப்பட்டு மறுபதிப்பாக விரைவில் வெளியிடப்பட உள்ளது. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் வைப்பதற்காக பொது அதிகார அமைப்பால் இச்சட்டத்தை செயல்படுத்திய தகவல்கள் உள்ளடக்கிய ஓர் ஆண்டறிக்கையை தமிழ்நாடு மாநிலத் தகவல் ஆணையம் தயாரித்து வருகிறது.

5. பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, கருத்தரங்கம், கல்வி மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகள் ஆகிய பல்வகை ஊடகம்மூலம் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தை பொதுமக்களிடையே கொண்டு செல்வதற்காக 2008-2009 ஆம் ஆண்டு பகுதி-II-ல் ரூ. 5.00 இலட்சம் ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. அண்ணா மேலாண்மை





பயிற்சி நிலையத்தால் 1,400 அலுவலர்களுக்கு தகவலறியும் சட்டம் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

6. தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் தகவல்களைக் கீழ்க்கண்ட இரு வழிகளில் அளிக்கலாம்

1. தன்னிச்சையாக வெளிப்படுத்துதல்.

2. விண்ணப்பத்தின் அடிப்படையில் அளித்தல்.

தலைமைச் செயலகத் துறைகள் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள் உட்பட துறைத் தலைவர்கள் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் 4-ஆம் பிரிவின்படி பொதுத் தகவல் அதிகாரிகளாவர். அமைப்புகள், செயற்பணிகள் மற்றும் கடமைகள் போன்ற விவரங்களை அவர்கள் தாங்களாகவே மக்களுக்கு அளிக்க வேண்டும். பொதுமக்களின் பயனுக்காக அரசுத் துறைகளின் பணிகளைக் குறிப்பிட்டு நடைமுறை நூல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவை தகவல் பெறும் உரிமைச் சட்ட இணைய தளத்தில் (www.tn.gov.in / rti) பதியப்பட்டுள்ளன. தகவல் வேண்டுவோரின் கோரிக்கை உடனுக்குடன் பரிசீலிக்கப்பட்டு தக்க பதில் அளிக்கப்படுவதுடன், அவர்களின் கோரிக்கைக்கு ஏற்ப அறிவுரைகள் மற்றும் ஆணைகளும் வெளியிடப்படுகின்றன. மக்களுக்குத் தேவைப்படும் தகவல்களை அளிக்க ஒவ்வொரு துறையிலும் பொது தகவல் அதிகாரிகள் மற்றும் மேல்முறையீட்டு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். தகவல் பெறுவதற்காக ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் விண்ணப்பக் கட்டணம் ரூ. 50-லிருந்து ரூ. 10 ஆக குறைக்கப்பட்டுள்ளது. மேலும், தகவல் பெறுவதற்கான ரூ. 10 விண்ணப்பக் கட்டணத்தை பணமாக அல்லது நீதிமன்ற கட்டண ஒட்டு வில்லையாக அல்லது வங்கி வரைவோலையாக அல்லது கேட்புக் காசோலையாக அல்லது கருவூல செலுத்துச்சீட்டு மூலமாக செலுத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்கீழ் வழக்கறிஞர்கள், சங்கங்கள், பொதுமக்கள், அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் ஆகியோரிடமிருந்து 2007 ஆம் ஆண்டில் இத்துறையில் 597 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இவ்விண்ணப்பங்கள் பெரும்பாலும் அரசு ஆணைகள், கடிதங்கள், பணிவிதிகளுக்கான விளக்கங்கள், தனிநபர் தொடர்பான பதவி உயர்வு, ஒழுங்கு நடவடிக்கைகள், நடத்தை விதிகள், விடுப்பு விதிகள் தொடர்பானவையாகும். இவ்விண்ணப்பதாரர்களுக்கு உரிய பதில்கள் அளிக்கப்பட்டுள்ளன. மேல்முறையீட்டு மனுக்கள் பெறப்பட்டு அலைகளுக்கும் தக்க தகவல்கள் அளிக்கப்பட்டுள்ளன. பொதுத் தகவல்

அதிகாரிகள் அளித்த பதிலினால் மனநிறைவு அடையாத மனுதாரர் மேல்முறையீட்டு அதிகாரிகளிடம் முறையீடு செய்யலாம். தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்படி தமிழ்நாடு மாநில தகவல் ஆணையத்திடம் இரண்டாவது மேல்முறையீடு செய்யலாம். மேல்முறையீடுகளுக்கு கட்டணம் ஏதும் இல்லை. தமிழ்நாடு மாநில தகவல் ஆணையம் தரும் பதில் மனநிறைவு அளிக்காத நிலையில் தகவல் வேண்டுவோர் உயர் நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மூலமாகவும் வழக்கு தொடரலாம்.

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அமைப்பும், பணிகளும்**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தன்னாட்சி அமைப்புடன் தனது பணிகளை சுயமாகவும், சீராகவும், பாகுபாடு இன்றியும் செயல்படுத்தும் வகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவுக் கூறு 315(1)-ன்கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இத்தேர்வாணையம், தலைவர் மற்றும் பதினான்கு உறுப்பினர்களைக் கொண்டது. அரசுப் பணிகளில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு விதிக்கப்பட்ட தடையாணை விலக்கிக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, அதிக அளவில் பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் பணியினை மேற்கொள்ளும் பொருட்டு, தேர்வாணையத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 11-லிருந்து பதினான்காக உயர்த்தி அரசாணை (நிலை) எண் 155, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை, நாள் 20-06-2007-ல் வெளியிடப்பட்டுள்ளது. இத்தேர்வாணையத்தின் தலைவர், ஆணை உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோரின் பணி நிலைகள் 1954 ஆம் ஆண்டைய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளுக்கு உட்பட்டவையாகும்.

2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 320-ல் கூறப்பட்டுள்ள கீழ்க்கண்ட கடமைகள் மற்றும் அலுவல் பணிகளை மேற்கொண்டு வருகிறது:

(i) பணியாளர்களைத் தெரிவு செய்தல் இத்தேர்வாணையத்தின் தலையாய பணியாகும்;

(ii) பணியாளர்களைத் தெரிவு செய்தல் பற்றிய விதிகள் இயற்றுவது, பணி நியமனம், பதவி உயர்வுகள் அளித்தல், ஒரு பணியிலிருந்து மற்றொரு பணிக்கு மாற்றல் செய்தல் ஆகியவற்றில் பின்பற்றப்பட வேண்டிய நெறிகள்,



அரசுப் பணியாளர்களின் ஒழுங்குமுறை நடவடிக்கைகள் மீதான மேல் முறையீடு குறித்த அனைத்திலும் தேர்வாணையம் அரசுக்கு ஆலோசனை வழங்குகிறது;

(iii) அரசுப் பணியாளர்களுக்கான துறைத் தேர்வுகளை தேர்வாணையம் நடத்துகிறது;

(iv) டேராடூன் இந்திய இராணுவக் கல்லூரி நுழைவுத் தேர்வுகளை மத்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தின் சார்பாகத் தேர்வாணையம் நடத்துகிறது.

3. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் 2007-2008 ஆம் ஆண்டில் மாநில மற்றும் சார்நிலைப் பணிகளில் உள்ள பல்வேறு பதவிகளுக்கு நேரடி நியமனம் மூலம் போட்டித் தேர்வுகள் நடத்த இதுவரை 34 அறிவிக்கைகளை வெளியிட்டுள்ளது. இந்த 34 அறிவிக்கைகளில், 17 நியமனங்களுக்கு இதுவரை நடைபெற்ற போட்டித் தேர்வுகளில் கலந்துகொண்ட மொத்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை 10,53,176 ஆகும். மீதமுள்ள 17 நியமனங்களுக்கு, இனி நடைபெறவிருக்கும் போட்டித் தேர்வுகளில் கலந்துகொள்ளவிருக்கும் விண்ணப்பதாரர்களின் தோராயமாக எண்ணிக்கை 1,74,882. தேர்வு செய்யப்படவிருக்கும் மொத்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை 12,017 ஆகும். 01-04-2007 முதல் 13-03-2008 வரையிலான காலத்தில் தேர்வாணையக் குழுவினால் 75 பதவி உயர்வுக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு 1,117 நபர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

4. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் 2008-2009 ஆம் ஆண்டில் மாநில மற்றும் சார்நிலைப் பணிகளில் உள்ள பல்வேறு பதவிகளில் காலியாக உள்ள பணியிடங்களுக்கு போட்டித் தேர்வுகளை நடத்த உத்தேசித்துள்ளது. அப்போட்டித் தேர்வுகளில் தோராயமாக கலந்துகொள்ளவிருக்கும் தேர்வாளர்களின் எண்ணிக்கை 2,94,100 ஆகும்.

5. சம்பளம், படிகள் மற்றும் ஓய்வூதியம் உட்பட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அனைத்துச் செலவினங்களும் மாநில அரசு தொகுப்பு நிதியிலிருந்து செலவு செய்யப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் தேர்வாணையத்தின் ஆண்டு அறிக்கை தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபடும் இனங்கள் ஏதும் இருப்பின் அதற்கான விளக்கக் குறிப்புடன் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுகிறது.

**காலிப் பணியிடங்கள் நிரப்பிடல்**

இவ்வரசு 13-05-2006-ல் பொறுப்பேற்றபின் அரசுத் துறைகளில் காலியாக உள்ள அனைத்துப் பணியிடங்களையும் நேர்விற்கேற்ப தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆசிரிர்கள் தேர்வு வாரியம், சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், வேலைவாய்ப்பகம் மற்றும் பணி நியமனத் தேர்வு குழுக்கள் மூலம் விரைந்து நிரப்பிடத் தேவையான பல்வேறு அரசாணைகளை வெளியிட்டது. இவ்வரசு இதுவரை மொத்தம் 2,32,417 காலிப் பணியிடங்களைக் கீழ்க்கண்டவாறு பூர்த்தி செய்துள்ளது:

(i) அரசுப் பணியாளர் தேர்வாணையம் நாளது வரை மாநில மற்றும் சார்நிலைப் பணித் தொகுதிகளிலான பல்வேறு பணியிடங்களுக்கு நேரடி நியமன முறையில் பல்வேறு போட்டித் தேர்வுகளை நடத்தி 6,397 நபர்களை தெரிந்தெடுத்துள்ளது;

(ii) ஆசிரியர்கள் தேர்வு வாரியம் மூலம் நாளது வரை 13,299 நபர்கள் பட்டதாரி ஆசிரியர் உள்ளிட்ட பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்;

(iii) சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம் நாளது வரை காவல் துறை உதவி ஆய்வாளர் உள்ளிட்ட பணியிடங்களுக்கு 5,360 நபர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்;

(iv) வேலைவாய்ப்பகம் மூலம் நாளது வரை 46,931 நபர்கள் பல்வேறு பணியிடங்களில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்;

(v) வருவாய்த் துறையில் கிராம உதவியாளர்கள், தொழில்நுட்பக் கல்வித் துறையின் மூலம் வேலை வாய்ப்பக முதுநிலைப்படி தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை—III, ஊரக வளர்ச்சித் துறையில் மக்கள் நலப் பணியாளர்கள் மற்றும் சமூக நலம் மற்றும் சத்துணவுத் துறையில் சமையலர் உள்ளிட்ட மதிய உணவு/ஊட்டச் சத்துப் பணியாளர்கள் இதுவரை மொத்தம் 43,033, நபர்கள் பணி நியமனத் தேர்வுக் குழு மூலமாக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்;

(vi) மேலும் பதவி உயர்வு போன்ற இதர நியமன முறைகள் மூலம் 37,625 காலிப்பணியிடங்கள் நாளது வரை பூர்த்தி செய்யப்பட்டுள்ளன;





(vii) 1991 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியாற்றி பணியிழப்பிற்குள்ளானோர் 1,436 நபர்கட்கு பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது;

(viii) தொகுதி IV-ல் 3,368 தட்டச்சர் மற்றும் 507 சுருக்கெழுத்தர் நிலை-III ஆகிய பணியிடங்களுக்கும், சுமார் 4,103 இளநிலை உதவியாளர் பணியிடங்களுக்கு தற்போது மாதம் ஒன்றுக்கு ரூ. 4,000/- தொகுப்பூதியத்தில் பணியாற்றிவர்களை அரசுப் பணிக்கு ஈர்த்துக் கொள்ளவும் அரசுப் பணியாளர் தேர்வாணையம் தேர்வுகளை நடத்தி பணியாளர்களை நியமிக்கும் பணியினை மேற்கொண்டுள்ளது;

(ix) மேலும் காலிப்பணியிடங்களை அறுதியிட்டு, விரைந்து பூர்த்தி செய்திடவும், இதில் ஏற்படும் இடர்பாடுகளை களைந்திடவும் இத் துறைச் செயலாளர் அவர்களால் துறைச் செயலாளர்கள் மற்றும் தொடர்புடைய துறை தலைமை அலுவலர்களுடன் நேரடியாக கலந்தாய்வுக் கூட்டங்கள் கடந்த ஆண்டைப் போல் நடப்பு ஆண்டிலும் நடத்தப்பட்டன;

(x) தினக்கூலி/தொகுப்பூதியத்தில் ஏற்கெனவே நியமனம் செய்யப்பட்டுள்ளவர்களை முறையான காலமுறை ஊதியத்தில் பணியமர்த்திட ஆணைகளிடப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது;

(xi) பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலுள்ள இஸ்லாமியர்கள் மற்றும் கிறித்தவர்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் தலா 3.5 சதவீத இட ஒதுக்கீடு வழங்க ஆணையிடப்பட்டதன் அடிப்படையில், ஏற்கெனவே நடைமுறையிலிருந்த 100 புள்ளிகள் கொண்ட இனச் சுழற்சி முறை மாற்றியமைக்கப்பட்டு 200 புள்ளிகள் கொண்ட இனச் சுழற்சி முறை புகுத்தப்பட்டு அராசணை (நிலை) எண். 241, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (கே) துறை, நாள் 29-10-2007-ல் ஆணைகள் வெளியிடப்பட்டன. மேலும் வேலை வாய்ப்பகங்கள் மூலம் பணி நியமனங்கள் மேற்கொள்ளும்போது, இனச்சுழற்சி முறையுடன் உடன் நிகழ்வாக முன்னுரிமை பெற்றவருக்கும், முன்னுரிமையற்றோருக்கும் இடையேயான விகிதாச்சாரம், இனவாரியாக கடைப்பிடிக்கப்பட வேண்டிய முறை குறித்தும் அரசாணை (நிலை) எண் 20, பணியாளர் மற்றும்

நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 12-02-2008-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(xii) அரசுத் துறைகளில் உள்ள பணியிடங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கென போதுமான பங்கேற்பு உள்ளதா என்பதனைக் கண்டறிந்து எந்தெந்தப் பணியிடங்களில் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் பங்கேற்பு 19 விழுக்காட்டிற்குக் (18%+1%) குறைவாக உள்ளதோ அந்தப் பணியிடங்களுக்கு நேரடி நியமனம் மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நியமிக்கப்பட வேண்டுமென்று அரசு முடிவெடுத்துள்ளது. இத்தகைய நேரடி நியமனம் ஏ, பி, சி, மற்றும் டி என்ற ஒவ்வொரு வகை பிரிவிலும், கீழ்நிலையில் (lowest level) உள்ள பணியிடத்திற்கு செய்யப்படவேண்டும். இதன் பொருட்டு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கென ஒதுக்கப்பட்ட 18% மற்றும் 1% பணியிடங்களுக்கு குறைவான பங்கேற்பு (shortfall) உள்ள நிலையில் அவற்றைக் கண்டறிந்து போதுமான பங்கேற்பு ஏற்படுத்தும் வகையில் ஏ, பி, சி மற்றும் டி பிரிவுகளில் கீழ் நிலையிலுள்ள பதவிகள், தமிழ்நாடு அமைச்சுப் பணி மற்றும் தமிழ்நாடு நீதிமன்ற அமைச்சுப் பணிகளில் உள்ள இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை—III உட்பட அரசிற்குத் தெரிவிக்கப்பட வேண்டும் என்றும், மேற்காணும் பதவிகளுக்கு நேரடி நியமனம் மேற்கொள்ள வேண்டி உரிய நியமனதாரர்களுக்கு அறிவிக்கை வெளியிட அரசு தெரிவிக்கும் என்றும், இத்தகைய நியமனம் ஒருமுறை மட்டுமே மேற்கொள்ளப்படும் என்றும் அரசு ஆணை (நிலை) எண் 220, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 14-09-2007-ல் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளின் பொது விதிகளுக்கு திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

### மாநில விழிப்புப்பணி ஆணையம்

தமிழ்நாட்டில் 1965 ஆம் ஆண்டு மாநில விழிப்புப்பணி ஆணையம் ஏற்படுத்தப்பட்டது. பொதுப்பணிகளில் ஊழல் தடுப்பு தொடர்பான நடவடிக்கைகளில் ஏற்படும் நிருவாக சிக்கல்கள் குறித்தும், கவனத்திற்குக் கொண்டுவரப்படும் தனிப்பட்ட ஊழல் நேர்வுகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அரசிற்கு அறிவுரைகள் வழங்குவது இவ்வாணையத்தின் முக்கிய செயலாகும்.



விழிப்புப்பணி ஆணையம் தன் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம் உதவி செய்கிறது.

2. மாநில விழிப்புப்பணி ஆணையத்தின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளாவன:

(i) பொது ஊழியர் ஒருவரின் நேர்மையற்ற செயல்பாடு அல்லது ஊழல் செயல்பாடு பற்றிய அவர்களின் நடவடிக்கைகள் அல்லது அவர்கள் மீது இந்தச் செயல்பாடுகள் குறித்த ஐயங்கள் மீது விசாரணை நடத்துதல்;

(ii) ஒரு பொது ஊழியர் தன்னுடைய நேர்மையற்ற செயல்பாட்டிற்கு அல்லது ஊழல் செயல்பாட்டிற்கு தன் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியதாக அல்லது தன் அதிகாரத்தை உரிய முறையில் பயன்படுத்தாமை பற்றி கூறப்படும் புகார் மீது விசாரணை அல்லது புலனாய்வு மேற்கொள்ளல்;

(iii) விசாரணைக்குத் தேவைப்படும் தகவல்கள் மற்றும் புள்ளி விவரங்களைச் சேகரித்தல்;

(iv) தன் அதிகார வரம்பிற்குட்பட்ட செயல்பாடுகள் மற்றும் ஆணையத்தின் பரிந்துரைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விவரங்களை அரசுத் துறைகள் அல்லது அரசு நிறுவனங்கள் அல்லது பொது ஊழியரிடமிருந்து கேட்டுப் பெறுதல்;

### ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம்

1964 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம் உருவாக்கப்பட்டது. தற்போது இவ்வியக்குநரகம் கூடுதல் காவல் துறை இயக்குநர் நிலையில் உள்ள இயக்குநர் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இயக்குநருக்கு உதவியாக காவல் அலுவலர்கள் மற்றும் சட்ட அலுவலர்கள் முறையே காவல் துறை மற்றும் குற்றவழக்குத் தொடர்பு இயக்குநரகம் ஆகியவற்றிலிருந்து அழைக்கப்பட்டு பணிபுரிகின்றனர்.

2. ஊழல் தடுப்பு காண்காணிப்பு இயக்குநரகம் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்கிறது:

(1) லஞ்ச ஊழல் மற்றும் முறைகேடுகள் குறித்து நுண்ணறிவுத் தகவல்கள் சேகரித்து புலனாய்வு செய்வது மற்றும் 1988 ஆம் ஆண்டைய ஊழல் தடுப்பு சட்டத்தின் (மையச் சட்டம் 49, 1988) கீழ் வரும் குற்றச் செயல்கள் குறித்து புலனாய்வு செய்வது;

(2) விழிப்புப்பணி ஆணையர் மற்றும் துறைத் தலைவர்கள், பொதுமக்கள், அரசு இவர்களிடமிருந்து பெறப்படும் பொது ஊழியர்கள் மீதான குற்றவியல், தவறான நடத்தை (லஞ்சம் மற்றும் ஊழல்), குற்றவியல் கையாடல் மற்றும் குற்றவியல்புடைய நம்பிக்கை மோசடி தொடர்பான புகார்கள் மீது விசாரணை மேற்கொள்வது;

(3) மாவட்ட ஆய்வுக் குழு மற்றும் துறைத் தலைவர்களின் உதவியுடன் பல துறைகளில் உள்ள ஊழல் நடைபெறும் முக்கியமான இடங்களில் ஊழல் தடுப்பு நடவடிக்கையாக திடீர் ஆய்வுகள் மேற்கொள்வது.

3. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம் தனது புலனாய்வு அறிக்கைகளை மாநில விழிப்புப்பணி ஆணையத்திற்கு அனுப்பி வைக்கிறது. மாநில விழிப்புப் பணி ஆணையம், அவ்வறிக்கைகளை ஆய்வுசெய்து, அரசு அலுவலர் தொடர்புடைய தலைமைச் செயலகத் துறைகளுக்கு, தனது பரிந்துரையுடன், உரிய மேல்நடவடிக்கைகள் தொடர அனுப்பி வைக்கிறது.

**ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்கள்**

ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்கள் ஒவ்வொன்றும் நீதி முறை சார்புடைய மன்றமாக இயங்கி வருகிறது. தற்போது சென்னை, வேலூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில் ஆகிய எட்டு இடங்களில் ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயங்கள் இயங்கி வருகின்றன. இத்தீர்ப்பாயங்கள் இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகள்/மாவட்ட வருவாய் அலுவலர் தலைமைப் பொறுப்பில் உள்ளன. தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள், 1955-ன்கீழ், ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்களுக்கு அரசினால் அனுப்பப்படும் வழக்குகளை விசாரணை செய்து, அவ்விசாரணையில் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டனவா அல்லது நிரூபிக்கப்படவில்லையா என்று கண்டறியப்பட்டு, அறிக்கைகள் அரசுக்கு அனுப்பப்படுகின்றன.





**பயற்சி**

அரசுப் பணியாளர்களது பொது அறிவு, திறன் மற்றும் செயல் திறனைத் தொடர்ந்து உயர்த்தி, அவர்களது திறமைகளை மேம்படுத்துவதற்கு பயிற்சி ஒரு முக்கிய பங்காற்றுகிறது. பொதுமக்களின் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு அரசின் சேவைகள் மக்களுக்கு முழுப்பயன் விளைவிக்கும் வகையில் அரசுப் பணியாளர்களுக்கு நிருவாக மேம்பாட்டுப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் கீழ்க்கண்ட ஐந்து பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன—

**(i) தலைமைச் செயலகப் பயிற்சி நிலையம்**

தலைமைச் செயலகத் துறைகளில் நேரடியாக நியமனம் செய்யப்பட்ட உதவிப் பிரிவு அலுவலர்கள், உதவியாளர்கள், நேர்முக எழுத்தர்கள், தட்டச்சர்கள் ஆகியோர் முழுநிறைவாகக் கோப்புகளைக் கையாளும் வண்ணம் அவர்களுக்கு தலைமைச் செயலக பயிற்சி நிலையத்தில் பொது நிருவாக நடைமுறை மற்றும் நிதி நிருவாக நடைமுறையில் 60 வேலை நாட்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியின் முடிவில் நடத்தப்படும் தேர்வுகளில் வெற்றி பெறுதல் நேரடி நியமனம் செய்யப்பட்ட உதவிப் பிரிவு அலுவலர்களின் தகுதிகாண் பருவத்தை திருப்திகரமாக முடிப்பதற்கும், உதவியாளர்கள், நேர்முக எழுத்தர்கள், தட்டச்சர்கள் ஆகியோர் உதவிப் பிரிவு அலுவலர் பதவிக்கான தேர்ந்த பெயர் பட்டியலில் இடம் பெறுவதற்கும் உரிய முன் தகுதியாகும். தலைமைச் செயலக அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் அறிவுத்திறன் மற்றும் ஆற்றலை இன்றைய நிலைக்கேற்ப உயர்த்தி நீதிமன்ற நிகழ்வுகளைக் கையாளுதல், ஒழுங்கு நடவடிக்கை குறித்த கோப்புகளைக் கையாளுதல் தொடர்புடைய நடவடிக்கைகள் தொடர்பான நடைமுறைகள் குறித்த இதர பயிற்சிகளும் இப்பயிற்சி நிலையத்தில் அளிக்கப்படுகின்றன. செயலகத்தில் புதிதாக நியமனம் செய்யப்பட்ட உதவியாளர்கள் மற்றும் நேர்முக எழுத்தர்களுக்கு கணினியைக் கையாளுதல் குறித்த அடிப்படைப் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை 57 அணிகளுக்கு இப்பயிற்சி நிலையத்தில் அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 3

## (ii) அண்ணா மேலாண்மை நிலையம் அமைப்பு மற்றும் நோக்கங்கள்

அண்ணா மேலாண்மை நிலையமானது தமிழக அரசால் சங்கங்களின் பதிவுச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட நிறுவனமாகும். இந்நிலையம் தமிழக அரசிற்கு பயிற்சி தொடர்பான ஆலோசனைகளை வழங்கும் நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. இந்நிலையமானது தனது நிருவாக ஆட்சிக் குழுவில் மாண்புமிகு தமிழக மின்சாரத் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகவும், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அவர்களைத் துணைத் தலைவராகவும் கொண்டுள்ளது. மேலும், கல்வி மற்றும் மேலாண்மைத் துறைகளில் உள்ள அரசு உயர் அலுவலர் மற்றும் சான்றோர்களை அக்குழுவில் உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது.

### செயற்பாடுகள்

1. அண்ணா மேலாண்மை நிலையமானது, நிலவி வரும் சூழலுக்கேற்ற பயிற்சி அளிப்பதற்காக தகுந்த வசதிகள், உபகரணங்கள் உள்ளடக்கியதான நவீன வசதிகளுடன் கூடிய தங்குமிடம், நூலகம் கணிப்பொறி மையம், வகுப்பறைகள், கலையரங்கம் ஆகிய வசதிகளைக் கொண்டுள்ளது;

2. இந்நிலையம் மாநில அரசு, இந்திய அரசு மற்றும் பிற மாநில அரசுத் துறை மற்றும் பொதுத் துறை நிறுவனங்களின் அலுவலர்களுக்கு பொது நிருவாகம், தகவல், தொழில்நுட்பம், நிதி மேலாண்மை, நடத்தையியல் மற்றும் ஆளுமை மேலாண்மை ஆகியவற்றில் பயிற்சிகளை அளித்து வருகின்றது;

3. இந்நிலையத்தில் இந்திய அரசின் உதவியுடன் பேரிடர் மேலாண்மைப் பிரிவு இயங்கி வருகிறது. இப்பிரிவின் மூலம் பேரிடர் மேலாண்மைப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது;

4. இந்நிலையம் நிதி மேலாண்மையினை சிறப்பினமாகக் கொண்டு முனைவர் பட்டத்திற்கான ஆய்வினை மேற்கொள்ள சென்னை பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அண்ணா மேலாண்மை நிலையத்தில் தமிழக அரசு அதிகாரிகள், பிற மாநில அரசுத் துறை அதிகாரிகள், இந்திய அரசு மற்றும் மாநிலப் பொதுத் துறை நிறுவனங்களின் அதிகாரிகள் ஆகியோருக்கு பல்வேறு மேலாண்மை வளர்ச்சி மற்றும் நிறுவனம் தொடர்பான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. 2007-08 ஆம் வருடத்தில் 2008 மார்ச்



2008 ஏப்ரல் 3]

முடிய இந்நிலையம் 248 பயிற்சி வகுப்புகளை நடத்தி (784 பயிற்சி நாட்களை உள்ளடக்கி) மொத்தம் 6,123 அரசு அலுவலர்களுக்கு பொது மேலாண்மை, தகவல், தொழில்நுட்பம், நடத்தையியல், விற்பனை, உற்பத்தித்திறன், தரம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆகிய தலைப்புகளில் பயிற்சி அளித்துள்ளது. மருத்துவச் சுற்றுலாவின் பலவிதமான அம்சங்களை வெளிப்படுத்தும் விதத்திலான புதியதொரு பயிற்சி மற்றும் சுற்றுலா வழிகாட்டிகளுக்கான பயிற்சியினையும் அண்ணா மேலாண்மை நிலையமும் தமிழக அரசின் சுற்றுலா மேம்பாட்டுக் கழகமும் இணைந்து 2007-08-ல் நடத்தியுள்ளது. அண்ணா மேலாண்மை நிலையமானது, "தகவல் அறியும் உரிமைச் சட்டம்" என்ற தலைப்பில் 2008 மார்ச் மாதம் முடிய 58 பயிற்சி வகுப்புகளை நடத்தி உள்ளது. கணினித் துறையில், "கணினி செயல் முறைகள் மற்றும் தமிழ் நிலம் மென்பொருள்" என்ற தலைப்பில் சிறப்பு பயிற்சியினை நில அளவை மற்றும் தீர்வு துறையினருக்கு அண்ணா மேலாண்மை நிலையத்தினால் 2007 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரையில் நடத்தப்பட்டது. இப்பயிற்சியானது, பயிற்சி பெற்றவர்கள் தங்களது பணியினைக் கணினிமயமாக்கி பொதுமக்கட்கு விரைவான சேவையளிக்க வகை செய்கிறது. அண்ணா மேலாண்மை நிலையத்தின் பேரிடர் மேலாண்மைப் பிரிவானது மார்ச் 2008 வரையில் வெள்ளம் மற்றும் புயல் மேலாண்மை, பூகம்பம், நிலச்சரிவுகள், தொழில் இடர்பாடுகள் மற்றும் சுற்றுச்சூழல் குறித்த பேரிடர் ஆகிய தலைப்புகளில் 24 பயிற்சி வகுப்புகளை நடத்தியுள்ளது. அண்ணா மேலாண்மை நிலையமானது "பொது விநியோக முறை"-யின் குறிப்பிடத்தக்க செயல்பாட்டிற்கான 11 சிறப்புப் பயிற்சிகளை, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையினருக்கு அளித்துள்ளது. அண்ணா மேலாண்மை நிலையத்தில் 05-11-2007 அன்று நடந்த நிருவாக ஆட்சிக்குழு கூட்டத்தில், பெங்களூரிலுள்ள இந்திய மேலாண்மை நிலையத்தைச் சார்ந்த பொதுக்கொள்கை மையம், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், இந்திய தரவட்ட அமைப்பு (சென்னை கிளை) மற்றும் சென்னைப் பல்கலைக்கழகம், சிங்கப்பூரிலுள்ள தேசிய பல்கலைக்கழகத்தின் லீ குவான் யூ பொதுக்கொள்கை மையம் ஆகியவற்றுடன் அண்ணா மேலாண்மை நிலையம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ள கொள்கை ரீதியான ஒப்புதல் அளித்துள்ளது.

[2008 ஏப்ரல் 3

**(iii) (அ) மற்றும் (ஆ) பிரிவு அடிப்படைப் பயிற்சி நிலையம்**

அண்ணா மேலாண்மை நிலையத்தின் (அ) மற்றும் (ஆ) பிரிவு அலுவலர்களுக்கான அடிப்படைப் பயிற்சி நிலையமானது நேரடியாகவும் மற்றும் பதவி உயர்வின்மூலமாகவும் நியமனம் செய்யப்பட்ட (அ) மற்றும் (ஆ) பிரிவு அலுவலர்களுக்குப் பயிற்சியளிக்கின்றது. கூடுதல் பாடங்கள் மற்றும் ஒலி ஒளி சாதனங்கள்மூலம் பயிற்சி பொருளடக்கம் மேம்படுத்தப்பட்டுள்ளது. பயிற்சியின் பாடத்திட்டமானது, அலுவலக நிருவாகம், நிதி நிருவாகம், பொது நிருவாகம், சட்டம், பொருளாதாரம், திட்டம் மற்றும் மேம்பாடு, பேரிடர் மேலாண்மை மற்றும் கணினி ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

2007-2008 ஆம் ஆண்டில் அண்ணா மேலாண்மை நிலையத்தின் (அ) மற்றும் (ஆ) பிரிவு அடிப்படைப் பயிற்சி நிலையமானது 15 பயிற்சி வகுப்புகளை நடத்தி 313 அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்துள்ளது.

**(iv) அகில இந்திய குடிமைப்பணிகள் தேர்வு பயிற்சி மையம்**

மாண்புமிகு தமிழக முதல்வரின் 1999-2000 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட உரையின் அடிப்படையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியவர்களுக்கான அகில இந்திய குடிமைப்பணிகள் தேர்வுக்குப் பயிற்சி அளிக்கும் இரண்டு பயிற்சி நிலையங்களையும் ஒருங்கிணைத்து "அகில இந்திய குடிமைப்பணிகள் தேர்வுப் பயிற்சி மையம்" சென்னை அண்ணா நகரில் தொடங்கப்பட்டது. அகில இந்திய குடிமைப்பணிகள் தேர்வுக்குச் செல்லும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குப் பயிற்சியளிப்பதும், பயிற்சியின் தரத்தினை உயர்த்தி அத்தேர்வில் வெற்றிபெறும் தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதும் இப்பயிற்சி மையத்தின் நோக்கமாகும். இத்தேர்வுப் பயிற்சி நிலையமானது, ஒரு முதல்வர் மற்றும் செயல் திறன் உறுப்பினர்களுடன் அண்ணா மேலாண்மை நிலையத்தின் இயக்குநர் மற்றும் பயிற்சி துறைத் தலைவரின் ஒட்டுமொத்த நிருவாகத்தின்கீழ் இயங்கி வருகின்றது.



2008 ஏப்ரல் 3]

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியவர்களுக்கு, தங்குமிடம், உணவு, நூலகம் மற்றும் கணினி வசதிகளுடன் கூடிய சீரிய பயிற்சியினை ஒரே கூரையின்கீழ் அளித்திடும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 300 மாணவர்களுக்கு ஒவ்வொரு வருடமும் இந்தியத் தேர்வாணையத்தினரால் நடத்தப்படும் அகில இந்திய குடிமைப்பணிகளுக்கான பூர்வாங்க மற்றும் முதன்மைத் தேர்வுகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு நேர்காணலினை எதிர்கொள்ளும் வகையிலான மாதிரி நேர்காணல் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. 1996 ஆம் ஆண்டிலிருந்து அகில இந்திய குடிமைப்பணிகளுக்கு தமிழக அரசால் சென்னை அண்ணாநகரில் நடத்தப்படும் அகில இந்திய குடிமைப்பணிகள் தேர்வுப் பயிற்சி மையத்தின்மூலமாக 231 நபர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். 2007 ஆம் ஆண்டு இப்பயிற்சி மையத்தின்மூலமாக 54 நபர்கள் முதன்மைத்தேர்வில் தேர்ச்சி பெற்று இந்திய தேர்வாணையத்தினால் 31-3-2008 முதல் நடத்தப்படும் நேர்காணலுக்கு செல்ல உள்ளனர்.

அகில இந்திய குடிமைப்பணிகள் தேர்வுப் பயிற்சி மையமானது தற்சமயம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான கட்டடத்தில் வருடாந்திர வாடகையாக ரூ. 2.35 இலட்சம் அளித்து இயங்கி வருகிறது. இப்பயிற்சி மையத்தினை மேம்படுத்தும் நோக்கில், கட்டடத்தையும் நிலத்தையும் வீட்டுவசதி வாரியத்திலிருந்து அகில இந்திய குடிமைப்பணிகள் தேர்வுப் பயிற்சி மையத்திற்கு மாற்றம் செய்திட அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது.

**(v) அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்**

பவானிசாகரிலுள்ள அரசு அலுவலர் பயிற்சி நிலையமானது தமிழ்நாடு அமைச்சுப் பணியாளர்களுக்கு (இளநிலை உதவியாளர்கள்/ உதவியாளர்கள்) 60 நாட்களுக்கான அடிப்படைப் பயிற்சிகளை பல்வேறு வகையான நிருவாகச் செயல் முறைகளில் அளிப்பதற்காக 1947 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. மேலும், துணை வட்டாட்சியர்களுக்கும் அவர்களது அறிவாற்றலை செம்மைப்படுத்துதலுக்கான 28 நாள் பணியிடைப் பயிற்சிகளும் இந்நிலையத்தில் அளிக்கப்படுகின்றன. ஒவ்வொரு வருடமும் சுமார் 2,100 இளநிலை உதவியாளர்களும்/உதவியாளர்களும் மற்றும் 180 துணை வட்டாட்சியர்களும் பயிற்சி பெறுகின்றனர்.

## ஆய்வுப் பிரிவு

[2008 ஏப்ரல் 3

அனைத்துத் துறை தலைமை அலுவலகங்களின் நிருவாகத்தை செம்மைப்படுத்தும் நோக்கத்துடன் துறைத் தலைமை அலுவலகங்களை முதுநிலை அலுவலர்களைக் கொண்டு முறையான மற்றும் முழுமையான அளவில் காலமுறைப்படி ஆய்வு செய்யும் திட்டத்தை அரசு 1959 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியது. அதன்படி தலைமைச் செயலகத்தில் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (பயிற்சி) துறை செயலாளரின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் 3 பிரிவுகளைக் கொண்ட ஆய்வு அலகு ஒன்று ஏற்படுத்தப்பட்டு இயங்கி வருகின்றது. ஆய்வு-I மற்றும் ஆய்வு-II பிரிவுகள் முறையே துணைச் செயலாளர் மற்றும் கூடுதல் செயலாளர் நிலையிலும், ஆய்வு-III பிரிவு மாவட்ட வருவாய் அலுவலர் நிலையிலும் உள்ள அலுவலர்களின் மேற்பார்வையில் இயங்கி வருகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் தயாரிக்கப்படும் ஆய்வுத் திட்ட நிகழ்ச்சி நிரல்களின்படி தலைமைச் செயலகத் துறைகள் உள்ளிட்ட 30 துறைத் தலைமை அலுவலகங்களில் இம்மூன்று ஆய்வுப் பிரிவுகளும் ஆய்வு மேற்கொண்டு முதனிலை ஆய்வு அறிக்கையினைத் தயாரிக்கின்றன. அதனடிப்படையில் இறுதி ஆய்வு மேற்கொள்வதற்கென நியமனம் செய்யப்படும் முதுநிலை இந்திய ஆட்சிப்பணி அலுவலர்களால் இறுதி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அரசுக்கு ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது.

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் மூன்று ஆய்வுப் பிரிவுகளும் மாவட்ட அளவிலான அலுவலர்களுக்கு இரண்டு நாட்களுக்கு ஒழுங்கு நடவடிக்கை குறித்த முன்னோடிப் பயிற்சியினையும், கண்காணிப்பாளர் மற்றும் மேலாளர் நிலையில் உள்ள பணியாளர்களுக்கு மூன்று நாட்களுக்கு அலுவலக நடைமுறை குறித்த குறுகிய காலப் பயிற்சியினையும் மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர்களுடன் இணைந்து நடத்தி வருகின்றன. இப்பயிற்சி வகுப்புகள் ஒவ்வொரு ஆண்டும் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களில் நடத்தப்படுகின்றன. 2007-08 ஆம் ஆண்டில் 30 முன்னோடி பயிற்சிகளும், 30 குறுகியகாலப் பயிற்சிகளும் நடத்தப்பட்டுள்ளன.

## மாவட்ட ஆய்வுக் குழுக்கள்

மாவட்ட அளவிலான அலுவலகங்களின் நிருவாகத் திறமையை மேம்படுத்துவதற்காகவும், சார்நிலை அலுவலர்களின் பணியை



2008 ஏப்ரல் 3]

முறையாக கட்டுப்படுத்துவதற்காகவும் 1975 ஆம் ஆண்டு மாவட்ட ஆய்வுக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. தற்போது 11 மாவட்ட ஆய்வுக் குழுக்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு மாவட்ட ஆய்வுக் குழுவும் துணை ஆட்சியர் தகுதியில் உள்ள மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர் தலைமையில் இயங்கிவருகிறது. வட்டாட்சியர் தகுதியில் துணை மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர் ஒருவரும், உதவியாளர் தகுதியில் இரண்டு ஆய்வாளர்களும், ஒரு தட்டச்சர் மற்றும் இரண்டு அலுவலக உதவியாளர்களும் ஒவ்வொரு மாவட்ட ஆய்வுக் குழுவிலும் பணியாற்றுகின்றனர்.

மாவட்ட ஆய்வுக் குழுக்கள் மாவட்ட அளவிலான அலுவலகங்களில் ஆண்டுதோறும் விரிவான ஆய்வு மற்றும் பொதுமக்களின் புகார்களுக்குள்ளான அலுவலகங்களில் திடீர் ஆய்வுகளையும் மேற்கொள்வதோடு, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் வழிகாட்டுதலின்படி மாவட்ட விழிப்புணர்வு மற்றும் ஊழல் தடுப்புக் குழுவின் திடீர் ஆய்வுகளுக்கும் உறுதுணையாக இருக்கின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் 11 மாவட்ட ஆய்வுக் குழுக்களும் மொத்தம் 96 விரிவான ஆய்வுகளையும், 2,209 திடீர் ஆய்வுகளையும், மாவட்ட ஆட்சித் தலைவர்களின் முன்னிலையில் விழிப்புப்பணி மற்றும் ஊழல் தடுப்புக் குழு அலுவலர்களுடன் 68 இணைந்த கூட்டங்களையும் நடத்தியுள்ளன.

## அமைப்பு மற்றும் செயல்முறைக் குழு

அமைப்பு மற்றும் செயல்முறைக் குழுவின் நோக்கமானது அரசின் பல்வேறு துறைகளின் நடைமுறைகளைச் சீர்திருத்தம் செய்வது, பணி அளவீட்டின்படி தேவையான பணியாளர்களை (மனித சக்தி) நிர்ணயம் செய்வது மற்றும் சிக்கன நடவடிக்கைகளை அமல்படுத்துவது ஆகியனவாகும். அமைப்பு மற்றும் செயல்முறைக் குழுவின் ஆராய்ச்சியில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் முக்கிய இலக்குகளாகும்:—

(i) மனித சக்தி (பணியாளர்கள்) தேவையைக் கணித்து அறிதல்;

(ii) வழிமுறைகள் மற்றும் நடைமுறைகளை எளிதாக்குதல்;

(iii) அரசுத் துறைகளில் சிக்கன நடவடிக்கைகளைக் கையாளுதல் மற்றும் செயல்திறனைக் கூர்படுத்துதல்;

(iv) அதிகாரங்களைப் பகிர்ந்தளித்தல்;

(v) சீரிய முறையில் ஆவணப் பாதுகாப்பு.

2. அமைப்பு மற்றும் செயல்முறைக் குழு தற்பொழுது இரண்டு நிருவாகக் குழுக்களைக் கொண்டுள்ளது. ஒரு நிருவாகக் குழுவிற்கு அரசு கூடுதல் செயலர் மற்றும் அமைப்பு மற்றும் செயல்முறை வல்லுநர் அவர்களும், மற்றொரு குழுவிற்கு அரசு இணைச் செயலர் (அமைப்பு மற்றும் செயல்முறை) அவர்களும் தலைமை ஏற்று நடத்துவதோடு, அமைப்பு மற்றும் செயல்முறைப் பகுதியின் அனைத்து குழுக்களும் (மேற்பார்வைக் குழுவும் உள்பட) இணைச் செயலரின் மேற்பார்வையில் இயங்கி வருகின்றது. மேற்பார்வைக் குழு ஒரு ஆராய்ச்சி அலுவலர் மற்றும் ஒரு உதவிப் பிரிவு அலுவலரைக் கொண்டுள்ளது. இது நிருவாகக் குழுக்கள் அளித்த அறிக்கைகள் மீது தொடர் நடவடிக்கைகள் எடுப்பதோடு, இப்பிரிவிற்குத் தேவையான அலுவலக நடைமுறைகளையும், நிதி ஒதுக்கீடு செய்யும் பணியும் இப்பிரிவால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3. கண்காணிப்புக் குழுவானது ஒவ்வொரு ஆண்டும் தலைமைச் செயலகத்திலுள்ள அனைத்துத் துறைகளையும், துறைத் தலைவர்களையும், அவர்களது துறைகளில் நிருவாகச் சிக்கல் எவையேனும் இருக்கிறதா என்றும், அவற்றிற்கு அமைப்பு மற்றும் செயல்முறைக் குழுவின் ஆராய்ச்சி தேவையா என்பது குறித்தும் தகவலளிக்குமாறு கோருகிறது. அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில் ஒரு செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு, ஒவ்வொரு நிருவாகக் குழுவிற்கும் ஆராய்வுப் பணி மேற்கொள்ள பகிர்ந்தளிக்கப்படுகிறது. வருடாந்திர செயல் திட்ட ஆராய்வுகளைத் தவிர, துறைகளின் கோரிக்கைகளின் அடிப்படையில் சிறப்புப் பணிகளும் ஆராய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தலைமைச் செயலகத் துறைகளுக்கும், துறை தலைமை அலுவலகங்களுக்கும் இடையே செயல்பாட்டில் உள்ள "ஒற்றைக் கோப்பு முறை" முக்கியத்துவம் கருதி கோப்புகளை "நிலைதாண்டி அதிகாரிகளுக்கு அனுப்பும் முறை" துறைகளில் "கோப்புகளை அனுப்பும் நடைமுறை" மற்றும் "உழவர் சந்தை செயல்பாடு" ஆகியவைகள் மீதான ஆராய்ச்சிப் பணி மேற்கொள்ளப்பட்டது. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண்மை வணிகம், முதன்மை வனப் பாதுகாவலர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் மற்றும் சுற்றுலா மற்றும் பண்பாடு துறை ஆகிய அலுவலகங்களில் மேற்கொண்டுள்ள நான்கு ஆய்வுகள் நடந்தேறி வருகின்றன. இதுவரை அமைப்பு மற்றும் செயல்முறைக் குழு 228 அறிக்கைகளை வழங்கி நடைமுறைப்படுத்துவதற்காக அவைகளை சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி வைத்துள்ளது.



## 2008–09 ஆம் ஆண்டிற்கான பகுதி 2 திட்டங்கள்

2008-09 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பகுதி 2 திட்டங்கள் நிறைவேற்றப்பட உள்ளன:

### 1. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை – தலைமைச் செயலகம்

(i) மின்னணு கோப்பு கையாளுதல் முறைக்காக (EFPS) 32 கணினிகள் மற்றும் மென்பொருள்கள் வாங்குதல்;

(ii) பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறையின் கணினி மையத்திற்கு 7 சீர்வளி குளிர் சாதனம் மற்றும் நகல் எடுக்கும் இயந்திரம் ஒன்று வாங்குதல்;

(iii) தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, கருத்தரங்கம், கல்வி மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகள் ஆகியன மூலம் பொதுமக்களிடையே கொண்டு செல்லுதல்.

### 2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு நகல் எடுக்கும் கருவிகள்-4, டெஸ்க் ஜெட் பிரிண்டர்கள்-10, டாட் மேட்ரிக்ஸ் பிரிண்டர்கள் - 15, சீர்வளிச் சாதனங்கள்-10, பார்கோட் ரீடர்கள்-6, நிகரிக் கருவிகள்-3, கணினிகள்-40 மற்றும் அதன் தொடர்பான துணைப் பொருட்கள், லேசர் பிரிண்டர்கள்-4, எஸ்.கியூ.எல். விண்டோ-எக்ஸ்பி புரபஷனல் மென் பொருள்கள், ரிக்கோ காப்பியர் பிரிண்டர்கள், தண்ணீர் சுத்தம் செய்யும் கருவிகள் 10 மற்றும் எம்.எஸ்.ஆபீஸ் 2003 அல்லது 2007 வெர்ஷன் பிரண்ட் பேஜ்கள் 5 ஆகியவை வாங்குதல்.

### 3. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம்

நாகப்பட்டினம் மாவட்டத்தில் பிரிவு அலுவலகக் கட்டடம் கட்டுதல்.

### 4. அண்ணா மேலாண்மை நிலையம்

அண்ணா மேலாண்மை நிலையத்திற்கு அதிவேக ஸ்கேனர் (சமீபத்திய வடிவம்), பிரிண்டர் - (லேசர் ஜெட் கலர்) 1600 தொடர் அல்லது சமீபத்திய வடிவம், சமூக அறிவியல் மென்பொருளுக்கான

[2008 ஏப்ரல் 3

புள்ளிகள் கையேடு (SPSS) மென்பொருள் - 15.0 வடிவ Modules - 4, வீடியோ கான்பரன்சிங் ஸ்டுடியோ உள்ளமைப்பு வசதிகள், மின் புகைப்பட முறை (எல்.சி.டி. புரொஜெக்டர்) மற்றும் திரை, உணவு அறைகளுக்கான அறைக் கலன்கள் மற்றும் நூலகத்திற்கான புத்தகங்கள் வாங்குதல்.

**5. (அ) மற்றும் (ஆ) பிரிவு அடிப்படைப் பயிற்சி நிலையம்**

(அ) மற்றும் (ஆ) பிரிவு அடிப்படைப் பயிற்சி நிலையத்தின் வகுப்பறைகள் மற்றும் அலுவலகத்திற்காக மேசைகள், நாற்காலிகள் மற்றும் நிலைப்பேழைகள் வாங்குதல்.

**6. அகில இந்திய குடிமைப்பணிகள் தேர்வுப் பயிற்சி மையம்**

அகில இந்திய குடிமைப்பணிகள் தேர்வுப் பயிற்சி மையத்திற்கு கணினிகள் - 10, 5 KVA தடையில்லா மின் வழங்கி (UPS), வருடி (ஸ்கேனர்) மற்றும் உள்ளக இணையவலை (LAN Network) மற்றும் கணினி அறைக் கலன்கள் வாங்குதல்.

**7: பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையம்**

வகுப்பறைகளுக்கு கணினி மற்றும் அறைக் கலன்கள், விடுதிக்கான ஜெனரெட்டர், கணினிக் கூடத்திற்கான கம்பிவடம், சுற்றுச்சுவர் எழுப்புதல் மற்றும் செயல்திறன் உறுப்பினர் மற்றும் பணியாளர் இல்லங்களில் சிறப்பு பழுதுபார்த்தல்.

ஷஷஷ

D
V24, 3/2008
P08, 45.1

228403
சென்னை-600 008

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Principal Secretary to Government and
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.